
ஷோபாசக்தி

# ம்



3.23
ஷோபா
-1 PR

FICTION, published by KARUPPU PRATHIGAL, type set : BABY,
cover design : M.VIJAYAN, DREAMSHOP, printed at : GEM GRAPHICS,
processing : P.UMAPATHY, COREL GRAPHICS, binding : A.P.PALANI, PAVITHRA BINDING

ஷோபாசக்தி எழுதிய

# ம்

கதைப் புத்தகம்

## கருப்புப் பிரதிகள்...

ஷோபா சக்தியின் இரண்டாவது நாவல். முதல் நாவல் 'கொரில்லா' வைப் போலவே இதுவும் பேரினவாதக் கொடுமைகள், இயக்க நடவடிக்கைகள் ஆகியவற்றினூடாக அகதியாகி அய்ரோப்பாவில் வாழும் ஒருவனின் வரலாறு தான். எனினும் ஆழம் காண முடியாத மனிதச் சுயத்தின் வேறு சில பரிமாணங்களை அடையாளம் காட்டும் முயற்சியாக இந்நாவல் பரிணமிக்கிறது.

வெலிக்கடைச் சிறைப்படுகொலைகள், மட்டக்களப்புச் சிறை உடைப்பு – இவை நம் கண் முன் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்கள். இயக்கங்கள் பிற இயக்கங்களைத் தடை செய்வதும், கொன்று குவிப்பதும், சொல்லொணாக் கொடுஞ் சித்திரவதைகளைச் செய்ததும், செய்வதும் கூடத்தான்.

எல்லாப் புனைவுகளும் இருப்பியற் பிரச்சினைகளை, அவற்றினூடாக மனிதச் சுயத்தைத் தேடும் நிறைவேறாத முயற்சிகள்தான். வரலாற்று நிகழ்வுகளே மனித இருப்பைத் தீர்மானிக்கின்றன. போர்ச்சூழல் மனிதமனங்களில் ஏற்படுத்தும் சிதைவுகள், லட்சியப் பற்று உருவாக்கும் ஈரமற்ற மனத் திரட்சி, உடல் வாதைகள் குறித்த அச்சத்தை மனித மனங்கள் எதிர்கொள்ளும் விதங்கள்... நாவலில் சித்திரிக்கப்படுபவை மனதை உறைய வைக்கும் சம்பவங்கள் மட்டுமல்ல. இந்தச் சம்பவங்களினூடாக மனித மனங்கள் வெளிப்படுத்தும் வித்தியாசமான எதிர்வினைகளுந்தாம்.

பல சந்தர்ப்பங்களில் இந்த எதிர்வினைகளைப் புரிந்து கொள்வது நமக்குச் சிக்கலாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது. வாழ்க்கை அத்தனை எளிதானது அல்ல தானே.

பிழையின்றி நூல் வெளிவருவதற்குப் பெருந்துணை புரிந்த 'ட்ரீம்ஷாப்' வேணுகோபாலுக்கும் விரைவாக நூலாக்கித் தந்த 'ஜெம் கிராபிக்ஸ்' சாதிக் பாட்சாவிற்கும் நன்றிகள்.

# ம்

ஷோபாசக்தி

கருப்புப் பிரதிகள்

ம்

ஷோபா சக்தி எழுதிய கதைப் புத்தகம்

முதற் பதிப்பு : அக்டோபர், 2004

வெளியீடு : கருப்புப் பிரதிகள், 45ஏ, இஸ்மாயில் மைதானம்,
லாயிட்ஸ் சாலை, சென்னை - 600 005

தொடர்புகள்: karuppu 2004@rediffmail.com செல்: 9444272500

© ஷோபாசக்தி

ஒளிஅச்சு & அட்டை வடிவமைப்பு : ட்ரீம்ஜாப், சென்னை - 14,
நூலாக்கம் : ஷெம் கிராபிக்ஸ், சென்னை - 14

விலை: ரூ. 80.

**Mm**

A Novel by Shobasakthi

First Edition : October, 2004

Published by : **Karuppu Prathigal,** 45 A, Ismail Grounds, Lloyds Road, Chennai - 5.
Contacts: Karuppu2004@rediffmail.com Phone: 94442 72500

©Author

Typeset & Cover Design : **DreamShop**, Chennai - 14, Phone: 55180177

Printed at : **Gem Graphics**, Chennai - 14, Cell: 9841011078

Rs.80.00

Copies can also be availed at

SUGAN KANAGASABAI, 3EME DT, 1, RUE HONORE DE BALZAC
95140 GARGES LES GONESSE, FRANCE
Shobasakthi@hotmail.com

"எகிப்திலே பிரேதக் குழிகள் இல்லையென்றா வனாந்
தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டு வந்தீர்?"

யாத்திராகமம்-14:11

முப்பது வருடங்களாகக் கொடிய யுத்தம்!
ஒரு இலட்சம் மனிதர்கள் கொல்லப்பட்டார்கள்
அய்ம்பதினாயிரம் அங்கவீனர்கள்
இருபதாயிரம் விதவைகள்
பத்தாயிரம் பேருக்குப் பைத்தியம்
பூசா, மகசீன், களுத்துறை
பாரிய இடப்பெயர்வுகள், புலப்பெயர்வுகள்
இயக்கங்கள், மாவீரர்கள்
தமிழீழ ஒறுப்புச்சட்டம், தமிழீழச் சிறை,
துரோகிகள்
பேச்சுவார்த்தை
மானுட ஒன்றுகூடல்
பொங்கு தமிழ்
கதைகளும், பெருங்கதைகளும் சொல்லப்பட்டுக்
கொண்டேயிருக்கின்றன
எல்லாக் கதைகளையும் கேட்டுக்கேட்டு
'ம்' சொல்லிக்கொண்டேயிருக்கும்
என் சனங்களுக்கு...

**காலம்**

அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி முதற்கொண்டு ரெலோ, தமிழ் கொங்கிரஸ் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஈறாக உள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதினாறு பேர் படையெனத் திரண்டு சென்று கொழும்பிலிருந்த இலங்கைக் கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்னின் செயலர் கல்பனா சர்மாவைச் சந்தித்து, இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது விதித்திருக்கும் தடையை விலக்கிக்கொண் டேயாக வேண்டும் என முறையிட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மிகுந்த பரிவோடு பேசிய கல்பனா சர்மா 'புலிகள் மீதான தடையை விலக்குவது குறித்து நாங்கள் நிச்சயமாகப் பரிசீலனை செய்கிறோம், அது சரி புலிகள் உங்கள் மீது விதித்திருக்கும் தடையை எப்போது விலக்கிக் கொள்வார்கள்?' எனப் பாராளுமன்ற உறுப்பினர்களை எதிர்க்கேள்வி கேட்டார். அப்போது அமெரிக்காவின் யுத்த மந்திரி கொலின் பவலின் சகா கிறிஸ்டீனா ரொக்காவை அமெரிக்க வான்படையே அழைத்துவந்து யாழ்ப்பாணத்தில் இறக்கி விட்டது. அப்போது ஆயிரத்து முந்நூற்றுப் பதினாறு உயிர்கள் கொல்லப்பட்டும் அறுநூறு பெண்களும் எண்பது குழந்தைகளும் பாலியல் சித்திரவதை செய்யப்பட்டும் ஏழாயிரத்துக்கும் அதிகமான தாக்குதல் சம்பவங்கள் நடத்தப் பட்டதுமான ஜூலை 83 இனப்படுகொலையின் இருபதாவது வருடக் கறுப்பு நினைவுகளை அனுட்டிப்பதற்காக அய்ரோப்பா முழுவதும் ஈழத்தமிழர்கள் பாட்டுக்களையும் -. கூத்துக்களையும் பரத நாட்டியங்களையும் நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது அய்ரோப்பாவின் ஒரு சிறு பச்சைப் பட்டணத்தில் கீழ்வரும் சம்பவங்கள் நிகழலாயின:

**இடம்**

தலைநகரத்திலிருந்து வடகிழக்காக நூற்றியிருபத்தாறு கிலோ மீற்றர்கள் தொலைவில் செர்ரி மரக் காட்டிடையே சலனமற்றுக் கிடந்த சிறு நகரத்தின் மையத்திலிருந்த அரசு மருத்துவமனையின் கருக்கலைப்புப் பிரிவின் காத்திருப்போர் கூடத்தினுள்ளே வரிசையாக ஏழு பெண்கள் காத்திருந்தனர்.

முதலாவதாக அமர்ந்திருந்த வெள்ளைப் பெண்ணுக்கு நாற்பதுகளை ஒட்டிய வயதிருக்கலாம். அவள் மௌனமாகத்

தன் கைகளிலே விரித்திருந்த பைபிள் புத்தகத்தையே பார்த்த வாறு இருந்தாள். அவளின் பச்சை விழிகள் இடமோ வலமோ புரளாமல் குத்திட்டு நின்றன. அவளை அடுத்திருந்த இரண்டு பெண்களும் கன்னத்தோடு கன்னம் இழைத்து மெல்லப் பேசிச் சிரித்துக்கொண்டிருந்தனர். நான்காவதாக அமர்ந்திருந்த இளம் பெண் அவளைச் சிறுமி என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது பதினான்கு அல்லது பதினைந்து வயதுகள் மதிக்கத்தக்கவள். அவள் முகம் நிர்மலமாய் இருந்தது. அவளது கண்களில் சாந்தம் ஒளிர் கிறது. அவளின் நீளமான தலைமுடி அவளின் மடியில் புரண்டது. மிகவும் பொருத்தமான, கவனமாகத் தேர்வு செய்யப்பட்ட தூய ஆடைகளை அவள் அணிந்திருந்தாள். அவள் தன் இருக்கையில் ஒரு கரிய தேவதையாக வீற்றி ருந்தாள். பைபிள் புத்தகத்தில் கண்களைக் குத்தியவளைத் தவிர மற்றைய பெண்கள் இவளை அவ்வப்போது ஓரக்கண் களால் கவனித்தனர். அவர்களின் கண்களைச் சந்திக்கும் போது இவள் முறுவல் சிந்தினாள். இவள் அருகில் அய்ந்தா வதாக அமர்ந்திருந்து உதடுகளுக்குள் பதற்றத்தோடு எதையோ முணுமுணுத்தவாறேயிருந்த செந்நிற முடிகொண்டவள் ஒரு கட்டத்தில் 'எத்தனை மாதம்?' என்று இவளைக் கேட்ட போது இவள் எப்போதுமே நாட்களை எண்ணிக் கொண் டேயிருப்பவள் போல '56 நாட்கள்' என்று கூறிப் புன்னகைத் தாள். அந்தக் கூடத்தில் காத்திருந்த ஏழு பெண்களிலும் இவள் மட்டுமே ஒரு கறுப்பி. அவள் பெயர் நிறமி.

**கறுப்பி**

நிறமி என் குழந்தை. நான் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் வருடம் அய்ரோப்பாவுக்கு அகதியாய் வந்தேன். மறுவருடம் பிறேமினி என்ற அகதியை நகர மண்ட பத்தில் பதிவுத்திருமணம் செய்து கொண்டேன். அடுத்த வருடம் நிறமி பிறந்தாள். அவள் பிறக்கும் போதே அகதியாய்ப் பிறந்தாள்.

**நிறமி**

ஒரு நடுநிசியில் நான் திடுக்குற்று விழித்தபோது பிறேமினி தரையில் கிடந்து தனது தலையைக் கட்டில் விளிம்பில் மோதி மௌனமாய் அழுவதைக் கண்டேன். நான் கட்டிலை விட்டிறங்கி தரையில் உட்கார்ந்து அவளை அணைத்துக் கொண்டேன். அப்போது அவள் நிறமி கர்ப்பமாய் இருக்கும் செய்தியை எனக்குச் சொன்னாள். என்னுடல் சிறுத்துப் போனது. இருதயம் நடுங்கி நின்றது. பிறேமியியின் முகத் தையே இருளில் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

**பிறேமினி**



'அய்யோ என்னுடைய மனுசனுக்கு இதைச் சொல்லக் கூடாது என்றிருந்தேனே, இது என்ன நம்முடைய நாடா? பெரியாச்சி, குஞ்சியாச்சியிடம் உதவிக்குப் போக, நான் வேறு யாருக்குச் சொல்லுவேன்? என் அய்யோ இதைக் கேட்டதும் என் மனுசனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதே' பிறேமினி அரற்றியவாறு என்னைப் பிடித்து உலுக்கினாள். நான் ஆடாமல் அசையாமல் விறைத்துப்போயிருந்தேன். என் அடிவயிறு பற்றி எரிந்தது.

நிறமி பாடசாலையில் மயங்கி விழுந்திருக்கிறாள். அவள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது நிறமி கர்ப்பமாயிருக்கிறாள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. 'இதற்கு ஒரு நண்பனா காரணம்?' என வைத்தியர் கேட்டி ருக்கிறார்! நிறமி எதுவும் பேச மறுத்திருக்கிறாள். வைத்தியர் நிறமியின் நடவடிக்கைகளில் வித்தியாசங்களைக் கவனித்திருக் கிறார். அவர் பொலிசாரை அழைத்தார். பொலிசார் பிறே மினியைத் தொலைபேசியில் கூப்பிட்டுத் தகவல் சொல்லிய போது பிறேமினி அலறியடித்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடியிருக்கிறாள். படுக்கையில் வாடிப்போய்க் கிடந்த நிறமியைத் தாதிகள் முன்னிலையிலேயே பிறேமினி அறைந் திருக்கிறாள். நிறமியைப் பிறேமினி அடித்ததற்காகத் தாதிகள் திரும்பவும் பொலிசாரை வைத்தியசாலைக்கு அழைத்திருக் கின்றனர். பொலிசார் பிறேமினியைக் கடுமையாக எச்சரித் திருக்கிறார்கள். பிறேமினி கைகளை கட்டிக்கொண்டு நின்று கர்ப்பத்துக்கு யார் காரணம் என நிறமியைக் கேட்டு அழுதிருக்கிறாள். நிறமி வாய் திறக்கவுமில்லை. ஒரு சொல் பேசவுமில்லை.

**நிறமி கர்ப்ப மாகியது**

'இங்கே பாடசாலைகளில் ஆணுறை, மாத்திரைகள் குறித்தெல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்கள் தானே, அது கூட விளங்காத ஒரு மக்குப் பிள்ளை என் வயிற்றில் வந்து பிறந்ததே' என பிறேமினி என் தோளில் சாய்ந்து புலம்பினாள். அந்த நடு இரவில் நாங்கள் தேநீர் அருந்திக்கொண்டே நிறமியின் கர்ப்பத்துக்குக் காரணமானவனைக் கண்டுபிடிப்பதற்குச் சில வியூகங்கள் வகுத்தோம். என் மனைவிக்கு லோரன் மீது சந்தேகம் இருந்தது. அவன் வெள்ளைக்காரச் சிறுவன். எங்கள் அயல் வீட்டுக்காரன். அவனை இரு தடவைகள் நிறமி எங்கள் வீட்டுக்கு அழைத்துவந்திருக்கிறாள். பிறேமினி எனக்கு யாரில் சந்தேகம் என்று கேட்டபோது பிறேமினியின் அண்ணன் மகன்

**லோரன்**

பிரசன்னா மீது தான் எனக்குச் சந்தேகம் தோன்றுவதாகச் சொன்னேன்.

**பிரசன்னா**

பிரசன்னா கிழமைக்கு நான்கு நாட்களாவது எங்கள் வீட்டுக்கு வருவான். இரண்டு நாட்களாவது எங்கள் வீட்டில் தூங்குவான். இதைக் கேட்டதும் பிறேமினி ஓரளவு அமைதி யானாள். அவளும் நானும் அடுத்து வந்த நாட்களில் நிறமி குறித்து மட்டுமே சிந்தித்தோம். இருவருமாக நிறமியின் கர்ப்பத்துக்குக் காரணத்தைத் தேடியலைந்தோம். ஒரு பெண் பொலிஸ் அதிகாரியும் குழந்தைகள் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியும் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து நிறமியோடு பேசிக்கொண்டிருந்தார்கள். நிறமி தன் கர்ப்பத்தைக் குறித்துப் பேச மறுத்துக்கொண்டேயிருந்தாள். நானும் என் மனைவியும் நிறமியின் காதலனைக் குறித்து ஒரு சட்டச்சொல்லில் சொல்வதானல் அவனை Paedophile எனச் சொல்லலாம் நிறமியைப் பேச வைக்க முயன்றோம்.

Paedophile

நான் குளிர் நகரத்தின் பாழும் சிறையில் அடைக்கப் பட்டிருக்கும் இந்தக் காலத்தில் என் செல்லக் குழந்தை நிறமியின் கதையை எழுத ஆரம்பிக்கிறேன். கதை கடவுளின் பிறப்பிலிருந்து ஆரம்பிக்கிறது.

ம்



கிறிஸ்துவுக்குப் பின் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து இரண்டாம் வருடமும் டிசம்பர் மாதத்தின் ஒரு பனிக்காலச் சாமத்தில் கடவுளின் குமரன் அந்தப் பனைத் தீவில் பிறப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது. வட சமுத்திரத்தில் அலைந்துகொண்டிருக்கும் ஏழு சின்னத் தீவுகளில் ஒல்லாந் துக் கடற்கோட்டையிலிருந்து அரைக் கடல் மைல் எட்டத் தில் மிதந்த பனைத்தீவில் மீட்பனின் வருகைக்காகப் பெருத்த ஆரவாரத்துடன் கன்னிமரியாளின் பீடத்தைச் சனங்கள் அலங்கரிக்கலானார்கள்.

**பனைத் தீவு**

முன்பெல்லாம் ஏசுபாலனின் பிறப்பைச் சோடனை செய்வதற்காக அதிகாலையிலேயே ஒரு கூட்டம் இளைஞர் கள் தோணிகளில் காரைதீவு கசூரினா கடற்கரைக்குப் புறப் பட்டுப் போவார்கள். கசூரினா கடற்கரையில் வரிசையாக நிற்கும் சவுக்கம் மரங்களின் கொப்புகளைத் தறித்துத் தோணி களில் கட்டி பனைத்தீவுக்கு இழுத்து வருவார்கள். அந்தச் சவுக்கம் கொப்புகளை அச்சு அசலாக நத்தார் மரங்களைப் போலவே நுட்பத்துடன் சிதைத்துப் பாலன் கூட்டையும், ஆலயத்தின் தூண்களையும், வெண்ணிறச் சுவர்களையும் அலங்கரிப்பார்கள். இப்போதெல்லாம் காரைதீவுக்குள்ளேயே போக முடியாதபடி இலங்கைக் கடற்படையின் தளம் இங்கே 26, 27 மற்றும் 34வது படையணிகள் நிலைகொண்டி ருக்கின்றன காரைதீவுக்குள் மெல்ல மெல்ல விரிந்து இறுதியில் சவுக்கம் மரங்களையும் விழுங்கிக் கொண்டது.

இந்த வருடம் தீவின் அரசாங்கப் பாடசாலையைச் சூழக் காடு பற்றிக் கிடந்த செவ்வரளிப் புதர்களிடையே புகுந்த இளைஞர்கள் செவ்வரளிக் கொப்புகளை வெட்டி வந்து பாலன் கூடு வனைந்தார்கள். மண்குழிக் குட்டையில் வெட் டிப் பெயர்த்தெடுக்கப்பட்ட பசும்புற்கள் பாளம் பாளமா கப் பாலன் கூட்டினுள் அடுக்கப்பட்டன. ஒரு மெல்லிய வைக்கோல் கற்றை பாலன் கூட்டின் உள்ளும் புறமுமாகப் பிய்த்தெறியப்பட்டது. பலூன்களாலும் சிறிய மின்குமிழ்களாலும் செவ்வரளிக் கொப்புகள் ஆபாசமாகச்

**பாலன் கூடு**

சோடிக்கப்பட்டன. பின் பாலன் கூட்டின் உச்சியில் சம்மனசானவரைச் சணல் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டார்கள். கன்னிமரியாள் பொம்மையும், சூசையப்பு பொம்மையும் பாலன் கூட்டினுள் வைக்கப்பட்டன. வெற்றுத் தேயிலைப் பெட்டி அலுமினியத் தாளில் வெட்டப்பட்டிருந்த வால் நட்சத்திரம் மரியாளுக்கும் சூசையப்புவுக்கும் நட்டநடுவாகக் குத்திட்டு இறங்க வால் நட்சத்திரத்தின் பின்னால் வந்து சேர்ந்த கீழ்த்திசை இராசாக்கள் மூவரும் தங்கள் பொக்கிசங்களைத் திறந்து பொன்னையும், தூபவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் காணிக்கையாக்கினார்கள்.

விழாக் காலங்களில் தேவாலயத்தைச் சூழவும் தொங்க விடப்படும் நிறங்கள் ஒளிரும் வெளிச்சக் கூடுகளைக் கடந்த நான்கு வருடங்களாகவே தமிழீழத்தின் சட்டம், ஒழுங்கு நீதி ஆகியன பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறிலங் **மெசியா** காவின் முப்படைகளிடமும் கையளிக்கப்பட்டதிலிருந்து சனங்கள் அவித்து விட்டிருந்தார்கள். அந்தத் தீவைச் சதா காலமும் சுற்றித் திரியும் கடற்படைப் படகுகள் பெரும் வெளிச்சங்களைக் கண்டால் தீவுக்குள் நுழையக்கூடும் என அவர்கள் அச்சமுற்றிருந்தார்கள். ஒரு தெந்தெட்டாச வெளிச்சத்தில் தான் மெசியா இன்று பிறக்கப்போகிறார்

பலிப்பூசையின் ஆயத்த மணிகள் கிளர்த்தப்படலாயிட தொடர்ந்து மரியாயின் சேனை வருகைப் பாடலைப் பாடியது. அந்தப் பாடலின் மெட்டு ஒரு பிரபலமான சிங்கள பைலாப் பாடலின் மெட்டிலிருந்து திருடப்பட்டிருந்தது. பின்பு பாதிரி பிரசங்கிக்கத் தொடங்கினான். அந்தப் பாதிரி நடுத்தர வயதுள்ளவனாகக் காணப்பட்டான். அவன் ஒல்லியாகவும் தேகத்தில் சுண்டினால் இரத்தம் சுன்றும் நிறமாகவும் இருந்தான். சிரைக்க மழிக்கப்பட்டிருந்த அவனது செக்கச் செவேலென்ற சிறிய மூஞ்சி பலிப்பீடத்தில் எரிந்துகொண்டிருக்கும் மெழுகுவர்த்திகளின் ஒளியில் சுவாலையாய்க் கனல்கிறது. அவன் உருவேறி சனங்களுக்கு ஆவேசத்துடன் பிரசங்கித்தான்.

பாதிரிகள் இப்போதெல்லாம் சிலேடை, அங்கதம் இரட்டைக்கிளவி, இடக்கரடக்கல் எனத் தமிழ் மொழியின் எல்லாப் பொற்பங்களையும் பிரயோகித்துப் பிரசங்கிக்கத் தொடங்கிவிட்டார்கள். 'இது என்னே ஒரு முக்கியமான **பிரசங்கம்** காலம்! தொலைவில் வெளிச்சம் புள்ளியாய் ஒளிர்கிறது.



அது பிரகாசிக்கட்டும்! இதோ எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். பயப்படாதிருங்கள்! ஆயிரம் ஆண்டுகளாய் நாம் காத்திருந்த மீட்பர் தோன்றிவிட்டார். விடுதலைக்கான நாட்கள் நெருங்குகின்றன. புஜங்களிலே நுகத்தடியைக் காவித் திரியும் ஜனங்கள் எழுவீர்! அடிமையாய் கிடந்த நாட்கள் மறையும் என்று மெய்யிலும் மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்' இப்படியாக ஆரம்பத்திலிருந்தே சிலேடை பேசிய பாதிரி கதையோடு கதையாக 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை' என்று காசி. ஆனந்தனின் உணர்ச்சி நறுக்கொன்றைத் தனது பிரசங்கத்துக்குள் சொருகிய கணத்தில் ஆலயத்தின் இடதுபுற வரிசைகள் கலையலாயின.

பாதிரி கண்களை மூடி மதுக்கோப்பையைத் தூக்கிக் காட்டி 'இது உங்களுக்காகச் சிந்தப்படும் என் இரத்தம்' என்ற போது தேவாலயத்தின் வலது புறத்தில் முழந்தாளிட்டு **சிறி** நின்றவர்களிடையே ஒரு செய்தி பரவியது 'பள்ளதிக்கு பற்றி **லும்பினி** எரியுதாம்' பாதிரி அப்பத்தைப் பிய்த்தபோது ஆலயத்தின் இடதுபுறத்தில் யாரும் இருக்கவில்லை. அவர்கள் தெருக்களாலும் ஒழுங்கைகளுக்குள்ளாலும் தீ நாக்குகள் எழும் திக்கை நோக்கி அரற்றியவாறும் குழறியவாறும் ஓடிக்கொண்டிருந்தார்கள். வீட்டு வேலிகளையும் தோட்டக் காணிகளையும் தாண்டிக் குதித்து குறுக்கு வழிகளால் ஓடி வந்த இளைஞர்கள் தான் முதலில் வந்து சேர்ந்தார்கள். பவுத்த பாடசாலையான 'சிறி லும்பினி வித்யாலயா' பற்றி எரிந்துகொண்டிருந்தது.

அந்தப் பவுத்த பாடசாலையைச் சூழவுள்ள குடிசைகளில் சீவிக்கும் இளைஞர்களில் பலரும், சில முதியவர்களும் இரவில் பாடசாலைக் கட்டடத்துள் படுப்பதுண்டு. இன்று எல்லோரும் நத்தார் பூசை காணக் கோயிலுக்குப் போயிருக் **தாவீது** கையில் மிகவும் கவனமாகத் திட்டமிட்டுப் பாடசாலையைப் பற்ற வைத்திருக்கிறார்கள். இன்று தாவீதுக் கிழவர் மட்டும் தான் துட்டத் தனியனாகப் பாடசாலைக்குள் படுத்துக்கிடந்திருக்கிறார். அவரால் ஆலயம் இருக்கும் தொலைவுக்கு நடக்க முடியாது. அந்த நோயாளிக் கிழவரை இழுத்துவந்து பனை மரத்தோடு சேர்த்துக் கயிற்றால் கட்டிவிட்டுப் பாடசாலையை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொழுத்தியிருக்கிறார்கள்.

**லாசர்** தாவீதுக் கிழவர் நடுங்கிக் கிடந்தார். அவருக்குப் பேச நா எழுவதாய் இல்லை. வியர்வையில் பஞ்சைத் தேகம் நனைந்து கிடக்க அவர் கண்கள் பயத்தினுள் மறைந்திருந்தன. கரவெட்டி சிறி நாரதா பவுத்த பாடசாலை, அல்வாய் சேமஹே பவுத்த பாடசாலை, புத்தூர் பன்யாசீக பவுத்த பாடசாலை ஆகியவற்றைத் தமிழ்ப் போராளிகள் தாக்கினார்கள், தாக்க முற்பட்டார்கள் என்றெல்லாம் உண்மைகளும் வதந்திகளும் பரவிக் கிடந்த காலமது. ஆகவே இந்த பவுத்த பாடசாலையையும் யாராவது போராளிகளே கொழுத்தி விட்டுச் சென்றிருக்கலாம் என இளைஞர்கள் சந்தேகமுற்றனர். லாசர் தான் தாவீதுக் கிழவரைப் பிடித்து உலுக்கினான்.

**புலிப்படை** 'சொல் தாவீது அப்பா யார் பள்ளிக்கூடத்தைக் கொழுத்தியவர்கள்? நீ அவர்களை அடையாளம் கண்டாயா? தங்களை அவர்கள் புலிப்படைப் பொடியள் என்று சொல்லிக் கொண்டார்களா?' கிழவர் அலங்க மலங்க விழிகளைப் புரட்டினார். புலிப்படைப் பொடியள் என்ற சொல்லையே தன் வாழ்நாளில் இப்போது தான் அவர் முதல் முறையாகக் கேட்டிருக்கக்கூடும். தாவீதுக் கிழவர் வாயினுள் ஏதோ முணுமுணுத்தார். லாசர் மறுபடியும் கேட்டான் 'யார் புலிப்படைப் பொடியளா?' கிழவர் மெதுவாக வாயைத் திறந்தார் 'இல்லை வெள்ளாம் பொடியள்'.

**நயினா தீவு புத்த விகாரை** சடாரென ஒரு நிசப்தம் எழ பாடசாலையின் முகட்டுச் சலாகைகள் தீயில் சடசடவென ஒலியெழுப்பித் தெறித்து வீழ்ந்தன. இரண்டு இளைஞர்கள் இரவோடு இரவாகத் தோணியில் கிளம்பி செய்தியைச் சொல்ல நயினாதீவு புத்த விகாரைக்குப் போயினர். தண்ணீர் குடித்துவிட்டு தாவீதுக் கிழவர் சொன்னார் 'இரண்டு பேர் வந்து கொழுத்தினார்கள். அவர்களில் ஒருவனை என்னால் அடையாளம் காண முடியவில்லை. மற்றவன் ஏர்னஸ்ட் வாத்தியாரின் மகன். அந்த சுவாமிக்குப் படித்த பொடியன்'.

**நேச குமாரன்** 'யார் நேசகுமாரனா? அந்தத் தாயோளித் தறுதலை முன்பும் ஒரு தடவை இறங்குதுறையில் வைத்து ஆமத்துறுக்களை மிரட்டியுள்ளான். அம்மட்ட சிறி அவனைக் கொத்தாமல் விடுவதில்லை' என செபரத்தினம் பதறினான். இளைஞர்கள் தண்ணீர் ஊற்றித் தீயை அணைத்துக்கொண்டிருக்க அவர்களில் இருவர் நேசகுமாரன் தான் தங்களது முதலாம் எதிரி என்பதாய் இரகசியம் பறைந்தார்கள். அவர்கள் எதிர்வரும் ஈஸ்டர் பண்டிகைக்கு முன்னதாய் நேசகுமாரனை



வெட்டிச் சரிப்பதாகச் சபதம் செய்தார்கள். சிறி லும்பினி வித்தியாலாயா தணிந்த போது மீட்பர் பிறந்துவிட்டார் என்பதற்கு அடையாளமாகப் பனைத்தீவின் தோமையப்பர் ஆலயத்தில் ஊர்க் 'குடிமகன்' வைத்தியின் பறைமேளம் தட்டப்பட்டது.

ம்

தனிநாயக முதலி அத்திமாப்பாணச்சியிடம் மணவாள முதலியைப் பெற்றான்.

மணவாள முதலி மாணிக்கப்பிராகவல்லியிடம் நிச்சிங்க முதலியைப் பெற்றான்.

நிச்சிங்க முதலி அழகவல்லி நாச்சியாரிடம் வீரோதயசிங்க முதலியைப் பெற்றான்.

வீரோதயசிங்க முதலி வள்ளிநாயகி நாச்சியாரிடம் திடவீரசிங்க முதலியைப் பெற்றான்.

திடவீரசிங்க முதலி வேதவல்லி நாச்சியாரிடம் செயராசசேகர முதலியைப் பெற்றான்.

**வம்ச வரலாறு**

'தொன் சஞ்சுவான்' செயராசசேகர முதலி செங்கமலத்தாயாரிடம் பேதுரு கனகசூரியன் முதலியைப் பெற்றான்.

பேதுரு கனகசூரியன் முதலி லூர்துப்பிள்ளையிடம் மனுவேல் மகனைப் பெற்றான்.

மனுவல் மகன் எஸ்மேனியாப்பிள்ளையிடம் இன்னாசி தேவசகாயம்பிள்ளையைப் பெற்றான்.

இன்னாசி, தேவசகாயம் பிள்ளை ரோஸமுத்துவிடம் சுவாம்பிள்ளையைப் பெற்றான்.

சுவாம்பிள்ளை பிலோமினாப்பிள்ளையிடம் ஏர்னஸ்டைப் பெற்றான்.

ஏர்னஸ்ட் சிறியபுஸ்பத்திடம் நேசகுமாரனையும், மரியாளையும், மார்த்தாளையும் பெற்றான்.

நேசகுமாரன் பிறேமினியிடம் நிறமியைப் பெற்றான்.

ம்



**சாதி வரிசை**

| | |
|---|---|
| வண்ணார் | 167 |
| திமிலர் | 3246 |
| முக்குவர் | 3881 |
| வேளாளர் | 35634 |
| கரையார் | 8010 |
| பறையர் | 1320 |
| நளவர் | 5623 |
| இசுலாமியர் | 303 |
| பள்ளர் | 1640 |
| கோவியர் | 4017 |
| அருந்ததியர் | 62 |
| அம்பட்டர் | 365 |
| சிவியர் | 34 |
| பரவர் | 1840 |
| சாண்டார் | 24 |
| கன்னார் | 38 |
| தட்டார் | 145 |
| யானைக்காரச் சான்றார் | 43 |
| தச்சர் | 887 |
| கயிறுக்காரச் சான்றார் | 43 |
| கைக்கோளார் | 70 |
| துரும்பர் | 46 |
| ஓடாவி | 07 |
| சிங்களவர் | 165 |
| பார்ப்பனர் | 306 |
| கடையர் | 04 |

**தீவுப் பகுதி**

**1981ம் வருடம்**

இந்தப்பட்டியலின் இறுதியில் காணப்படும் கடையர்: 04 என்ற குறிப்பு சிறிகாந்தமலரையும், அவளது மூத்த சகோதரன் இலட்சுமிகாந்தனையும், அவர்களது பெற்றோர்களான இலங்கையனையும், தேவசேனாவையுமே சுட்டுகிறது.

இனிக் கடவுள்தான் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தனது அந்திமக் காலங்களில் திரும்பத் திரும்ப உச்சாடனம் செய்தார். அவரது இறுதி நாட்கள் மிகவும் அவலமானவை. அவர் பேசும் சக்தியை இழந்திருந்தார். அவரை இளைஞர்கள் கைத்தாங்கலாகவே தூக்கிவந்து மேடைகளின் மையங்களில் இறக்கி வைத்தார்கள். செல்வநாயகம் பொதுக்கூட்டங்களில் நாக்குக் குழறிப் புரள அரற்றலானார். திரண்டிருந்த மக்கள் கூட்டம் அவர் அரற்றுவதை ஏக்கத்துடன் பார்த்து நின்றது. செல்வநாயகத்தின் அரற்றலைச் சொற்களாக மொழிபெயர்க்கும் ஆற்றல் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு மட்டுமே கிட்டியிருப்பதாக மக்களிடையே செய்தி பரவியிருந்தது. அமிர்தலிங்கம் மேடைகளில் பெரும் பணிவுடன் தன் காதில் செல்வநாயகத்தின் அரற்றலை வாங்கி பின் 'தந்தை என்னைக் கட்சியைப் பாரமெடுக்குமாறு உத்தரவிடுகிறார்' என மக்களுக்கு மொழிபெயர்த்துக் கூறிவந்தார்.

**செல்வ நாயகம்**

அமிர்தலிங்கம் மாம்பழ வண்ணம். அவரின் சொற்களில் வசியத்துக்கான தேவதை உறைந்திருப்பாள். 'மரம் பழுக்க வெளவால் வரும்' என்றவாறான அவரது ஒவ்வொரு அறை கூவலையும் கேட்டது தான் தாமதம் இளைஞர்கள் ஆவேசங்களால் தூக்கிச் செல்லப்பட்டனர். 'என்னிடம் ஆயிரம் இளைஞர்களைத் தாருங்கள், நான் உங்களுக்குத் தமிழீழத்தை வென்று தருகிறேன்' என்ற அவரின் முழக்கம் தமிழீழத்தின் ஒவ்வொரு வாசிகசாலைகளிலும், ஒவ்வொரு தேநீர்க் கடைகளிலும் ஒவ்வொரு பாடசாலைகளிலும், தெருக்களிலும், ஒழுங்கைகளிலும் வழிமொழியப்பட்டது.

**அமிர்த லிங்கம்**

ஊறாத்துறை கண்ணகை அம்மன் கோயில் முன்றலில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாபெரும் பொதுக் கூட்டத்துக்கு மேற்படி அமிர்தலிங்கம் பேச வந்தபோது நேசகுமாரனுக்குப் பதினேழு வயதாய் இருந்தது. கொழும்புத் துறை கத்தோலிக்க குருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நேசகுமாரன் தவக்கால விடுமுறையில் பனைத்தீவுக்கு வந்திருந்தான். அநேக தீவுப்பகுதி, இளவாலை,



சில்லாலை வேதக்கார வெள்ளாளர்களிடம் அரை நூற்றாண்டாகவே ஒரு பழக்கம் இருந்துவருகிறது. தமது குடும்பத்தில் ஒரு சிறுவனையாவது அவர்கள் பாதிரிக்குப் படிக்க வைப்பார்கள். ஆண்பிள்ளைகள் இல்லாதவர்கள் சிறுமிகளைக் கன்னியாஸ்திரி மடங்களில் சேர்த்து விடுவார்கள். உள்ளங்கையால் பொத்திவிடக்கூடிய கரம்பன் கிராமத்தில் இருந்து மட்டும் இதுவரை ஏழு 'விசுப்பாண்டவர்கள்' வந்திருக்கிறார்கள்.

ஆனால் பனைத்தீவு வெள்ளாளர்களிடம் இந்தக் காரியம் பலிக்கவில்லை. அவர்களுக்குக் கடகமும் சாயப்பாய்களும் இழைத்துவந்து ஊறாத்துறை சந்தையில் விற்கவே காலம் சரியாய் இருந்தது. வந்த காசும் கூப்பன் அரிசிக்கும், எண்ணெய்க்குமே சரியாய் கிடந்தது. பனைத் தீவு அரசாங்கப் பாடசாலையில் பத்தாவது வகுப்பு வரையே மூன்றே மூன்று ஆசிரியர்களால் பாடங்கள் நடத்தப்பட்டன. பாடசாலையின் ஆசிரியர்கள் பள்ளதிக்கு குழந்தைகளை அப்பாடசாலையில் சேர்க்க மறுத்தார்கள். தீவில் கிடந்த ஒரேயொரு ஓலைக் கொட்டில் 'சலூனில்'கூட பள்ளர்கள் நுழைய முடியவில்லை. தேவாலயத்தின் இடது புற ஓரம் வேதக்காரப் பள்ளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. பள்ளதிக்கு பெண்கள் 'துப்பட்டி' போட்டு கோயிலுக்குள் வரமுடியாது. சிறி லும்பினி வித்தியாலயாவில் ஐந்தாம் வகுப்புவரை பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அந்தப் பாடசாலை இரண்டு புத்த பிக்குகளால் ஆரம்பிக்கப்பட்ட பின்பு தான் பள்ளதிக்கில் இருந்த குழந்தைகளும் பள்ளிக்கூட வாசலை மிதிக்கலாயினர். நயினாதீவு புத்த விகாரையிலிருந்த அந்த இரண்டு பிக்குகளும் கிழமைக்கு நான்கு நாட்கள் கடலில் பிரயாணம் செய்து வந்தும், போயும் சிறி லும்பினி வித்தியாலயாவை நடத்திவந்தார்கள்.

**சுவாமி**

அரசாங்கப் பாடசாலையின் தலைமை வாத்தியார் ஏர்னஸ்ட் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி தனது ஒரே மகன் நேசகுமாரனைக் கொழும்புத்துறை செமினரியில் ஒருவாறு சேர்த்துவிட்டான். அப்போதிருந்த 'விசுப்பாண்டவர்' ஏர்னஸ்டுக்குத் தூரத்து வழியில் பெரியப்பா முறை. 'விசுப்பாண்டவரின்' கடைக்கண் சிபாரிசு நேசகுமாரனுக்கு செமினரியில் இருந்தது. பனைத்தீவுச் சனங்கள் பாதிரிக்குப் படிக்கும் நேசகுமாரனை வெகுவாக மதித்தார்கள். ஏர்னஸ்ட் வாத்தியோடு வெட்டுப்பகை, கொத்துப்பகை கொண்டவர்கள்

கூடக் கடவுளுக்குக் கட்டுப்பட்டு நேசகுமாரனை அன்பு செய்தார்கள். ஊரே அவனைச் 'சுவாமி' என்று மரியாதை யுடனும் வாஞ்சையுடனும் அழைத்தது. கொஞ்சம் விசயம் தெரிந்த பொடியள் 'பிறதர்' என்று நேசகுமாரனை அழைத்தார்கள்.

அந்தச் சுவாமியும் 'அமிர்தலிங்கத்தின் கூட்டம் பார்க்க வரப்போகிறேன்' என்றவுடன் டெம்பர் ராசன் தலைமையி லான இளைஞர் படை கொஞ்சம் தயங்கியது. 'சுவாமி நாங்கள் திரும்பி வருவதற்கு விடியலாகும்' என்று டெம்பர் ராசன் சொல்லிப் பார்த்தான். யாழ் நகரில் இரவுக் கூட்டங்கள் தனக்குச் சர்வசாதாரணமென்றும், கோவை. மகேசன், வண்ணை ஆனந்தன் எல்லோருடனும் தனக்கு நெருங்கிய பழக்கம் உண்டென்றும் நேசகுமாரன் மறுமொழி சொன்னான். 'நீர் எங்களுடன் வரப்போவது மாஸ்டருக்குத் தெரியுமா? என்று டெம்பர் ராசன் கேட்டதற்கு நேசகுமாரன் தலையைச் சுற்றிச் சுற்றி ஒரு சாங்கமாக வளைத்தான். அன்று அரை மனத்தோடு தான் கூட்டத்துக்கு நேசகுமாரனையும் கூட்டிப்போக டெம்பர் ராசன் ஒத்துக்கொண்டான்.

**டெம்பர் ராசன்**

செக்கலுக்குள் பனைத்தீவில் இருந்து கடலரசி என்ற அந்தச் சிறு இயந்திரப் படகு கண்ணகை அம்மன் கோயில் துறையை நோக்கிப் புறப்பட்டது. நேசகுமாரனோடு சேர்த்து ஒன்பது பேர் படகினுள் இருந்தார்கள். படகுக்கு ஓட்டி தாவீதுக் கிழவர். படகுக்கும் அவருக்கும் கூலியாக முப்பது ரூபாய் பேசப்பட்டிருந்தது. கடல் விழித்துக்கிடந்ததெனினும் அலைகளைத் தாவிப் படகோடிற்று. படகின் விசையில் அலை கிழிந்து படகினுள் எத்தியது. எல்லோரும் உப்பு நீரில் தோய்ந்திருந்தார்கள். நேசகுமாரனுக்குத் தலை சுற்றி சத்தி முட்டியது. அவனுக்கு இது தான் இப்படியான விசைப் படகில் முதற்பயணம். நேசகுமாரன் இதுவரை லோஞ்சிகளில் மட்டுமே பயணம் செய்துள்ளான். பனைத்தீவிலிருந்து காலை யும், மாலையும் ஊறாத்துறைக்கு லோஞ்சி சேவையுண்டு. லோஞ்சியின் டீசல் எரியும் வாசனை நேசகுமாரனுக்குப் பிடித்தமானது. ஒவ்வொரு ஊருக்கும் ஒரு வாசனை உண்டெங்கில் பனைத்தீவின் வாசனை டீசல் கருகும் வாசனையே என்று லோஞ்சியில் பயணம் செய்கையில் நேசகுமாரன் நினைத்துக்கொள்வானாம். விசைப்படகு உலாஞ்சிய போது நேசகுமாரன் ஓங்காளித்தான். டெம்பர் ராசன் ஒரு தலைவனுக்குரிய கம்பீரத்தோடு அணியத்தில் கால் பரப்பி நின்றிருந்தான்.

**கடலரசி**



விசைப்படகு கண்ணகை அம்மன் கோயில் துறையை அடையும்போது இரண்டு பொலிசுக்காரர்கள் தான் இவர்களை வரவேற்றார்கள். அந்தப் பொலிசுக்காரர்கள் சிங்களச் சாயலோடு தமிழ் பேசினார்கள். பொலிசுக்காரர்கள் படகில் வந்த ஒன்பது பேரையும் தண்ணீருக்குள் வரிசையாக உட்கார வைத்தார்கள். இரண்டே இரண்டு பொலிசுக்காரர் கள். இருவரின் கைகளிலும் பெற்றன் பொல்லுகள் மட்டுமே ஆயுதங்கள். இருவரும் வயதாளிகளாய்த் தெரிந்தார்கள். ஒருவனைக் கீழே தள்ளிவிட்டால் அவன் எழுந்திருக்க ஒரு கிழமையாகும். கொழுத்த தடியன். மற்றவன் தொய்வு வருத்தக்காரன் மாதிரி மூச்சிழுத்துக்கொண்டிருந்தான். சுற்று வட்டாரத்தில் ஒரு ஆள் அரவம் கிடையாது. இந்த ஒன்பது பேரும் பொலிசுக்காரர்கள் முன்பாகத் தண்ணீரில் மண்டியிட்டிருந்தார்கள்.

**பொலிஸ்**

'அடோ பன்றிகளே எங்கே போகிறீர்கள்?'

'ஊறாத்துறை ராஜ் சினிமாவில் பாலும் பழமும் படம் பார்க்க வந்தோம் அய்யா'

டெம்பர் ராசன் தான் ஒன்பது பேரிலும் வாட்ட சாட்ட மானவன். அவனைத் தான் பொலிசுக்காரர்கள் விசாரித்தார்கள்.

'பன்றியே பொய் சொல்லாதே! நீங்கள் எல்லோரும் அமிர்தலிங்கம் மாத்தையாவின் கூட்டத்துக்குப் போகிறீர்கள். உண்மை தானே?' பொலிசுக்காரத்தடியன் செல்லமாக டெம்பர்ராசனின் கன்னத்தில் அறைய வந்தான். டெம்பர் ராசன் கன்னத்தைக் கைகளால் மூடியவாறே 'அய்யா' என்று அவலக் குரல் எழுப்பினான். 'ஆ...... இங்கே அய்யா சாமி சொல்வாய். அந்தப் பக்கம் போய் சிங்களப் பன்றி என்பாய். சப்ப கொடுப்பேன் இப்போ' என்று டெம்பர் ராசனைப் பழித்த பொலிசுக்காரன் 'எல்லோரும் என்ன வேலை பார்க்கிறீர்கள்? என்று கேட்டுக் கேட்ட வாய் மூட முன்பாக எல்லோரையும் முந்திக்கொண்டு நேசகுமாரன் பதில் சொன்னான் 'சேர் நான் செமினரியில் சுவாமிக்குப் படிக்கிறேன்.....'

**மாத்தையா**

மங்கையற்கரசி

பொலிசுக்காரர்கள் இவர்களைக் கடற்கரையில் முழந்தாள் மட்டு தண்ணீருக்குள் உட்கார வைத்துவிட்டுப் போனவர்கள் தான் பிறகு திரும்பி வரவேயில்லை. இவர்கள் ஒருவர் இருவராகத் தண்ணீரில் இருந்து எழுந்தார்கள். பின் தாவீதுக் கிழவரைப் படகுக்குக் காவலாய் துறையில் விட்டு விட்டு இவர்கள் எட்டுப்பேரும் கூட்டம் நடந்துகொண்டிருந்த முன்றலுக்கு வந்து சேர்ந்தார்கள். மேடையின் உச்சியில் குழல் விளக்குகளால் உதயசூரியன் அமைக்கப்பட்டிருந்தது. கொடிகளும் தோரணங்களும் அசைய '— இவ்வாறாக எனது கணவரைப் பார்த்து மைத்திரிபால சேனநாயக்கா கேட்டான். அந்தச் சிங்கள வெறியர்களின் இரத்தக் கடலில் நீச்சலடித்து ஈழத்தை முக்குளிப்போம் என்று சொல்லி முடிக்கிறேன், வணக்கம், வாழ்க தமிழீழம்,' என்றவாறாக மங்கையற்கரசி பேசி அமரவும் அமிர்தலிங்கம் எழவும் சரியாக இருந்தது.

எல்லாத் திக்குகளிலும் சீனப் பட்டாசுகள் படபடவெனப் பொரிந்தன. மலர் மாலைகளால் அமிர்தலிங்கத்தின் தொந்தி முதல் மூக்கு வரையான பகுதிகள் மறைக்கப்பட்டன. சடையடக்கிகளை மீறி இளைஞர்கள் கூட்டம் மேடையில் தாவியது. இளைஞர்களைப் பார்த்து அமிர்தலிங்கம் கண்கள் விரியச் சிரித்தார். இந்த இளைஞர்கள் எதற்காக மேடையேறியுள்ளார்கள் என்பது அவருக்குத் தெரியும். இளைஞர்களின் வரிசையில் முன்னால் நிற்கும் டெம்பர் ராசன் இது வரை பதினொரு தடவைகள் அமிர்தலிங்கத்துக்கும் ஒன்பது தடவைகள் காசி ஆனந்தனுக்கும், மூன்று தடவைகள் சாவகச்சேரி நவரத்தினத்துக்கும் ஒரு தடவை கா.பொ.இரத்தினத்துக்கும் இரத்தத் திலகம் இட்டுள்ளான்.

டெம்பர் ராசன் தன்னுடைய உடலின் எந்தப் பகுதியிலிருந்து ப்ளேடை எடுப்பான் என்பதே பெரிய மர்மம். ஒரு குறளி வித்தைக்காரனுக்கேயுரிய லாவகத்துடன் மாயமாக கண் இமைப்பொழுதில் அவன் ப்ளேடைக் காற்றில் உருவுவான். இம்முறை அவன் தன் கழுத்தின் பின்புறமிருந்து

ம்

ப்ளேடை உருவி தன் மார்புத் தோலை வகிர்ந்தான். கொப்பளித்த குருதியை அள்ளி அமிர்தலிங்கத்தின் வழுக்கை மண்டையில் அப்பினான். சர சரவென மார்புகளும், மணிக்கட்டுகளும், விரல்களும் ப்ளேடுகளால் பிளக்கப்படுகின்றன.



நேசகுமாரன் தனது விரலை வெட்டுவதற்கு ப்ளேடை வைத்துக் கோணம் பார்த்துக்கொண்டிருந்தான். இரத்தங்கள் சிந்தி விழ அமிர்தலிங்கம் ஆடாமல் அசையாமல் தனது முன் மண்டையைக் காட்டியவாறு மேடையில் நிற்கிறார். அப்பொழுது மங்கையற்கரசி எழுந்து வந்து தனது கைகளை அகல விரித்து 'அய்யோ போதும் சிங்கங்கள், வெட்டியது போதும் சிங்கங்கள்' என்று இளைஞர்களைப் பார்த்துச் சிணுங்கினார். பின் கண்களை இறுக மூடிக்கொண்டு நேசகுமாரன் தன் சுட்டுவிரலை அமிர்தலிங்கத்தின் நடுநெற்றியில் வைத்தான்.

ம்

கிழிந்து போய் மேடையை விட்டுக் கீழே இறங்கிய இளைஞர்களின் காயங்களுக்கு கூட்டணியின் தொண்டர் ஒருவர் தனது எட்டுமுழ இடுப்பு வேட்டியை உரிந்து அதை கீலம் கீலமாகக் கிழித்து கட்டுக்கள் போட்டுவிட்டார். பின்னிரவில் நேசகுமாரன் வீடு திரும்பினான். காலையில் அவன் விழித்தபோது விரல் காய்ந்திருந்தது. ஆனாலும் நேசகுமாரன் தனது விரலில் கட்டப்பட்டிருந்த துணிக்கட்டை அவிழ்த்தெடுக்கவில்லை. நித்திரைப் பாயில் மல்லாக்கக் கிடந்தவாறே தனது சுட்டுவிரலைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கண்களில் வீரமும் பீளையும் கொப்பளித்து வழிந்தன. பின்பு 'தம்பி இரவு எங்கே வேசி வீட்டுக்கா போயிருந்தாய்?' என்ற ஏர்னஸ்டின் கேள்வியோடு அவனுக்குப் பொழுது விடிந்தது.

**மாஸ்டர்**

ஏர்னஸ்ட் குடிவெறியில்லாத, பெண், புரசு, பித்தலாட்டமில்லாத, அர்ச்சிட்ட தோமையப்பர் கோயிலின் உத்தம வேதக்காரன் என்று ஊருக்குள் பெயரெடுத்திருந்தான். அவனை ஊருக்குள் பெயர் சொல்லிக் கூட கூப்பிடத் தயங்குவார்கள். 'மாஸ்டர்' அல்லது 'பிறிஞ்சிப்பல்' என்றே கூப்பிடுவார்கள். அவன் கோயில் காரியங்களிலிருந்து பந்தடிக்கிற கழகம் வரை முன்னின்று நாட்டாமை செய்யும் வல்லமையைப் பெற்றிருந்தான். அவன் மாதாமாதம் தனது சம்பளத்தின் ஒரு பகுதியை சுருவிலில் இருந்த அவனது விதவைத் தங்கையின் குடும்பத்துக்கு அனுப்பி வைப்பான். அவனின் சீவியம் கடினமானது. மாதக் கடைசியில் சமைப்பதற்கு அரிசி வாங்கவே சிரமப்படுவான். ஆனால் தனது மகனை எப்பாடு பட்டாவது ஒரு கத்தோலிக்க பாதிரியாக்கி ரோம் வரை அனுப்பி வைக்க வேண்டுமென்பதில் ஏர்னஸ்ட் உறுதியாய் இருந்தான்.

**ஏர்னஸ்ட்**

இந்த விரல் வெட்டுச் சம்பவத்துடன் ஏர்னஸ்ட் விழித்துக் கொண்டான். மகனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் கொழும்புத்துறை குருத்துவக் கல்லூரியில் கண்ணீர் சொரிந்து நியாயம் கேட்டான். கடவுளின் பொருட்டு சிந்த வேண்டிய ஊனும் உதிரமும் அரசியல்

**பிலிமத் தலாவ**



மேடைகளில் கிடப்பதற்கு குருத்துவக் கல்லூரியின் வளர்ப்பே காரணம் என்று குருத்துவக் கல்லூரியின் முதல்வரிடம் பணிவுடன் புலம்பினான். ஏர்னஸ்டின் புலம்பலுக்குக் காது கொடுத்த ஆயரின் தலையீட்டின் பின்பாக சிங்கள நாட்டிலுள்ள பிலிமத்தலாவ என்ற சிறுநகரத்தின் கத்தோலிக்க இறையியல் கல்லூரிக்கு நேசகுமாரன் பொதி செய்யப்பட்டான்.

ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தோராம் வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி யாழ் நகர டி.ஜி.பி.எட்வேர்ட் குணவர்த்தனாவின் தலைமையில் சிறிலங்காப் பொலிசார் யாழ் பொது நூலகத்தைக் கொழுத்திய போது நேசகுமாரனுக்கு வயது இருபத்தொன்று. அப்பொழுது அவன் பிலிமத்தலாவ இறையியல் கல்லூரியில் இருந்தான். ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டு செப்டம்பர் மாதம் நான்காம் திகதி நடந்த பிலிமத்தலாவ இறையியல் கல்லூரியின் விழாவில் யாழ் நூலகத்தை பொலிசார் எரித்ததைக் கண்டித்து, குருத்துவக் கல்லூரியின் முதல்வர் கிங்ஸ்லி பொன்னுத்துரை சிறிலங்கா தேசியக்கொடியை ஏற்ற மறுத்து குருப்பட்டத்தைத் துறந்து அங்கி களைந்தார். அதற்கு அடுத்த நாள் இரவில் பிலிமத்தலாவ மத்திய கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூடத்தை இரண்டு இளைஞர்கள் கத்திமுனையில் கொள்ளையிட்டனர். அவர்கள் சில இரசாயன மூலகங்களையும் அமிலங்களையும் எடுத்துச் சென்றனர். இந்தக் கொள்ளை வழக்கில் நேசகுமாரன் முதலாம் எதிரியாக பொலிசாரால் சேர்க்கப்பட்டபோது அவன் ஏற்கனவே தலைமறைவாகியிருந்தான்.

**கிங்ஸ்லி பொன்னுத் துரை**

ம்

பட்டுவேட்டி, நஷனல், சால்வை சகிதம் இரண்டு புதியவர்கள் ஒரு நாள் காலையில் பனைத்தீவு படகுத் துறையில் வந்திறங்கினார்கள். அவர்கள் இருவரும் நடுத்தர வயதினராகவும் ஒங்கு தாங்கான ஆண்பிள்ளைகளாகவும் இருந்தார்கள். அவர்கள் ஏர்னஸ்டின் வீட்டை சனங்களிடம் விசாரித்தார்கள். ஏர்னஸ்டின் வீட்டுக்கு அவர்கள் சென்ற போது ஏர்னஸ்டும், மரியாளும், மார்த்தாளும் பாட சாலைக்குச் சென்றிருந்தார்கள். வந்த இருவரும் சிறிய புஷ்பத்திடம் நேசகுமாரனைக் குறித்து விசாரித்தார்கள். அவள் அவன் பிலிமத்தலாவ இறையியல் கல்லூரியில் படிப்ப தாகக் கூறினாள். வந்தவர்கள் சிரித்துவிட்டுத் தமது இடுப்பு வேட்டிக்குள்ளிருந்து கைத்துப்பாக்கிகளை உருவி எடுத்தவாறே வீடு புகுந்து மூலைக்குமூலை தேடினார்கள். பின் வீட்டினுள் அமர்ந்தவாறே ஏர்னஸ்டைக் கூட்டிவரு மாறு சிறிய புஷ்பத்திற்கு உத்தரவிட்டனர். அவள் துடித்துப் பதைத்து ஏர்னஸ்ட் தலைமைஆசிரியராய் இருக்கும் அரசாங்கப் பாடசாலையை நோக்கி ஓடினாள். வந்தவர்கள் இரகசியப் புலனாய்வுப் பொலிசார்.

சிறிய புஷ்பம்

ஏர்னஸ்ட்டை சிறியபுஷ்பம் கூட்டிவரும் போது ஏர்னஸ்டின் அயல் அட்டத்தைக் கூட்டி வைத்துப் பொலி சார் நேசகுமாரன் குறித்து விசாரித்தார்கள். அந்தச் சனங் களுக்கு மத்தியில் வைத்து ஏர்னஸ்டின் வேட்டி உரிந்து விழ விழ ஏர்னஸ்டை உதைத்து நேசகுமாரனைக் குறித்து விசாரித்தார்கள். பொலிசார் சொல்லித் தான் நேசகுமாரன் தலைமறைவான கதையை ஏர்னஸ்ட்டும் சிறிய புஷ்பமும் தெரிந்துகொண்டார்கள். நேசகுமாரன் அங்கு வந்தாலோ, அவனைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்தாலோ, அவனிட மிருந்து ஏதாவது செய்திகள் அனுப்பப்பட்டாலோ உடனடி யாக ஊறாத்துறை பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுக்க வேண்டும் என மிரட்டி விட்டு பொலிசார் போனார்கள். பொலிசார் போனவுடன் வீட்டுக்குள் ஓடிப்போய் அறைக்கதவை மூடிக்கொண்டு உத்தரத்தில் தூக்குப் போடப்போன ஏர்னஸ்டைச் சனங்கள் வீட்டின் முகட்டுக் கூரையைப் பிரித்து வீட்டினுள் இறங்கிக் காப்பாற்றினார்கள். ஏர்னஸ்ட் வயிற்றைப் பிடித்துக்கொண்டு கதறி அழுதான். அன்று ஏர்னஸ்ட் வீட்டில் சமையல் நடக்கவில்லை. ஏர்னஸ்டின் குடும்பம் தற்கொலைக்கு முயலும் எனக் கணக்குப் போட்ட உறவினர்கள் ஆள் மாறி ஆள் ஏர்னஸ்ட் குடும்பத்துக்கு இரவு பகலாகச் சில நாட்கள் காவலிருந்தனர்.



நேசகுமாரனைத் தாடியோடு யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் கண்டதாக இம்மானுவேல் ஏர்னஸ்ட்டுக்குச் சொன்னான். ஏர்னஸ்ட் யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் மூன்று நாட்கள் அன்னம், தண்ணியில்லாமல் பழி கிடந்தான். இந்தியாவுக்கு ஈருட்டி வியாபாரம் செய்யப்போய் வந்த ஒரு அனலைதீவு வியாபாரி நேசகுமாரனின் சாயலில் ஒருவனைத்தான் திருச்சியில் பார்த்ததாக ஏர்னஸ்டிடம் கூறி னான். ஏர்னஸ்ட் உடனே பாளையங்கோட்டையில் படித்துக் கொண்டிருந்த தன் உறவினனுக்கு இது குறித்துத் தந்தி கொடுத்தான். நேசகுமாரனின் சடலம் ஊதிப் பெருத்து பண்ணைப் பாலத்தின் அருகே ஒதுங்கிக்கிடப்பதாகவும் ஒரு செய்தி வந்தது. ஏர்னஸ்ட் போய்ப் பார்த்துவிட்டு வந்தான். இந்தத் தருணத்தில் ஊறாத்துறைப் படகுத் துறையில் வைத்து 'பவுத்தத்தையும், சிங்களத்தையும் எக்காரணம் கொண்டும் தமிழீழத்துக்குள் அனுமதிக்கமாட்டோம். உடனடியாகப் பவுத்த பாடசாலை நடத்துவதை நிறுத்தாவிட்டால் உங்களைக் கொன்று விடுவேன்' என்று நேசகுமாரன் சிறி லும்பினி வித்தியாலயாவை நடத்தி வரும் புத்த பிக்குகளை மிரட்டியதாக அந்தச் சாதுக்கள் பனைத்தீவில் வந்து சொன்னார்கள். பின் நந்தார் இரவன்று நேசகுமாரன் வந்து சிறி லும்பினி வித்தியாலயவைக் கொழுத்தியதாகத் தாவீதுக் கிழவர் சொன்னார்.

தமிழீழம்

நேசகுமாரன் யாழ்ப்பாணத்துக்கும் ஊறாத்துறைக்கும் இடையில் தான் அலைந்து கொண்டிருந்தான். இரகசிய நண்பர்களின் வீடுகளிலும் பாழடைந்த மண்டபங்களிலும், கோயில் தாழ்வாரங்களிலும் தூங்கினான். பசியும், பட்டினி யும் அவனுடன் அலைந்தன. சீனச் சார்பு கொம்யூனிஸ்ட் கட்சியில் தீவிரமாக இயங்கி பின் கட்சியின் தலைமையுடன் முரண்பட்டு வெளியேறிய டாட்டுவுடன் டாட்டுவின் உண்மையான பெயர் தெரியவில்லை. டாட்டு என்பது கொங்கோ காடுகளில் போரிட்ட போது சே குவேரா தனக்கு

**டாட்டு**

வைத்துக் கொண்ட பெயராகும் - நேசகுமாரனுக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த கலைச்செல்வனுக்கும் நேசகுமாரனுக்கும் தொடர்பு இருந்தது. அல்லைப்பிட்டியிலுள்ள அவனது வீட்டில் தான் அநேகமான இரவுகளில் நேசகுமாரன் தங்கினான். கலைச்செல்வனின் குடும்பம் உடையார் குடும்பம். அல்லைப்பிட்டியின் முக்கால்வாசி விவசாய நிலங்கள் அவர்கள் வசமே கிடந்தன. நேசகுமாரன் ஒரு பாதிரியார்

**கலைச் செல்வன்**

என்றும் அல்லைப்பட்டி இடிந்த மாதா கோயிலில் ஆராய்ச்சி பண்ணுவதற்காக அவன் இங்கு வந்து போகிறான் என்றும் நேசகுமாரன் கலைச்செல்வனால் அவனது தகப்பனாருக்கு அறிமுகப்படுத்தப்பட்டான். மரம் வல்லிபுரம் தவமிருந்து பெற்ற பிள்ளை கலைச்செல்வன். அந்தப் பரம்பரையிலிலேயே பல்கலைக்கழகத்துக்குச் சென்ற ஒரேயொருவன் கலைச்செல்வன் தான். கலைச்செல்வன் எது சொன்னாலும் மரம் வல்லிபுரத்துக்கு அது வேதவாக்கு. 'அவன் படித்த பொடியன் செய்தால் சரியாய் தான் இருக்கும்' என்பது மரம் வல்லிபுரத்தின் நிலைப்பாடு. 'சுவாமி சுவாமி' என்று மிக மரியாதையுடன் வல்லிபுரம் நேசகுமாரனோடு பழகி வந்தான்.

அமைப்பின் முதலாவது மாநாடு சென்னையில் நடந்தபோது டாட்டு மாநாட்டில் கலந்துகொள்ள தமிழகத்துக்குப் போய் வந்திருந்தான். வந்தவன் நேசகுமாரனுக்கு நம்பிக்கைகளாகத் தின்னக் கொடுத்தான். லண்டன், பிரான்ஸ், ஜெர்மனி என்று எல்லா இடங்களிலுமுள்ள தமிழர்களிடம் இவர்களது அமைப்பு வேலை செய்வதாகவும் விரைவிலேயே இவர்களுக்காக உத்தரப்பிரதேசத்திலே ஒரு பயிற்சி முகாமை இந்திய அரசாங்கம் தொடங்கவிருப்பதாகவும் பயிற்சிக்கு அனுப்பப்படும் முதலாவது அணியில் நேசகுமாரன் இருப்பான் எனவும் டாட்டு உறுதி கூறினான். அதுவரைக்கும் முடியுமான அளவுக்கு அமைப்பை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் பணி டாட்டுவால் நேசகுமாரனுக்குக் கொடுக்கப்பட்டது.

நேசகுமாரன் சோறு தண்ணியில்லாமல் தாடியும் சிவப்பு மட்டைப் புத்தகங்கள் நிரம்பிய பையுமாகக் கிராமங் கிராமமாக இரவுகளில் அலைந்தான். சுடலைகளிலும் பற்றைக் காடுகளுக்குள்ளும் இளைஞர்களைச் சந்தித்துப் பேசினான். கலைச்செல்வன் நேசகுமாரனின் வலது கரமாக இயங்கினான். அவனின் புண்ணியத்தில் தான் அவ்வப்போது செலவுக்கு



அய்ந்து ரூபாய், பத்து ரூபாய் நேசகுமாரனுக்குக் கிடைத்தது. நேசகுமாரன் இறையியல் கல்லூரியில் படித்த காரணத்தாலோ என்னவோ அவனுக்குப் பிரசங்கம் கை வந்த கலையாக இருந்தது. வாயில் நுரை தள்ள காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி இல்லாமல் அவன் நாக்குத் துடித்து. முந்நூறுக்கும் குறைவான தோழர்களுடனேயே பிடலும், சேகுவேராவும் ஹவானாவைக் கைப்பற்றினார்கள் என்று அவன் சலிப்பில்லாமல் திரும்பத் திரும்பக் கூறிவந்தான். மூங்கில் மரங்களைக் கயிறுகளால் வளைத்துக் கட்டி பொறி அமைத்த வியட்நாம் மக்கள் அமெரிக்காவின் நவீன விமானங்கள் வியட்நாம் காடுகளில் பறக்கும்போது மூங்கில்களில் கட்டப்பட்டிருந்த கயிறுகளை வெட்டிவிட விசையுடன் நிமிர்ந்த மூங்கில் மரங்கள் விமானங்களை வீழ்த்தின என்றான். ஒரு மாலையில் ஊறாத்துறை ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து துண்டுப்பிரசுரங்களை வழங்கியபோது நேசகுமாரன் அவனின் பனைத்தீவைச் சேர்ந்த சிறிகாந்தமலரைத் தாதி உடையில் அங்கே கண்டான். சிறிகாந்தமலர் நெடுநெடுவென வளர்ந்த ஒல்லியான சிவந்த பெண். அவளுக்கு இருபத்தைந்து வயதுக்கு முன்னே பின்னே இருக்கலாம். சிறிகாந்த மலர் 'சுவாமி என்று அன்புடன் நேசகுமாரனைக் கூப்பிட்டுப் பேசினாள். சிறிகாந்தமலர் ஊறாத்துறைத் தாதிகள் விடுதியிலேயே தங்கியிருந்தாள். நேசகுமாரன் வெவ்வேறு தினங்களில் அவளுடன் இரண்டு மணிநேரங்கள் மட்டுமே பேசினான். விடுதலை ஆவியால் ஆட்டுவிக்கப்பட்டவனாக ஒரு கடுகதிப் புகையிரதம் ஓடும் தாளகதியில் அவன் பேசப்பேச சிறிகாந்த மலர் ஓடி ஏறினாள். எழுபத்தேழாம் ஆண்டுக் கலவரத்தை அவன் இரத்தம் சொட்டச் சொட்டச் சித்திரித்துக் காட்டியபோது அவள் கண்ணீர் விட்டாள். இறுதியில் தன்னால் முடிந்தவரை நேசகுமாரனின் அமைப்புக்கு உதவுவதற்கு அவள் முடிவெடுத்தாள். இதைச்சொல்லி விட்டு அவள் தனது இரண்டு கை வளையல்களை அலுமாரியில் இருந்து எடுத்து நேசகுமாரனிடம் கொடுத்தாள். தங்களது இயக்கக் கொள்கைப்படி மக்களிடமும் ஆதரவாளர்களிடம் தங்கம் வாங்கலாமா? இல்லையா? என்பது நேசகுமாரனுக்குத் தெளிவில்லை. எனவே அவன் வளையல்களை வாங்க மறுத்தான். சந்தர்ப்பம் கிடைக்கும் போது இது குறித்து டாட்டுவிடம் கேட்டுத் தெளிய வேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

**சிறிகாந்த மலரை சந்தித்தது**

**விடுதலை ஆவி**

தமிழ்நாட்டுக்குப் படகில் சென்றுகொண்டிருந்த போது கடலில் நேவி அடித்து டாட்டு குற்றுயிரும் குலையுயிரு மாகக் கைது செய்யப்பட்டான். டாட்டுவின் தோழன் பார்த்திபன் கொல்லப்பட்டான் என்ற செய்தி கிடைத்தபோது நேசகுமாரன் பார்த்திபனுக்கு ஒரு அஞ்சலித் துண்டுப் பிரசுரத்தை எழுதி வெளியிட்டான். டாட்டு கைதானதோடு அவனுக்கு இயக்கத்துடன் தொடர்புகள் அறுந்துபோயின. யாழ்ப்பாணத்தில் இருந்த டாட்டுவின் தோழர்கள் தங்கள் தங்கும் இடங்களை மாற்றிக்கொண்டிருந்தனர். தாங்களும் தலைமறைவாகி விடலாமா என்று கலைச்செல்வன் கேட்டபோது 'எனக்கு டாட்டுவில் நம்பிக்கை இருக்கிறது டாட்டு கடைசி வரைத் தோழர்களைக் காட்டிக் கொடுக்க மாட்டான்' என்று நேசகுமாரன் சொன்னான். நேசகுமாரனின் நம்பிக்கையை டாட்டு கடைசி வரைக்கும் காப்பாற்றினான்.

**அல்லைப் பிட்டி**

தொடர்புகள் அறுந்த போதும் நேசகுமாரன் தன் முயற்சியில் சற்றும் மனந் தளரவில்லை. அவன் அல்லைப்பிட்டிக் கடற்கரையில் தாழம்புதர்களிடையே வைத்து மூன்று நாட்களாகக் கலைச்செல்வனுடன் சேர்ந்து 'இயக்கவியல் பொருள் முதல் வாதமும் வரலாற்றுப் பொருள் முதல் வாதமும்' என்ற தொடக்க நூலை வாசித்து விவாதித்தான். முதலில் 'என்ன சுவாமி? முதலாம் பக்கத்திலும் பருப் பொருள் இரண்டாம் பக்கத்திலும் பருப்பொருள் மூன்றாம் பக்கத்திலும் பருப்பொருள்' என்று கலைச்செல்வன் பஞ்சிப் பட்டாலும் போகப் போகப் படிப்பதில் கலைச்செல்வன் ஆர்வம் காட்டுவதாகவே நேசகுமாரனுக்குத் தோன்றியது.

ஒரு மதியம் கலைச்செல்வன் பெரிய கடையிலிருந்து ஊருக்கு வந்தபோது பஸ் அவனைப் பிரதான வீதியிலேயே இறக்கி விட்டது. கலைச்செல்வன் நெல்வயல்களுக்குள்ளாக வரப்புகளின் மீது நடந்து தான் ஊர்மனைக்குள் போக வேண்டும். கலைச்செல்வன் கண்ணெறிந்து பார்த்தபோது கண்ணுக்கெட்டிய தூரம் வரை வயல்களே தெரிந்தன. அவ்வளவு வயல்களும் கலைச்செல்வனின் உடையார் குடும் பத்துக்குச் சொந்தமானவை. வயல்களிலே ஆணும் பெண்ணு மாக விவசாயக் கூலிகள் வேலை செய்துகொண்டிருந்தனர். அப்போதெல்லாம் நாளொன்றுக்கு ஆணுக்கு பத்து ரூபாயும் பெண்ணுக்கு ஏழு ரூபாயும் கூலியாக வழங்கப்பட்டன. கலைச்செல்வன் வயல்வெளியைத் திரும்பவும் பார்த்தான். விவசாயக் கூலிகளை மறுபடியும் பார்த்தான். கொஞ்சம் தலையைக் கீழே குனிந்து தனது மார்பிலிருந்து கால்கள்



வரை பார்த்தான். வாயில் எச்சில் குமிழ்கள் உண்டாக்கிக் கொண்டே யோசித்தான். பின் விறுவிறுவென வீட்டை நோக்கி நடந்தான். கலைச்செல்வன் வீட்டுக்கு வந்து உடுப்பும் மாற்றாமல் நில அளவு நாடாவை எடுத்துக்கொண்டு வயல்வெளியை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் போனான். சற்றுநேரத்தில் கள்ளுத் தவறணையில் இருந்து குடித்துக் கொண்டிருந்த மரம் வல்லிபுரத்துக்கு ஒரு செய்தி கிடைத்து. அவனின் மகன் வயலுக்குள் இறங்கி தொழிலாளர்களை வேலை செய்யவிடாமல் தடுக்கிறான் என்ற செய்தியைக் கேட்டவுடனேயே 'என்னுடைய மகன் படித்தவன், அவன் எது செய்தாலும் அதில் ஒரு பொருள் இருக்கும்' என்று சொல்லிக் கொண்டே கள்ளு வயிற்றைத் தடவிக்கொண்டே மரம் வல்லிபுரம் வயல்வெளிக்கு ஆடி அசைந்து போனபோது அங்கே விவசாயக் கூலிகள் கூடிக் கூடி நின்று பேசுவதையும் கலைச்செல்வன் காற்சட்டையை முழங்கால் வரை மடித்து விட்டுக்கொண்டு மும்முரமாக அளவு நாடாவால் வயல் வெளியை அளப்பதையும் கண்டான். எல்லை பிரித்து வயல்களை 'இந்தத் துண்டு உங்களுக்கு அந்தத் துண்டு அவருக்கு' என்று சொல்லிச் சொல்லிக் கைகளைக் காற்றில் சுட்டி விவசாயக் கூலிகளுக்குக் கலைச்செல்வன் நிலங்களை வழங்கிக்கொண்டிருந்தான்.

**வல்லி புரம்**

மரம் வல்லிபுரத்துக்கு அடிமுடியெல்லாம் பற்றியெழுந்தது. குனிய நிமிர அவனுக்கு உடம்பு வணங்காத போதும் ஆவேசத்தோடு குனிந்து குனிந்து கற்களைப் பொறுக்கி 'அடேய் துரோகி, படித்த விசரா, என் குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பே' என்று கத்திக்கொண்டே ஓடி ஓடி கற்களால் எறிந்து கலைச்செல்வனைத் துரத்தினான். மரம் வல்லிபுரத்தின் கல்லெறியைச் சமாளிக்க முடியாத கலைச்செல்வன் வயல்களுக்குள்ளால் ஓட ஆரம்பித்தான். ஓடியவன் மரம் வல்லிபுரத்தின் கல்வீச்சுத் திறன் எல்லையைக் கடந்ததும் ஒரு கணம் நின்று திரும்பி சுட்டு விரலால் தகப்பனுக்குப் பத்திரம் காட்டி 'கோபால கிருஷ்ண நாயுடுவுக்கு நடந்தது தான் உமக்கும் நடக்கும்' என்று கடுமையாக எச்சரித்தான். 'யாரடா அவன் கோபாலகிருஷ்ணன்?' என்று கேட்டு மரம் வல்லிபுரம் இன்னொரு கல்விட கலைச்செல்வன் விட்ட இடத்திலிருந்து ஓட ஆரம்பித்தான்.

ம்

கலைச்செல்வன் இப்போது தனது வீட்டில் தங்குவதில்லை என்றும் தனது கிராமத்தில் கூலி விவசாயிகள் அமைப்பொன்றைத் தான் கட்டுவதற்கு கடும் முயற்சி செய்து வருவதாகவும் கூலிகளின் வீட்டிலேயே சாப்பிட்டுக் கூலிகளுடனேயே தூங்குவதாகவும் கலைச்செல்வன் நேசகுமாரனுக்குச் சொன்னபோது 'கலைச்செல்வன் புறநிலைகளைப் பரிசீலிக்காது வெறும் அகத்தூண்டலுக்கு அடி பணிந்து வருவதாக' நேசகுமாரன் கருத்துச் சொன்னான். நேசகுமாரனும்

**ஊறாத் துறை**

தனது மறைவிடத்தை அல்லைப்பிட்டியிலிருந்து மாற்றிக் கொண்டான். ஊறாத்துறைப் பொலிஸ் நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் மட்டுமே உள்ள ஊறாத்துறை ஆஸ்பத்திரியின் பின் விறாந்தையில் பல இரவுகள் அவன் தூங்கினான். சிறிகாந்த மலர் நோயாளிகளுக்குச் சமைக்கப்படும் சோற்றிலும் கீரையிலும் அவனுக்காகச் சிறிது எடுத்து வைப்பாள். அவன் இரவு எவ்வளவு நேரம் கழித்து வந்தாலும் காத்திருந்து உணவைக் கொடுத்தாள்.

டாட்டுவின் கைதோடு அமைப்பின் செயற்பாடுகள் யாழ்ப்பாணப் பகுதியில் உதிரிகளின் செயற்பாடாகவே இருந்தது. ஆனால் அமைப்பு இந்தியாவிலும் அய்ரோப்பாவிலும் படு தீவிரமாகவே ஒருங்கிணைக்கப்பட்டு இயங்கி வருவதாகச் செய்திகள் கிடைத்தன. நேசகுமாரன் இந்தியாவுக்குச் சென்று அமைப்போடு பேசிவிட்டு வருவது என்று முடிவு செய்தான். கடல் கடப்பதற்கு முன்னதாக ஒரு

**செயல்**

'செயலுக்குத் திட்டமிட்டான். ஊறாத்துறைப் பொலிஸ் நிலையத்தின் மீது குண்டு வீச்சொன்றை நிகழ்த்த அவன் திட்டமிட்டான். கலைச்செல்வனையோ தன்னுடன் தொடர்புடைய மற்ற இளைஞர்களையோ நேசகுமாரன் நம்பத் தயாரில்லை. கலைச்செல்வன் இன்னும் பக்குவமடையாத ஆர்வக் கோளாறுக்காரன் என்பது நேசகுமாரனின் கணிப்பு. மற்றவர்களும் இறுதிவரை இரகசியங்களைக் காப்பார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமுமில்லை. ஆனால் சிறிகாந்தமலரை நேசகுமாரன் நம்பினான்.

சிறிகாந்தமலருக்குக் குருநகரில் நெருங்கிய உறவுக்காரர்கள்



சிலர் உண்டு. அவர்கள் வெடிகுண்டுகள் தயாரிப்பதில் பெயர் போனவர்கள் என்று சிறிகாந்தமலர் சொன்னாள். இந்தத் தடவை சிறிகாந்த மலரிடம் ஒற்றைத் தங்க வளையலைக் கேட்டுப் பெற்ற நேசகுமாரன் அதை விற்றான். சிறிகாந்தமலர் நேசகுமாரனைக் குருநகர் சின்னத் தண்ணித் தாங்கிக்கு அருகிலிருந்த ஒரு சிறிய வீட்டுக்குக் கூட்டிப் போனாள். அந்த வீட்டிலிருந்தவர்கள் கடலில் மீன்களைக் கொன்று பிடிப்பதற்காக எறியப்படும் 'டைனமட்டுக்களை' இரகசியமாகத் தயாரிப்பவர்கள். நேசகுமாரனுக்காக அவர்கள் ஒரு 'டைனமட்டை'த் தயாரித்தார்கள். நேசகுமாரனுக்கு அந்த 'டைனமட்டில்' திருப்தியில்லை. முதலில் அது மிகவும் சிறியதாக இருந்தது. வெறும் காகிதக் குழாயிலேயே அது தயாரிக்கப்பட்டிருந்தது. தயாரிப்புமுறையைக் கவனித்துக் கொண்டிருந்த நேசகுமாரனின் மனதில் ஒரு திட்டம்

**டைனமட்**

தோன்றியது. அவர்களிடம் மூன்று டைனமட்டுகளை வாங்கினான். டைனமட்டுகளுக்காக அவர்கள் பணம் பெற மறுத்து விட்டார்கள். நேசகுமாரனின் தோற்றத்திலிருந்தும் பேச்சிலிருந்தும் அவர்கள் எதையோ ஊகித்திருக்கவேண்டும். காசை மறுத்து 'நாங்களும் சப்போர்ட் தான்' என்று மட்டும் சொன்னார்கள். மூன்று சிறிய டைனமைட்டுக்களையும் ஒரு மாட்டுத் தாள்ப்பையில் சுற்றிக்கொண்டு யாழ்ப்பாண பஸ்நிலையத்துக்கு நேசகுமாரனும் சிறிகாந்தமலரும் வந்தார்கள். ஊறாத்துறை பஸ்ஸில் ஏறி அமர்ந்ததும் சிறிகாந்த மலர் 'சுவாமி அதை என்னிடம் தாருங்கள்' என்று கேட்டு டைனமைட் பையை வாங்கித் தனது கைப்பைக்குள் வைத்துக்கொண்டு நேசகுமாரன் உட்கார்ந்திருந்த இருக்கைக்குச் சில இருக்கைகள் பின்னாகச் சென்று உட்கார்ந்தாள். வழியில் சில நேரங்களில் பொலிசார் பஸ்ஸைச் சோதனை போடுவதும் உண்டு. பொலிசார் அநேகமாக ஆண்களைத் தான் சோதனை செய்வார்கள். சிறிகாந்தமலரின் தைரியத்திலும் எச்சரிக்கை உணர்வாலும் நேசகுமாரன் வெகுவாகக் கவரப்பட்டான்.

மூன்று டைனமட்டுகளையும் உதிர்த்து நேசகுமாரன் அவற்றை ஒன்றாக்கினான். ஒரு கட்டிப்பால் தகரப்பேணியை வாங்கி அதன் மேற்பகுதியில் பத்துச் சதக் குற்றியளவுக்குத் துறப்பணத்தால் துளையிட்டான். பாலை வெளியேற்றியதன் பின்பாகப் பேணியைக் கழுவிக் காயவைத்தான். பின் அந்தத் துவாரத்துக்குள்ளால் உதிர்த்து வைத்திருந்த சக்கையைப் பேணிக்குள் நிதானமாக நிரப்பினான். முடிந்தவுடன்

துவாரத்துள் 'கெற்பை' நிறுத்தினான். 'கெற்பை' சுற்றித் துளையை சீமெந்தால் அடைத்தான். அவன் தாதிகள் விடுதியில் சிறிகாந்த மலரின் அறையில் வைத்தே இந்த வெடிகுண்டைத் தயாரித்தான். கதவுக்கு வெளியே சிறிகாந்தமலர் காவலிருந்தாள்.

**தாக்குதல்**

பொலிஸ் நிலையத்தின் மீது குண்டு வீசுவதற்காக ஒரு அமாவாசை இருளை நேசகுமாரன் தேர்வு செய்தான். முதலில் தனியாகப் போய்த்தான் குண்டு வீச அவன் நினைத்தான். முடியுமான அளவுக்குப் பொலிஸ் நிலையத்தை நெருங்கிக் குண்டு வீச வேண்டும். ஆனால் அப்படி நெருங்கும் போது பொலீசார் கண்டு விட்டாலோ, கண்டு சுட்டுவிட்டாலோ குண்டு வீசும் திட்டம் நிறைவேறாது. ஆகவே ஒருவன் வெடிவாங்கினாலும் மற்றவன் குண்டை வாங்கி வீச வேண்டும். அவன் கலைச்செல்வனையும் அழைத்துச் செல்வதாக முடிவு செய்தான்.

இரவு பதினொரு மணிக்கு ஊறாத்துறை ஆஸ்பத்திரிக்கு முன்பாக நேசகுமாரன் தயாராகக் காத்திருந்தான். கலைச்செல்வன் குறித்த நேரத்திலேயே வந்திருந்தான். நேசகுமாரன் தன் கையில் பொலித்தீன் பையால் சுற்றி வைத்திருந்த வெடிகுண்டையும் தீப்பெட்டியையும் சரி பார்த்துக் கொண்டான். இருவரும் ஒழுங்கைகளுக்குள்ளால் நடந்து சென்று பருத்தியடைப்புப் பகுதிக்குள் நுழைந்தனர். வீட்டு மதில்களோடும் வேலிகளோடும் நிழல்களாக நகர்ந்தனர். பொலிஸ் நிலையம் மங்கிய ஒளியில் கிடந்தது. பொலிஸ் நிலையத்தின் பின்புறத்தில் போடப்பட்டிருந்த முட்கம்பி வேலிக்குக் கீழால் முதலில் நேசகுமாரன் தவழ்ந்தான். முதுகில் முட்கம்பி கீறி எரிந்தது. கலைச்செல்வன் உள்ளே வந்தான்.

இருவரும் வேலியை ஒட்டி அமர்ந்திருந்து நிலைமையை அவதானித்தனர். பொலிஸ் நிலையத்தின் பின்புற வாசலில் ஒரு மங்கிய மின்குமிழ் எரிவதையும் அதன் கீழே ஒரு பொலிசுக்காரக் கிழவன் கதிரையில் சாய்ந்து கிடந்து கால்களை முன்னாலிருந்த மேசையில் போட்டுத் தூங்கி வழிந்துகொண்டிருப்பதும் தெரிந்தது. மழை தூறல் போடத் தொடங்கியது. கலைச்செல்வனை வேலியின் அருகிலேயே விட்டு விட்டுத் தரையோடு தரையாக, இருளோடு இருளாக நேசகுமாரன் ஊர்ந்து சென்றான். முடியுமான அளவுக்கு பொலிஸ் நிலையக் கட்டடத்தை நெருங்கிச் சென்றான். இருளுக்கும் வெளிச்சத்துக்குமான கோட்டில் நின்று



வெடிகுண்டைக் கொழுத்திப் பொலிஸ் நிலையத்தின் கூரையில் வீசி எறிந்துவிட்டு இருளுக்குள் தாவி விழுந்தான். மின்னலாய் உருண்டவாறே கலைச்செல்வனுக்கு அருகில் போனான். கலைச்செல்வன் மெதுவாக 'சுவாமி பற்களுக்கு இடையில் ஏதாவது துணியைக் கடியுங்கள். வெடி அதிர்வால் பற்கள் மோதி உடையக் கூடும்' என்றான். அவன் ஏற்கனவே தனது பற்களுக்கு இடையில் ஏதோவொரு துணியை வைத்திருந்ததால் அவன் பேச்சு மழலையாய்க் குழறியது. வெடிகுண்டு தயாரித்ததில் தவறோ அல்லது கொழுத்திய திரி மழைத்தூறலில் நனைந்து அணைந்ததோ தெரியவில்லை. குண்டு வெடிக்கவில்லை. அது ஓட்டுக் கூரை உச்சியில் விழுந்து 'டொக்..... டொக்' என்ற சத்தத்துடன் ஓடுகளில் மோதிச் சத்தத்தை எழுப்பியவாறே கீழே வந்து கொண்டிருந்தது. தூங்கி வழிந்துகொண்டிருந்த பொலிசுக்காரன் எழுந்து 'டேய் யாரடா அவன் கல் எறிவது?' என்று சத்தம் போட்டான்.

நேசகுமாரனும் கலைச்செல்வனும் கடற்கரைப் பனைக் கூடலுக்குள் வந்து சேர்ந்தனர். நேசகுமாரனுக்குக் குண்டு வெடிக்காதது ஏமாற்றமாய் இருந்தாலும் சோர்ந்து விடவில்லை. இதை விடச் சிறந்த இன்னொரு இலக்கைத் தன்னால் அடிக்க முடியும் என்ற நம்பிக்கை அவனுக்குள் இருந்தது. கலைச்செல்வன் 'ஏன் சுவாமி குண்டு வெடிக்கவில்லை?' என்று கேட்டான். அவன் இப்போதும் மழலையில் குழறினான். 'இன்னும் துணியைப் பற்களுக்கிடையில் இருந்து எடுக்கவில்லையா?' என்று நேசகுமாரன் கேட்டதற்கு 'அப்போதே எடுத்து விட்டேன்' என்று கலைச்செல்வன் மீண்டும் குழறினான். நேசகுமாரன் கலைச்செல்வனை மூஞ்சிக்கு மூஞ்சி நெருங்கிக் கவனித்தான். கலைச்செல்வனின் வாயில் கள் வாசனை அடித்தது. 'தோழர் குடித்திருக்கிறீர்களா?' என்று நேசகுமாரன் கேட்கவும் 'அய்யோ இல்லை சுவாமி என்று கலைச்செல்வன் குழறினான். 'அப்படியானால் வாயில் என்ன நாறுகிறது?' என்று நேசகுமாரன் கேட்க 'இரவு தோசையும் தேங்காய்ச் சம்பலும் தின்றேன், அது புளித்த சம்பலாய் இருக்க வேண்டும் அது தான் நாறுகிறது.' என்றான் கலைச்செல்வன்.

'தோழர் பொய் சொல்லக் கூடாது என்ற புனித விதிகள் ஒரு இரகசிய இயக்கத்து சூழலில் இருக்க முடியாது எனினும் நாம் நமது எதிரிகளிடம் மட்டுமே பொய் சொல்

லும் தந்திரத்தைக் கடைப்பிடிக்கலாம். தோழர்களுக்குத் தோழர்கள் பொய் பேசக் கூடாது' என்று நேசகுமாரன் சொல்லவும் 'முதல் பீல்ட்' என்பதால் கொஞ்சம் பதற்றமாய் இருந்தது. பதற்றத்தைத் தணிக்க ஒரு கோப்பைக் கள்ளுக் குடித்தேன் சுவாமி' என்று கலைச்செல்வன் நேசகுமாரனுக்கு மறுமொழி சொன்னான். நேசகுமாரனுக்கு ஆத்திரம் கொப்பளித்தது. 'தோழர் கள்ளுக் குடித்துக் கொண்டா நீங்கள் மக்கள் மத்தியில் கட்சி கட்டப் போகிறீர்கள்? வெட்கமாயில்லையா?'

**குற்றம்**

'மன்னித்து விடுங்கள் சுவாமி, நான் கள்ளுக் குடித்தது இது தான் முதற் தடவை, இது தான் கடைசித் தடவையும்'

'நான் தனிமனிதன், நீங்கள் ஒரு தனி மனிதன் என்றால் மன்னித்து விடுவேன். ஆனால் நாங்கள் இருவருமே தனி மனிதர்கள் அல்ல. உங்கள் தவறுக்கு நிச்சயமாக அமைப்பு தண்டனை வழங்கும், இல்லாவிட்டால் இயக்கம் நடத்த முடியாது ஒப்புக் கொள்கிறீர்களா?' 'ஓம்' கலைச்செல்வன் மௌனமானான்.

**தண்டனை**

நேசகுமாரன் கலைச்செல்வனின் சட்டையைக் கழற்ற சொன்னான். கலைச்செல்வன் மறுபேச்சுப் பேசாமல் சட்டையை கழற்றினான். ஒரு பனையைக் கட்டிப் பிடிக்கு மாறு நேசகுமாரன் உத்தரவிட்டான். கலைச்செல்வன் கட்டிப் பிடித்தான். நேசகுமாரன் இடுப்பு பெல்டை அவிழ்த்துக் கலைச்செல்வனின் முதுகில் வீசினான். இரண்டு மூன்று அடிகள் அடித்தவன் நிறுத்தி விட்டு 'தோழர் நான் செய்வது சரி தானே?' என்று கலைச்செல்வனிடம் கேட்டான் 'சரி' என்றான் கலைச்செல்வன். நேசகுமாரன் மீண்டும் கலைச்செல்வனை அடிக்க ஆரம்பித்தான்.

ம்



செட்டிகாடு 'இரு மரபும் துய்யவந்த' வெள்ளாளர்களின் சாதிக்கொழுப்பு பிரசித்தமானது. அவர்களின் சாதிக் கொழுப் பைத் தாழ்த்தப்பட்ட மக்கள் சவால் செய்தபோது கேடானி யலும் அவரின் தோழர்களும் அந்த மக்களுடன் நின்றனர்.

**செட்டி காடு**

செட்டிகாடு அந்தோனியார் கோயிலின் பெருநாளின் போது செட்டிகாடு வீதிகளில் அந்தோனியார் சொரூபம் எடுத்து வரப்படும். இதைக் 'கூடு காவுவது' என்பார்கள். இந்த அந்தோனியார் சொரூபம் நிற்கும் கூட்டை வெள்ளாளர்கள் மட்டும் தான் தொட்டுத் தூக்கலாமாம். மற்றச் சாதியினர் மறுபேச்சுப் பேசாமல் 'ஆமென்' சொல்லிக் கொண்டு பின்னால் அமைதியாக வரவேண்டும். 1983 மார்ச் இருபத்தைந்தாம் நாள் நடக்கவிருக்கும் பெருநாளில் பள்ளர்கள் 'நாங்களும் தொட்டுக் கூடு தூக்குவோம்' என்று அறிவித்தார்கள்.

வெள்ளாளர்கள் மிரட்டிப் பார்த்தார்கள், வேலை தர மறுத்துப் பார்த்தார்கள், இந்த முறை மட்டும் வழமை போலவே பெருநாள் நடக்கட்டும் அதன்பின் பிரச்சனையைப் பேசித் தீர்க்கலாம் எனக் கௌரவமாகக் கெஞ்சிக் கூடப் பார்த்தார்கள். எதுவும் நடக்கவில்லை. பெருநாளின் போது கலகம் நடப்பதை வெள்ளாளர்கள் விரும்பினார்களோ இல்லையோ கோயிலின் பாதிரி விரும்பவில்லை. அவன் வெள்ளாளர்களிடம் கூடிப் பேசி ஒரு திட்டத்தைக் கூறினான். அவர்கள் அதை ஏற்றுக்கொண்ட பின்பு பேச்சு வார்த்தைக்கு டானியலும் போனார். டானியல் வெளியூரவர் என்ற காரணத்தைச் சொல்லி அவரை உள்ளே விட வெள்ளாளர்கள் மறுத்தனர். டானியல் அமைதியாக வெளியே போய்க் காத்திருந்தார்.

உள்ளே பேச்சுவார்த்தையில் வெள்ளாளர்கள் அந்தோனியார் கோயில் தங்களுடைய சொந்தக் கோயில் என்றனர். தங்கள் நிலத்தில் தங்கள் பணத்தில் கோயில் கட்டப்பட்டது என்றனர். அக்கோயிலில் வெள்ளாளர் களைத் தவிர வேறு எவருக்கும் உரிமை இல்லையென்றனர். பாதிரி நியாயம் உரைத்தான். 'அது உண்மை! கோயில்

உங்களுடையதுதான். ஆனால் இந்த ஏழை மக்களும் கிறிஸ்தவர்கள் தானே! அவர்களுக்கு வழிபடுவதற்கு இந்த ஊரில் வேறு தேவாலயம் கிடையாது.'

'உன்னைப்போல்' உன் அயலானையும் நேசி' என்பது வேதாகமத்தின் சத்தியம். நீங்கள் இந்த ஏழை மக்கள் தங்களுக்கென ஒரு கோயில் கட்ட உதவ வேண்டும்.' வெள்ளாளர்கள்' பாதிரியுடன் ஏற்கனவே பேசிப் பறைந்து வைத்த மாதிரியே வேறொரு இடத்தில் பத்துப் பரப்புக் காணியைப் பள்ளர்களுக்குக் கோயில் கட்டுவதற்குத் தானமாகத் தர வெள்ளாளர்கள் சம்மதித்தார்கள். இதில் பாரபட்சம் எதுவும் இல்லை என்றும் பள்ளர்களும் அந்தோனியார் கோயிலே கட்டலாம் என்றும் தானும் தன் பங்குக்குக் கட்டப்படும் கோயிலுக்குப் பீடமேற்ற ஒரு புனித

டானியல்

அந்தோனியார் சொரூபத்தை இலவசமாகத் தருவதாகவும் பாதிரி சொன்னான். தகவல் வெளியே நின்றிருந்த டானியலுக்குப் போனபோது, அவர் உள்ளே அடாத்தாக வந்து பாதிரியைக் கை எடுத்துக் கும்பிட்டு 'பத்துப் பரப்புக் காணியும் பள் அந்தோனியாரும் தந்ததற்கு மிக்க நன்றி சுவாமி' என்றார்.

பெருநாளுக்கு முதல் நாள் மாலை நேசகுமாரனைச் சிறிகாந்தமலர் சந்தித்தபோது 'சுவாமி நாளைக்குச் செட்டிகாடு அந்தோனியார் கோயிலில் கூடு தூக்கும்போது வெள்ளாளர்கள் ஏதாவது சண்டை வலிக்கக் கூடும்' என்றாள். 'நாளைக்குக் காலையில் நான் அங்கு இருப்பேன் கீழ்ச் சாதிச் சனங்களைக் கூடுதூக்க அனுமதிக்காவிட்டால் நான் அந்த அந்தோனியார் கோயிலைக் குண்டு வைத்துத் தகர்ப்பேன்' என்றான் நேசகுமாரன். காலையில் நேசகுமாரன் செட்டிகாடு அந்தோனியார் கோயிலுக்குச் சென்றபோது கூடு புறப்படத் தயாராகவிருந்தது. அந்தோனியார் நான்கு வெள்ளாளர்களின் தோள்களில் அமர்ந்திருந்தார். கோயில் வளவு முழுவதும் வெள்ளையும் சொள்ளையுமாக வெள்ளா

ஜெயக் குமார்

ளர்கள் தேநீர்க் கடைகளிலும், கச்சான் கடைகளிலும், காப்புக் கடைகளிலும் கூடிக் கூடி இரகசியம் பேசிக்கொண்டிருந் தனர். அந்தோனியாருக்கும் அவரைத் தாங்கி நிற்கும் நான்கு வெள்ளாளர்களுக்கும் காவலாய் நான்கு பொலிசுக்காரர் களும் இன்ஸ்பெக்டர் ஜெயக்குமாரும் துப்பாக்கிகளோடு நின்றிருந்தார்கள். நிறைய வெள்ளாளர்கள் பைபிள், செபமாலை எல்லாவற்றையும் வீட்டில் வைத்துவிட்டுக்



கத்திகள் பொல்லுகளோடு வந்திருந்தார்கள். இவை எல்லா வற்றையும் பார்த்துக்கொண்டு ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக எண்ணி முப்பது முப்பத்தைந்து பேர் அந்தோனியாரின் கூடு புறப்படும் வழியை மறித்து வீதியில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களிடையே சிறிகாந்தமலரும் இருந்தாள். 'எங்களையும் கூடு தூக்க அனுமதிக்காவிட்டால் கூடு புறப்பட நாங்கள் அனுமதிக்கமாட்டோம்' என்று அவர்கள் கோசமிட்டார்கள்.

நேசகுமாரன் சனங்களோடு சனங்களாக நின்றிருந்தான். இன்ஸ்பெக்டர் ஜெயக்குமார் மறியல் செய்தவர்களிடம் வந்தான். அவனின் கையில் துப்பாக்கி பளபளத்தது. அவ னோடு கோயில் மூப்பரும் ஊர்ப் 'பெரிய மனுசனு'மான அவுறாம்பிள்ளை தோளில் கிடந்த உத்தரியத்தை எடுத்துத் தலைப்பாகை கட்டிக்கொண்டும் பட்டு வேட்டி முனையைக் கையில் தூக்கிப் பிடித்துக்கொண்டும் ஓடி வந்தான். அவுறாம்பிள்ளை மறியல் செய்தவர்களிடம் பேசினான்.

துப்பாக்கி

'மக்காள் இப்போ என்ன சொல்கிறீர்கள்? தெய்வகாரியத் துக்குக் குறுக்கே நிற்காதீர்கள். அது சாவான பாவம், முதலில் அந்தோனியாரைப் போகவிடுங்கள். நீங்கள் என்னுடைய பள்ளர்கள். உங்களுக்கு நான் பிழையாக நடப்பேனா? நீதி யாகச் செய்வேன். எல்லாவற்றையும் பின்பு பேசிக் கொள்ள லாம். இப்போது கோயிற் காரியத்துக்குத் தடையாக இருக்காதீர்கள்'. 'கோயிற் காரியத்தைத் தடுப்பது நீங்களா? நாங்களா? நாங்கள் கூடு தொடக் கூடாது என்று எந்தச் சுவிஷேசப் புத்தகத்தில் எழுதிக் கிடக்கிறது?' சிறிகாந்த மலருக்குப் பக்கத்திலிருந்த பெண் இப்படிக் கேட்டாள். ஜெயக்குமார் தொண்டையைச் செருமினான். பின் அவன் தன் கைகளை இடுப்பில் வைத்தவாறே 'மரியாதையாக இப்போது வழி விடவேண்டும். இல்லாவிட்டால் நான் உங்களை அடித்துத் துரத்த வேண்டியிருக்கும்' என்றான். அவுறாம்பிள்ளை பேசினான், ஜெயக்குமார் பேசினான், மக்கள் பேசினார்கள், தருக்கம் நீண்டது. நீண்ட நேரமாகத் தோள்களில் அந்தோனியார் கூட்டைச் சுமந்து நின்ற நான்கு வெள்ளாளர்களும் சலிப்போடு அந்தோனியார் கூட்டை கீழே இறக்கிவைத்தார்கள். மறியல் செய்துகொண்டிருந் தவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரோடும் சிறிகாந்த மலருடனும் நேற்று இரவே நேசகுமாரன் பேசி ஒரு திட்டம் வகுத்திருந்தான். அந்தத் திட்டப்படி சாதகமான ஒரு தருணத் தில் கூட்டைச் சுற்றி வெள்ளாளர்கள் போட்டிருக்கும் பாது

காப்பு வளையத்தைத் தாண்டி ஓடி நேசகுமாரனும் அந்த மூன்று இளைஞர்களும் கூட்டைத் தொட்டுத் தோள்களில் தூக்குவதே திட்டம். மறியல் செய்துகொண்டிருந்த மூன்று இளைஞர்களும் தயாராகினார்கள். நேசகுமாரன் சனங்களை விலக்கியவாறே சனங்களுக்குள்ளிருந்து வந்து கொண்டிருந் தான். மூன்று இளைஞர்களும் நேசகுமாரனைக் கண்டு விட்டார்கள். அவர்கள் தங்களுக்குள் கண்சாடைகள் செய்து கொண்டார்கள். நேசகுமாரனின் இந்த விநாடிக்கான நோக்கம் கூடு தூக்குவதல்ல. அவன் சனங்களுக்குள்ளிருந்து ஜெயக்குமார் மீது தாவிப் பாய்ந்தான். பாய்ந்த வேகத்தில் ஜெயக்குமாரின் கையிலிருந்து துப்பாக்கியை 'ஒத்திப் பறித்துக் கொண்டு சனங்களுக்குள் மறைந்தான். ஜெயக்குமார் ஒரு கணம் தான் தடுமாறினான். உடனடியாக அவனின் பொலிஸ் கள்ள மூளை வேலையைக் காட்டியது. ஜெயக்குமார் தன் அருகில் நின்றிருந்த பொலிஸ்காரனிடமிருந்து துப்பாக்கி யைப் பறித்து வானத்தில் சுட்டான். பின்பு 'மூப்பர் அவுறாம் பிள்ளையை ஒரு பள்ளன் சுட்டுவிட்டுத் தப்பியோடுகிறான்' என்று அவன் கத்தினான். துப்பாக்கியோடு ஓடும் நேச குமாரனை வெள்ளாளர்கள் துரத்திச் சென்றார்கள். கற் களால் எறிந்தார்கள். நேசகுமாரன் இரண்டாம் முறை குப்புற விழுந்த போது துப்பாக்கி அவன் கையிலிருந்து எகிறியது. வீழ்ந்து கிடந்தவனை வெள்ளாளர்கள் கற்களால் அடித் தார்கள். இன்ஸ்பெக்டர் ஜெயக்குமார் இரத்தத்தில் கிடந்த நேசகுமாரனின் நெற்றியில் தனது சப்பாத்துக் காலைத் தூக்கி வைத்து 'நான் உன்னை விடப் பெரிய புலி' என்று விரல் களைச் சொடுக்கினான்.

**அவுறாம் பிள்ளை**

நேசகுமாரன் தான் மயங்கி விடக்கூடாது என்பதில் உறுதி யாக இருந்தான். தன்னால் இந்த அய்ந்து பொலிஸ்காரர் களிடமிருந்தும் ஒரு எதிர்பாராத சந்தர்ப்பத்தில் தப்பியோட முடியும் என்று நம்பினான். தன் நெற்றியில் இருந்த ஜெயக் குமாரின் காலைக் கையால் அலட்சியமாகத் தட்டிவிட்டான். ஜெயக்குமார் நேசகுமாரனைத் தூக்கி நிறுத்தினான். நேசகுமாரன் ஜெயக்குமாரைப் பார்த்து கேலியாக உதடுகளைச் சுழித்தான். ஜெயக்குமார் நேசகுமாரனின் கண்களையே உற்றுப் பார்த்தான். பின்பு நேசகுமாரனின் சட்டையைக் கிழித்தெறிந்தான். பின்பு நேசகுமாரனின் காற்சட்டை பிய்த் தெறியப்பட்டது. நேசகுமாரனின் உள்ளாடையில் ஜெயக் குமார் கை வைத்தபோது நேசகுமாரன் தனது ஜட்டியை இறுகப் பிடித்தான். ஜெயக்குமார் நேசகுமாரனின் ஜட்டி



யைக் கீழே இழுத்தபோது நேசகுமாரன் ஜெயக்குமாரை பார்த்து 'ப்ளீஸ் சேர்' என்றான். அவன் கண்கள் கலங்கிக் கெஞ்சின.

அந்த அந்தோனியார் கோயில் பெருநாளில் நிறுத்தப்பட்டு நேசகுமாரனின் ஜட்டியும் பொலிஸாரால் உரியப்பட்டு அவன் நிர்வாணத்தைச் சனங்கள் அறிந்தபோது நேசகுமாரன் வாழ்வின் மீதான அனைத்து நம்பிக்கைகளையும் இழக்கலானான்.

**நிர் வாணம்**

நேசகுமாரன் நிர்வாணமாகத் திறந்த ஜீப்பின் பின்புற இருக்கையில் விலங்கால் பிணைக்கப்பட்டு ஊறாத்துறை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டான். பொலிஸ் நிலையத்தில் ஜெயக்குமார் நேசகுமாரனை மேசையில் படுக்கப்போட்டு நஞ்சு பூசப்பட்ட கத்தியை உள்ளங்காலில் வைத்தான். நேசகுமாரன் காலைக் குறண்டி மெதுவாக 'ப்ளீஸ் சேர்' என்றான். ஜெயக்குமார் கத்தியை நேசகுமாரனிடமிருந்து அகற்றினான். பின் நேசகுமாரனின் பிடரி மயிரைப் பிடித்து அவனின் கண்களை உற்றுப் பார்த்தவாறே 'நீ பேசுவாய் என்று நம்புகிறேன்' என்று தலையை மேலும் கீழுமாக அசைத்தான்.

நேசகுமாரன் பேசத் தொடங்கினான்.

## வக்குமூலம்

எது இரவு எது பகல் என அறியாமல் ஊறாத்துறை பொலிஸ் நிலையத்தில் மயங்கிக் கிடந்தேன். என் கணக்கு சரியானால் அன்று ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து மூன்றாம் வருடம் மார்ச் இருபத்தொன்பதாம் நாளாக இருக்கலாம். சிறைக்கூட்டின் கம்பிகளுக்குள்ளால் கண் எறிந்தபோது விறாந்தையின் மயங்கிய ஒளியில் சப்பாத்து நிழல்கள் அலைவதைக் கண்டேன். சிறைக்கூண்டு நான்கடிக்கு எட்டடியாய் இருந்தது. கூண்டின் நடுவே அரைச்சுவர் எழுப்பி அந்தப்பக்கம் மலக்குழி அமைக்கப்பட்டிருந்தது. அந்தச் சுவரின் மறைவில் மலக்குழியில் குந்தியிருந்து என் உடலை விரல்களால் வருடத் தொடங்கினேன். இப்போது என் பிடரியில் இன்னொரு புதிய காயத்தை நான் கண்டுபிடித்தேன். எனது வெடித்துக்கிடந்த உதடுகளை நாவால் அளைந்தவாறு இடது கை சுட்டுவிரலால் அக்காயத்தை ஆராய்ந்தேன். மண்டையோடு வெடித்திருக்க வேண்டும். நுங்கில் விரல் புதைந்தது போல் உணர்ந்தேன். பின் சுட்டுவிரலை மூக்கின் அருகில் கொண்டு சென்றபோது மரணத்தின் வாசனையை முகர்ந்தேன். எந்த முன்னுணர்வும் இன்றி கண்ணீரும் சளியும் என் மூஞ்சியில் வழியலாயின. அவமானம் என் பிடரி பிடித்து உலுக்கியது.

இன்னும் நான் அறியாமலுக்கு எத்தனை கீறல்களும், வெடிப்புகளும், கன்றல்களும் இந்தத் தேகத்துள் ஒளிந்திருக்கின்றனவோ தெரியாது. வலது கையை அசைக்கவே முடியவில்லை. அது தொங்கிப்போய்க் கிடந்தது. பல மணி நேரங்களாக அதை அசைக்கவும் தூக்கவும் முயன்றேன். ஒரு இஞ்சிகூட அசைக்க முடியவில்லை. மீண்டும் இடது கையால் அடிவயிற்றைத் தடவி கையைத் தயங்கித் தயங்கிக் கீழே இறக்கினேன். தொடைகளில் வலி சுண்டியது. ஆணுடம்பின் ரோமங்கள் இரத்தத்தில் உலர்ந்து திரணை திரணையாய்க் கிடந்தன. என் விதைகள் ஊமல் கொட்டைகளாய் வீங்கித் தொங்கின. பற்களை இறுகக் கடித்துக்கொண்டு எழுந்து நின்று கால்களைத் 'தொம்தொம்' மென நிலத்தில் அறைந்தேன். உள்ளங்கால்களும் நெருப்பாய் எரிந்தன. என் நிர்வாணமும் என் தனிமையும் கண்ணீரை



அனுமதித்தன. சற்று நேரத்தில் என் சிறைக்கூட்டின் கம்பிகளின் மீது பெற்றன் பொல்லு தட்டப்பட்டபோது மலக்குழியின் அரைச் சுவரில் என் நிர்வாணத்தை மறைந்தவாறு எழுந்து நின்றேன். இரண்டு பொதிகள் கம்பிகளுக்குள்ளால் உள்ளே தரையில் வீசப்பட்டன. 'டக்கால தின்று விட்டு டக்கால உடுத்துக்கொண்டு டக்கால துயாராகு' என்ற உத்தரவு சிங்களத்தில் சொல்லப்பட்டது. முதலாவது பொதியில் ஒரு அழுக்குச் சாரமும், அழுக்குச் சட்டையும் இருந்தன. அந்தச் சாரமும் சட்டையும் ஒரு பிச்சைக்காரனிடமிருந்தோ ஒரு திருடனிடமிருந்தோ பொலிசாரால் திருடப்பட்டிருக்க வேண்டும். சாரத்தை எடுத்து உதறினேன். வெடில் மணத்தது. சட்டை என் உடலை இறுக்கிப்பிடித்தது. நிலத்தில் குந்தியிருந்து அடுத்த பொதியைப் பிரித்தேன். கூப்பன் அரிசிச்சோறும் செத்த மிளகாய் சம்பலுமிருந்தன. ஒரு பிடி சோற்றை இடது கையால் அள்ளி வாயில் வைத்தேன். மெல்லும் போது தாடைகள் வலித்தன. அப்படியே உன்னி விழுங்கினேன்.

## விசாரணை

பொலிசார் சிறைக்கூண்டின் கதவைத் திறந்து என்னைக் குப்புறக் கவிழ்த்து, என் கைகள் இரண்டையும் பின்புறமாகச் சேர்த்து விலங்கிட்டார்கள். இருள் விறாந்தையின் இரு புறங்களும் மூன்று மூன்றாக ஆறு சிறைக்கூடுகள் இருந்தன. உள்ளே மனிதர்கள் சுருண்டு கிடப்பது மங்கலாகத் தெரிந்தது. விறாந்தையைக் கடந்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்குமாரின் முன் நான் நிறுத்தப்பட்டபோது வெயில் நெற்றியில் அடித்தது. அப்போது நேரம் காலை எட்டிலிருந்து பத்து மணிக்குள் இருக்கலாம். ஜெயக்குமார் பொலிஸ் சீருடையில் இல்லாமல் வெள்ளை அரைக்கால் சட்டையும் வெள்ளை ரீ சேர்ட்டும் அணிந்திருந்தான். அவனின் மூஞ்சியில் உணர்ச்சிரேகைகள் கிடையாது. சவத்தின் மூஞ்சி போலிருந்தது. சில விநாடிகளில் சவத்தின்மூஞ்சியின் கீழ்ப்பகுதியில் புன்னகை கீறப்பட்டது. 'நீ பிஷப்பின் சொந்தக்காரனா?' என்று ஜெயக்குமார் கேட்டான். என் மனதில் சட்டென நிம்மதி தோற்றி அது உடலெங்கும் நிரம்பியது. 'ஆமாம் அய்யா' என்று ஆங்கிலத்தில் கூறினேன். 'நல்லது! அப்படியானால் ஒரு வழியில் நானும் உன் சொந்தக்காரன் தான். ஆனால் நீ என்னைக் கொல்லத்தானே பொலிஸ் நிலையத்தின் மீது குண்டு வீசினாய். கொஞ்சம் உன் தகப்பனாரைப் பற்றி யோசித்துப் பார், அந்தக் கண்ணியத்துக்

குரிய மனிதர் உன் பொருட்டு கண்ட கண்ட சிங்களவனின் கால்களில் எல்லாம் விழுந்து கெஞ்சுகிறாரே! சரி நடந்தவை நடந்தவையாய் இருக்கட்டும். நான் உனக்கு உதவ என்னால் கூடிய மட்டும் முயற்சி செய்வேன்.' ஜெயக்குமாரும் ஆங்கிலத்திலேயே பேசினான். பின் அவன் என் கண்களை உற்றுப் பார்த்தபோது நான் எனது கண்களைத் தாழ்த்திக் கொண்டு வாயைக் கோணினேன். அது இளிப்பதற்காக இருக்கலாம்.

**அடையாளம்**

'நாங்கள் தேடுவதைக் கேள்விப்பட்டு அந்தத் தாதி சிறிகாந்தமலர் சரணடைய வந்திருக்கிறாள். அவளை நீ அடையாளம் காட்ட வேண்டும். அதுவொரு பொலிஸ் நடைமுறை' என்ற ஜெயக்குமார் என்னை பொலிஸ் நிலையத்தின் முன்மண்டபத்துக்குக் கூட்டிப் போனான். அங்கே ஒரு வாங்கிலில் அமர்ந்திருந்த சிறிகாந்தமலர் எங்களைக் கண்டதும் எழுந்து நின்றாள். அவள் வெள்ளை நிறச் சேலை கட்டியிருந்தாள். அவளுக்கு அருகில் பத்துரூபாய் கதிரவேலு உட்கார்ந்திருந்தார். ஊறாத்துறை நீதிமன்றத்தில் எந்த வழக்குப் பேசினாலும் கதிரவேலு பத்து ரூபாய் மட்டும் தான் வாங்குவார். அவர் மூலம் தான் சிறிகாந்தமலர் சரணடைந் திருக்க வேண்டும். சிறிகாந்தமலர் பயந்திருந்தாகத் தெரியவில்லை. ஆனால் அவள் கண்களில் சினத்தையும் வெறுப்பையும் நான் கவனித்தேன். பொலிஸ் நிலையத்தின் வெளியே வேப்பமரத்தின் கீழ் சிறிகாந்தமலரின் தாய் தேவசேனாவும் தகப்பன் இலங்கையனும் குந்தியிருப்பதையும் ஜன்னல் வழியாக நான் கவனித்தேன்.

'இவள் தான் சிறிகாந்தமலரா?' என்று ஜெயக்குமார் என்னைப் பார்த்துத் தமிழில் கேட்டான். நான் மெதுவாகத் தலையசைத்தேன். 'வாயைத் திறந்து சொல்!' என்றான் சொன்னேன். பொலிஸ் புகைப்படக்காரனைத் தயாராகுமாறு உத்தரவிட்ட ஜெயக்குமார் எனது கைவிலங்கை அகற்றுமாறும் பொலிசாருக்கு உத்தரவிட்டான். என்னைச் சிறிகாந்தமலரின் அருகே போய் சுட்டுவிரலால் அவள் மார்பைத் தொட்டபடி புகைப்படத்துக்கு 'போஸ்' கொடுக்குமாறு ஜெயக்குமார் சொன்னான். நான் எனது சுட்டுவிரலைச் சிறிகாந்தமலரின் மார்புக்கு ஓரங்குல இடைவெளியில் வைத்து அவளைச் சுட்டியபோது வெவ்வேறு கோணங்களில் புகைப்படங்கள் பொலிஸ் புகைப்படக்காரனால் எடுக்கப்பட்டன. அப்போது தான் கவனித்தேன் தொங்கிப்போய் அசைக்கவே முடியாமல்



கிடந்த எனது வலது கை தான் சிறிகாந்தமலரைக் காட்டுகிறது. அது எனது வலது கை என்று உணர்ந்த பின்பாக உடனடியாக அந்தக் கையில் தீராத வலியை உணரலானேன். சிறிகாந்தமலர் ஒரு இரகசிய விநாடியில் என் மூஞ்சியில் சொன்னாள். 'சுவாமி! நீர் என்னைத் தூக்குக்கு அனுப்பி வைக்கிறீர்!' ஜெயக்குமார் சிறிகாந்தமலர் இரகசியத் தொனியில் உதடுகளை அசைக்காமலேயே பேசியதை எப்படிக் கவனித்தானோ தெரியாது; ஓடிவந்து அவளின் தலைமுடியைப் பற்றியிழுத்து 'என்னடி பேசினாய்' என்று கேட்டு சிறிகாந்தமலரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

**தூக்கு**

**கடைச்சி**

சிறிகாந்தமலர் கையால் கன்னத்தை மூடியவாறே 'அண்ணே, நான் ஒன்றும் பேசவில்லை' என்று ஜெயக்குமாரை முறைத்தாள். 'அண்ணனோ? ஏனடி கடைச்சி நான் உனக்கு சுண்ணாம்பு எரிக்க சிப்பிக் கடகம் தூக்கினேனா?' என்று கத்திய ஜெயக்குமார் அவளின் மறுகன்னத்திலும் அறைந்தான். நான் கண்களைக் கவிழ்த்து நிலத்தைப் பார்த்தவாறிருந்தேன். அப்போது பத்துரூபாய் கதிரவேலு வெள்ளைக்கார ஆங்கிலத்தில் ஜெயக்குமாரோடு தர்க்கப்படுவதைக் கேட்டேன்.

அநேகமாக இந்தப் பக்கங்களுடன் இந்தக் கதைப் புத்தகத்தில் சிறிகாந்தமலரின் கதை முடிகிறது. அவள் பதினொரு மாதங்கள் சிறையிலிருந்தாள். ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றைந்தாம் ஆண்டு ஒக்ரோபர் முப்பதாம் திகதி யாழ்ப்பாண நகரத்தைச் சிறிலங்கா இராணுவம் புலிகளிடமிருந்து கைப்பற்றியபோது அவளது கணவன் காணாமல் போய்விட்டானாம். இப்போது அவள் தனது மூன்று குழந்தைகளுடன் லண்டனில் வசிக்கிறாள். அங்கே அவள் ஒரு வைத்தியசாலையில் பணிபுரிகிறாள்.

ம்

***ஊ***றாத்துறை பொலிஸ் நிலைய முற்றத்தில் ஏர்னஸ்ட் இரண்டு நாட்களாக இரவும் பகலும் பழி கிடந்தான். நிலத்தில் குந்தியிருந்து தரையையே பார்த்தவாறிருந்தான். தரையில் கறுப்புச் சப்பாத்துக்களைக் கண்ட போதெல்லாம் ஓடிப்போய் சப்பாத்துக்களைத் தன் கண்ணீரால் கழுவி முத்தமிட்டான். 'என் பிள்ளையை ஒரு செக்கன் என் கண்ணில் காட்டுங்கள்' என்று சிணுங்கி அழுதான். பொலிசுக் காரர் ஏர்னஸ்ட்டுக்கு அவன் மகனைக் காட்டினார்களில்லை. ஆற்றாக் கடைசியில் ஏர்னஸ்ட் தோமையப்பரின் பெயரால் பொலிசுக்காரர்களை முனிந்துகொண்டே மண்ணள்ளி எறிந்தான்.

அவன் வெறுங்கையாக பனைத்தீவு படகுத்துறையில் வந்திறங்கி அழுது புரண்டான். ஒரு குழந்தையைப் போல ஒரு தீராத வியாதிக்காரனைப்போல அவன் அரற்றினான். 'தோமையப்பரே! என்னுடைய பிள்ளையைப் போட்டு மாடு மாதிரி உரிக்கிறார்களே, என்னுடைய பிள்ளை வதை பொறுக்கமாட்டாமலுக்குக் குழறி அழுத சத்தத்தைப் பாவி நான் இந்தக் காதால் கேட்டேனே!' என்று சொல்லிச் சொல்லி அவன் தன் செவிகளைக் கைகளால் அறைந்தான்.

**ஏர்னஸ்ட் புலம்பியது**

சிறியபுஷ்பம் உடுத்திருந்த 'ட்ரெஸிங் கவுனுக்கு மேலால் சேலையைத் தாறுமாறாகச் சுற்றியவாறே படகுத்துறைக்கு ஓடி வந்தாள். அவள் பின்னாலேயே மரியாளும் மார்த்தாளும் ஓடி வந்தார்கள். சிறியபுஷ்பம் ஏர்னஸ்ட்டுக்கு அருகில் சிந்திக் கிடந்த சில்லறைகளையும் ஏர்னஸ்டின் அடையாள அட்டையையும் பொறுக்கிச் சேகரித்தவாறே 'இஞ்சேரணை, உன் நல்ல மனதுக்குச் சின்னமடு மாதா நல்லது தான் காட்டுவார். எல்லாவற்றையும் ஆச்சி பார்த்துக்கொண்டு தான் இருக்கிறார்' என்றாள். ஏர்னஸ்ட் மரியாளையும் மார்த் தாளையும் கட்டிப்பிடித்துக் கதறி அழுதான். மரியாளும், மார்த்தாளும் திகைத்துப்போய் நின்றிருந்தார்கள். ஏர்னஸ்டின் இனசனம் ஏர்னஸ்டைத் தேற்றிவிட படாதபாடு பட்டது.

ஏர்னஸ்ட் தனது இரு கைகளாலும் தலை தலையாய் அடித்துக்கொண்டான். அப்படி அடித்தவாறே 'எல்லா



வெள்ளிடியும் அந்தக் கடைக் குடியாலே தான் வந்தது. அந்தக் கடையர்களை ஊருக்குள் குடி வைக்க வேண்டாமென்று நான் படித்துப் படித்துச் சொன்னேன். நீங்கள் இரங்கினீர்கள். ஆனால் கடைசியில் கடைச்சி தன் சாதிப் புத்தியைக் காட்டிவிட்டாள். அந்த மலர் தோறை தான் மாய்மாலம் போட்டு என் பிள்ளையை மயக்கி தன்னோடு ஆஸ்பத்திரி காம்பறாவுக்குள் வைத்திருந்திருக் கிறாள். அவளால் தான் என் பிள்ளை பொலிஸில் பிடிபட்டு உத்தரிக்கிறான். அந்த வேசைக்குடி இனியும் இந்த ஊருக்குள் இருக்கக்கூடாது. பொடியள் கொழுத்துங்களடா அவள் வீட்டை!' என்று ஏர்னஸ்ட் கண்களில் நீர் சொரியக் குலுங்கி அழுதான். அவன் இரத்தம் கண்ணீராய் ஓடிற்று.

**தோறை**

அன்றிரவு சிறிகாந்தமலரின் குடிசை கொழுத்தப்பட்டது. அதன்பின்பு சிறிகாந்தமலரின் குடும்பம் பனைத்தீவை விட்டு வெளியேறியது.

ம்

**இன்னொரு அடையாளம்**

தூங்கிக் கொண்டிருந்த நான் சிறைக்கூண்டு கதவு தள்ளித் திறக்கப்படும் சத்தம் கேட்டு விழித்தேன். வெளியே இழுத்து வரப்பட்ட நான் ஜெயக்குமாரின் முன்பு நிறுத்தப் பட்டபோது அவன் எனக்கு 'குட் மோர்னிங்' சொல்லி விட்டு எனது தலையில் ஒரு சிறிய அரிசிச் சாக்கை கவிழ்த் தான். சாக்கின் மேலால் விரல்களை அளைந்து என் கண்களைத் தடவிப் பிடித்து என் கண்களுக்கு நேரே சாக்கில் துளையிட்டான். இப்போது என்னால் பார்க்கக் கூடியதாக இருந்தது. சாக்கின் வாய் என் கழுத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டது. 'உன்னோடு சேர்ந்து பொலிஸ் நிலையத்தின் மீது குண்டு எறிந்தவனின் வீடு அல்லைப்பட்டியில் தானே உள்ளது?' என ஜெயக்குமார் கேட்டபோது நான் சாக்கின் உள்ளே 'ஓம்' எனச் சொன்னேன்.

பொலிஸ் ஜீப் வண்டி அல்லைப்பிட்டிக்குள் சென்ற போது நேரம் காலை ஆறு மணியிருக்கலாம். நான் கலைச் செல்வனின் வீட்டுக்கு ஜீப்பிலிருந்து வழிகாட்டினேன். கலைச்செல்வன் இப்போது தனது வீட்டில் தங்குவதில்லை என அவன் எனக்குச் சொல்லியிருந்தான். எனவே கலைச் செல்வன் அகப்பட மாட்டான் என்றே பட்டது. ஆனால் அவன் எச்சரிக்கையாக நடமாடுவான் என்று தோன்றவில்லை. ஏனெனில் நான் அவனைக் காட்டிக் கொடுப்பேன் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கமாட்டான் என்பது உண்மை. ஜீப் 'மரம்' வல்லிபுரத்தின் வீட்டுக்குப் போன போது 'மரம்' வல்லிபுரம் வீட்டின் முற்றத்தில் நாற்காலி போட்டு உட்கார்ந்திருந்தான். ஜீப்பிலிருந்து குதித்த நான்கு பொலிசுகளும் வீட்டின் நான்கு புறமுமாக ஓடி பக்கத்துக்கு ஒருவராக துப்பாக்கியோடு காவல் புரிய ஜெயக்குமார் என் கையைப் பிடித்து மரம் வல்லிபுரத்திடம் அழைத்துப் போனான். ஜெயக்குமாருக்கும் நாற்காலி போடப்பட்டது. ஜெயக்குமார் நாற்காலியில் உட்காரவில்லை. அவன் என்னை நாற்காலியோடு சேர்த்து விலங்கிட்டான். மரம் வல்லிபுரத் திடம் ஜெயக்குமார் மிகுந்த மரியாதையுடனேயே பேசினான்.

மரம் வல்லிபுரம் தனது மகன் படித்தவன் எனவும், எதுவிதக் குற்றமுமற்றவன் என்றும் ஜெயக்குமாருக்குச் சொன்னான். எனது வாக்குமூலத்தின் படிதான் கலைச்செல்வனை விசாரணை செய்ய வேண்டுமென



என்னைச் சுட்டி ஜெயக்குமார் வல்லிபுரத்துக்குக் கூறினான். எங்கே எனது முகத்தை மூடியிருக்கும் சாக்கை அழைத்து எனது முகத்தை வல்லிபுரத்துக்கு ஜெயக்குமார் காட்டி விடுவானோ என்று நான் தவியாய்த் தவித்தேன். அவமானம் முள்ளாக முகத்தில் தைத்தது. 'இந்த முகமூடி யார்?' என வல்லிபுரம் கேட்க 'அதை உங்களுக்குச் சொல்ல எனக்கு அதிகாரமிருந்தால் இவனுக்கு நாங்கள் முகமூடி அணிவிக்க வேண்டிய அவசியமில்லையே' என்று ஜெயக்குமார் இளித் தான். இப்போது வீட்டில் கலைச்செல்வன் இல்லையென்றும் அவன் வந்தவுடன் அவனை பொலிஸ்நிலையத்தில் ஒப்படைப் பதாகவும் வல்லிபுரம் சொல்ல 'இப்போது வீட்டைச் சோதனையிடுவது எனது கடமை. கூட வந்திருக்கும் பொலிசுக்காரர்கள் நால்வரும் சிங்களவர்கள்' என்றான் ஜெயக்குமார். சற்று அமைதியாய் இருந்த வல்லிபுரம் 'தாராளமாகச் சோதனை போடுங்கள்' என்று வீட்டு வாசலை நோக்கித் தனது கைகளை அகல விரித்துக் காட்டினான்.

**கொட்டியா**

ஜெயக்குமார் நிதானமாக நடந்து சென்றான். எனக்கு அருகில் வந்த வல்லிபுரம் மெல்லிய குரலில் 'இந்த வீட்டில் எத்தனை தரம் சோறு சாப்பிட்டிருப்பீர் சுவாமி' என்றான். இப்போது ஜெயக்குமார் வீட்டு நிலைப்படியில் தனது காலணிகளைக் கழற்றிவிட்டு வீட்டுக்குள் நுழைய வீட்டுக் குள்ளிருந்து பெண்களின் ஓலம் எழுந்தது. வீட்டின் வலது புற வாசலால் உடம்பில் சட்டையில்லாமல் சண்டிக்கட்டு டன் வெளியே வந்த கலைச்செல்வன் வந்த வேகத்திலேயே தலை தெறிக்க ஓடினான். வீட்டின் வலது புறத்தில் காவலுக்கு நின்ற பொலிசுக்காரன் திடுக்குற்று 'கொட்டியா துவணவா... கொட்டியா துவணவா' என்று கத்தினான். வீட்டுக்கும் வலது புற மதிற்சுவருக்கும் இடையில் அறுபது எழுபது மீற்றர்கள் தூரமிருக்கலாம். திடுக்குற்று முடிந்து உசாரான பொலிசுக்காரன் கலைச்செல்வனைத் துரத்திக் கொண்டு ஓடுவதை நான் பார்த்தேன். அல்லைப்பிட்டி மணலில் நடக்கவே முடியாது. கால்கள் மணலில் புதையும். இதில் பொலிஸ் சப்பாத்துக் காலோடு வேகமாக ஓட முடியாது. கலைச்செல்வனுக்கு அது பழகிய மண். அவன் பிறந்த தவழ்ந்த மண். ஒரு சிறுத்தை போல தாவி ஓடி அவன் மதிலில் பாய்ந்து ஏறும்போது வீட்டின் வலது புற வாசலில் இருந்து ஜெயக்குமார் மூன்று சுற்றுக்கள் சுட்டான். மதிலோடு சரிந்த கலைச்செல்வன் என் கண் முன்னாலேயே அவனைப் பெற்றவர்கள் கண்முன்னாலேயே அந்த இடத்திலேயே அந்த விநாடியிலேயே செத்துப்போனான்.

ம்

**இராணுவம்**

எல்லாத் தகவல்களையும் இரகசியங்களையும் பெயர்களையும், இடங்களையும் என்னிடமிருந்து ஒட்டக் கறந்துகொண்டு இன்ஸ்பெக்டர் ஜெயக்குமார் என்னைக் கைவிடும் போது சாவு என் கைகளைப் பற்றியது. நான் ஜெயக்குமாரால் ஊறாத்துறை பொலிஸ் நிலையத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டேன். பொலிஸ் நிலையத்தின் எல்லாப் புறங்களிலும் இராணுவத்தினர் நிலை எடுத்து நின்றார்கள். அவர்களில் அநேகர் பச்சை நிற அரைக் காற்சட்டைகளும் சிவப்பு, பச்சை, மஞ்சள் வர்ணங்கள் குழப்பிய உருமறைப்பு பெனியன்களும் அணிந்திருந்தனர். பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியே கொற கொறவென இழுத்துவரப்பட்ட என்னை ஒரு பெரும் பச்சை ட்ரக்கினுள் ஏற்றினார்கள். ட்ரக்கினுள் நான் இருக்கையோடு சேர்த்து குறுக்குமறுக்காகச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டேன். நான் ஏற்றப்பட்ட ட்ரக்குக்கு முன்பாகவும் பின்பாகவும் கவச வாகனங்கள் அணிவகுத்தன. என் அருகே காவலுக்கு இருந்தவர்களில் ஒரு இளவயது இராணுவச் சிப்பாய் எழுந்து தன் கையிலிருந்த நீண்ட வாளை ட்ரக்கின் இரும்புக் கதவில், சலூனில் வாரில் சவரக்கத்தி தீட்டும் சாங்கத்தில் திருப்பித் திருப்பித் தேய்த்தவாறே என்னை முறைத்தான். பின்பு அவன் சொன்னான். 'உம்பவ அத மரண்ட எனவா' ட்ரக்கும் கவசவாகனங்களும் உறுமி நகர்ந்தன. சாவு தன் ஊர்வலத்தைத் தொடங்கிவிட்டது.

**பண்ணைத் தாம்போதி**

ஊறாத்துறையிலிருந்து புறப்பட்ட வாகன அணி, வடக்கு வீதியில் பரவைக் கடலை ஒட்டிச் சென்றது. கரம்பன், நாரந்தனை, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி கடந்து பண்ணைத் தாம்போதியில் வாகன அணி மிதந்தது. இந்தப் பண்ணைத் தாம்போதி அக்காலத்தில் அரச படைகளால் கொலைக்களமாக மாற்றப்பட்டிருந்தது. மேயர் அல்ஃபிரட் துரையப்பா கொலைவழக்கில் கைதாகி விடுதலையான இன்பமும் அவரது மைத்துனர் செல்வமும் இங்கே தான் போலிசாரால் வெட்டிக் கொல்லப்பட்டனர். வேலணைக் கிராமிய வங்கி கொள்ளை வழக்கின் முதலாம் எதிரியான உதயச்சந்திரன் இங்கே வைத்துத்தான் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுக் கடலில் எறியப்பட்டார். என்னையும்



இராணுவத்தினர் இந்தத் தாம்போதியில் வைத்து சுடுவதற்கு அல்லது வெட்டுவதற்கு அல்லது உயிருடன் தீ மூட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கலாம். தாம்போதியில் ட்ரக் நிறுத்தப்பட்டு நான் கீழே இறக்கப்பட்டால் அந்த விநாடியிலேயே கடலில் குதித்துவிட நினைத்திருந்தேன். ட்ரக்கினுள் சங்கிலிகள் அவிழ்க்கப்பட்டால் தான் என்னைக் கீழே இறக்க முடியும். நல்ல வேளையாகக் கைகளில் விலங்கிடப்பட்டிருக்கவில்லை. என்னால் சில கிலோமீற்றர்கள் நீந்த முடியும். இனி சாவின் முன்னால் நான் எதிர்ப்பில்லாமல் மண்டியிடப் போவதில்லை. அதற்கு வசப்படப் போவதுமில்லை. Even a worm will turn. சாவு என்னைத் துரத்திப் பிடிக்கட்டும்.

**யாழ்ப்பாணம்**

ட்ரக் பண்ணைத் தாம்போதியையும் கடந்து யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்தது. அப்போது இரவு ஏழு அல்லது எட்டு மணியிருக்கலாம். நகரம் இன்னும் அடங்கவில்லை. சனங்கள் இராணுவ வாகனங்களின் தொடரணிக்கு வழிவிட்டு வீதியோரங்களிலும் கடைகளுக்குள்ளும் ஒதுங்கினார்கள். கடைகளின் முன்புறங்களில் திராட்சைக் குலைகளும், றம்புட்டான் கூடைகளும் தொங்கிக்கொண்டிருந்தன. சாந்தி தியேட்டரில் 'நீயா?' நூற்றைம்பது நாட்களைக் கடந்து ஓடிக்கொண்டிருப்பதாக நகரத்துச் சுவர்களில் விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்ததும் இதை எழுதிக்கொண்டிருக்கும் தருணத்தில் எனக்கு ஞாபகம் வருகிறது. ஒவ்வொரு தேநீர்க் கடைகளின் முன்பாகவும் முதியவர்கள் தேநீர்க் கோப்பைகளோடு நின்றிருந்தனர். இளைஞர்களும் பெண்களும் இல்லாத நகரமாகவே யாழ்ப்பாணம் இருந்தது. வாகன அணி இப்போது பிரதான வீதியைக் கடக்கிறது. ஒரு சைக்கிள் தெருவோரம் விழுந்து கிடக்க அருகில் ஒரு நடுத்தர வயது மனிதர் நின்றிருந்தார். அந்த சைக்கிள் அவருடையதாகவும் இருக்கலாம். அல்லது சைக்கிளில் வந்தவன் இராணுவ வாகனங்களைக் கண்டவுடன் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடிப்போய் எங்காவது பாதுகாப்பாய்ப் பதுங்கிக்கொண்டிருக்கலாம். இறுதியில் ட்ரக் குருநகர் இராணுவ முகாமுக்குள் சென்று நின்றது.

**குருநகர்**

குருநகர் இராணுவ முகாமைப் பற்றியும், அதன் அமைப்புக் குறித்தும் எனக்குப் பெரிதாக எதுவும் தெரியாது. நான் அங்கிருந்த ஆறு நாட்களும் ஒரு விசாலமான அறைக்குள் அடைக்கப்பட்டிருந்தேன். அந்த அறையினுள் ஆறு கட்டில்கள் வரிசையாகப் போடப்பட்டிருந்தன. அந்தக்

கட்டில்களில் ஆறு மிலிட்டரிப் பொலிசார் தூங்கினார்கள். நான் கட்டில் காலோடு இருபத்து நான்கு மணிநேரமும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தேன். அதிகாலை நான்கு மணிக்கு ஒரு இரண்டு நிமிடங்கள் மலசலம் கழிக்க வெளியே அழைத்துச் செல்வார்கள். நான் மலம் கழிக்கும்போதும் என் இடுப்பில் சங்கிலி கட்டப்பட்டிருக்கும். சங்கிலியின் மறுமுனையை, தம்மிக என்ற மிலிட்டரி பொலிஸ்காரன் பிடித்திருப்பான். அவன் கொஞ்சம் அன்பானவனாகத் தெரிந்தான். என்னை மிரட்ட அவன் முயன்றதில்லை.

**தம்மிகா**

பகலில் மலசலம் கழிக்க வேண்டும் என்று கேட்டால் மற்றைய மிலிட்டரி பொலிசுக்காரர்கள் அடிக்க வந்தார்கள். ஆனால் அவன் என் இடுப்புச் சங்கிலியின் முனையைப் பிடித்து அழைத்துச் செல்வான். யாரும் கவனியாதபோது பரிவோடு எனக்கு பிஸ்கட்டுகள் கூடப் போட்டிருக்கிறான்.

**அரபாத் தேவன்**

எனக்கு குளிப்பதற்கு அனுமதியில்லை. மலசலக் கூடம் செல்லும்போதும் வரும்போதும் நான் கவனித்ததில் அந்த முகாம் அதிஉயர் பாதுகாப்போடு உள்ளதாகத் தெரிந்தது. சுற்றியுள்ள மதிலின் மீது நான்கு பட்டுகளில் முள்கம்பிகள் வரிந்து கம்பிகளில் மின்சாரம் பாய்ச்சியிருந்தார்கள். எந்தத் திக்கில் பார்த்தாலும் உயரத்தில் காவல் கோபுரங்கள் இணைக்கப்பட்டுப் பெரும் வெளிச்சம் பாய்ச்சும் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. ஆனால் சில மாதங்களுக்கு முன்பு இந்த முகாமிலிருந்து 'அரபாத்' தேவன், அன்பழகன், சுருட்டன் ஆகிய மூன்று இளைஞர்கள் தப்பிச் சென்றதையும் நான் அறிவேன்.

**அருள் நேசன்**

கொழும்பிலிருந்து வந்திருந்த விசேட புலனாய்வுப் பொலிஸ் அதிகாரி என்னை விசாரணை செய்யும்போதும் நான் கட்டில்காலுடனேயே கட்டப்பட்டிருந்தேன். என் உடலின் காயங்கள் புழுத்துக்கிடந்தன. சிறிகாந்தமலரைக் காட்ட எழுந்த கை தான், அதன் பின் எழவேயில்லை. தொங்கியே கிடந்தது. துர்நாற்றங்களால் நிரப்பப்பட்ட ஒரு பலூனாக என்னுடல் வீங்கிக் கிடந்தது. பொலிஸ் அதிகாரி என்னுடன் சிங்களத்திலேயே உரையாடினான். அவன் எனக்கு எப்படி சிங்களம் தெரியும்? என்ற கேள்வியில் ஆரம்பித்து முன்னாகவும் பின்னாகவும் குறுக்காகவும் ஆயிரம் கேள்விகள் கேட்டான். நான் சொல்லச் சொல்ல எனது வாக்குமூலம் அவனால் தட்டச்சு செய்யப்பட்டது. பிலிமத்தலாவ இறையியல் கல்லூரியில் இருந்த காலங்களில் சிங்களம் பேசக் கற்றுக்கொண்டேன் என்பதில் ஆரம்பித்து நானும்

36745



ஆயிரம் பதில்களைக் கூறினேன். நான் பொய்யானதொரு பதிலைக் கூற எத்தனித்த தருணங்களில் விசாரணை அதிகாரி புன்னகையுடன் குறுக்கிட்டு என் குறித்த உண்மைகளைக் கூறினான். உண்மையாகவே பிலிமத்தலாவ விஞ்ஞான ஆய்வுகூடத்தை நானும் அருள்நேசனும் கொள்ளையடித்த திகதியை நான் மறந்திருந்தேன். ஆனால் விசாரணை அதிகாரி 05 செப்ரம்பர் 1981 இரவு பதினொரு மணி என்று துல்லியமாகச் சொன்னான். அருள்நேசன் வங்காலையில் வைத்துக் கைது செய்யப்பட்டது விசாரணை அதிகாரி கூறித்தான் எனக்குத் தெரியவந்தது.

**பஸ நாயக்க**

கடைசியாக விசாரணை அதிகாரி-அவனது பெயர் டி.பி.பஸநாயக்க என்பதைப் பின்பு தெரிந்துகொண்டேன்- எனக்கு அறிவுரைகள் கூறலானான். 'மல்லி, இதோ பார்! நீ தொடர்பு வைத்துள்ள இயக்கம் பிரபாகரனுடைய இயக்கத்தைப் போன்ற கெரில்லா இயக்கம் கிடையாது. உமாமகேசுவரனுடைய இயக்கத்தைப் போன்ற உடோப்பியா இயக்கமும் கிடையாது. பொலிசாரைக் கொல்வதோ, பொலிஸ் நிலையங்கள், கோடுகச்சேரிகள் மீது குண்டுகள் வீசுவதோ, வாழைக்குலை திருடியவனையும் கோழி திருடியவனையும் சமூக விரோதி எனக் கூறி கொல்வதோ உங்கள் இயக்கத்தின் கொள்கை அல்ல. நீங்கள் மக்கள் புரட்சி மீது தீராத நம்பிக்கை கொண்டவர்கள். தமிழ் சிங்கள தொழிலாள வர்க்க ஒற்றுமைக்காக உழைப்பவர்கள். குட்டிப் பூர்சுவா சாகசங்களைத் திட்டவட்டமாக நிராகரிப்பவர்கள். தமிழ் மக்களைப் பேரினவாத அரசுக்கும், தரகுமுதலாளித்துவ வர்க்கத்துக்கும் - நான் இலங்கை முதலாளி வர்க்கத்தை தேசிய முதலாளி வர்க்கம் என்று கூறமாட்டேன் - எதிராக நீ அணி திரட்டியிருக்க வேண்டும். நீ மக்கள் மத்தியில் இறங்கி புரட்சிகர கருத்துக்களைத்தான் பரப்பியிருக்க வேண்டும்.' குண்டுகளை அல்ல. கருத்து மக்களைப் பற்றினால் அது சக்தியாகும். நீ இதுவரை அரசாங்கத்துக்கும் பொலிசுக்கும் எதிராக இயங்கி வந்திருக்கிறாய் என நீ நம்புகிறாய். ஆனால் உண்மையில் நீ உனது இயக்கத்துக்கு எதிராகத்தான் இயங்கிக்கொண்டிருந்தாய். உனக்காக நான் மிகவும் வருந்துகிறேன்' புத்திமதி கூறி முடித்த விசாரணை அதிகாரி என் காயங்களுக்குச் சிகிச்சை அளிக்குமாறு மிலிட்டரி பொலிசாருக்கு உத்தரவிட்டுச் சென்றான்.

காற்றிலே உப்புக் கலந்திருந்தது; ஒளியிலே உப்புக் கவிந்திருந்தது; உலகமே உப்புப் படலத்துக்குள்ளும் சில கைதிகளுக்குள்ளும் இராணுவச் சீருடைகளுக்குள்ளும் துப்பாக்கிகளுக்குள்ளும் 'பொறு கியண்ட எப்பா' என்ற ஒற்றை உத்தரவுக்குள்ளும் அடங்கி விட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது. நான் சுவர்களிலே பிணைக்கப்பட்டிருந்தேன். என் தேகம் மூடி உப்புப் படிந்து ஒரு சிதைக்கப்பட்ட உப்புச் சொரூபம் போல நான் ஆனையிறவு உப்பள இராணுவ முகாமில் வீழ்ந்து கிடந்தேன். அவர்கள் சதா காலமும் என்னைப் பேச வைத்தார்கள். பெற்றோலால் நிரப்பப்பட்ட பொலிதீன் பைகளுக்குள் என் உதடுகள் காற்று விலக்கித் தள்ள நாவு சுழன்றது. அவர்கள் என்னிடம் திருப்தியற்றவர்களாகவே காணப்பட்டார்கள். லெபனானில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெறும் தமிழ்ப் போராளிகளைக் குறித்து என்னிடம் விசாரணை செய்தார்கள். நமது போராளிகள் லெபனானில் பயிற்சி பெறுகிறார்கள் என்ற செய்தியைக் கேட்கவே மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது. இந்த பென்னம் பெரிய இராணுவ முகாமை வீழ்த்த அவர்களில் பத்துப் பேரே போதுமானவர்கள் என நினைத்துக்கொண்டேன். செவித்துவாரத்துக்குள் பென்ஸிலை நுழைத்து மரண அடி அடிக்கும் கொலை நுட்பத்தை இராணுவத்தினர் எனக்குத் தெள்ளத் தெளிவாக விவரித்துக் கொண்டேயிருந்தார்கள். முதலில் மேசையில் எனது தலையைச் சாய்த்து வைப்பார்களாம். பின் செவித்துவாரத்துள் முழுப் பென்ஸிலை நிறுத்துவார்களாம். ஒவ்வொரு தவறான பதிலுக்கும் ஒவ்வொரு பொய்க்கும் ஒரு சென்ரி மீற்றர் ஆழத்துக்கு பென்ஸிலைச் சுத்தியலால் தட்டி காதுக்குள் இறக்குவார்களாம். அதிக பட்சம் நான்கு பொய்கள் வரை கூறலாமாம். அய்ந்தாவது பொய் சொல்வதற்கு நான் உயிரோடு இருக்க மாட்டேனாம். அகில இலங்கை ரீதியில் இந்த பென்ஸில் அடிக்கு உடுகம்பொல என்ற இராணுவ அதிகாரியே பிரபலமானவராம். இந்தக் கதைப் புத்தகத்தின் அடுத்தடுத்த பக்கங்களில் நான் உடுகம்பொலவைச் சந்திக்க நேரிடலாமாம்.

**ஆனையிறவு**

**உடுகம்பொல**



நாட்கள் செல்லச் செல்ல எனக்கு இழைக்கப்பட்ட அவமானங்களும் கொலை அறிவித்தல்களும் குறையாவிட்டாலும் என் அச்சம் மெல்ல மெல்லத் சுணியலாயிற்று. அச்சம் ஒரு ஆனையைப் போல பயங்கரமானது எனினும் ஆனையைப் போலவே, பழக்கப்படுத்தி விட்டால் நம்மிடம் பணியக் கூடியது.

காலையில் மலம் கழிக்கவும் மூஞ்சி கழுவவும் வெளியே கூட்டிச் செல்லப்படும் நேரத்தில் மற்றைய கைதிகளிடம் பேசத் தொடங்கினேன். அவர்கள் தங்கள் கதைகளைச் சுருக்கமாகச் சொன்னார்கள். அவர்கள் என்னிடமும் என் கதையைக் கேட்டார்கள். என் கதையில் சிறிகாந்தமலரையும், கலைச்செல்வனையும் மறந்துவிட விரும்பினேன். ஆனால் அவர்களில்லாமல் என் கதை ஒரு சரியான வடிவத்துக்கு வருவதாய் இல்லை. மிகவும் குழப்பமான முறையிலும் சந்தேகத்துக்கிடமான முறையிலும் நான் கதை சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்பது எனக்கே தெரிந்தது. கேட்டவர்கள் 'ம்' கொட்டினார்கள். வித்தியாசம் வித்தியாசமான 'ம்'கள்.

**கதை**

அந்த முகாமில் வரிசைகளாக இருந்த புதர்கள் படித்த பாழடைந்த அறைகளில் அறைக்கு ஒருவராக நாங்கள் முப்பத்தியிரண்டு பேர்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தோம். நாங்கள் எப்போதும் ஆள் மாறி ஆள் சினிமாப் பாடல்களை ராகத்தோடு உரக்கப் பாடிக்கொண்டேயிருந்தோம். அப் பாடலின் வரிகளிடையே செய்திகளைப் பரிமாறிக்கொண்டோம். காவலுக்கு இருந்த இராணுவத்தினருக்கு தமிழன் பிறக்கும் போது தாலாட்டு, இறக்கும் போது ஒப்பாரி. இசையையும் அவனையும் பிரிக்கமுடியாது என்று சமாதானம் சொன்னோம். வெளியிலே நடக்கும் சம்பவங்கள் ஒரு தமிழ் தெரிந்த மிலிட்டரி பொலிஸ்காரன் மூலம் அரைகுறையாக உள்ளே வந்து சேர்ந்தன. ஒரு நாள் மாலையில் பாடல் வழியே கீழ்வரும் கதை கைதிகளிடையே பரவியது.

*சிறிகாந்தமலர் என்றொரு பெண்ணாம்.*
*அவள் தலைமறைவு இயக்கத்துடன் தொடர்புடையவளாம்.*
*அவளைக் கைது செய்த சி.அய்.டி.பொலிசார் அவளைச்*
*சித்திரவதை செய்தார்களாம். அவளின் பெண்குறிக்குள்*
*எரியும் சிகரட்டை நுழைத்தார்களாம்.*
*அவள் தாகத்தால் தவித்த போது சாக்கடைநீரைக் குடிக்க*

வைத்தார்களாம். அவளைத் தங்கள் முன்னே மூத்திரம் பெய்யச்

சொல்லி பார்த்து சிரித்தார்களாம்.

இறுதியில் அவளைக் கொன்று சடலத்தை

பொலிஸ் நிலையத்தில் அவளின் சேலையிலேயே கட்டித் தொங்கவிட்டுத்

தற்கொலை என்று சொல்லி சடலத்தை

அவளின் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்தார்களாம். அவளுடன் தொடர்புடைய இன்னொரு போராளியும்

பல்கலைக்கழக மாணவனுமான கலைச்செல்வன் என்பவனைத் தேடி

பொலிசார் அவனின் வீட்டுக்குச் சென்றபோது கலைச் செல்வன்

ஒரு பொலிசுக்காரனைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுவிட் டானாம்.

தன் வீட்டுக்குத் தன்னைத் தேடி வந்து

முற்றம் மிதித்த மிகுதிப் பொலிசுக்காரரையும்

பழிதீர்க்கப் போவதாக அவன் சபதம் செய்திருக்கிறானாம்.

நான் கதையைக் கேட்டு 'ம்' கொட்டினேன். கிட்டத்தட்ட மூன்று கிழமைகளின் பின்னதாக நானும், மானிப்பாய் தேர்தல் தொகுதி அய்க்கிய தேசியக் கட்சி அமைப்பாளரின் மீது கொலை முயற்சி மேற்கொண்டதற்காகக் கைது செய்யப் பட்டிருந்த குண்டு பிரேமும் சிங்கள நாட்டிலுள்ள பெரும் இராணுவ முகாமான பனாகொட முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டோம்.

ம்



மையமாகச் செவ்வக வடிவில் முற்றம். செவ்வகத்தின் முதுகுகளில் சிறைக்கூண்டுகள். என்னுடைய அறையில் என்னோடு டேவிட் அய்யாவும், மனோகரனும், அன்புக் கரனும் அடைக்கப்பட்டிருந்தார்கள். எங்களின் இடதுபுற சிறைக்கூண்டில் டொக்டர் ராஜசுந்தரமும் பாதிரியார் சவரிமுத்துவும் அடைக்கப்பட்டிருந்தார்கள். எங்களின் வலதுபுறச் சிறைக்கூண்டில் மகேஸ்வரனும், கிருபாவும், உருத்திரகுமாரும் அடைக்கப்பட்டிருந்தார்கள். பனாகொட தடுப்பு முகாமில் மொத்தமாக நாற்பத்தாறு அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள். சிலர் மீது ஏற்கனவே வழக்குகள் இருந்தன. சிலருக்கு வழக்குகள் இல்லை. சிலருக்குத் தாங்கள் ஏன் கைது செய்யப்பட்டோம் என்பதே தெரியாது. ஆனால் எவரையும் எக்காலத்திலும் எவரும் நீதிமன்றத்துக்கு அழைத்துச்சென்றார்களில்லை.

**பனா கொட**

சிறிலங்காவின் நீதி அமைப்பே விசித்திரமாக மாறத் தொடங்கிய காலமது. 'பயங்கர வாத தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவரை இருபத்து நான்கு மாதங்கள் நீதி விசாரணைகள் இல்லாமல் பொலிஸ் நிலையத்திலோ, இராணுவ முகாமிலோ, சிறையிலோ, ஏதாவதொரு இரகசிய இடத்திலோ தடுத்துவைக்கலாம். இந்த இருபத்து நான்கு மாதங்களை நீட்டிக்கவும் சட்டத்தில் வழி இருந்தது. பனாகொட முகாமில் தான் இராணுவ உயர்அதிகாரி உடுகம்பொல பொறுப்பில் இருந்தான். வவுனியாவில் ஒரு கடைச்சிப்பந்தியாக வேலை செய்தவரும் போராளிகளின் நடமாட்டத்தை அறிந்திருந்தும் அரசாங்கத்துக்குத் துப்பு கொடுத்தாரில்லை என்று குற்றம் சாட்டப்பட்டவருமான முப்பது வயதுகள் மதிக்கத்தக்க கணேசலிங்கம் எங்களுடன் தான் பனாகொடயில் இருந்தார். உடுகம்பொல இரவு எட்டுமணியானால் குளித்து முழுகி கடமைக்கு வந்து விடுவான். யாராவது ஒரு கைதியைச் சிறைக்கூண்டிலிருந்து செவ்வக முற்றத்துக்கு இழுத்துவந்து உதைப்பதுடன் அவனின் கடமை நேரம் ஆரம்பமாகும். கணேசலிங்கத்தை அன்றைய இரவில் உடுகம்பொலவும் அவனது சேவகர்களும் செவ்வக முற்றத்தில் வைத்துத் தாக்கியபோது உடுகம்

**கணேச லிங்கம்**

பொலவின் முகத்தில் கணேசலிங்கம் ஓங்கி அறைந்ததை நாங்கள் கம்பிகள் வழியே பார்த்தோம். விடிந்தபோது இரண்டு செவித்துவாரங்களிலும் பென்ஸில்கள் அறையப்பட்டு கணேசலிங்கம் செவ்வக முற்றத்தில் இறந்து கிடந்ததைக் கண்டோம்.

**டேவிட் அய்யா**

டேவிட் அய்யா ஆயிரத்துத்தொள்ளாயிரத்து எழுபத்தாறாம் ஆண்டு 'காந்தியம்' அமைப்பை ஆரம்பித்தார். காந்தியம் அமைப்பு வன்னி முழுவதும் பள்ளிகளையும், சேவைமையங்களையும் ஆரம்பித்து நடத்தியது. டேவிட் அய்யா கிளிநொச்சியில் காந்திய பயிற்சிநிலையங்களை நடத்திவந்தார். டேவிட் அய்யாவுக்கு அறுபது வயதிருக்கும். உமாமகேசுவரனையும் சந்ததியாரையும் சந்தித்தது, அவர்கள் இருவரையும் தமிழ்நாட்டுக்கு அனுப்பிவைத்தது என இரு குற்றச்சாட்டுகளின் பேரில் டேவிட் அய்யா கொழும்பு வை.எம்.சி.ஏ. கட்டடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு பனாகொட தடுப்புமுகாமுக்குக் கொண்டு வரப்பட்டார். காந்தியம் அமைப்பின் இன்னொரு முக்கியமான செயற்பாட்டாளரான டொக்டர் ராஜசுந்தரம் வவுனியாவில் கைது செய்யப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டார் உடுகம்பொல டேவிட் அய்யாவைச் செவ்வக முற்றத்தில் போட்டு நிர்வாணப்படுத்தினான். அவரைக் குழந்தை போல தவழ்ந்து போக வைத்தான். டேவிட் அய்யா வலி தாளாமல் அரற்றிய போது அவரை நாய் போல் ஊளையிட வைத்தான். டேவிட் அய்யா அலறும்போது மனோகரன் தலையை ஆட்டி 'சத்தியசோதனை' என்றார். அவருக்குக் கல் மனது.

**மனோகரன்**

மனோகரனின் கதைக்கும் அன்புக்கரனின் கதைக்கும் ஒரு விநோதமான ஒற்றுமை இருந்தது. சரசாலையைச் சேர்ந்த மனோகரனின் அரசியல் வரலாறு தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து ஆரம்பமாகிறது. பத்து வருடங்களாக அவர் அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவந்திருக்கிறார். இதுவரை அவர் ஆறு தடவைகளைக் கைதாகியிருக்கிறார். நாச்சிமார் கோயிலடி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இரண்டு பொலிசுக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மனோகரன் தலைமறைவாகியிருந்தார். சாவகச்சேரி சி.அய்.டி. இன்ஸ்பெக்டர் நவரத்தினசாமி தலைமறைவான இளைஞர்களை முகர்ந்து தேடிப்பிடிப்பதில் தனித்திறமை பெற்றிருந்தான். குருநகர் அன்ரன், கைதடி செல்லக்கண்டு ஆகியோர் இவனாலேயே கைது செய்யப்



பட்டனர். அவன்தான் மறவன்புலவில் தலைமறைவாக ஒளிந்திருந்த மனோகரனையும் கைது செய்தான்.

**அன்புக்கரன்**

மனோகரன் கைது செய்யப்பட்ட நான்காவது நாள் இரவில் நவரத்தினசாமி பொலிஸ் நிலையத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியபோது ஆள் அரவமற்ற ஒரு சாலை வளைவில் ஒரு இளைஞன் நவரத்தினசாமியின் மோட்டார் சைக்கிளைக் கைகாட்டி மறித்தான். நவரத்தினசாமி மோட்டார் சைக்கிளை நிறுத்தி அந்த இளைஞனோடு பேசியபோது மோட்டார் சைக்கிளை மறித்தவன் நொடிப்பொழுதில் சின்னஞ்சிறு கிறீஸ் கத்தியை நவரத்தினசாமியின் தொண்டையில் பாய்ச்சினான். இருளுள் மறைந்திருந்த இன்னும் இரண்டு இளைஞர்கள் நவரத்தினசாமியின் பின்புறத்தில் கோடாரிகளால் கொத்தினார்கள். நவரத்தினசாமியின் தலை மீசாலைச் சந்தியிலும் இடது கைத்துண்டு மிருசுவில் சந்தியிலும், வலது கால் கொடிகாமம் சந்தியிலும் இரவோடு இரவாக வீசப்பட்டன. மூன்று இளைஞர்கள் இந்தக் கொலையை நிகழ்த்தியிருந்தாலும் நவரத்தினசாமியை வழிமறித்துப் பேசிக்கொண்டிருக்கும்போதே தனது உடலில் மறைத்துவைத்திருந்த கிறிஸ் கத்தியை வேகமாக உருவி நவரத்தினசாமியின் தொண்டையில் குத்தியவன் அன்புக்கரன். சி.அய்.டி.இன்ஸ்பெக்டர் நவரத்தினசாமிக்கு அன்புக்கரன் ஒரே மகன். மிகுதி ஆறுபேரும் பெண்பிள்ளைகள்.

**மகேஸ்வரன்**

நான் பனாகொடயில் இருந்தபோது தான் எனது பக்கத்துச் சிறைக்கூண்டில் இருந்த மகேஸ்வரன் அத்தனை கட்டுக் காவல்களையும் தாண்டி உடுகம்பொலவுக்கு உச்சிவிட்டுத் தப்பித்தார். அவர் நீண்ட காலமாக ஒரு கூரிய தகடால் கறையான் அரித்தது போல இரவுகளில் சிறைக்கம்பிகளை அரிந்திருக்கிறார். அரியப்பட்ட கம்பிகளை வெறும் சுயிங்கத்தால் ஒட்டி வைத்திருக்கிறார். அவரின் அறையிலிருந்த மற்ற இருவருக்கும் கூட தெரியாதவாறு இது நடந்திருக்கிறது என்பது ஆச்சரியமென்றால் அவர் தப்பிப்பதற்குத் தேர்ந்தெடுத்த நேரமோ பேராச்சரியம்! மகேஸ்வரன் பட்டப்பகலில் மதியம் இரண்டு மணிக்குத் தப்பித்துச் சென்றார். பனாகொட முகாமைச் சுற்றிய மலைச் சரிவுகளில் இராணுவத்தினர் சிவில் உடைகளில் கண்காணித்துக் கொண்டிருப்பார்கள் அவர்களின் கண்களில் எற்றுப்படாதவாறு மலைச்சரிவில் வேலை செய்துகொண்டிருந்த பெண்களிடம் பணம் கேட்டுப் பெற்றுக்கொண்டு

மகேஸ்வரன் கொழும்பு வரை சென்றது இன்னொரு ஆச்சரியம். 'இவ்வளவு ஆச்சரியங்களையும் எப்படி நிகழ்த்தினாய்?' என மகேஸ்வரனிடம் நான் கேட்டபோது "அது தான் எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது" எனச் சொல்லி மகேஸ்வரன் சிரித்தார். அவர் என்னுடன் அதிகம் பேசமாட்டார். நான் ஏதாவது கதையைப் போட்டால், விடுத்து விடுத்துக் கேட்டால், 'சுவாமி நீயும் தீவான் நானும் தீவான்' என்று கண்களைச் சிமிட்டிச் சிரிப்பார்.

விரைவிலேயே மகேஸ்வரன் பொலிசாரால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டார். கொழும்பின் புறநகர் பகுதியான வத்தளையில் தலைமறைவாகயிருந்த மகேஸ்வரன் காலையில் தினப்பத்திரிக்கை வாங்க அருகிலுள்ள கடைக்குச் சென்றபோது கைது செய்யப்பட்டார். மகேஸ்வரனின் உடல் நார் நாராகக் கிழிக்கப்பட்டு உடுகம்பொலவால் செவ்வக முற்றத்தில் எறியப்பட்டது. உடும்கம்பொல தாங்க முடியாத மகிழ்ச்சியோடும் முகம் கொள்ளாத இளிப்புடனும் எங்களைப் பார்த்துக் கத்தினான். 'என்னுடைய சகோதரர்களே, நீங்கள் உங்களுடைய சகோதரனுக்கு இறுதிஅஞ்சலிகளை செலுத்துவதற்கு என்னால் அனுமதிக்கப்படுவீர்கள்'. ஆனால் அது வலிய சீவன். மகேஸ்வரன் நான்கே நாட்களில் சிறைக்குள் துள்ளித் திரிந்தார். இந்தச் சம்பவத்தின் பின்பு அவர் பனாகொட மகேஸ்வரன் என்றே பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டார்.

**இரு சிறுவர்கள்**

இரவில் மரண ஓலங்களைக் கேட்டு நாங்கள் துடித்துப் பதைந்து விழித்தபோது உடுகம்பொலவும் அவனது கோளயாக்களும் பதினாறு, பதினேழு வயதுகள் மதிக்கத்தக்க இரண்டு புதிய சிறுவர்களைச் செவ்வக முற்றத்தில் போட்டு அடித்து நொருக்குவதைக் கண்டோம். இரண்டு சிறுவர்களும் செவ்வக முற்றத்துள் சுற்றிச் சுற்றி ஓட உடுகம்பொல துரத்தி துரத்தி பொலிஸ் பெல்ட்டால் அடித்தான். அவர்களது ஊரை அவன் விசாரித்தபோது அவர்கள் கோண்டாவில் என்றார்கள். 'கோண்டாவில் பஸ்டிப்போவில் கொள்ளையடித்த பணம் எங்கே? என்று கேட்டுக் கேட்டு உடுகம்பொல அடித்தான். அந்தக் கொள்ளைக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சிறுவர்கள் கதறினார்கள். விடிய விடிய அடி விழுந்தது. அதிகாலை ஆறுமணியளவில் தாங்கள் இருவரும் தான் கோண்டாவில் பஸ்டிப்போவில் எண்பதாயிரம் ரூபாயைக் கொள்ளையடித்ததாக சிறுவர்கள் ஒப்புக்



கொண்ட பின்பே அடி ஆய்க்கினைகள் நிறுத்தப்பட்டன. கொள்ளையடித்த பணம் எங்கே என்று கேட்கப்பட்டபோது தாங்கள் பணத்தை முத்துலிங்கம் என்பவரிடம் கொடுத்து வைத்திருப்பதாகச் சிறுவர்கள் கூறினார்கள். முத்துலிங்கம் எங்கே? என்று கேட்கப்பட்ட போது தின்னவேலி பண்ணையில் முத்துலிங்கம் வேலை செய்வதாகச் சிறுவர்கள் கூறினார்கள். முத்துலிங்கத்தைத் தேடி இராணுவத்தினர் தின்னவேலி பண்ணைக்குச் சென்றபோது முத்துலிங்கம் என்று யாரும் அங்கு வேலை செய்யவில்லை என்று பண்ணை மேலாளர் கூறினாராம். அப்படியானால் யார் இருக்கிறார்கள் என்று கேட்டதற்கு மேலாளர் சிவலிங்கம்தான் இருக்கிறார் என்று கூறினாராம். உடனே இராணுவத்தினர் சிவலிங்கத்தைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். இதுதான் சிவலிங்கம் பனாகொடக்கு வந்த கதை.

**சிவ லிங்கம்**

இது நடந்து ஒரு கிழமை கழிந்தபோது மேலும் இரண்டு புதிய இளைஞர்கள் செவ்வக முற்றத்தில் நிறுத்தப்பட்டு உடுகம்பொலவால் விசாரணை செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் கொழும்பில் வைத்து எழுபத்தியிரண்டாயிரம் ரூபாய் காசுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இங்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிந்தது காசு வந்த வழியைக் கேட்டு உடுகம்பொல அவர்களைத் தாக்கிய போது அவர்கள் அந்தப் பணத்தை தாங்கள் கோண்டாவில் பஸ்டிப்போவில் கொள்ளையடித்ததாகச் சொன்னார்கள். உடுகம்பொல தனது தலையைப் பிய்த்துக்கொண்டான்.

'சரி நீங்கள் எந்த இயக்கம்?'

'நாங்கள் றெலோ இயக்கம் சேர்'

'றெலோ?'

'இல்லை சேர் றெலோ'

உடுகம்பொல 'அடியடா அவனை.....' என்று ஆத்திரத்துடன் கத்தினான். பின்பு அவன் நிறுத்தி நிறுத்திப் பேசினான்.

'முதலில் உங்களின் இயக்கத்தின் பெயரைச் சரிவர உச்சரிக்கப் பழகிக்கொள்ளுங்கள்! இந்த களவு கொள்ளைகளைப் பின்பும் அடிக்கலாம்! T.E.L.O....... றெலோ இதுதானே உங்களின் இயக்கம்?

'இல்லை சேர் R.E.L.O........ றெலோ இதுதான் எங்களின் இயக்கம்' உடுகம்பொல வெறுத்துப்போய் காறித் துப்பினான். அப்போது அச்சுவேலி, புத்தூர் பக்கங்களில் RELO என்றொரு இயக்கமும் இருந்ததை உடுகம்பொல அறிந்திருக்கவில்லை என்றே நினைக்கிறேன்.

**ஆரியப் பெரும**

இந்த நரகத்திலும் எங்களுக்கு அவ்வப்போது சில உதவி களைச் செய்வதற்கும், செய்திகளை இரகசியமாகச் சொல் வதற்கும் ஒரு சிங்கள அதிகாரி இருந்தார். அவருக்கு ஆரியப் பெரும என்று பெயர். எனினும் நமது பொடியன்கள் அவருக்கு ஆறுமுகம் என்று செல்லப்பெயர் சூட்டியிருந் தார்கள். ஆறுமுகம் வழியாக எங்களுக்கு ஒரு செய்தி கிடைத்தது. சில மாதங்களுக்கு முன்பு நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது அந்த வழக்கின் முதலாம் எதிரியான தங்கத்துரை நீதிமன்றத்தில் உரையாற்றினார். தடுப்புக் காவல்களில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளைக் காவல்அதிகாரிகள் கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதாகவும், அவ்வாறு கட்டாயப்படுத்த காவல் அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடையாது எனவும் தங்கத்துரை நீதிமன்றத்தில் வாதிட்டார்.

**தங்கத் துரை**

தங்கத்துரையின் வாதத்தைப் பொறுமையுடன் கேட்ட நீதிபதி சிறையதிகாரிகளைக் கண்டித்துப் பேசினான். அரசியல் கைதிகளை வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தக் கூடாது என்று அவன் சிறிலங்காவின் சிறைச்சாலைகளின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டான். பின்பு அவன் தங்கத்துரைக்குத் தூக்குத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தான்.

இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுப் பல நாட்கள் சென்றபின்பு தான் ஆறுமுகத்தின் புண்ணியத்தில் இந்த உத்தரவை நாங்கள் அறிந்துகொண்டோம். பனாகொட தடுப்புமுகாமில் எங்கள் தலைகளுக்கு மேல் வேலைகள் சுமத்தப்பட்டிருந்தன. சுத்தம் செய்தல், சலவை, சமையல், நீரிறைத்தல், தோட்ட வேலைகள், உடுகம்பொல வீட்டு பூமரங்களுக்குப் புல்லுப் பிடுங்குவது என எல்லாவித வேலை களையும் செய்ய நாங்கள் கட்டாயப்படுத்தப்பட்டோம். நீதிபதியின் தடை உத்தரவை அறிந்ததுதான் தாமதம், நாங்கள் ஒரு வேலை செய்ய மறுக்கும் இயக்கத்துக்குத் தயாரானோம். காலையில் எங்களைக் கூண்டுகளிலிருந்து விடுவித்து வேலை களுக்குப் போகுமாறு காவலர்கள் உத்தரவிட்டபோது நாங்கள் மறுத்துவிட்டு செவ்வக முற்றத்தில் சக்கப்பணிய



அமர்ந்தோம். ஒரு காவலன் எங்களைப் புதினமாகப் பார்த்துவிட்டு உடுகம்பொலவின் அலுவலகத்தை நோக்கி தலைதெறிக்க ஓடினான். 'கைதிகளின் தரப்பில் யாரையாவது பேச்சுவார்த்தைக்கு அலுவலகத்துக்கு அனுப்பவும்' என்ற செய்தியுடன உடுகம்பொலவின் சேவகன் வந்தபோது கைதி களிடையே வெற்றி எக்காளம் எழுந்தது. கைதிகளின் சார்பில் பாதிரியார் சவரிமுத்துவைத் தூது அனுப்புவதாக நாங்கள் தீர்மானித்தோம். சவரிமுத்து எழுந்து தனது கறுப்பு வெள்ளைத்தாடியை உருவி விட்டுக்கொண்டார். பின்பு என்னையும் கூட வருமாறு அழைத்தார். நானும் ஒரு முக்கால் பாதிரியார்தானே.

**சவரி முத்து**

உடுகம்பொலவின் அறைக்குள் நான் அனுமதிக்கப்பட வில்லை. நான் வெளிவாசலிலே நிறுத்தப்பட்டேன். பாதிரியார் அறைக்குள் சென்றவுடன் கதவு அறைந்து மூடப்பட்டது. உள்ளே உடுகம்பொலவும் பாதிரியாரும் பேசும் சத்தம் எனக்குத் துல்லியமாகக் கேட்டது.

'காலை வணக்கம் ஃபாதர்'

'மிக மிக காலை வணக்கம் கொமாண்டர்'

'ஃபாதர், நீங்கள் எல்லோரும் வேலைக்கு போகப் போகிறீர்களா இல்லையா?'

'கொமாண்டர், நான் சட்டத்தை மதிப்பவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். சட்டப்படி நாங்கள் வேலை செய்யத் தேவையில்லை என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது'

**பாதிரியும் உடுகம் பொலவும்**

'ஓஹ் அத்தத? நீ தான் இந்த வேலைநிறுத்தத்தின் தலையா?' என்ற கேள்வியைத் தொடர்ந்து கன்னத்தில் அறையும் சத்தங்களும் அதைத் தொடர்ந்து 'கடவுளின் பெய ரால் கேட்கிறேன் என்னை அடிப்பதை நிறுத்துங்கள், தயவு செய்யுங்கள்' என்று சவரிமுத்து பாதிரியார் பதற்றத்தோடு மெல்லிய குரலில் மன்றாடுவதும் எனக்குக் கேட்டது.

இப்போது அறைக் கதவைத் திறந்துகொண்டு பாதிரியார் வெளியே வந்தார். அடுத்ததாக உடுகம்பொல என்னை உள்ளே கூப்பிடுவானோ என்ற பயத்தில் எனக்குப் பேச்சே எழவில்லை. பாதிரியார் எனது கையைப் பிடித்து என்னைச் சமையற்கூடத்தின் அருகே அழைத்துப் போனார் 'உள்ளே என்ன நடந்தது?' என்று தயங்கித் தயங்கி பாதிரியாரிடம் கேட்டேன். பாதிரியார் 'என்ன தம்பி அவன் உடுகம்பொல

கதைக்கும் கதையைப் பார்த்தால் ஒரு பாதிரியார் என்று கூடப் பார்க்காமல் எனக்கே அடிப்பான் போலிருக்கிறதே;' என்று சலித்துக்கொண்டார். பின் நானும் பாதிரியாரும் சமையல் அண்டாக்களைக் கழுவ ஆரம்பித்தோம்.

நான் தோட்டத்தில் பாத்தி கட்டிக்கொண்டிருந்த போது உச்சியில் சூரியன் இருந்தது. அப்போது என்னை உடுகம்பொல அழைப்பதாக ஒரு சேவகன் வந்து சொன்னான். நான் உடுகம்பொலவின் அலுவலகத்துக்குள் சென்றபோது அவன் என்னை உட்காரச் சொன்னான். தேநீர் வரவழைத்துக் கொடுத்தான். பின் "உங்களுக்கு எப்படி வெளியிலிருந்து செய்திகள் வருகின்றன? இது தான் எனது எளிமையான கேள்வி மகே புஞ்சி புத்தா நீ மட்டும் உண்மையைச் சொல்லாவிடில் இன்று இரவு உன் காதுகளில் நான் பென்ஸில்களால் படம் கீற நேரிடும். பின்பு என்னைக் கெட்டவன் என்று சொல்லாதே..... ஒரு கனவானாக நடந்துகொள்! பொய் பேசாதே!' என்று என் நாடியைப் பிடித்து உடுகம்பொல செல்லம் கொஞ்சிய போது நான் ஆறுமுகம் என்ற ஆரியப்பெருமவின் பெயரை உச்சரித்தேன்.

ம்.



**தோட்டக் காடு**

ஏர்னஸ்டுக்கு அவன் வீட்டு வளவில் செய்து வந்த காய்கறித் தோட்டத்தில் வேலை செய்யவும் வீட்டு வேலைக்கும் ஒரு வேலைக்காரன் தேவைப்பட்டான். இதை அவன் யாழ்ப்பாணத்திலிருந்து போய் ஹட்டனில் வாத்தியார் வேலை பார்த்துக்கொண்டிருந்த அவனின் கூட்டாளிக்கு அறிவித்தான். கூட்டாளி லீவில் வரும்போது ராஜேந்திரன் என்ற பன்னிரண்டு வயதுப் பாலகனைத் தோட்டக் காட்டிலிருந்து மாதத்துக்கு பத்துரூபாய் சம்பளம் பேசிக் கூட்டிவந்து ஏர்னஸ்டிடம் ஒப்படைத்தான்.

**இராசேந் திரன்**

காலை நான்கு மணியிலிருந்து இரவு பத்துமணிவரை ராஜேந்திரனுக்கு வேலை ஏவப்பட்டது. பனம்பழம் பொறுக்க வேண்டும், விறகு சேகரிக்க வேண்டும், மாட்டைக் கொண்டுபோய் மேய்ச்சல் நிலத்தில் விடவேண்டும், வீடு வளவு துப்புரவு செய்ய வேண்டும், தோட்டத்துக்குத் தண்ணீர் இறைக்க வேண்டும், கிளி கலைக்க வேண்டும், சிறியபுஷ்பம் குளிக்கத் தண்ணீர் அள்ளிக் கொடுக்க வேண்டும், இரவு மாட்டுக்குக் கோளை அரிந்துபோட வேண்டும், ஒலை கிழித்துப் போடவேண்டும், கிடுகு பின்ன வேண்டும். ஏர்னஸ்ட் சாப்பிட்டு மிச்சம் வைத்த எச்சில் சோறும், முட்களும், எலும்புகளும் அந்தச் சிறுவனுக்குச் சிறியபுஷ்பத்தால் உணவாகக் கொடுக்கப்பட்டது. ஏர்னஸ்டின் கிழிந்த பழைய சட்டைகளை அவன் போட்டுத்திரிந்தான். வீட்டுத் தாழ்வாரத்தில் அவன் படுக்க வைக்கப்பட்டான். பதின்மூன்று வயது மரியாளுக்கும் பதினொரு வயது மார்த்தாளுக்கும் ராஜேந்திரனைப் பார்க்க சிரிப்புச் சிரிப்பாக வந்தது. ஏர்னஸ்டின் பெரிய சட்டைகளை அவன் அணிந்திருந்ததைப் பார்க்கவும் இவனின் 'அங்கிட்டு, இங்கிட்டு' என்ற தமிழும் அவர்களைச் சிரிப்பூட்டியது.

**மரியாளும் மார்த்தாளும்**

மாலையில் பாடசாலையால் வந்தவுடன் அவர்கள் தோட்டத்துக்குள் ஓடுவார்கள். அங்கே கிளி விரட்டிக்கொண்டோ புல்லுப் பிடுங்கிக்கொண்டோ இருக்கும் ராஜேந்திரனின் வேலையில் ஆராய்ந்து குற்றத்தைத் தேடிக் கண்டு, பிடிப்பார்கள். மரியாள் முழந்தாளிடுமாறு ராஜேந்திரனுக்கு உத்தரவிடுவாள். அவன் முழந்தாளிட்டதும் மரியாள்

நெற்றியை நிமிர்த்தி அங்கே ஒரு சிறிய கல்லை வைப்பாள். ராஜேந்திரன் தலையை அசைத்துக் கல்லைக் கீழே வீழ்த்தி னால் பிரம்பால் அடிவிழும் என்பாள். மார்த்தாளைக் கம்பு முறித்து வர அனுப்புவாள். ராஜேந்திரனால் மூன்று நான்கு நிமிடங்களுக்கு மேல் தலையை ஆட்டாமல் அசைக்காமல் நிமிர்த்தி வைத்திருக்க முடியாது. சூரிய வெளிச்சம் இருக்கும் திசையிலேயே அவன் முழந்தாளில் நிறுத்தப்படுவான். கண்கள் சூரிய ஒளியால் கூசும்போது அவன் கல்லைக் கீழே விழுத்துவான்.

அவனைக் கையை நீட்டச் சொல்லி அவனின் உள்ளங் கையில் மார்த்தாள் முறித்து வந்த பூவரசங்கம்பால் மரியாள் ஓங்கி அடிப்பாள். தானும் அடிக்க வேண்டும் என்று பிடி வாதம் பிடித்து மார்த்தாளும் ஓரிரு தடவைகள் ராஜேந்திரனை அடித்திருக்கிறாள். ராஜேந்திரன் ஒவ்வொரு அடிக்கும் கையை உதறியவாறே 'அய்யோ வலிக்குது பெரியக்கா, எரியுதே சின்னக்கா' என்று கெஞ்சுவான்.

**தோட்டக் காட்டான்**

ஒரு தடவை ராஜேந்திரன் சங்கக் கடைக்கு மண்ணெண் ணெய் வாங்கப் போத்தலும் அய்ந்து ரூபாய் காசும் கொண்டு போனான். அவனை ஒழுங்கைக்குள் வழிமறித்த மூன்று சிறுவர்கள் 'டேய் தோட்டக்காட்டான்' என்று பழித்தார்கள். ராஜேந்திரன் வேலியோடு ஒதுங்கும்போது அவனை வேலியோடு சாத்தி வைத்து அடித்துவிட்டு ஓடினார்கள். இந்தக் கலவரத்தில் ராஜேந்திரன் கையிலிருந்த அய்ந்து ரூபாயை எங்கேயோ தவற விட்டு விட்டான். இருட்டும் வரை அதை மணலிலும் வேலியிலும் தேடினான். அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. பயந்து பயந்து வீட்டுக்குப் போனான். வெறும் போத்தலும் கையுமாக இவனைக் கண்டதும் சிறியபுஷ்பம் கடவுளை அழைத்துக் கூச்ச லிட்டாள். 'என்ன நடந்தது?' என்று ஏர்னஸ்ட் கேட்டான். ராஜேந்திரன் நடந்ததைச் சொல்லி, காசு தொலைந்து போய்விட்டது என்றான். ஏர்னஸ்ட் எழுந்து ராஜேந்திரனை அடிக்க வந்தபோது 'அய்யா வேண்டுமானால் அய்ந்து ரூபாயை என் சம்பளத்தில் கழித்துக் கொள்ளுங்கள்' என்றான் ராஜேந்திரன். 'ஓ! சம்பளக் கணக்கெல்லாம் பார்க்குமளவுக்கு நீ பெரிய ஆளோ?' என்று கேட்ட ஏர்னஸ்ட், ராஜேந்திரனை மணலில் தூக்கிப்போட்டு மிதித்தான். அடுத்து வந்த இரண்டு இரவுகளும் அவர்கள் அந்த எச்சில் சாப்பாட்டைக் கூட ராஜேந்திரனுக்குக் கொடுக்கவில்லை.



**தீபாவளி**

சிறியபுஷ்பம் ஓய்வாக இருக்கும் சில நேரங்களில் அவளை நெருங்கி 'அம்மா நான் எங்களுடைய வீட்டுக்கு ஒரு தடவை போய் வருகிறேன். என்னை அய்யாவிடம் சொல்லி மலைக் குக் கூட்டிப்போகச் சொல்லுங்கள்' என்று ராஜேந்திரன் கேட்பான். ஏர்னஸ்ட் பாடசாலையால் வந்தவுடன் முதல் வேலையாகச் சிறியபுஷ்பம் 'என்ன? இந்த வேலைக்காரப் பொடியன் திரும்பித் தோட்டக்காட்டுக்குப் போகப் போகிறானாமே?' என்பாள். ஏர்னஸ்ட் 'டேய் ராசேந்திரம், டேய் ராசேந்திரம்' என்று கூப்பிடுவான். சிறுவன் தோட்டத் திலிருந்தோ மாட்டுக் கொட்டிலில் இருந்தோ ஓடிவருவான். 'தீபாவளிக்கு வீட்டுக்குப் போகலாம், நீ போகும்போது உன் தங்கைகளுக்கு நாங்கள் மரியாள், மார்த்தாளின் பழைய உடுப்புகளைத் தந்துவிடுவதாக இருக்கிறோம், என்ன சந்தோசம் தானே? என்று ஏர்னஸ்ட் கேட்கவும் ராஜேந்திரன் அமைதியாகத் தலையாட்டுவான். தீபாவளி வந்து போன பின்பு தான், தீபாவளி வந்து போனதே சங்கக் கடைக்குப் போகும்போது யாரும் சொல்லி ராஜேந்திரனுக்குத் தெரியவரும். இப்படியாக இரண்டு தீபாவளிகள் வரை ஏர்னஸ்டால் ராஜேந்திரனை ஏமாற்ற முடிந்தது.

**இயக்கம்**

மூன்றாவது தீபாவளிக்கு - 1985 தீபாவளி-ராஜேந்திரன் ஏர்னஸ்டை ஏமாற்றினான். அவனை அரிசி வாங்க இருபது ரூபாய் காசும் பையும் கொடுத்து, சிறியபுஷ்பம் கடைக்கு அனுப்பியபோது அவன் பையைக் கடலில் போட்டுவிட்டு, பனைத்தீவுப் படகுத்துறையில் லோஞ்சியேறி ஊறாத்துறையில் போய் இறங்கி அங்கே இயக்கத்தில் சேர்ந்தான்.

ம்


**வெலிகட**

**கொ**ழும்பு நகரத்தின் மையத்திலிருந்து ஏழெட்டு கிலோமீற்றர்கள் தொலைவில் தெமட்டக்கொட, மருதான புற நகர்களைக் கடந்து புஞ்சி பொரளச் சந்திப்பிலிருந்து இடதுபுறமாகக் கிளைக்கும் சாலையினுள்ளே அழியாத இருளையும் தீராத மர்மங்களையும் தன்னுள் புதைத்தபடி பதுங்கிக் கிடக்கிறது வெலிகட பெருஞ்சிறை.

**தூக்கு மேடை**

மூன்று நூற்றாண்டுகளாகச் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை சிரச்சேதம் செய்தும் கழுமரத்தில் சொருகியும் உயிரோடு வயிற்றைக் கோடரியால் தறித்து உள்ளிருக்கும் ஈரல் குலையைப் பிடுங்கி கைதியின் வாயில் திணித்தும் அகப்பட்ட ஆலமரங்களிலும் புளியமரங்களிலும் தூக்கிலேற்றியும் கொலை செய்துவந்த வெள்ளைக்காரர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைக்குப் பல பத்து நாகரிகங்களையும் அழைத்து வந்தபோது நாகரிகமான

**சிறையின் வரைபடம்**






முறையில் தூக்குப் போடும் நுட்பத்தையும் அறிமுகம் செய்து வைத்தார்கள். வெள்ளையர்களால் போகம்பர சிறையில் ஒரு தூக்கு மேடையும் வெலிகட சிறையில் இன்னொரு தூக்கு மேடையும் அய்ரோப்பியப் பாணியில் அமைக்கப்பட்டன. வெள்ளைக்காரர்கள் போன பின்பாகவும் காலத்துக்குக் காலம் இச்சிறை பெருப்பிக்கப்படுகிறதாம்.

**பதினேழு அடிகள்**

இந்தச் சிறையின் எல்லாப் பகுதிகளுக்கும் நான் சென்றதில்லை. காலையில் உடற்பயிற்சி செய்யவோ, உலாவவோ பலத்த காவலுடன் பதினைந்து நிமிடங்கள் என்னை வெளியே அழைத்துச் செல்வார்கள். மிகுதி இருபத்து மூன்றே முக்கால் மணி நேரங்களும் தட்டத் தனியனாகச் சிறைக் கூண்டினுள்ளே வீழ்ந்து கிடக்க வேண்டியது தான். பார்வையாளர்கள் சிறைக் கைதிகளைப் பார்வையிடும் கூடத்துக்குச் சில தடவைகள் நான் அழைத்துச் செல்லப்பட்டுள்ளேன். நாங்கள் அடைக்கப்பட்டிருந்த பிரதான சிறைப்பகுதியைச் சுற்றி பதினேழு அடிகள் உயரமான மதிற்சுவர் எழுந்து நின்றது. மதிற் சுவரின் மீது இருபதடிக்கு ஒரு காவற்கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுவருக்கு அப்பால் பெண்களுக்கான சிறையும் மருத்துவமனையும் இருந்தன. நான் சிறையிலிருந்த நாட்களின் பெரும்பகுதியை உடலெங்கும் கடியும் சொறியும் சிரங்குமாகவே வாழ்ந்தேன். பின்பு இரண்டு நாட்கள் வை.ஓ.கட்டடத்திலும் அடைக்கப்பட்டிருந்தேன்.

**சிலுவை**

ஜூலை முதலாம் திகதி பனாகொட தடுப்பு முகாமிலிருந்து கொண்டுவரப்பட்ட எங்களையும் ஜூலை இரண்டாம் திகதி நாட்டின் வேறு சில இராணுவத் தடுப்பு முகாம்களிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழ் - முசுலீம் அரசியற்கைதிகளையும் சப்பல் பிரிவு எனப்படும் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் C3, B3 பகுதிகளிலுள்ள சிறைக் கூண்டுகளுக்குள் ஒற்றை ஒற்றையாகத் தள்ளிப் பூட்டினார்கள். இக்கட்டடம் ஒரு சிலுவையின் வடிவத்தை ஒத்திருந்தது. நான் சி3 பகுதியின் முதலாவது கூண்டினுள்ளே தள்ளப்பட்டேன். பி3 பகுதியில் தான் தூக்குமேடை அமைந்திருக்கிறது. ஜி3 பகுதியில் உள்ள கூண்டுகளுக்குள் மரணதண்டனைக்காகக் காத்திருக்கும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளும் ஆயுள்தண்டனை பெற்றிருந்த மூன்று தமிழ் அரசியல்கைதிகளும் பலத்த பாதுகாப்போடு அடைக்கப்பட்டிருந்தார்கள். இந்தச் சிலுவை வடிவக் கட்டடம் ஒரு இருமாடிக் கட்டடமாகும். எங்களின் தலைகளுக்கு

மேலேயிருந்த இரு தளங்களிலும் சிங்களக் கைதிகள் அடைக்கப்பட்டிருந்தார்கள். இச்சிலுவை வடிவக் கட்டடத்தின் மையத்தில் பொதுக்கூடம் ஒன்று அமைந்திருந்தது. அங்கேயே வெளியேறும் உட்புகும் பிரதான வாசல் அமைந்திருந்தது. இப் பொதுக்கூடத்தின் வழியே நாங்கள் வெளியே செல்லும்போதோ உட்பிரவேசிக்கும் போதோ பொதுக்கூடத்திலிருந்து பார்த்தால் ஙி3 மற்றும் ஞி3 பகுதியிலுள்ள கைதிகள் கூண்டுகளுக்குள்ளால் தங்கள் கைகளை நீட்டி கைகளிலிருக்கும் அலுமினியக் கோப்பைகளால் கம்பியிலோ சுவரிலோ தட்டித் தாளம் எழுப்புவதையும் கூக்குரலிடுவதையும் பார்க்க முடியும். எமது சி3 கூடத்திலும் எப்போதும் நாங்கள் இவ்வாறு ஒலி எழுப்பிக் கொண்டேயிருப்போம். காவலர்களுக்கு அது சலித்துப் போன மனிதர்களின் அர்த்தமற்ற அலம்பல்கள் போல தோன்றும். ஆனால் எங்களுக்கு அவ்வளவும் செய்திகள். கதைகள், இரகசியங்கள், நம்பிக்கைகள், திட்டங்கள்.

நாங்கள் வெலிகட சிறையில் அடைக்கப்பட்டு இருபத்து நான்கு நாட்கள் கடந்திருந்தன. அன்று நேரம் மாலை நான்கு மணியிருக்கலாம். சி3 பகுதியில் அடைபட்டிருந்த நாங்கள் ஆளுக்காள் கத்தியும், சில சந்தர்ப்பங்களில் குரல்களைத் தாழ்த்தியும் பேசிக்கொண்டிருந்தோம். நான் எனது கூண்டுக்குள் நின்று கம்பிகளைக் கைகளால் பற்றிப் பிடித்து **சீனா** கைகளிலே என் உடற்பாரத்தை நிறுத்தி வைத்து என் கூண்டின் நேரெதிர் கூண்டில் அடைக்கப்பட்டிருந்த சீனாவுடன் பேசிக்கொண்டிருந்தேன். சீனா எப்போதும் போலவே தனது கூண்டுக்குள் பாய்ந்தும் தவழ்ந்தும் கம்பிகளில் தாவியும் சுவருக்குப் பொத்திய கைகளால் குத்தியும் 'ட்ரெய்னிங்' எடுத்துக்கொண்டிருந்தான். அவன் உடலில் வியர்வைத் திவலைகள் தெறித்துப் பறந்தன. நான் எப்போதும் போலவே இந்தப் பாழுஞ் சிறையிலிருந்து தப்பிச் செல்லும் திட்டத்தைக் குறித்தே சீனாவிடம் பேசினேன்.

நாங்கள் 'தப்புதல்' திட்டத்தைப் பற்றிப் பேசும்போது மட்டும் மிகத் தாழ்ந்த குரலில் பேசுவோம். அதாவது நான் எப்போதும் எவருடனும் தாழ்ந்த குரலிலேயே பேசிக் கொண்டிருப்பேன். நாள் முழுவதும் இரகசிய உரையாடல் களிலேயே கழித்தேன். பொதுக் கூடத்துக்குள் உலவித் திரியும் சிறைக்காவல்களுக்குத் தமிழும் தெரிந்திருக்கலாம் என்ற சந்தேகமும் எங்களுக்கு இருந்துகொண்டேயிருந்தது. எனவே



நாங்கள் சில சங்கேத வார்த்தைகளையும் உருவாக்கி வைத்திருந்தோம். இன்று வரை இச் சங்கேத வார்த்தைகளே தமிழ் அரசியல்கைதிகளிடையே திரிந்தும் சீரமைக்கப்பட்டும் சிறைமொழியாய்ப் புழங்குகிறதாம். தப்பித்துச் செல்லுதலே எங்கள் முக்கிய திட்டமாக இருந்தபோதிலும் அதற்கு எந்த வகையிலும் முக்கியத்துவம் குறையாத இன்னொரு இரகசியத் திட்டத்தையும் சீனா உருவாக்கிவைத்திருந்தான். அது இரண்டு சிறைக் காவலர்களை அடித்துக் கொலை செய்து விட்டு அதன் மூலம் எமது பாடுகளையும், பிரச்சனைகளை யும் அகில உலகுக்கும் அறிவிக்கும் திட்டமாகும். இச்சிறைக் குள் அடைபட்டுக்கிடக்கும் எழுபத்தொரு தமிழ் முசுலீம் கைதிகளையும் பெண்கள் சிறையிலிருக்கும் ஒரு தமிழ் அரசியல் கைதியையும் சிறை மீட்பதற்கான இரகசியத் திட்டமொன்று தமிழ்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலுமாக உருவாக்கப்படுகிறது என்றொரு செய்தியும் எங்களுக்கு நேற்றுக் கிடைத்திருக்கிறது. சீனாவின் கூட்டுக்குப் பக்கத்துக் கூட்டில் பக்கிரி சப்பாணி கட்டி உட்கார்ந்திருந்து கம்பி களில் காதை வைத்து எனதும் சீனாவினதும் உரையாடல் களை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார்.

பக்கிரிக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம். மிகவும் குள்ள மானவர். பெரும் தொந்தியுடன் ஒரு கறுப்பு பூசணிக்காய் போலிருப்பார். நரையோடிய நீண்ட தாடி வைத்திருந்தார். தடித்த மூக்குக்கண்ணாடி அணிந்து அதைச் சணல் கயிற்றால் பிடரியோடு சேர்த்துக் கட்டியிருப்பார். நிறுத்தி நிறுத்தி அதிகபட்ச நிதானமாய்ப் பேசுவார். பேசிக்கொண்டி ருக்கும்போதே அவரையறியாமலே தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் மாறி மாறிச் சஞ்சரிப்பார். மிகவும் மெதுவாகத்தான் நகர்வார். எந்த **பக்கிரி** வேலையையும் கஞ்சா அடித்தவன் கணக்கில், திரும்ப திரும்ப நிறுத்தி நிறுத்திச் செய்வார். ஒரு அலுமினியக் கோப்பை மறியல் வீட்டுச் சோற்றைச் சாப்பிட்டு முடிக்க அவருக்கு ஆகக் குறைந்தது மூன்று மணிநேரங்கள் தேவைப்படும். சம்மணம் கட்டியிருந்து இரண்டு வாய் சாப்பிடுவார். பின் எழுந்து நின்று அலுமினியத் தட்டை அளைந்தவாறே சிறைக் கூட்டினுள் சுற்றித் திரிவார். அப்போது ஒரு வாய் சாப்பிடுவார். ஒரு கட்டத்தில் நிலத்தில் ஒருக்களித்துப் படுத்திருந்து சாப்பிடுவார். அலுமினியக்கோப்பையை நிலத்தில் சோற்றுடன் சுற்றி விடுவார். பின் அதை நிறுத்தி ஒரு வாய் சாப்பிடுவார். சிறையில் ஆசை அருமையாய்த்

தான் குளிக்க முடியும். அவருக்கு அந்த ஆசை கூடக் கிடையாது.

எனதும் சீனாவினதும் 'தப்பிச் செல்லும்' உரையாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்த பக்கிரி 'தோழர்மார் நாங்கள் தப்பிச் செல்லும் போது முடிந்தளவு சிங்களக் கைதிகளையும் நாங்கள் விடுவிக்க வேண்டும்' என்றார். ஏதோ ஒரு சிறைக் கூண்டுக் குரலொன்று 'ஏ பக்கிரி! உங்களை இங்கேயிருந்து வெளியில் கொண்டு போய்ச் சேர்ப்பதே எங்களுக்கு ஒரு அரிசி மூட்டையைத் தலையில் காவிக்கொண்டு தப்பியோடுவதைப்போல' என்று உறுமியது. அப்போது தூரத்தில் ஒரு இரைச்சல் எழக் கேட்டேன்.

**டிலான் வீரக்கோன்**

**திவயின**

இக்காலத்தில்தான் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் அரசியல் கைதிகள் மீதான துவேசங்களை உமிழ்ந்து ஒன்றின் மேல் ஒன்றாகப் பல செய்திகளும் கட்டுரைகளும் வாசகர் கடிதங்களும் வெளியாகிக்கொண்டிருந்தன. டிலான் வீரக்கோன் என்ற பிரபல பத்திரிகையாளர் ஒருவர் 'அரசியல் கைதிகளுக்குச் சாப்பாடும் சவர்க்காரமும் கொடுத்தே அரசாங்கம் வங்குரோத் அடிக்கிறது. எனவே கூடிய கெதியில் கூடுமான தமிழ் அரசியல்கைதிகளைத் தூக்கிலே தொங்க விடுக' என்றொரு வேண்டுகோளைக் கட்டுரை மூலமாக 'திவயின' என்றொரு பத்திரிகையில் எழுப்பியிருந்தார். திருகோணமலையிலும் வவுனியாவிலும் எல்லைப்புறத் தமிழர்கள் மீது இராணுவம் தாக்குதலை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது என்றவாறான செய்திகளும் வந்துகொண்டிருந்தன. ஆக நாடு இன்னொரு இனப்படுகொலையை எதிர்ப்பார்த்துப் பதைத்திருந்தது.

நான் அச்சத்தோடு நாட்களை எண்ணிக்கொண்டிருக்கலானேன். அவ்வாறு ஒரு இனப்படுகொலை நிகழும் போது அந்த மரணப்பேயின் வாயில் வீழும் முதலாம் எதிரிகள் நாங்கள் எழுபத்தியிரண்டு பேரும் தான் என்பது எங்களது எண்ணமாயிருந்தது. 'எங்கள் சிலுவை வடிவக் கட்டடத்தின் மேல் இரு தளங்களிலுமிள்ள சிங்களக் கைதிகளே எம்மைக் கொல்ல வரக்கூடும்" என்று சீனா சொன்னதைப் பக்கிரி பலமாக ஆட்சேபித்தார். அவர் 'அப்பிடியொரு கொலை முயற்சி நடக்குமென்றால் இப்போது சொல்கிறேன். வேண்டுமானால் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்; எங்களை இனவாதத்திடமிருந்து காப்பாற்றப் போவது இந்தச் சிங்கள மனிதர்கள்தான். இன்னொரு விசயத்தையும்



சொல்கிறேன், இனியொரு தடவை கலவரம் வெடித்துச் சிங்களச் சனங்கள் ஆயுதம் தூக்கினால் அது எழுபத்தியேழு எண்பத்தொன்று மாதிரி தமிழ் முதலாளிகளின் கடைகளையும் தமிழ் மூலதனத்தையும் தாக்குவதோடு மட்டும் நிற்கப்போவதில்லை. அது தன் சொந்த முதலாளி வர்க்கத்துக்கு எதிராகவும் கணக்குத் தீர்க்காமல் விடாது' என்றார். அதற்கு மறுமொழியாக சீனா 'போன கலவரங்களில் எது நல்லெண்ணை பூசிய மசிர், எது தேங்காயெண்ணை பூசிய மசிர் என்று மட்டுமே ஆராய்ந்து வெட்டினார்கள்' என்றொரு புதிர் போட்டான். பக்கிரி மிக லாவகமாக அந்தப் புதிரை அவிழ்த்தார். 'தோழர், தனது தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேர்க்கிங் கிளாஸ் தயங்காது' என்று அவர் சொல்லவும் சீனா தன் முன்மண்டையைக் கொண்டுபோய் 'மடார், மடார்' என்று சிறைக் கம்பிகளில் மோதினான். அப்போது அவ்விரைச்சல் அலைஅலையாய் எழுந்து எங்கள் சிறை மீது கவியலாயிற்று. பேரச்சம் ஊட்டிய ஒலிச் சமிக்ஞைகள் பின் 'ஜெயவேவா' ஆயிற்று. 'ஜெயவேவா' என்ற குறிப்பைத் தவிர அவ்விரைச்சல் வேறேதும் சொன்னதில்லை. நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான உச்சரிப்பிலும் தொனியிலும் உயர்ந்தும் தாழ்ந்தும் வித்தியாசம் வித்தியாசமான ஆனால் ஒரே ஒரு 'ஜெயவேவா'. நாங்கள் நிசப்தத்தால் பேசினோம். சீனா தன் ஆடைகளை அணிந்துகொண்டான். பக்கிரி தன் தொந்தியை வருடியவாறே தலையை மேலும் கீழும் ஆட்டிக்கொண்டார். இப்போது 'ஜெயவேவா' சிறையின் சுவர்களை அசைத்துப் பார்க்கிறது. பின் சடசடவென வெடியோசைகள் கேட்டன. அப்பேரிரைச்சல் பின்வாங்கிச் செல்வதைக் கேட்டேன்.

**ஜெயவேவா**

**மெண்டிஸ்**

வழக்கமான நேரத்துக்குச் சற்றுப் பிந்தியே எமக்கான இரவு உணவை மெண்டிஸும் ஜெயக்கொடியும் கொண்டு வந்தனர். வெளியே என்ன சத்தம் என்று அவர்களிடம் விசாரிக்குமாறு சீனா எனக்குச் சொன்னான். நான் சிங்களத்தில் கேட்டபோது அவர்கள் இருவரும் தமது முகத்தில் பச்சாதாபத்தை வரவழைத்துக் கொண்டனர். பின் மெண்டிஸ் 'உங்கள் அனைவரையும் கொல்வதற்கு நகரமே திரண்டு வந்திருந்தது. அவர்கள் துப்பாக்கிகளும் குண்டுகளும் வைத்திருந்தனர். எனினும் எங்கள் சிறைச்சாலைத் துரை அஞ்சவில்லை. துரையின் வீரமும் கருணையும் இன்று உங்களைப் பாதுகாத்தது, அவர் வானத்தில், சுட்டு கூட்டத்தை ஓடப்பண்ணினார், என்று கண்களை மருட்டிப் பேசினான்.

பின் மெண்டிஸ் ஒவ்வொரு கூண்டாக மேலும் கீழும் சென்று பார்த்தான். 'நான் சாவதற்கு முன்பு இரண்டு சிங்களவனை யாவது சரிக்காமல் சாகமாட்டேன் என்று அவனிடம் சொல்லு சுவாமி என்று சீனா என்னைப் பார்த்துக் கூக்குர லிட்டான். ஆனால் சீனா சொன்னதை நான் மொழிபெயர்க்க வில்லை. 'கொல்வின் ஆர்டிசில்வாவைச் சிறையிலிருந்து தப்ப வைத்ததே ஒரு சிறைஅதிகாரிதான்' என்று பக்கிரி ஆங்கிலத்தில் மெண்டிஸுக்குச் சொன்னார். அவன் தீவிரமாகத் தலையை ஆட்டிக்கொண்டே பக்கிரியின் அலுமினியக் கோப்பையில் சோற்றைப் போட்டுக் கம்பிகளுக்குள்ளால் உள்ளே தள்ளி விட்டான். அன்றைய இரவு வெகு நேரமாக நான் தூங்கவில்லை. மரியாளும் மார்த்தாளும் அதிகாலையில் என் கனவில் வந்தார்கள்.

**கட்டை வாத்தி**

மறுநாள் காலையில் வழமைபோலவே நாங்கள் அய்வர் அய்வராக உடற்பயிற்சிக்காகக் காவலர்களால் வெளியே அழைத்துச் செல்லப்பட்டோம். எனது முறை வரும் போது நேரம் எட்டு மணி இருக்கலாம். நாங்கள் அய்வரும் பொதுக் கூடத்தைக் கடந்தபோது பயிற்சி முடிந்துவந்து கொண்டிருந்த கட்டை வாத்தி குழுவினரைச் சந்தித்தோம். அவர்களின் முகங்கள் கறுத்துப் போய்கிடந்தன. 'எல்லாம் போய் விட்டது' என்றவாறாக அவர்கள் எங்களுக்குச் சைகைகள் காட்டியவாறே எங்களைக் கடந்தனர். நான் வெளியே வந்து பார்த்தபோது தூரத்தே புகை மூடிக்கிடந்தது. என் மண்டை உலாஞ்சியது. கொழும்பு பற்றி எரிகிறது. என் வயிற்றுத் தசைகள் எலும்புகளில் சொருகின. நாங்கள் அய்வரும் உடற்பயிற்சி செய்யும் நிலத்துண்டில் விடப்பட்டோம்.

**15 x 5**

இந்த நிலத்துண்டு 15x5 மீற்றர்கள் பரப்புடையது. சுற்றிவர பத்து மீற்றர்கள் உயரத்துக்கு முள்ளுக்கம்பிகள் வரியப்பட்டிருந்தன. தவிரவும் பக்கத்துக்கு நால்வராய் 'பயனைட்' கத்திகள் சொருகிய துப்பாக்கிகளோடு பதினாறு காவல்கள். இதிலே இரண்டு நாய்கள் வேறு. ஆக இது சற்றே பெரிய சிறைக்கூண்டு. நான் மேலே கண்ணெறிந்த போது என் தலையின் மேல் ஆகாயம் எரிவதைக் கண்டேன். நாட்களை எண்ணி வந்த நான் இப்போது நிமிடங்களை எண்ணலானேன். சாவு தன் ஊர்வலத்தைத் தொடர்கிறது. சீனாவுக்கோ எந்தவிதச் சலனமும் இல்லை. அவன் வழமை போலவே சக்கரத்தண்டால் எடுத்தும் பல்வேறு வகைப்பட்ட காரணங்கள் அடித்தும் கலக்கிக்கொண்டிருந்தான். பக்கிரி தூ- தூ- எனக்



காறித் துப்பியவாறே கம்பி வேலியை ஒட்டி நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். நான் நான்கு புறமும் வானத்தை நின்ற நிலையில் சுற்றிப் பார்க்க முன்னதாகவே பதினைந்து நிமிடங்களும் முடிந்திருந்தன. நாங்கள் அய்வரும் மீண்டும் சிலுவை வடிவக் கட்டடத்துக்குள் அழைத்துச் செல்லப் பட்டோம்.

**குட்டி மணி**

நாங்கள் பொதுக்கூடத்துக்குள் பிரவேசித்த போது D3 பிரிவிலிருந்து நான்கு காவலர்களும் ஒரு நாயும் உடற்பயிற்சிக்காகக் குட்டிமணியை அழைத்து வருவதைக் கண்டோம். தூக்குத்தண்டனைக்காகக் காத்திருக்கும் கைதிகளைத் தனித் தனியாகத்தான் உடற்பயிற்சிக்கு அழைத்துச் செல்வார்கள். அதுவும் நன்றாக வெட்ட வெளிச்சமாக விடிந்த பின்னே தான் அழைத்துச் செல்வார்கள். குட்டிமணி,தங்கத்துரை, ஜெகன் போன்றவர்கள் உடற்பயிற்சி செய்யும் இடத்தின் மேலே இரும்பு வலைபோட்டு மூடியிருப்பார்கள். கைதிகள் ஹெலிகொப்டர் மூலம் தப்பிச் செல்வதைத் தடுக்கவே இந்த ஏற்பாடாம். குட்டிமணி எங்களைக் கண்டதும் தனது இரு கைகளையும் அகல விரித்து மார்பை சற்றே பின்சரித்து முகத்தை மேலே தூக்கி வலதுகை பெருவிரலை நிமிர்த்தி வெற்றி எனச் சைகை செய்தார். பின் 'தின்னவேலியில் பதின்மூன்று ஆமி சரியாம்' என்று கூவினார். 'பேச வேண்டாம்' என்று தடுத்த காவலர்களை அவர் கொஞ்சமும் கணக்கில் எடுக்கவில்லை. அப்போது குட்டிமணி நீர்வேலி வங்கிக்கொள்ளை, தொண்டைமானாற்றில் இரண்டு பொலிசுக்காரர்களைக் கொன்றது உட்பட பல வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டு மரண தண்டனைக்காகக் காத்திருந்தார். தண்டனை தீர்க்கப்பட்ட கைதிகளுக்கு செய்திப் பத்திரிக்கைகள் வாசிக்கக் கிடைக்கும்.

நான் சிறைச் சுவர்களின் மூலைகளில் குந்தியிருந்து அந்தப் பதின்மூன்று உயிர்களுக்குப் பதிலாக எத்தனை ஆயிரம் உயிர்கள் பழி தீர்க்கப்படுமோ என நினைத்து நினைத்து அஞ்சிச் சாகலானேன். டீசல் வாசம் கமழும் என் தீவிலிருந்து என்னைக் கிளப்பிய தருணங்களைப் பழித்தேன். ஒரு கணம் பாவமன்னிப்பு தடுப்பின் அந்தப் பக்கமாகவும் மறு கணம் பாவமன்னிப்பு தடுப்பின் இந்தப் பக்கமாகவும் அமர்ந்து முழந்தாழிட்டுப் பேசினேன். ஆகக் குறைந்தது எழுபத்தொரு உயிர்கள் பலியிடப்படும் என்று எனது சுட்டுவிரல் எரிய எரிய சிறையின் புழுதித் தரையில் கீறினேன். அந்த எழுபத்தொன்றில் நானும் ஒன்றாகவிருந்தேன். சாவு ஆடுகிறது. C3 பகுதியிலிருந்த நாங்கள் எல்லோரும் நம்பிக்கையைப் பேச முயன்றோம். ஆளை ஆள் தைரியங்கள் உரைத்தோம். எல்லோருமே சிறிதரனின் வருகைக்காகக் கசங்கிய மூளைகளோடு காத்திருக்கலானோம்.

**சிறிதரன்**

பூநகரியைச் சேர்ந்த சிறிதரனைப் 'பிறவி விஞ்ஞானி' என்றே தோழர்கள் சொல்வதுண்டு. சிறிதரன் சங்குப்பிட்டிருக்கும் கேரதீவுக்கும் கம்பிகள் வழியே மிதக்கும் பாதையின் தொழில் நுட்ப பராமரிப்பாளராய் வேலை செய்தவர். அந்தக் கறள் கட்டிய மிதவையில் பல வித ஒட்டுக்களையும் தையல்களையும் சாதுரியமாகப் போட்டு வந்தவரைப் பொடியள் அணுகி, நீர் மூழ்கிக் கலமொன்றைச் செய்வதற்கான திட்டங்களைக் கேட்டிருக்கிறார்கள். மாதிரி நீர் மூழ்கிக் கப்பலொன்றை வடிவமைத்த வரைபடத்துடன் சிறிதரன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, பதினோரு மாதங்களாக காவலில் இருக்கிறார். நீர் மூழ்கிக் கப்பல் சதி வழக்கின் முதலாம் எதிரியான சிறிதரன் மீதான முதலாவது நீதி விசாரணை இன்று காலையில் கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அதற்காகச் சிறிதரன் அதிகாலையிலேயே வெளியே அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

மதியம் சிறிதரன் திரும்பி வந்தார். அவரின் மூஞ்சி காய்ந்து கருவாடாய்க் கிடந்தது. அவர் தனது கூண்டுக்குள்



நின்று எங்களுக்குக் கதைகளைச் சொன்னார். நாங்கள் 'ம்' கொட்டிக் கேட்கலானோம். சிறிதரன் நீதிமன்றத்திலிருந்து வெலிகட சிறைக்கு அழைத்து வரப்பட்ட வழியிலுள்ள புதுக்கட, ஆமர்வீதி, பஞ்சிகாவத்த, மருதான, புஞ்சிபொரள பிரதேசங்கள் முழுவதும் - சிறிதரன் கொழும்பு நகரத்தை நன்கு அறிந்தவர் - தமிழர்களின் கடைகளும் வீடுகளும் எரிகின்றன. புதுக்கடயில் நீதிமன்ற வாசலுக்கு முன்பாகவே ஒரு காருக்குள் நான்கு சடலங்கள் எரிந்து தீய்ந்து கிடப்பதையும் சிறிதரன் கண்டிருக்கிறார். ஒரு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் வீதியில் கொல்லப்பட்டுக் கிடந்தாளாம். வீதி முழுவதும் இளைஞர்களும் சிறுவர்களும் கொண்டாட்டத்துடன் திரிகிறார்களாம். அவர்கள் பெற்றோல் குண்டுகளைக் காவித் திரிகிறார்களாம். சிறிதரனை அழைத்துச் சென்ற பொலிஸ் வாகனத் தொடரணியைப் பார்த்துக் கலவரம் செய்பவர்கள் கைகளை அசைத்தாகவும் பதிலுக்கு பொலிசாரும் கைகளை அசைத்துச் செல்லம் பொழிந்ததாகவும் சிறிதரன் எங்களுக்குக் கூறினார். சிறிதரனை நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்ற அதிகாரியான நிஸ்தார் ஒரு முசுலீமாக இருந்ததே தான் கலவரக்காரர்களின் கைகளில் சிக்காமல் உயிர் தப்பி வந்து எங்களுடன் பேசிக்கொண்டிருப்பதற்கான ஒரேயொரு காரணம் என்றும் சிறிதரன் சொன்னார். நாங்கள் எல்லோரும் குழப்பமான வழிகளில் சிறிதரனிடம் கேள்விகளைக் கேட்கலானோம். அறிவுக்குப் பொருந்தாத கேள்விகளைக் கேட்கக் கூட நாங்கள் வெட்கப்பட்டோமில்லை. ஏனெனில் அப்போது எங்கள் உதடுகளை இதயம் இயக்கிக்கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளால் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட பதின்மூன்று இராணுவ வீரர்களது உடல்களும் சவப்பெட்டிகளில் இல்லாமல் வெறும் பொலிதீன் உறைகளில் சுற்றி, கொழும்புக்கு எடுத்து வரப்பட்டு, பின் அவை நேற்றிரவு கனத்த மயானத்தில் எரியூட்டப்பட்டிருக்கின்றன. அங்கே அமைச்சர்கள் பழிக்குப் பழி தீர்க்கும் உரைகளை நெருப்புக்குகளுக்கு நடுவில் நிகழ்த்தியிருக்கிறார்கள். நேற்றிரவு கனத்த மயானத்தில் பொறி கிளம்பி அது இலங்கை முழுவதும் தீயாய்ப் படர்கிறது.

**நிஸ்தார்**

**கனத்த**

மதியம் கம்பிகளுக்குள்ளால் அலுமினியக் கோப்பை தள்ளிவிடப்பட்ட போது என்னால் சாப்பிட முடியவில்லை. சுவருள் முடங்கியிருந்தேன். இரண்டு மணிக்கு நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருவதாக ஒரு சிறைக்

காவலன் போகிற போக்கில் கூறிச் சென்றான். இப்போது

**ஊரடங்கு**

நேரம் இரண்டரை மணியிருக்கலாம். நாங்கள் அடைக்கப் பட்டிருந்த சிலுவை வடிவக் கட்டடத்தின் மேற்தளங்களில் பெரும் ஆரவாரங்கள் எழக் கேட்டேன். அதே நேரத்தில் சிலுவைக் கட்டடத்தை வெளியிலிருந்து 'ஜெயவேவா' அசைக்க ஆரம்பித்தது. சி3 தொகுதியில் எனது சிறைக்கூண்டு முதலாவதாய் இருந்ததால் என் அறையின் உயரே இருந்த சதுர ஜன்னல் மூலம் என்னால் பொதுக்கூடத்தின் ஒரு பகுதியைப் பார்க்க முடியும். ஒரே தாவலில் ஜன்னல் கம்பிகளைப் பற்றினேன். கால்கள் அந்தரத்தில் கிடந்தன. நான் பொதுக்கூடத்துள் பார்த்தபோது பொதுக்கூடத்தின் பிரதான வாயில் வழியே நூற்றுக்கணக்கான வெள்ளை உடைகளை அணிந்திருந்த சிங்களக் கைதிகள் கைகளில் பொல்லுகள் சகிதம் சிலுவை வடிவக் கட்டடத்தினுள் பரவு வதைப் பார்த்தேன். அவர்கள் மூர்க்கத்தனமாக, ஆனால் ஒரே நேரத்தில் தங்கள் நாக்குகளை வாயிலிருந்து வெளியே சுழற்றினர்: 'ஜெயவேவா!'

ஜன்னலிலிருந்து ஒரு பல்லி மாதிரி தரையில் வீழ்ந்தேன். C3 தொகுதியின் சிறைக்காவலர்கள் அவசர அவசரமாக எமது சிறைக்கூண்டின் பூட்டுகளை இழுத்துச் சரிபார்த்தனர்.

**நிசங்க**

எங்களைக் கூண்டின் கம்பிக்கதவு அருகே நிற்காது பின்னே போய் சுவரோடு ஒட்டிப் படுக்குமாறு அவர்கள் கத்தினார்கள். நிசங்க என்ற இள வயதான சிறைக்காவலன் என்னிடம் வந்து 'பயப்படாதே எனது பிணத்தைத் தாண்டித் தான் கொலைகாரர்கள் உங்களிடம் வர முடியும்' என்றான். நான் எல்லாவித நம்பிக்கைகளையும் இழந்து கையறு நிலையில் அவனைப் பார்த்து 'போமஸ்துதி மாத்தையா' என்றேன். சிறைக்காவலர்கள் பொதுக் கூட்டத்திலிருந்து சி3 தொகுதிக்குள் பிரவேசிக்கும் வாசல் கதவையும் இழுத்துச் சரிபார்த்தார்கள். பின் அவர்கள் உள்ளே வந்து மலசல கூடத்துள் சாவிகளை ஒளித்து வைத்துவிட்டு C3 தொகுதிக் குள் நுழையும் வாசலில் பூட்டிய கம்பிக்கதவுகளின் பின்னே நெஞ்சுகளை நிமிர்த்தி நின்றிருப்பதைக் கண்டேன்.

நான் மீண்டும் ஜன்னலில் தொற்றிப் பார்த்தபோது ஜெயிலர்களான ரெஜஸ், சமிதரத்ன, பாலித ஆகியோரின் வழிகாட்டுதலில் மாரிக்கால மதகுகளில் பாயும் கெளிறுகள் போல படிகளை மொய்த்துப் பிடித்தபடி சிங்களக் கைதிகள் படிகளின் வழியே மேற்தளங்களிலிருந்து இறங்கி வந்தார்கள்.



சாவு இறங்குகிறது. ஒரு துணி மூட்டையைப் பிரித்து ரெஜஸ் ஆயுதங்களை எறிய கைதிகள் தாவிப் பிடித்துக் கூக்குர லிட்டார்கள். 'ஜெயவேவா' இப்போது ஜெயிலர் சமிதரத்ன ஞி3 தொகுதியின் பிரதான கதவைத் திறந்துவிட்டான். கைதிகள் 'ஜெயவேவா' சொல்லிக்கொண்டே D3 தொகுதி யினுள் நுழைந்தார்கள். அங்கேதான் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், தேவன், சிவபாதம் மாஸ்டர், நடேசுதாசன் ஆகியோர் அடைக்கப்பட்டிருந்தனர். அதற்கு அப்பால் D3 தொகுதி உள்ளே என்ன நடக்கிறது என்று என்னால் பார்க்க முடிய வில்லை. பின்பு B3 தொகுதியின் வாயிலையும் சிறைக்காவலர் கள் திறந்துவிடுவதைக் கண்டேன். பின் ரெஜஸும் பாலிதவும் C3 தொகுதியின் சாவிகளைக் கேட்டு நிசங்கவுடன் தர்க்கப்பட்டார்கள். நான் ஜன்னலை விட்டுக் கீழே குதித்து என் சிறைக்கூண்டு கம்பிகள் வழியே கண்ணைச் சாய்த்துப் பார்த்தபோது நிசங்க கால்கள் நடுங்க நின்றிருப்பதைப் பார்த்தேன்.

**25 ஜூலை 1983**

யாரோ 'தமிழனுக்கு வம்பிலே பிறந்த பயல்' என்று நிசங்கவை திட்டுவதையும் நான் கேட்டேன். சிலுவை வடிவக் கட்டடம் முழுவதும் ஜெயவேவாவும் ஓலமும் அலறலும் எக்காளமும் எழுகின்றன. 25 ஜூலை 1983 சாவின் தினம். மரணத்தின் நாள்.

நான் பதற்றத்துடன் எனது தொகுதியிலிருந்த மற்றைய கைதிகளின் பெயர்களைக் கூவினேன். யாரும் எதையும் கேட்கும், நிதானிக்கும் சூழ்நிலையில் இல்லை. சீனா தன் நெற்றியை விரல்களால் கசக்கியவாறு விறுமனாக கால்களை அகல விரித்து நிற்கிறான். பக்கிரி கண்கள் குத்தி நிற்க எங்கேயோ பார்க்கிறார். நான் மறுபடியும் ஜன்னலில் ஏறிப் பார்த்தபோது B3 தொகுதியிலிருந்த கைதிகள் வெளியே பொதுக்கூடத்துக்கு இழுத்து வரப்பட்டு வெட்டப் படுகிறார் கள். சுரேஸ் மாஸ்டரின் தலையில் கண்டக் கோடாரி வெட்டு விழுகிறது. உதயசீலனும் சுதாகரனும் ஏற்கனவே கொல்லப்பட்டு, பொதுக் கூடத்துக்கு அவர்களின் உடல்கள் இழுத்து வரப்பட்டன. கொழும்பானை அவர் திமிறத் திமிற இழுத்து வந்து அவுடாவின் பிரேதத்தின் மீது தள்ளு கிறார்கள். D3 தொகுதியிலிருந்து சிங்களக் கைதிகள்

**சாத்தான்**

வெளியே ஓடி வந்தார்கள். அவர்களின் உடல்களிலிருந்தும் இரத்தம் வடிகிறது. மறுபடியும் உள்ளே ஓடுகிறார்கள். உள்ளேயிருப்பவர்கள் சிங்களக் கைதிகளை எதிர்த்துத் தாக்குகிறார்களா? இறுதியில் ஜெயவேவா கோசங்களுடன் ஆறு உடல்களை குற்றுயிரும் குலைஉயிருமாக

பொதுமண்டபத்துக்கு இழுத்துவருகிறார்கள். நான் கடவுளை நினைத்தேன், சாத்தானை நினைத்தேன். மரியாளையும் மார்த்தாளையும் நினைத்தேன். டக் டக்கென்று மூளைக்குள் துண்டு துண்டாய்ப் படங்கள் தெறித்து ஓடுகின்றன. படகு துப்பாக்கி, முலைகள், நாய், சிறிகாந்துமலர், சோறு, விமானம், அவள் அப்படித்தான், நீர், கடல், பைபிள், கனவு. என் கண்கள் முன்னே பொதுக் கூடத்தின் காவிச் சுவர்களின் கரைகளில் இரத்தம் தேங்கி நிற்கிறது. கண்கள், விரல்கள், கைகள், ஆணுறுப்புகள், தலைகள். நான் கண்டதை இதற்கு மேலும் எழுத என் மனம் ஏவுதில்லை. நான் ஒவ்வொரு தடவையும் பிறேமினியோடு தூங்கச் சென்று விழிக்கும் போது சவங்களுடன் எழுகிறேன். ஜன்னலிலிருந்து நான் கீழே விழுந்தேன்.

**மாணிக்க தாசன்**

மாணிக்கதாசன் தன் சிறைக்கூண்டின் ஜன்னலில் ஏறிப் பாத்துவிட்டு சிறை வாயிலில் உள்ள புத்த விகாரையின் முன்பாக பிணங்களை இழுத்துப் போய்க் குவிக்கிறார்கள் என்று சொன்னார். அன்று B3 தொகுதியில் இருபத்தொன்பது உயிர்களும் D3 தொகுதியில் ஆறு உயிர்களுமாய் முப்பத்தைந்து உயிர்கள் கொல்லப்பட்டன.

**மயில் வாகனம்**

சுழிபுரத்தைச் சேர்ந்த மயில்வாகனம் சின்னையா ஒரு கோயில் பூசாரியின் மகன். அவனுக்குப் பதினெட்டு வயதுக்கு மேலேயே இருக்குமென்றாலும் அவனின் தோற்றத்தை வைத்து மயில்வாகனத்துக்குப் பதின்மூன்று அல்லது பதி னான்கு வயதே மதிக்கலாம். செக்கச் செவெலென்ற சின்னப் பொடியன். 1982ல் சுழிபுரத்தில் கடற்படையினரின் தண்ணீர் வண்டி மீது துப்பாக்கியால் சுட்டான் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவன் கைது செய்யப்பட்டிருந்தான். அவனின் தோற் றத்திலும் குரலிலும் பெண்மை வழிந்தது. அவன் தேவாரங் களையும் பட்டினத்தார் பாடல்களையும் சீர்காழி கோவிந்த ராசனின் பக்திப் பாடல்களையும் உருகி உருகி பெரும் இனி மையுடன் பாடக் கூடியவன். B3 தொகுதியில் அடைக்கப் பட்டிருந்த அவன் அந்தத் தொகுதியிலிருந்த மற்றவர்கள் கொல்லப்படும்போது எப்பிடியோ தப்பியோடி சிலுவை வடிவக் கட்டடத்தின் மாடிப்படிகளின் கீழே ஒளிந்திருக் கிறான். படிகளின் கீழ் மறைந்திருந்த அவன் ஒரு சிறை அதிகாரியைக் கண்டதும் மறைவிலிருந்து ஓடிப்போய் சிறை அதிகாரியின் கால்களில் விழுந்து தன் உயிரைக் காப்பாற்று மாறு கெஞ்சியிருக்கிறான். உயிருக்கு அஞ்சிக் கெஞ்சியவனை



சிறைஅதிகாரி புத்த கோவிலுக்கு அழைத்துச் சென்றான். மயில்வாகனம் புத்த கோயிலுக்குப் போகும்போது கைகளைத் தலைமேல் குவித்தபடியே போனானாம். அப்போது அவன் கடவுளைத் துதித்திருக்கலாம். பின் புத்த கோவிலின் முன்பாக அவன் மூன்று துண்டுகளாகத் தறித்து வீசப்பட்டான்.

**புத்த கோயில்**

கொலைகாரர்களின் அடுத்த இலக்கு நாங்கள் அடைக்கப் பட்டிருக்கும் C3 தொகுதிதான் என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. எல்லாக் கொலைகாரர்களும் புத்த கோயிலை சூழக் கூத்தாடுகையில் அந்த இடைவெளியைப் பயன்படுத்தி எமது தொகுதியின் சிறைக்காவலர்கள் மூவரும் வெளியே ஓடிவிட்டார்கள். அவர்கள் ஓடும்போது சாவிகளையும் தங்களோடு கொண்டு போய்விட்டார்கள். இருளும் செக்கல் பொழுதில் கொலைகாரர்கள் மீண்டும் C3 தொகுதியின் கதவை அலவாங்குகள் கொண்டு மோதினார்கள்.

**பரந்தன் ராஜன்**

அப்போது எமது தொகுதியின் தலைப்பகுதி உடைபடத் தொடங்கியது. C3 தொகுதிக்கும் அதன் மேலேயுள்ள C2 தொகுதிக்கும் இடையில் பலகைகளால் இணைக்கப்பட்ட தளமே இருந்தது. இப்போது அந்தத் தளத்தை உடைத்து மேலிருந்து உள்ளே குதிக்க கொலைகாரர்கள் முயற்சித்தார்கள். C3 தொகுதியின் தலைப்பகுதியை உடைப் பதில் அவர்களுக்குப் பெருத்த சிரமங்கள் ஏதுமில்லை. முதலில் இருவர் உள்ளே இறங்கினார்கள். அவர்கள் நிதான மாகச் சிறைக்கூண்டின் கம்பிக்கதவுகளைப் பற்றியே உள்ளே இறங்கினார்கள். அவர்கள் இறங்கிய இடம் பரந்தன் ராஜன் அடைக்கப்பட்ட கூண்டின் முன்புறமாய் இருந்தது. அப் போது சிறைச்சாலை முழுவதும் விசில்கள் ஊதப்பட்டன. அவை அன்றைய சங்காரம் நிறைவேறிற்று என்று கொலை காரர்களுக்கு அதிகாரிகள் அறிவிக்கும் சமிக்ஞையாக இருக்க வேண்டும். உள்ளே இறங்கிய இருவரும் 'குட்டிமணியைக் கொன்றுவிட்டோம் என்பதை யாழ்ப்பாணத்துக்குப் போய்ச் சொல்லுங்கள்' என்று கத்திக்கொண்டே உள்ளே இறங்கிய வழியாலேயே மேலே ஏறிப்போனார்கள். சற்று நேரம் அமைதி. மிகச்சரியான அர்த்தத்தில் மயான அமைதி.

ம்

இரவு முழுவதும் நாங்கள் தூங்காமல் விழித்திருந்தோம். அடுத்ததாக என்ன செய்வது என்ற விவாதம் எங்களிடையே நடத்தப்பட்டது. என்னிடம் கருத்து கேட்டபோது 'எதுவும் செய்ய முடியாது, இன்று விடிவதற்கு முன்னமே அவர்கள் எம்மைக் கொன்று போடுவார்கள்' என்று சொன்னேன். எனினும் அன்று விடியலாயிற்று. வெலிகடச் சிறையின் தலைமைச் சிறைஆணையாளருடன் பேசவேண்டும் என்று முடிவெடுத்தோம். அவனைச் சந்திக்கும்போது எம்மை வேறு பாதுகாப்பான சிறைச்சாலைக்கு மாற்றவேண்டும் என்றும் அதுவரை எங்களை 'செல்'களில் அடைக்காமல் விறாந்தையில் சேர்ந்திருக்க அனுமதிக்க வேண்டுமென்றும் இரு கோரிக்கைகளை அவன் முன்னால் வைப்பது என்றும் தீர்மானித்தோம். தலைமைச் சிறைஆணையாளருடன் பேச வேண்டும் என்று சிறைக்காவலர்களிடம் சொன்னோம்.

**தொல் கொட**

வெலிகட சிறையின் தலைமைச் சிறைஆணையாளர் தொல்கொட வெளிநாடு சென்றிருப்பதாக எங்களிடம் சிறைக்காவலர்கள் சொன்னார்கள். இந்த நேரத்தில் தொல்கொட வெளிநாடு சென்றிருப்பது அரசாங்கத்தின் ஒரு தந்திரமான ஏற்பாடாகவே எங்களுக்குப் பட்டது. இருபத்தாறாம் திகதி பிற்பகல் மூன்று மணிக்குப் பதில் சிறை ஆணையாளர் ஜான்ஸிடமிருந்து தன்னைச் சந்திக்க மூன்று பேரை எமது பிரதிநிதிகளாக அனுப்புமாறு எங்களுக்குத் தகவல் வந்தது. நாங்கள் எங்களது பிரதிநிதிகளாக டக்ளஸ் தேவானந்தாவையும் பரந்தன் ராஜன் என்ற ஞானசேகரனையும் பனாகொட மகேஸ்வரனையும் ஜான்ஸிடம் அனுப்பினோம். அவர்கள் மூவரும் திரும்பி வந்து எங்களின் கோரிக்கைகளைப் பதில் சிறை ஆணையாளருக்கு அறிவித்தாகவும் நாளை அல்லது நாளை மறுநாள் அவர்கள் எங்களை வேறு சிறைச்சாலைக்கு

**ஜான்ஸ்**

மாற்றுவதாக வாக்குறுதி தந்ததாகவும் ஒரு வயதான நீதிபதி தங்களிடம் விசாரணை செய்ததாகவும் தாங்கள் கொலைகளைக் குறித்து சாட்சியங்கள் சொன்னதாகவும் எங்களுக்குக் கூறினார்கள். என் மூளையின் ஒரு புறத்தே மகிழ்ச்சி மின்னி ஓடிற்று.



சற்று நேரம் கழித்துப் பொதுக்கூடத்தில் சிங்களத்தில் உரையாடும் சத்தம் கேட்டது. அச்சம் மேலிட பதற்றத்தோடு மீண்டும் ஜன்னலில் தொற்றினேன். கோட்டும் சூட்டும் போட்டிருந்த சில முதியவர்களும் சில சிறை உயரதிகாரிகளும் ஜான்ஸூம் பொதுக்கூடத்தில் நின்றிருந்தார்கள். அந்த முதியவர்களின் பின்னால் ஒரு பெண் கைகளில் கோப்புகளை ஏந்தியவாறு நின்றிருந்தாள். அவர்கள் B3, D3 தொகுதிகளுக்குள் சென்று வந்தார்கள். பின் பொதுக்கூடத்தில் நின்று

**நீதிபதிகள்**

முதிய நீதிபதிகள் பொதுக்கூடத்தின் சுவர்களைப் பார்த்துக் கண்களைச் சுருக்கி தோள்களைக் குலுக்கினார்கள். பின்பு அவர்கள் பதில் சிறைஆணையாளரிடம் பொதுக்கூடத்தின் சுவரிலும் தரையிலும் உறைந்திருக்கும் இரத்தத்தைச் சுரண்டி உரசிக் கழுவுமாறு அறிவுறுத்தியதை நான் ஜன்னலுக்குள்ளால் கேட்டேன்.

வெலிகட படுகொலைச் சம்பவங்களைக் குறித்து ஏராளமான செய்திக்குறிப்புகளும் கட்டுரைகளும் இதுவரை வெளிவந்துள்ளன. முக்கியமாக என்னுடன் வெலிகட சிறையிலிருந்து இப்படுகொலைகளை நேருக்கு நேர் சந்தித்த சிலரும் கட்டுரைகளை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இவற்றில் சில கட்டுரைகளை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் நான் படித்திருக்கிறேன். மாணிக்கதாசன் 1993ல் 'தமிழ் முரசில் ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருந்தார். யோகராஜா 'அமுது' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். நோர்வேயிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'சுவடுகள்' பத்திரிகையில் ஒரு

**முரண்**

கட்டுரை வெளிவந்தது. அந்தக் கட்டுரையை எழுதியவர் தனது பெயரை மறைத்திருந்தாலும் அக்கட்டுரையை எழுதியவர் யார் என்பதை என்னால் ஊகிக்கக் கூடியதாய் இருந்தது. எனினும் இன்றைய சூழலில் நான் அவரின் பெயரை அறிவிப்பது அவருக்கு ஆபத்தாகக் கூடும். அழகிரி இப் படுகொலைகளைக் குறித்து எழுதிய கைப்பிரதிகளைச் சில வருடங்களுக்கு முன்பாக நான் அழகிரியின் வீட்டில் வைத்துப் படித்தேன். இவர்கள் எல்லோருடைய கட்டுரைகளும் பல இடங்களில் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. எனது பிரதியும் பல இடங்களில் இவர்களின் பிரதிகளிலிருந்து வித்தியாசப்படுகிறது. எடுத்துக்காட்டாக குட்டிமணி A3 பகுதியில் அடைக்கப்பட்டிருந்ததாக மாணிக்கதாசன் எழுதுகிறார். ஆனால் தூக்குமேடைதான் A3 தொகுதியில் உண்டு. குட்டி மணி D3 தொகுதியில் தான்அடைக்கப்பட்டிருந்தார்.

**ஞான முத்து**

இருபத்தைந்தாம் திகதி நடந்த கொலைகளுக்குப் பின்பாக இருபத்தாறாம் திகதி விசாரணைக்குழுவினர் சி3 தொகுதிக்கு வந்து விசாரணை நடத்தியதாக யோகராஜா எழுதுகிறார். ஆனால் நானறிந்த வரையில் யாருமே C3 தொகுதிக்குள் வந்து விசாரணை நடத்தவில்லை. அவர்கள் பொதுக் கூடத்துடனும் B3, D3 தொகுதிகளுடனும் திரும்பிப் போய்விட்டார்கள். ‘சுவடுகள்’ கட்டுரை இரண்டாவது படுகொலைச் சம்பவத்திற்குப் பின்பு கீழ்த்தளத்தில் ஒன்பது பேர் மட்டுமே உயிர் தப்பியிருந்ததாகக் குறிப்பிடுகிறது. ஆனால் நாங்கள் பதினொரு பேர் உயிர் தப்பியிருந்தோம். இருபத்தைந்தாம் திகதி காலை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் ஞானமுத்து நவரட்ண சிங்கம் என்று அழகிரி எழுதுகிறார். ஆனால் அன்று காலையில் பூநகரி சிறிதரன் தான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.



**பிணை**

இந்தப்பக்கத்தில் கதை மீண்டும் அய்ரோப்பிய சிறைச்சாலைக்கு மாறுகிறது. இன்னும் நான்கு நாட்களில் நான் சிறையிலிருந்து நிபந்தனைகளோடு பிணையில் வெளியே செல்லலாம் என்று எனது வழக்கறிஞர் சொல்லியிருக்கிறார். அதற்கு முன்னதாக நிறமியின் கதையில் ஒரு பகுதியையாவது நான் எழுதி முடிக்கவேண்டும். நிறமியின் கதையை ஒரு பூவின் இதழ்களுக்குள் எழுதி முடித்து விடலாம். அதேபோல் அவளின் கதையைக் காலம் முழுவதும் நான் சொல்லிக் கொண்டேயிருக்கலாம். அவளின் இரகசியத் துயர்களைக் குறித்தும் அவள் மகிழ்ச்சியின் சாத்தியங்கள் பற்றியும் என் நிறமியின் தீராத மௌனத்தைப் பற்றியும் நான் எழுதவேண்டும். என் செல்ல மகள் நிறமி. Dieu fit tomber une torpeur sur l’ homme, qui s’ endormit. Il prit une de ses cotes et referma la chair à sa place. puis de la cote qu’ il avait tirée de  l’ homme, Dieu façonna une femme et l’ amena à l’ homme. Alors celui-ci s’écria: Pour le coup, c’est l’os de mes os et la chair de ma chair!

இந்தச் சிறைச்சாலையில் ஒவ்வொரு சனிக்கிழமை இரவும் பொதுமண்டபத்தில் கைதிகளுக்கு ஒரு விசேடத் திரைப்படம் சிறையதிகாரிகளால் காண்பிக்கப்படும். இன்று காண்பிக்கப் பட்ட சினிமாவின் கதை ஒரு அய்ரோப்பிய நகரத்தில் நிகழ்கிறது.

**திரைப் படம்**

நகரத்தின் ஒதுக்குப்புறத்தில் ஒரு பழைய மட்டரகமான மதுச்சாலை. அந்த விடுதியில் இரண்டு விபச்சாரிகள் வாடிக்கையாளர்கள். அந்த மதுவிடுதியின் முதலாளி ஒரு முன்னாள் குத்துச்சண்டை வீரன். அவன் அந்த விபச்சாரி களில் அக்கறை உள்ளவன். அவன் ஒரு வகையில் அந்த ஆதரவற்ற விபச்சாரிகளுக்குப் பாதுகாப்பாய் இருந்தான். நகரத்தின் பெரும் விபச்சார முதலாளிகளின் பிடியிலிருந்து அந்த இரண்டு பெண்களையும் அவன் பாதுகாத்தான். அந்த இரண்டு பெண்களும் இரவுகளில் சாலையோரங்களில் நின்று வாடிக்கையாளர்களைத் தேடிக்கொள்வார்கள்.

அப்படியான ஒரு இரவில் ஒரு காரில் வந்த இரண்டு

இளைஞர்கள் - அவர்களின் ஒப்பனை உடை அலங்காரங் களிலிருந்து அவர்கள் மேட்டுக்குடியைச் சேர்ந்தவர்கள் என்று கண்டுகொள்ளலாம் - அந்தப் பெண்களுடன் பேரம் பேசினார்கள். இவ்வளவு மேட்டுக்குடி பாணியில் இருப்பவர்கள் தங்களைப் போன்ற தெருவோரத்து மலிவான விபச்சாரிகளிடம் வருவதில்லை என்பது அந்தப் பெண்களுக்குத் தெரியும். அந்த இளைஞர்கள் தங்களை ஒரு பேர் பெற்ற இசைக் கல்லூரியின் மாணவர்கள் என்றார்கள். இறுதியில் அந்தப் பெண்கள் இளைஞர்களுடைய காரில் ஏறினார்கள். அந்த இளைஞர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள்.

**மாணவ்கள்**

கார் ஒரு தங்கும் விடுதியின் முன்பாக நிறுத்தப்பட்டது. அந்த விடுதியில் அண்ணனுக்கு ஒரு அறையும் தம்பிக்கு ஒரு அறையும் உண்டு. அறைகள் கிடக்கும் கோலத்தைப் பார்ததால் அவர்கள் கொஞ்ச நாட்களாகவே இங்கு தான் தங்கியிருக்கிறார்கள் என்பது புரிகிறது. அண்ணன் தன்னோடு அழைத்துச் சென்ற பெண்ணைப் படுக்கையில் போட்டு பெல்ட்டால் அடிக்கிறான். அவளின் உதடுகளில் வழியும் இரத்தத்தை நாவால் குடித்தான். அந்தப் பெண்ணை அவளின் விருப்பத்துக்கு மாறான நிலைகளில் புணர்ந்து சித்திரவதை செய்கிறான். தம்பி தான் அழைத்துச் சென்ற பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்துப் பயமுறுத்துகிறான். தான் ஆணென்றும் தனக்கு அவள் அடிமையென்றும் வசனம் பேசுகிறான். அவளைப் பாலியல் சித்திரவதை செய்கி றான். இறுதியில் அந்த இரண்டு பெண்களுக்குப் பணமும் கொடுக்காமல் அண்ணனும் தம்பியும் பெண்களை அடித்துத் துரத்துகின்றனர். அப் பெண்களிடமிருந்த பணத்தையும் தாளாகவும் சில்லறையாகவும் அண்ணனும் தம்பியும் பறித்துக் கொள்கிறார்கள்.

**கொள்ளை யிட்டது**

அந்த இரண்டு பெண்களும் காலையில் மதுச்சாலை முதலாளியிடம் சென்ற இரவு நடந்த கதையைச் சொல்கிறார் கள். அன்றைய இரவு அந்த அண்ணன் தம்பி தங்கியிருந்த விடுதியின் கீழே இருளில் இரண்டு கார்கள் நிற்கின்றன. ஒரு காரினுள்ளே மதுச்சாலை முதலாளியும் அந்த இரண்டு பெண்களும். அடுத்த காரிலே மதுச்சாலை முதலாளியின் இரண்டு அடியாட்கள். அண்ணனும் தம்பியும் காரிலே வருகிறார்கள். அவர்கள் காரை விட்டு இறங்கும்போது பெண்களால் அவர்கள் அடையாளம் காட்டப்படுகிறார்கள்.



மதுச்சாலை முதலாளியும் அடியாட்களும் அண்ணனையும் தம்பியையும் துப்பாக்கிமுனையில் தங்கள் காருக்குள் ஏற்றுகிறார்கள்.

மதுச்சாலைக்கு அண்ணனும் தம்பியும் கொண்டு செல்லப்படுகிறார்கள். மதுச்சாலையின் நிலவறைக்குள் அவர்கள் இறக்கப்படுகிறார்கள். அந்த இரண்டு பெண்களும் நிலவறையில் இருக்கும் பியர் பெட்டிகள் மீது உட்காருகிறார்கள். மதுச்சாலை முதலாளி “நீங்கள் இருவரும் சகோதரர்களா?” என்று அமைதியாகக் கேட்கிறான். அவர்கள் ஆமாம் என்கிறார்கள். அண்ணனைத் தம்பியின் கன்னத்தில் முதலாளி அறையச் சொல்கிறான். அண்ணன் மெல்ல தம்பியை அறைகிறான். ‘அது அப்படியல்ல இப்படி’ என்று சொல்லிக்கொண்டே அந்த முதலாளி அண்ணனின் மூஞ்சி யில் ஓங்கிக் குத்துகிறான். அண்ணன் நிலத்தில் வீழ்கிறான். அண்ணனை எழுந்திருக்குமாறு முதலாளி ஆணையிடுகிறான். அண்ணன் தம்பி இருவரையும் ஆடைகளைக் களையச் சொல் கிறான். அண்ணனுக்கும் தம்பிக்கும் கமெரா Suggestion shot வைக்கிறது. முதலாளி தம்பியைக் குனிந்து அண்ணனின் ஆண்குறியைத் தம்பியின் வாய்க்குள் எடுக்கச் சொல்கிறான். கமெரா Tilt Down ஆகிறது. ‘இன்னும் வேகமாகச் செய்’ என்று முதலாளி Overlap ல் சொல்கிறான். ஒரு Close mid shot. அண்ணன் கண்களை மூடிக் குலுங்கி அழுகிறான். அந்த இரண்டு பெண்களும் எழுந்து கமெராவுக்கு வெளியே ஓடுகிறார்கள்..நான் அரைவாசி சினிமாவில் எழுந்து எனது படுக்கைக்கு வந்தேன். சிறைச்சாலையில் தொடர்ந்து இப்படி யான சினிமாக்களைக் காண்பிப்பதற்கு சிறை நிர்வாகத்திடம் ஒரு காரணம் இருக்கும். அவர்கள் நீண்ட பரிசீலனைக்குப் பின்பு தான் ஒரு சினிமாவை சிறைச்சுவர்களுக்குள் அனுமதிப் பார்கள். அன்றிரவு முழுவதும் நான் ஒரு கண் மூடினேனில்லை.

**அண்ணனும் தம்பியும்**

ம்

நடுச்சாமமாய் இருக்கும். C3 தொகுதியின் வாயில் கதவு மெதுவாக இழுபடும் சத்தம் கேட்டது. சாவு கதவைத் திறக்கிறது. மூளை விழித்தது. கண்கள் எரிய நான் பார்த்த போது சிறையதிகாரிகள் C3 தொகுதிக்குள் நுழைந்தார்கள். அவர்கள் வாயில் விரலை வைத்து சத்தம் போடாதீர்கள் என்று சமிக்ஞைகள் காண்பித்தவாறே 'செல்'களைத் திறந்தார்கள். இரகசியக் குரலிலே 'உங்கள் உடைமைகளையும் அலுமினியத் தட்டையும் எடுத்துக்கொண்டு எங்களுடன் வாருங்கள்' என்றார்கள். என் இருதயம் மகிழ்ச்சியென்றும் உற்சாகமென்றும் துடித்துக்கொண்டது. இவர்கள் எங்களை இரவோடு இரவாக இரகசியமாக வேறொரு பாதுகாப்பான சிறைச்சாலைக்கு மாற்றப்போகிறார்கள். யார் கண்டது? அந்த சிறைச்சாலை யாழ்ப்பாணச் சிறைச்சாலையாகக் கூட இருக்கக்கூடும். ஆனால் ஒரே ஒரு விடயம் தான் எனக்குச் சந்தேகத்தைக் கிளப்பியது. அந்தப் பாதுகாப்பான சிறைச்சாலையில் அலுமினியத் தட்டு இருக்காதா? அதைக் கொழும்பிலிருந்தா கொண்டு போக வேண்டும்?

**மாற்றம்**

எல்லாம் நாசமாய்ப் போகட்டும்! அதே சாவின் நிலத்தில் அதே வெலிகடச் சிறைக்குள் அதே பதினேழு அடிகள் உயர மதில்களின் நடுவே வேறொரு கட்டடத்துக்கு நாங்கள் இருளில் அழைத்துச் செல்லப்பட்டோம். இக்கட்டடத்துக்கு வை.ஓ கட்டடம் என்று பெயர். அந்தக் கட்டடத்தின் கீழ்த் தளத்தில் உள்ள செல்களில் படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களுமான தமிழ் அரசியல்கைதிகள் அடைக்கப்பட்டிருந்தார்கள். நான்கூட இறையியல் கல்லூரியில் இன்னும் இரண்டு வருடங்கள் படித்து முடித்து அங்கி மாட்டியிருந்தேனானால் இங்கு தான் அடைக்கப்பட்டிருந்திருப்பேன் என நினைத்துக்கொண்டேன். அங்கே டொக்டர் ராஜசுந்தரம், டேவிட் அய்யா, டொக்டர் ஜெயகுலராஜா, பாதிரியார் சிங்கராஜர், பாதிரியார் சின்னராசா இவர்களோடு பனாகொட இராணுவத் தடுப்பு முகாமில் என்னோடு நெருங்கிய சிநேகிதம் வைத்திருந்த பாதிரியார் சவரிமுத்து ஆகியோர் அடைக்கப்பட்டிருந்தார்கள். எங்களுக்காக அவர்களின் 'செல்'கள் காலி செய்யப்பட்டன. அவர்கள் அந்த வை.ஓ.கட்டடத்தின் மேல் மாடியிலுள்ள மண்டபத்துக்கு அனுப்பபட்டார்கள். கீழேயிருந்த எட்டு சிறைக்கூடுகளிலும் C3 தொகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட நாங்கள் மூவர் மூவராக அடைக்கப்பட்டோம். ஒன்பதாவது அறையில் மட்டும் நான்கு பேர் அடைக்கப்பட்டார்கள்.

**வை.ஓ.**



**27 ஜூலை 1983**

சீனா அடைக்கப்பட்ட செல்லில் நானும் பக்கிரியும் புகுந்து கொண்டோம். சீனாவுக்கு இருபத்து மூன்று வயது சொல்லலாம். 'உக்குட்டிக்' கண்களும் சளிந்த மூக்கும் மஞ்சள் நிறமும் மெல்லிய ஆனால் உரமான உடல்வாகும் கொண்ட உயரமானவன். சுரு சுருவென்ற அவனது தலைமுடி நட்டுக்கொண்டு நிற்கும். இரண்டு தடவைகள் பொலிஸ் காவலிலிருந்து தப்பியிருக்கிறான். கடைசியில் திருகோணமலை எஸ்.பி.வெத்தமுனியின் வீட்டின் மீது குண்டு வீசி விட்டு ஓடும்போது அவன் கைது செய்யப்பட்டான். இருபத்தேழாம் திகதி காலையில் அவன் மலசலக் கூடத்துக்குச் சென்று விட்டு வரும்போது எங்கிருந்தோ ஒரு ஆறு இஞ்சி நீளமும் ஒரு இஞ்சி கனமும் உள்ள கம்பித் துண்டொன்றைக் கொண்டு வந்தான். என்னையும் பக்கிரியையும் தன்னை மறைத்துக்கொண்டு நிலத்தில் உட்காருமாறு கூறிவிட்டு எங்கள் முதுகுகளின் மறைவில் அவன் அந்தக் கம்பித் துண்டின் ஒரு முனையை நிலத்தில் தேய்த்துத் தேய்த்துக் கூராக்கினான். 'எதற்காகக் கம்பியைத் தீட்டுகிறாய்' என்று கேட்டேன். 'சுவாமி அவர்கள் எங்களைக் கொல்வதற்காக நிச்சயம் வருவார்கள். முப்பத்தைந்து பேர்களை அவர்கள் கொன்றதற்கு நாங்கள் இருபத்தெட்டு சாட்சிகள் இருக்கிறோம். சாட்சியங்களை அழித்தொழிப்பதற்காக இங்கு நிச்சயம் வருவார்கள்'. சீனா நாக்கைப் பற்களுக்கிடையில் கடித்தவாறு கம்பித்துண்டை பொறி பறக்கத் தேய்த்தான். எங்களைத் தேவையில்லாத அச்சத்துக்குள் சீனா வீழ்த்துவதாகவே அப்போது நான் நினைத்தேன். எங்களைப் பாதுகாப்பதற்காகத் தானே சிறையதிகாரிகள் இங்கே இரகசியமாக இடம் மாற்றியுள்ளார்கள்! எனது கருத்தை பக்கிரியும் ஆமோதித்தால் எனக்குத் தெம்புக் கூடும். 'தோழர் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். அவர்கள் வருவார்களா?' என்று பக்கிரியிடம் கேட்டேன். பக்கிரி உதடுகளைக் குவித்து மவுனமாய் இருந்தார். பக்கிரி எதுவும் சொல்லத் தயாரில்லை. இருபத்தைந்தாம் திகதிக் கொலைகளுடன் அவர் இடிந்துபோயிருந்தார். அவரின் கண்மணிகள் கூடப்

**சாட்சிகள்**

புரள்வதில்லை. அவர் இரண்டு நாட்களாகச் சாப்பிடவும் இல்லை. மலசலமும் கழிக்கவில்லை. அவரின் வாய் எச்சிலைத் துப்புவதற்காக மட்டுமே திறந்து மூடியது.

சீனா இன்னொரு யோசனையும் சொன்னான். 'மதியம் உணவு வழங்க வருபவர்களிடம் எங்களுக்குச் சோறு வேண்டாம், எங்களிடம் பாண் துண்டுகள் மீதமிருக்கின்றன என்று கூறிவிட்டு மூன்று தட்டுக்களிலும் மிளகாய் போட்ட குழம்பை மட்டும் வாங்கி வைப்போம். அந்த மிளகாய்க் குழம்பும் எங்களுக்குச் சிலநேரங்களில் உதவும்' என்றான். அவ்வாறே மதியம் உணவு வழங்க வந்த சிங்களக் கைதிகளிடம் குழம்பு மட்டுமே கேட்டோம். அவர்கள் அலுமினியத் தட்டுக்களில் தாராளமாய்க் குழம்பை ஊற்றினார்கள். 'ஏன் எதற்காக மிளகாய்க் குழம்பை வாங்குகிறோம் என்று கொஞ்சங் கூட யோசிக்காமல் ஊற்றிவிட்டுப் போகிறார்களே... இதைத் தான் முட்டாள் சிங்களவன் என்று சொல்வது' என்று அதையும் ஆத்திரத்துடன் சொன்னான் சீனா. பக்கிரி மெள்ள அசைந்து சீனாவைத் திரும்பிப் பார்த்தார். இரண்டு நாட்களாக அவர் மூடிவைத்திருந்த வாயைத் திறந்து சொன்னார்: 'முட்டாள் தொழிலாள வர்க்கம்'. பின்பு மீண்டும் பக்கிரி மவுனத்தில் புதைந்தார். வெகு நேரம் கழித்து அவர் திடீரென என்னிடம் 'சுவாமி, தொழிலாள வர்க்கம் என்பதைச் சிங்கள மொழியில் எப்படிச் சொல்வது?' என்று கேட்டார். 'கம்கறு பந்திய' என்று சொன்னேன்.

**கம்கறு**

இனி நான் எழுதப் போவதைப் படிக்கும் போது நீங்கள் சலிப்படையக் கூடும். சாவை வாசிப்பதால் நீங்கள் சலிப்படைகிறீர்கள். நீங்கள் புத்தகத்தைத் தூக்கி வீசுவதாலோ இனி வரும் சில பக்கங்களை படிக்காமல் தள்ளி விடுவதாலோ ஒரு காலத்தைக் கடந்து விட முடியுமென்று நினைக்கிறீர்களா? அந்தக் காலத்தில் திரும்பவும் திரும்பவும் 'ஜெய வேவா' முழக்கம் எங்களைச் சூழ்ந்து எழுந்தது. சிங்களத்தில் வெறிக்கூச்சல் வெலிகட முழுவதும் பரவிற்று. நீளமான விசில்கள் சாவை ஒலித்தன. வெள்ளை நிறத்தில் 'பப்ளின்' துணியில் முழங்கால்களை முட்டும் காற்சட்டைகளும் மேற்சட்டைகளும் அணிந்திருந்த கைதிகள் வை.ஓ.கட்டடத்தின் முகப்பிலிருந்த கம்பிகளால் பின்னப்பட்ட பிரதான கதவை உடைக்கத் தொடங்கினர். அவர்களில் முதலாவதாக சேபால ஏக்கநாயக்க கோடரியால் கதவைக் கொத்தினான். வை.ஓ. கட்டடத்தைச் சூழவும் சிங்களக் கைதிகள் சுவர்களில்

**சேபால ஏக்க நாயக்க**



தொற்றி ஏறினார்கள். அவர்கள் தங்களின் கைகளில் சிறையில் கிடாரத்தில் சோறு கிளறும் இராட்சத அகப்பைகள், சிறைத் தச்சுத் தொழிற்சாலையில் இருந்து எடுக்கப்பட்டிருக்கக் கூடிய உளிகள், மரம் அரியும் வாட்கள் கோடரிகள் போன்றவற்றை வைத்திருந்தார்கள். எங்களின் சிறைக்கூண்டுகள் அதிரலாயின. ஜெயவேவா!

நாங்கள் மூவரும் அடைக்கப்பட்டிருந்த செல்லின் முன்பாக உதய என்ற நடுத்தர வயது சிறை அதிகாரி நாற்காலி போட்டு உட்கார்ந்திருந்தான். அவனின் கைகளில் எங்கள் சிறைக்கூண்டுகளைத் திறப்பதற்கான சாவிக்கோர்வை இருந்தது. கரிய நிறத்தில் துருப்பிடித்திருந்த சாவிகளை உதய தனது சுட்டுவிரலில் கொழுவி வைத்திருந்தான். சீனா என் காதுகளில் இரகசியம் பறைந்தான். 'சுவாமி, நீ தந்திரமாகப் பேசி உதயவை எங்களுக்கு அருகே கூப்பிடு! அவன் இந்தக் கம்பிக் கதவின் அருகே வரும்போது நான் கையைக் கம்பிகளுக்குள்ளால் நுழைத்து அவனைப் பிடித்து சாவிகளைப் பறித்தெடுப்பேன்!'

**உதய**

நான் 'மாத்தையா... மாத்தையா' என்று உதயவைக் கூப்பிட்டேன். அவன் எழுந்து எங்களருகில் வந்தான். ஆனால் நாங்கள் கைகளால் எட்டிப் பிடிக்கக் கூடிய அளவுக்கு அவன் எங்களை நெருங்கவில்லை. 'மாத்தையா நான் சாகப் போகிறேன் அதற்கு முன்பாக நான் தரும் துண்டுக் கடிதத்தை எப்பிடியாவது என் வீட்டு முகவரிக்கு அனுப்பி விடுங்கள், என்னில் இரக்கம் செய்யுங்கள்' என்று நான் உதயவைக் கெஞ்சினேன். அவன் எங்கேயோ பார்த்தவாறே 'சரி... சரி நான் அதை அனுப்புவேன்' என்றான். நான் ஒரு துண்டுக்காகிதத்தை எடுத்து உதயவின் மூஞ்சியின் முன்னால் விரித்தேன். பின் 'தயவு செய்து உங்களின் பேனாவைக் கொஞ்சம் தாருங்கள் மாத்தையா' என்று கேட்டேன். உதய தனது சட்டைப்பையிலிருந்த சிவப்பு நிறப் பேனாவை எடுத்து கம்பிகளின் இடையால் என்னிடம் கொடுத்தபோது என் அருகே நின்றிருந்த சீனா தனது கைகளுக்குள் மறைத்து வைத்திருந்த கூரிய கம்பித்துண்டை உதயவின் தொண்டைக் குழியை நோக்கிப் பாய்ச்சினான். கம்பிகளுக்குள்ளால் சீனாவின் கை வீசப்பட்டதால் அவனால் வேகமாக வீச முடியவில்லை. இலக்கும் சறுக்கி விட்டது. சீனா தனது இடக்கையால் சிறையதிகாரியின் சட்டையை எட்டிப்பிடிக்க முயன்றான். உதய, சீனாவின் கையில் அகப்படாமல்

**ஹெலி ஹொப்டர்**

பின்னால் துள்ளிப் பாய்ந்து வை.ஓ.கட்டடத்தின் பிரதான வாசலை நோக்கி ஓடினான். அப்போது பிரதான வாசற்கதவைப் பாட்டிலே விழுத்தி அதன் மீது ஏறி கொலைகாரர்கள் உள்ளே வந்தார்கள். ஜெயவேவா! வெளியே ஹெலிஹொப்டர்கள் தாழப் பறக்கும் பேரிரைச்சல் எழுந்தது.

**மரிய நாயகம்**

உதயவின் கையிலிருந்த சாவிக்கோர்வை இப்போது கொலைகாரர்களின் கையில் இருப்பதை நான் கண்டேன். சாவு அடக்கமாகக் கொலைகாரர்களின் உள்ளங்கைகளுக்குள் இருக்கிறது. ஒவ்வொரு செல்லுக்கும் ஒரு சாவி இருந்தது. அவர்களின் வெறிக்கும் ஆவேசத்துக்கும் ஆத்திரத்துக்கும் பொருத்தமான, செல்லுக்கு பொருத்தமான சாவியைத் தேர்ந்தெடுக்கும் பொறுமை கிடையாது. அவர்கள் மூடியிருந்த செல்களின் பூட்டுக்களைக் கோடாரிகளால் வெட்டி உடைக்க முயன்றார்கள். இரண்டு பக்கங்களிலும் வரிசையாக செல்கள். ஒரு புறத்தில் அய்ந்தும் எதிர்ப்புறத்தில் நான்கு செல்களும் கடைசியில் மலசலக் கூடமும். நடுவில் குறுகலான விறாந்தை. அந்த விறாந்தைக்குள் கொலைகாரர்கள் ஆளை ஆள் இடித்துக்கொண்டும் தள்ளிக்கொண்டும் இயங்கினார்கள். மேலே மாடிக்கு அவர்கள் கூச்சலிட்டுக் கொண்டே ஓடுவதையும் நான் கேட்டேன். நான்காவது இலக்க 'செல்'லை அவர்கள் உடைத்துத் திறந்து உள்ளேயிருந்த அச்சுவேலி மரியநாயகத்தை வெளியே இழுத்துவந்து விறாந்தையில் போட்டு ஆயிரம் கோடாரிகளால் கொத்தினார்கள். ஒரு மனிதன் கோடாரிகளால் வெட்டிக் கொல்லப்படுவதை நீங்கள் கண்டிருக்கிறீர்களா? அப்போது அவனின் தொண்டைக்குழியிலிருந்து இரத்தம் சில மீற்றர்கள் உயரத்துக்குப் பீறிட்டுப் பாயும். சாகும் மனிதனின் குரலில் மொழியிருக்காது. முதலில் அவனது குரல் அனுங்கத் தொடங்கி சாகும் போது அது வீறிடும். அவன் இறந்த பின்பு கூட அவனின் தொண்டையிலிருந்து அவனின் குரல் பிரிந்து கொண்டேயிருக்கும்.

நான் அடைபட்டிருந்த 'செல்'லின் பூட்டை உடைத்து என்னைக் கொன்று விடுவதற்கு அவர்கள் தள்ளுமுள்ளுப் படலானார்கள். நான் நினைக்கிறேன். அப்போது அவர்கள் கள்ளோ சாராயமோ குடித்திருக்கவில்லை. எனினும் போதையேறிய கண்களுடனும் சுழித்த உதடுகளுடனும் அவர்கள் தள்ளாடினார்கள். அவர்களிடம் நிதானம் இருக்கவில்லை.



**போதை**

அவர்கள் தங்களில் ஒருவரை ஒருவர் வசவுகளால் திட்டிக் கொண்டார்கள். 'செல்'லின் பெரிய பூட்டின் மீது கோடாரி வெட்டுக்கள் தாறுமாறாகத் தெறித்துப் பறந்தன. நானும் சீனாவும் பக்கிரியும் உள்ளிருந்து மூர்க்கத்துடன் போராடினோம். எங்கள் கைகளைப் பற்ற முயன்ற சாவின் கரங்களைத் தூக்கி வீசினோம். 'செல்'லின் கதவை உடைப்பவர்களின் மூஞ்சிகளில் நாங்கள் சேகரித்துவைத்திருந்த மிளகாய்க் குழம்பை ஊற்றும் பொறுப்பை பக்கிரி எடுத்திருந்தார். அவர் அவரது இடுப்பிலிருந்து சதா வழுவிக்கொண்டேயிருந்த அரைக்காற்சட்டையை இடது கையால் பிடித்தவாறே முன்னும் பின்னும் ஆடி அசைந்து தனது வலது கையால் குழம்பைக் கொலைகாரர்களின் மூஞ்சிக்கு எற்றினார். அப்படிக் குழம்பை எற்றும் போது அவர் மிக நிதானமாகக் கொலைகாரர்களை நோக்கி 'Run away... Get lost'... என்று சொல்லிக்கொண்டார். குழம்பு ஊற்றப்படும்போது கொலைகாரர்கள் சற்றுப் பின் வாங்குவார்கள். பக்கிரியைப் பச்சைத் தூசணத்தால் திட்டுவார்கள். குழம்பு ஊற்றப்பட்ட தமது மூஞ்சிகளைச் சட்டைகளில் துடைத்தவாறே மறுபடியும் முன்னே வந்து பூட்டை உடைப்பார்கள். சிலர் தமது கைகளால் 'செல்' கதவின் கம்பிகளைப் பற்றிக் கதவைப் பிடுங்கியெடுக்க 'தம்' கட்டி முயன்றார்கள். மிளகாய்க் குழம்பைப் பக்கிரி மீண்டும் ஊற்றுவார். அவர்கள் படு தூசணத்துடன் கொஞ்சம் பின் வாங்குவார்கள். மிளகாய்க் குழம்பு முடிந்து விட்டால் எங்களின் பேரழிவு ஆயுதம் தீர்ந்து விட்டதாக அர்த்தம். எனவே பக்கிரி மிகக் கவனமாகவும் லாவகமாகவும் சிறிது சிறிதாகவே மிளகாய்க் குழம்பை ஊற்றினார்.

**ரொபேர்ட்**

சீனா தருணம் கிடைக்கும்போதெல்லாம் தன் கையிலிருந்த கூரிய கம்பித்துண்டால் கொலைகாரர்களைத் தாக்கி விரட்டினான். கம்பிகளுக்கிடையே அவனின் கையில் சில வாள் கீறல்கள் விழுந்தன. அவனது வலதுகையின் முழங்கைக்குக் கீழே இரத்தம் கொப்பளித்து வழிய வழிய சீனா போராடிக்கொண்டிருந்தான். நான் மிளகாய்க்குழம்பு முடிந்துபோயிருந்த ஒரு அலுமினியத் தட்டை நசுக்கி நிலத்தில் தட்டி உருட்டி ஆயுதமாக்க முயன்றுகொண்டிருந்தேன். பயத்திலும் பதற்றத்திலும் என்னால் சரிவர எதையும் செய்ய முடியவில்லை. அவர்கள் மேலும் சில 'செல்'களை உடைத்துவிட்டார்கள். ஒருவன் ஒரு முழுக் கையை இரத்தம் சொட்டச் சொட்ட, தரையில் இழுத்துச் சென்றான். நவ

**சிவசுப்பிரமணியம்**

ரட்ணசிங்கம் வெட்டப்படுகிறார். ரொபேர்ட்டின் உடல் அவர்களால் அலவாங்கால் புரட்டிப் போடப்படுகிறது, 'சிவசுப்பிரமணியத்தையும் கொன்று விட்டார்கள்' என்ற அலறல் கேட்கிறது. ஒவ்வொரு கோடாரி வீச்சுக்கும் ஒவ்வொரு உளிக் குத்துக்கும் ஒவ்வொரு அலவாங்கு அடிக்கும் ஒரு ஜெயவேவாச் சத்தம் எக்காளத்தோடு எழுகிறது.

**உதிரச் சகதி**

சிறையின் தரை முழுவதும் உதிரச் சகதி. அந்தச் சகதியில் கொலைகாரர்கள் நடக்கவும் முடியாமல் ஓடவும் முடியாமல் திரும்பத் திரும்பக் கால்கள் வழுக்கி விழுந்தார்கள் என்பதை உங்களால் நம்ப முடிகிறதா? அதை நான் என் கண்களால் கண்டேன். எங்கள் செல்லின் கதவை உடைக்க முயன்றவர்கள் இரத்தத்தில் கால்களை ஊன்றி நிற்க முடியாமல் தடுமாறினார்கள். அவர்கள் ஒருவர் மீது ஒருவர் தடுமாறி விழுகிறார்கள். மிகப் பொருத்தமான தருணங்களைத் தேர்வு செய்து பக்கிரி மிளகாய்க்குழம்பை ஊற்றிக்கொண்டிருந்தார்.

**டக்ளஸ் தேவானந்தா**

அப்பொழுது எங்கள் செல்லுக்கு நேரெதிரே இருந்த செல்லின் பூட்டைக் கொலைகாரர்கள் உடைத்து விட்டிருந்தார்கள். அந்த செல்லில் டக்ளஸ் தேவானந்தா, பனாகொட மகேஸ்வரன், ரெலோ தம்பா ஆகியோர் இருந்தனர். அவர்கள் மூவரும் உடைக்கப்பட்ட கதவின் கம்பிகளைப் பற்றி உள்ளே இழுத்துப் பிடித்தபடி நின்றார்கள். மறுபுறம் கொலைகாரர்கள் கதவை வெளியே தங்கள் பக்கம் இழுத்துத் திறப்பதற்கு முயன்றார்கள். கதவின் கம்பிகளைப் பிடித்திருந்த மூவரின் ஆறு கைகளிலும் கோடாரியால் வெட்டக் கொலைகாரர்கள் எத்தனித்தார்கள். அந்த ஆறு கைகளும் கீழேயும் மேலேயும் இடமும் வலமும் முன்னேயும் பின்னேயும் இமை வெட்டும் நொடியில் மாறி மாறி இயங்கின.

**'ரெலோ' தம்பா**

அப்படியும் ரெலோ தம்பாவின் கையில் கோடாரி பாய்ந்து விட்டது. அவர் காயம்பட்ட கையை முதுகுக்கு பின்னால் வைத்தவாறு மற்றக் கையால் கம்பியைப் பற்றி உள்ளே இழுத்தபடியிருந்தார். கடைசிவரை அவர்கள் தங்களின் செல்லைக் கொலைகாரர்கள் திறப்பதற்கு விட்டார்களில்லை.

அதற்கு அடுத்திருந்த செல்லில் மாணிக்கதாசனும் அழகிரியும் கம்பிகளுக்கு அருகே நின்று கொலைகாரர்களோடு போராடிக்கொண்டிருந்தார்கள். மாணிக்கதாசனின் கையில் ஒரு நீண்ட தடி இருந்தது. அவர் அந்தத் தடியைக் கொலைகாரர்களிடமிருந்து பறித்தெடுத்திருக்க வேண்டும். அவர் அந்தத் தடியால் சீனடி சிலம்படி அடித்துக்கொண்டி



ருந்தார். ஒரு கொலைகாரனின் தலையை அவர் அந்தத் தடியால் பிளந்திருந்தார். அவன் கண்களின் மேலாய் இரத்தம் வடிய அலறிக்கொண்டு ஓடினான்.

**அழகிரி**

எங்களுக்குப் படுக்கை விரிப்புகளாகச் சிறையில் சில தடித்த போர்வைகள் கொடுக்கப்பட்டிருந்தன. அந்தப் போர்வையால் செல் கதவின் கம்பியொன்றைச் சுற்றி போர்வையின் இருமுனைகளையும் ஒன்றாக முறுக்கி அதை உள்ளே இழுத்துப் பிடித்தபடி அழகிரி நின்றிருந்தார். எங்கள் செல்லின் பூட்டு சிதறிக் கீழே விழுந்தபோது அழகிரி என்னைப் பார்த்து 'சுவாமி போர்வைகளை எடுத்து அவற்றால் கம்பிகளைச் சுற்றி உள்ளே இழுத்துப் பிடித்திருங்கள்!' என்று கத்தினார்.

நான் போர்வைகளை எடுத்து வீச பக்கிரியும் சீனாவும் அவற்றைக் கம்பிகளில் சுற்றினார்கள். மூவரும் போர்வைகளை இழுத்துப் பிடித்தவாறே சுவர் ஓரங்களில் நின்றோம். அவர்கள் போர்வைகளையும் கோடாரியால் வெட்டிக்கொண்டிருந்தார்கள். போர்வையின் கடைசி இழையும் அவர்களால் வெட்டப்பட்டபோது 'செல்லின் கதவைத் திறந்துகொண்டு சாவு உள்ளே நுழைந்தது.

**கதவு உடைபட்டது**

பக்கிரி பின்னால் சென்று அலுமினியக் கோப்பைகள், மாற்றுடைகள், பல் துலக்கும் பிரஷ், சீப்பு என கையில் அகப்பட்ட எல்லாவற்றையும் எடுத்து கொலைகாரர்கள் மேல் விட்டெறிந்தார். அவரின் கண்கள் கொலைகாரர்களையே உற்றுப் பார்த்தவாறிருக்க அவரின் கைகள் எறிவதற்குப் பொருள் தேடி தரையைத் தடவின. முதலாவது கொலைகாரன் செல் உள்ளே வந்தபோது சீனா அவனை ஒரே அடியில் திரும்ப ஓடப்பண்ணினான். அவர்கள் கூட்டமாய் உள்ளே ஜெய்வேவா என்று அலறிக்கொண்டே வர முயன்றார்கள். இரண்டுபேர், நான்கு பேர், ஆறுபேர் சீனா கைகளினாலும், கம்பித்துண்டாலும், கால்களாலும், தலையாலும் மார்பாலும் அவர்களைப் பாய்ந்து பாய்ந்து அடித்தான். எட்டுப்பேர் பதினாறு பேர்... நான் தரையில் மண்டியிட்டு இரு கைகளையும் உயரத் தூக்கிக் கேவிக்கொண்டே சிங்களத்தில் கொலைகாரர்களைப் பார்த்துச் சொன்னேன். 'நான் புலி அல்ல, நான் பயங்கரவாதி அல்ல, நானொரு கிறிஸ்தவப் பாதிரியார்... சகோதரர்களே எனக்கு இரக்கம் காட்டுங்கள்...'

என்னையோ பக்கிரியையோ சீனாவைத் தாண்டி வந்து கொலைகாரர்களால் தாக்க முடியவில்லை. செல்லின் சிறிய வாயிலை சீனா மறித்தவாறு நின்று அடிபட்டான். அவன்

உடலின் ஒவ்வொரு அங்குலத்திலும் கோடாரிகள் பாய்ந்தன. அவன் நின்ற நிலையில் பின்னே சரிந்து மல்லாக்க என்மீது விழுந்தான். அப்போது என் தோளில் மெண்டிஸ் கோடாரி யால் வெட்டினான். சாவு தன் நாவால் என் உடலைத் தீண்டுகிறது. ஜெயவேவா! என் கண்கள் தீயாய் எரிந்து

**மெண்டிஸ்**

மூடுகின்றன. புகை என்னைச் சூழ சாவின் வெடில் நாசிக் குள்ளால் சிரசில் அடித்தது. இப்பொழுது தாக்குதல்களை நிறுத்திவிட்டு கொலைகாரர்கள் தடதடவென ஓடுகிறார்கள். 'எல்லோரும் வெளியே வாருங்கள்!' என்ற கட்டளையை நான் கேட்டேன். கண்ணீர் புகைக்குள் என் தோளிலிருந்து வடியும் இரத்தத்தை உள்ளங்கையால் பொத்தி மூடியவாறே நான் வீழ்ந்து கிடந்தேன்.

புகை கலையும் போது பக்கிரி என்னைத் தூக்கி நிறுத் தினார். நான் எழுந்து விறாந்தைக்கு ஓடிச்சென்று பார்த்த

**சிறி**

போது வைஓ. கட்டடத்தின் பிரதான வாயிலில் முகமூடிகள் அணிந்த இராணுவத்தினர் துப்பாக்கிகளோடு நின்று 'எல்லோரும் உடனே வெளியே வாருங்கள்' என்று கத்தினார் கள். கடைசி சிறைக்கூண்டில் பரந்தன் ராஜனும், சிறியும், அருந்தவராசாவும் பாதுகாப்பாய் இருந்தனர். ராஜனுக்கு இடுப்பில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருந்ததால் அவரால் ஊன்றுகோலின் துணையுடனேயே நடக்க முடியும். அவர் அந்த ஊன்றுகோலை வைத்து, கொலைகாரர்களுடன் போராடியிருக்கிறார். இராணுவம் கண்ணீர்ப் புகைக்குண்டு களை வீசிய போது ஓடிய கொலைகாரர்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டே ஓடியிருக்கிறார்கள்.

**அருந்தவ ராசா**

மாணிக்கதாசனும், டக்ளஸ் தேவானந்தாவும், பக்கிரியும், பனாகொட மகேஸ்வரனும் கையில் ஆளுக்கொரு கோடாரி யுடன் ஒவ்வொரு செல்லாகச் சென்று பார்த்தார்கள். பக்கிரி தூக்க முடியாமல் சீனாவைத் தூக்கிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி வெளியே போனார். அவரின் பின்னால் நானும் வெளியே போனேன். ஒரு கட்டத்தில் பக்கிரி சீனாவைத் தரையில் போட்டு அவனின் கால்களை பற்றி இழுத்துப் போனார். இராணுவத்தினர் கோடாரிகளைக் கீழே போட்டுவிட்டு எல்லாரையும் வெளியே வரச்சொல்லிக் கத்திக்கொண்டிருந்தார்கள்.

மாணிக்கதாசனும் பனாகொட மகேஸ்வரனும் பரந்தன் ராஜனின் 'செல்'லின் பூட்டைக் கோடாரிகளால் கொத்திப் பிளந்து அவர்களை வெளியே அழைத்துவந்தார்கள். டக்ளஸ்



தேவானந்தாவும்,அழகிரியும், ஃபாருக்கும், சிறியும் உள்ளே குற்றுயிருடன் மயங்கிக் கிடந்த கல்முனை பாஸ்கரனையும் குமாரகுலசிங்கத்தையும் சர்வேஸ்வரனையும் நீதிராஜாவையும் மனோரஞ்சனையும் சேயோனையும் வெளியே தூக்கி வந்து சீனாவுக்கு அருகில் வளர்த்தினர். சீனாவுக்கு இன்னமும் நினைவு தப்பவில்லை. அவன் 'டேய் புண்டையாண்டியளே, என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்கடா' என்று கண்கள் சொருகி அரற்றிக்கொண்டிருந்தான். அப்போது

**ராஜ சுந்தரம்**

மேல் மாடியில் இருந்தவர்கள் ஒரு உடலைத் தூக்கியவாறே படிகளில் இறங்கி வந்தார்கள். அந்த உடல் இரத்தத்தில் மூழ்கியிருந்ததால் முதலில் எங்களுக்கு அடையாளம் தெரியவில்லை. பக்கிரி அந்த உடலின் கிட்டே மெதுவாக நடந்துபோய் தன் இரண்டு கைகளாலும் அந்த உடலின் முகத்தில் உறைந்திருந்த இரத்தத்தை வழித்தெடுத்தார். டொக்டர் ராஜசுந்தரம் கண்களை மூடி வாயைக் கோணிக் கிடந்தார். பக்கிரி டேவிட் அய்யாவைக் கட்டிப்பிடித்து அழுதார்.

உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பவர்களையும் காயங்கள் பட்டவர்களையும் உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போகுமாறு சிறையதிகாரிகளையும் இராணுவத் தினரையும் நாங்கள் கெஞ்சினோம். ஆனால் சிறையதிகாரி களும் இராணுவத்தினரும் நேரத்தைக் கடத்த வழி தேடினார்கள் ஒழிய சாட்டுகளைச் சொன்னார்களே தவிர, அவர்கள் எங்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகவில்லை.

**பொன்கை மாறன்**

அடுத்த அரை மணி நேரத்துக்குள் சீனாவைத் தவிர மற்றவர்கள் இறந்துபோனார்கள். இரவு எட்டு மணியளவில் சிறை அதிகாரிகள் தோளில் காயம்பட்டிருந்த என்னையும் சீனாவையும் ஒரு ஜீப்புக்குள் படுக்க வைத்து எங்கள்இருவரின் கைகளையும் சேர்த்து விலங்கிட்டார்கள். சீனா 'என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்கள்!' என்று முனகினான். ஜீப் ஆஸ்பத்திரிக்குப் போவதாக சிறையதிகாரிகள் எனக்குச் சொல்லியிருந்தார்கள். ஜீப் ஓடிக்கொண்டிருக்கும்போது கருகும் வாசனை காற்றிலே இருந்தது. ஜீப் ஆஸ்பத்திரியின் வாசலில் நின்ற போது நான் எழுந்திருந்தேன். என் கையோடு சேர்ந்து விலங்கிடப்பட்டிருந்த சீனா என்ற சின்னவன் பொன்கைமாறன் வழியிலேயே இறந்துபோயிருந்தான்.

ஆஸ்பத்திரியில் டொக்டர்கள் யாரும் என்னைப் பரிசோதிக்கவில்லை. ஒரு சிடுசிடுத்த மூஞ்சியுள்ள இளம்தாதி

**ஆஸ்பத்திரி**

என் தோள்ப்பட்டையில் நான்கு தையல்கள் போட்டாள். அவளிடம் நான் என்னை ஒரு கிறிஸ்தவ பாதிரியார் என்று அறிமுகம் செய்துகொண்டேன். அவள் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள். எனக்கு ஒரு புட்டி 'குளுக்கோஸ்' ஏற்றப்பட்டது. என் நரம்பில் 'குளுக்கோஸ்' செல்லும் ஊசி குத்தியிருக்க 'சேலைன்' புட்டியை அவள் என் கைகளில் கொடுத்தாள். அதைத் தலைக்கு மேலே உயர்த்தி பிடித்திருக்கும் படி அவள் சொன்னாள். அப்படியே சேலைன் புட்டியோடு நான் மீண்டும் ஜீப்பில் ஏற்றப்பட்டு வெலிகட சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டேன். சேலைனை உயர்த்திப் பிடித்திருந்த என் வலது கையை அவர்கள் ஜீப்பின் இருக்கையோடு சேர்த்து விலங்கிட்டிருந்தார்கள். வெலிகட சிறையில் நானும் மற்றைய அரசியல்கைதிகளும் வரிசையில் நிற்க வைக்கப்பட்டு உடலெங்கும் சோதனையிடப் பட்டோம். இருவர் இருவராக எங்கள் கைகளும் கால்களும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டன. பின் இராணுவத்தினர் எங்களை ஒரு நீண்ட ட்ரக் வண்டியினுள் படுக்கவைத்தார்கள். இருவர் மேல் இருவராக நாங்கள் அடுக்கப்பட்டோம். ட்ரக் சிறிது தூரம் ஓடியதும் நிறுத்தப்பட்டது. எதற்காக நிறுத்தப்பட்டது? இவர்கள் எங்களை எங்கே கொண்டு போகிறார்கள்? எதை யோசித்தும் எதுவிதப் பிரயோசனமும் கிட்டப்போவதில்லை. சிறுநீர் பெய்வதானால் கூட நாங்கள் ட்ரக்குக்குள் தான் பெய்ய வேண்டியிருந்தது. நீண்ட நேரங்களின் பின் ட்ரக் வண்டி மீண்டும் புறப்பட்டது. காலை விடிந்தபோது ட்ரக் வண்டி இரத்மலான விமானநிலையத்தைச் சென்றடைந்தது. அங்கு நாங்கள் மீண்டும் விமானப் படையினரால் சோதனையிடப்பட்டோம். பின்பு நாங்கள் விமானத்தில் ஏற்றப்பட்டோம். அந்த விமானத்தில் இருக்கைகள் இல்லை. நாங்கள் கீழே உட்காரவைக்கப் பட்டோம். விமானப்படையினர் சற்றுக் கனிவுடனேயே எம்மை நடத்தியதாகத் தோன்றுகிறது. சுடச்சுடக் கறுப்புத் தேநீரும் பாண் துண்டுகளும் விமானத்துக்குள் தந்தார்கள். விமானம் கிழக்குத் திசைக்குப் பறந்துகொண்டிருந்தது.

**இரத்மலான**

ம்



**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு சிறைச்சாலை சிறியதாகவும் பரபரப்பு அற்றதாகவும் சோம்பிக் கிடந்தது. வெலிகட சிறைச் சாலையோடு ஒப்பிடும்போது இது ஒன்றுமேயில்லை. வெலிகட சிறையிலிருந்த எங்களையும் கொழும்பு புதிய மகஸீன் சிறையிலிருந்த அரசியல்கைதிகளையும் பெண்கள் சிறையிலிருந்த ஒருவரையும் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட அரசாங்கம் முடிவு செய்தபோது மட்டக் களப்புச் சிறைச்சாலையின் ஆணையாளர் - இவர் பறங்கி இனத்தைச் சேர்ந்தவர் - அரசாங்கத்துக்கு ஒரு நிபந்தனை போட்டிருக்கிறார். அந்த நிபந்தனையின்படி நாங்கள் இரவோடு இரவாக மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப் பட்டபோது அதே இரவோடு இரவாக மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கடமையிலிருந்த சிங்களச் சிறையதிகாரிகளும் சிங்களச் சிறைக்காவலர்களும் கொழும்புக்கு மாற்றப்பட்டார்கள். மட்டக்களப்புச் சிறைச்சாலையில் மருந்துக்குக் கூட ஒரு சிங்களவர் இருக்கவில்லை. தமிழ்ச் சிறையதிகாரிகள், தமிழில் அறிவித்தல்கள், தமிழ்ச் சோறு, தமிழ்க் குழம்பு சொதி என்று வலு கலாதியாக மட்டக்களப்பில் சிறை வாழ்க்கையை நான் ஆரம்பித்தேன். சிறைக்காவலர்கள் வெலிகட சம்பவங்கள் குறித்து எங்களிடம் துக்கம் விசாரித்தார்கள். தமிழ் சாதாரண குற்றவாளிகளை 'நாயடி பேயடி' அடித்த தமிழ் சிறையதிகாரிகள் தமிழ் அரசியல்கைதிகளிடம் மிகவும் தமிழ்ப் பண்போடு நடந்துகொண்டார்கள். தமிழ்!

**வரதராஜப் பெருமாள்**

ஒரு மாடிக்கட்டடத்தின் கீழ்த் தளத்திலுள்ள சிறைக் கூடுகளில் சாதாரணக் கைதிகள் அடைக்கப்பட்டிருந்தார்கள். மேல்தளம் ஒரு 'ஓ'வென்ற திறந்த மண்டபம். மண்டபத்தின் பின்பகுதியில் மலசலக் கூடங்களும் தண்ணீர் தொட்டியும் இருந்தன. அந்த மண்டபத்துக்குள் நுழைய ஒரே ஒரு கதவு தான் இருந்தது. கதவுக்குக் கீழே வளைந்து இறங்கும் படிகள். இந்த மண்டபத்துள் தான் கொழும்பிலிருந்து விமானத்தில் அழைத்து வரப்பட்ட ஆண் அரசியல் கைதிகளான நாங்கள் விடப்பட்டோம். அங்கு ஏற்கனவே சில அரசியல்கைதிகளும் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு வெலிகடயில்

பட்ட பாடுகளை நாங்கள் கதை கதையாகச் சொன்னோம். அவர்கள் 'ம்' கொட்டிக் கேட்டார்கள். அங்கே தான் நான் முதன் முதலாக வரதராஜப்பெருமாளைச் சந்தித்தேன். அந்த மண்டபத்தில் அரசியல்கைதிகள் அல்லாத இரு 'பயங்கர' குற்றவாளிகளும் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

**கொலைகாரர்கள்**

மண்டபத்தில் ஏற்கனவே இருந்த கைதிகள் ஒரு 'சிஸ்டமாக'த்தான் இருந்தார்கள். ஒவ்வொரு இயக்கமும் மண்டபத்தின் ஒவ்வொரு மூலையைப் பிடித்து உட்கார்ந்திருந்தது. என்னோடு வெலிகடயிலிருந்து வந்தவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் இயக்க மூலைகளுக்குப் போய் இடம் பிடித்துக் கொண்டார்கள். பக்கிரியும் தன்னுடைய இயக்கத்தின் மூலையில் போய் உட்கார்ந்துகொண்டார். டேவிட் அய்யா, பாதிரியார்கள் போன்றவர்கள் மண்டபத்தின் நட்ட நடுவாக இடம் பிடித்துக்கொண்டார்கள். நான் மட்டும் மிஞ்சிப் போயிருந்தேன். நான் போய் அந்தப் 'பயங்கர' குற்றவாளிகள் இரண்டு பேருடனும் உட்கார்ந்து கொண்டேன். இயேசுக் கிறிஸ்துவை அவர்கள் சிலுவையில் அறைந்தபோது இடமும் வலமுமாக இரண்டு கள்வர்களையும் சேர்த்துத்தான் அறைந்தார்களாம். ஆனால் இவர்கள் இருவரும் கொலைக் குற்றவாளிகள்.

**கனெக்ஸ்**

மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு வந்த சில நாட்களிலேயே பக்கிரி பழைய மாதிரி மிக்க நிதானத்துடன் தனது அரசியல் பிரச்சாரப் பணியைச் சிறைக்குள் தொடங்கியிருந்தார். பக்கிரியின் உண்மையான பெயர் கனகலிங்கம். அவர் ஒரு காலத்தில் 'கனெக்ஸ் வாத்தி' என்ற பெயரில் யாழ் நகரில் பிரபலமான ரியூட்டரிகளில் இங்கிலிஸ் மாஸ்டராகக் கொடி கட்டிப் பறந்தவர். அவர் சிறைச்சாலைக்குள் ஆர்வமுள்ளவர்கள், ஆர்வம் இல்லாதவர்கள் எல்லோரையும் கலைத்துப் பிடித்துவைத்து ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தார். அதே நேரத்தில் தனக்குச் சிங்களம் கற்றுக் கொடுக்குமாறு என்னிடமும் கேட்டிருந்தார். அவருடைய இயக்கம் அந்த செக்கனில் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய விடுதலைப்படையாக விரிந்திருந்தது. அவர்களுக்கு இந்தியாவில் உத்திர பிரதேசத்திலும் தமிழ் நாட்டிலும் பயிற்சி முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்த விடுதலை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களில் பக்கிரியும் ஒருவர். ஒரு இரகசியக் கூட்டத்தில் இயக்கத்தின் பெயர், இலச்சினை, கொள்கை, கோட்பாடு எல்லாம்



தீர்மானிக்கப்பட்ட இரவே பக்கிரி தீர்மானங்களோடு தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் படகில் வரும்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

**சந்தேகம்**

மட்டக்களப்புச் சிறையில் தன்னுடைய இயக்கக்காரர்களோடு அரசியல் பேசியதுடன் பக்கிரி நின்றாரில்லை. அவர் தனது பெரும் வாசிப்பின் துணையோடும் நா வன்மையோடும் மற்றைய இயக்கங்களைச் சார்ந்தவர்களையும் 'வென்றெடுக்க' முயற்சித்தார். இரண்டு மூன்று இளைஞர்கள் பக்கிரியின் பக்கம் சாய ஆரம்பித்தபோது அந்த இளைஞர்களின் இயக்கத்தைச் சேர்ந்த மற்றவர்கள் 'பக்கிரி தங்கள் இயக்கத்துக்குள் குழப்பம் விளைவிப்பதாக'க் கூறி வெளியே போனவுடன் பக்கிரியைத் தாங்கள் கவனித்துக்கொள்வதாக கூறி மிரட்டவும் செய்தார்கள். ஆனால் பக்கிரி என்னோடு தன்னுடைய கொள்கைகள், கோட்பாடுகள் திட்டங்கள் குறித்து மற்றவர்களிடம் உரையாடுவதுபோல ஆழமாக உரையாடினாரில்லை. அவருக்கு என் மீது ஒரு சந்தேகம் இருந்து கொண்டேயிருந்தது என்று தான் நினைக்கிறேன். பக்கிரியையும் குறை சொல்ல முடியாது. எனக்கே என் மீது பல சந்தேகங்கள் அப்போது ஏற்பட்டிருந்தன. எனினும் வெளியே போனவுடன் பக்கிரியின் இயக்கத்துடனும் நான் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது என்று தீர்மானித்தேன்.

**மகாதேவா**

இன்னொரு நாள் பக்கிரிக்கும் அவரின் இயக்கத்தின் இன்னொரு முக்கியமானவரான மகாதேவாவுக்கும் சண்டை மூண்டு அவர்கள் கதைவெளிப்படலானார்கள். மகாதேவா, தங்களுடைய இயக்கம் இடதுசாரி அரசியலை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் பக்கிரி இயக்கம் தொடங்கப்பட்ட நாளன்றே மறியலுக்கு வந்துவிட்டதால் அவருக்கு இயக்கத்தின் தற்போதைய நிலைப்பாட்டைக் குறித்து எதுவும் தெரியவில்லை என்றும் கூறினார். அதற்கு மறுமொழியாகப் பக்கிரி, இயக்கத்தின் நடவடிக்கைகள் குறித்து சில கேள்விகளை மகாதேவாவிடம் கேட்டார். மகாதேவாவின் பதில்களில் இருந்தே 'பொயின்ற்ஸ்' பிடித்து தங்களுடைய இயக்கம் ஒரு இடதுசாரிக் கொள்கையுடைய இயக்கம் தான் என்பதைப் பக்கிரி நிறுவிக் காட்டினார். மகாதேவா கொஞ்சம் குழம்பிப் போய் நாடியை நாடியைச் சொறிந்து கொண்டார். பின் 'எங்களுடைய இயக்கம் இடதுசாரிப்பாதையில் போனால் வெளியே போனவுடன் முதல் வேலையாக நான் செயலதிபரைச் சுடுவேன்' என்றார். ஆக எல்லோரும் வெளியே போவதைப் பற்றி பேச ஆரம்பித்திருந்தோம்.

**குணசேகரன்**

வெளியில் குணசேகரனிடமிருந்து 'சிறையுடைப்புக்குத் தயாராகுங்கள்' என்ற செய்தி ஒரு இளம் சிறைக் காவலாளி மூலம் எங்களுக்கு வந்து சேர்ந்தது. நாங்கள் மட்டக்களப்புச் சிறையை உடைத்துத் தப்பிச் செல்லத் தயாரானோம். செய்தி கிடைத்த நாள் முதல் நான் ஒரு கண் தூங்கினேனில்லை. நாங்கள் கவனமாகத் திட்டமிட ஆரம்பித்தோம்.

முதலாவது வேலையாக நாங்கள் சிறையுடைக்கப் போடும் திட்டம் எக்காரணம் கொண்டும் சிறையிலிருக்கும் மூன்று பாதிரியார்களுக்கும் தெரியக்கூடாது என்று முடிவு செய்தோம். அவர்கள் கீழ்ப்படிவு, ஒறுத்தல், நீதி, நேர்மை என்று பேசிக்கொண்டு ஏதாவது கூழாம்பாணி வேலை பார்த்து விடுவார்கள். எங்களது சந்தேகம் மிகச் சரியானது தான் என்பது நாங்கள் சிறையை உடைத்தபோது நிரூபிக்கப்பட்டது. அடுத்ததாக எங்களுடன் அடைக்கப்பட்டிருக்கும் இரண்டு கொலைகாரர்களுக்கும் இந்தத் திட்டம் தெரியக் கூடாது என்று முடிவெடுத்தோம். கொலைகாரர்கள் எங்கள் சிறையுடைப்புத் திட்டத்தை சிறையதிகாரிகளுக்கு அறிவித்து விடக்கூடும். அப்போதெல்லாம் நாங்கள் எல்லோரும் அந்த இரண்டு பேரையும் குறித்து எமக்குள் பேசிக்கொண்டபோது 'கொலைகாரர்கள்' என்றே பேசிக்கொண்டோம். அவ்வாறு பேசிக்கொண்ட எங்களில் அநேகமாக ஒவ்வொருவருக்கும் கொலையுடனும் கொலை முயற்சிகளுடனும் சம்பந்தம் இருக்கிறது. ஆனால் நாங்கள் அந்தக் கொலைகாரர்களின் மீது கொண்ட சந்தேகம் சரியானது அல்ல என்பதை அவர்கள் பின்பு நிரூபித்தார்கள்.

**ஜிம்கெலி**

எங்களில் ஜிம்கெலி மட்டும் சிறையுடைப்புத் திட்டத்தில் எங்களோடு சேர்ந்து கொள்வதற்கு மறுத்துவிட்டான். ஜிம்கெலி சுருட்டை முடியும் கன்ன மீசையும் வைத்த ஓங்கு தாங்கான கரிய நிறத்தவன். ஜிம்கெலி வித்தைக்காரன்! மல்யுத்தம், குத்துச்சண்டை, தட்டுமறிப்பு, மார்பிலே ட்ரக்டர் ஏற்றுவது, முடியிலே லொறியைக் கட்டி இழுப்பது என்று விளையாட்டுக்கள் தெரிந்தவனாம். கடல்நீரின் மீது சப்பாணி கட்டி அமர்ந்திருப்பானாம். அநுராதபுரம் சிறையிலிருந்தும் நாலாம் மாடியிலிருந்தும் தப்பித்துச் சென்றவன். அவன் 'பல எலி கூடினால் புற்றெடுக்காது' என்று அசட்டையாகக் கூறினான். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்று பக்கிரி சீரியஸாகக் கூறிப்பார்த்தார். ஜிம்கெலி அதைப் பொருட்படுத்தவில்லை.



**வேலைகள்**

இப்போது சிறையுடைப்புக்கான வேலைகள் எங்களிடையே பகிரப்பட்டன. வெளியே குணசேகரனோடு விடாத தொடர்புகளை ஏற்படுத்திவைத்திருப்பது, மற்றைய இயக்கத்துத் தலைமைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது, வெளியே இருந்து உள்ளே ஆயுதங்களைத் தருவித்து மறைத்துவைப்பது, கயிறும் பிளாஸ்டர்களும் தருவித்துக் கொள்வது, சிறைச்சாலையின் வரைபடத்தைச் சிறை அலுவலகத்திலிருந்து திருடி வைத்துக்கொள்வது, சிறைக்காவலர்களுடன் மெல்லப் பேசி அவர்களை எங்கள் திட்டத்துக்குச் சாதகமாய் வளைத்துக்கொள்வது என்று வேலைகள் பிரிக்கப்பட்டுப் பொருத்தமானவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. எனக்குக் கொடுக்கப்பட்ட வேலை தான் மிகவும் சுவாரசியமானது.

**கண்காணிப்பு**

ஜிம்கெலி எங்களுடன் சேராமல் தனியனாகத் திரிந்தான். காலையில் வெளியே நடப்பதற்காக நாங்கள் காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டபோது ஜிம்கெலி தனியே மதிற்சுவர் ஓரங்களில் அண்ணாந்து பார்த்துக்கொண்டு திரிந்தான். அவன் பகல் முழுவதும் தூங்கினான். எனவே அவன் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருக்கிறானோ?என்று நாங்கள் அய்மிச்சப்பட்டோம். அவன் சிறையிலிருந்து தனியனாகத் தப்பிச் செல்ல முயற்சிக்கிறான் என்ற சந்தேகம் எங்களுக்கு இருந்துகொண்டேயிருந்தது. அப்படி அவன் சிறையிலிருந்து தனியாகத் தப்பித்துச் சென்றால் அதன் பின்பு சிறைச்சாலையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு விடும். எங்களின் சிறையுடைப்புத் திட்டமும் நாசமாய்ப் போய்விடும். எனவே நாங்கள் தப்புகிறமோ இல்லையோ ஜிம்கெலியைத் தப்பிச் செல்லவிடுவதில்லை என்று நாங்கள் தீர்மானித்தோம். ஆகவே எங்கள் சிறையுடைப்புத் திட்டத்தில் வேலைகள் பகிரப்பட்ட போது எனக்குக் கொடுக்கப்பட்ட வேலை, ஜிம்கெலி சிறையிலிருந்து தப்பியோடாமல் பார்த்துக் கொள்வது. நான் நடப்பதற்காக வெளியே அழைத்துச் செல்லப்பட்ட பொழுதெல்லாம் ஜிம்கெலிக்குப் பின்னாலேயே திரிந்தேன். அவன் கக்கூசுக்குப் போனால் நான் ஓரமாக நின்று அவனைக் கவனித்தேன். சிறைச்சாலைகளில் கக்கூசுக்குக் கதவு இருக்காது. அவன் குளித்தால் நானும் குளித்தேன். நானும் இரவு முழுவதும் விழித்திருந்து பகலில் தூங்கினேன்.

கோணேஸ்வரன் என்ற இளம் வயது சிறைக்காவலாளி

**செப்டம்பர் பதினொன்று**

எங்களுக்கு மிகப் பெரிய உதவிகளைச் செய்தான். சிறை உடைக்கப்பட்டபோது அவனும் அரசியல்கைதிகளுடன் வெளியேறி பின் தமிழ்நாட்டுக்குத் தப்பியோடி அங்கே இயக்கத்தில் சேர்ந்துகொண்டான். கோணேஸ்வரன் மூலம் இரண்டு பொயின்ற் 38 சூழல் துப்பாக்கிகளைக் குணசேகரன் உள்ளே அனுப்பினார். அவை பத்திரமாக மண்டபத்தில் பதுக்கி வைக்கப்பட்டன. ரப்பர் செருப்புகளை வெட்டி சில போலிக் கைத்துப்பாக்கிகளைச் செய்தோம். மாணிக்க தாசன் வேலைகாரன். அவர் மரப்பலகைகளில் ஒரு டம்மி இயந்திர துப்பாக்கியைச் சரிக்கட்டினார். பிளாஸ்டர்கள் சிறை வைத்திய சாலையிலிருந்து திருடப்பட்டது. சிறையின் தச்சுத் தொழிற்சாலையில் இருந்து சுத்தியல், குறடுகள், அல வாங்குகள் போன்றவற்றைக் கடத்தி வந்து பதுக்கி வைத்துக் கொண்டோம். சிறையுடைப்பின் போது ஏதாவது எதிர்பாராத பிசகுகள் நிகழ்ந்து ஆயுதப்படையினர் சிறைக்குள் நுழையும் நிலை ஏற்பட்டால் ஆயுதப்படையை நாங்கள் எப்படி எதிர் கொள்வது? எந்தெந்த ஆயுதங்களுடன் யார் எங்கே நிலை எடுத்து நிற்பது? எப்போது தாக்குதலைத் தொடங்குவது? போன்ற இராணுவ நுணுக்கங்கள் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன. துப்பாக்கிகளைக் கண்டதும் ஜிம்கெலி மனம் மாறிவிட்டான். அவனுக்குச் சிறையுடைப்புத் திட்டத்தில் நம்பிக்கை ஏற்பட்டது. அவன் தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கு வெறும் கைகளாலும் கால்களாலும் சண்டை போடுவதிலுள்ள அடிப்படைத் தந்திரங்களைப் பயிற்றுவித்தான். நாங்கள் ஏதோ செய்யப்போகிறோம் என்பது பாதிரியார்களுக்குப் புரிந்திருக்கவேண்டும். ஆனாலும் அவர்கள் அமைதியாக வேடிக்கை பார்த்தார்கள். சிறையுடைப்புக்கு நாள் குறிக்கப்பட்டது. செப்டம்பர் பதினொன்று.

**மதிலுகள்**

பதினோராம் திகதி இரவு ஏழு மணிக்குச் செயலில் இறங்குவதாகத் திட்டம். நாங்கள் சிறையை உடைத்து வெளியேறும்போது வெளியே நாங்கள் தப்பிச் செல்வதற்கான வாகனங்களுடன் குணசேகரனின் அணி காத்துக்கொண்டிருக்கும். மாலை ஆறு மணியளவில் குணசேகரனிடமிருந்து 'இன்று வேண்டாம்' என்ற தகவல் கோணேஸ்வரன் மூலம் எங்களுக்கு வந்துசேர்ந்தது. அன்று குன்ஸி-குணசேகரனை குன்ஸி என்றும் அழைப்பதுண்டு- ஏன் அப்படி ஒரு செய்தியை அனுப்பினார் என்பதை நான் பின்பு தெரிந்து கொண்டேன். எங்கள் சிறையின் பின்புறம் மதிலுகள் உண்டு. மதிலுகளுக்கு அந்தப் பக்கம் குடியிருப்பு வீடுகள். எங்களிடையே இருந்த சில வைக்கம் முகமது பஷீர்கள் 'மதிலுகளுக்கு அப்பால் இருந்த நாராயணிகளிடம் பிரியாவிடை கேட்டுப் பெற்றிருக்கிறார்கள். நாராயணிகள் மூலம் வெளியே செய்தி பரவி பதற்றம் தொற்றியிருக்கிறது.

ம்.

**சண்முகநாதன்**

கனகரட்ணம் சண்முகநாதன் என்ற மட்டக் களப்புத் தமிழர் சிற்றாண்டி எனும் ஊரைச் சேர்ந்தவர். நோயாளியான அவரது மனைவிக்கு உணவும் மருந்தும் இரண்டு வயதேயான அவரது மகளுக்குப் பாலும் வாங்க சண்முகநாதன் பணம் தேடி அலைந்தார். கடைசியாக நகரத்தில் 'மில்'வேலைக்கு கூலிக்கு ஆள் எடுப்பதற்காகக் கேள்விப்பட்டு அவர் வேலை தேடிப் புறப்பட்டுச் சென்றபோது சிற்றாண்டி எல்லையில் வைத்து சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் சண்முகநாதன் கைது செய்யப்பட்டார். அப்போது வருடம் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தாறாய் இருந்தது. கைது செய்யப்படும் போது சண்முகநாதனுக்கு வயது இருபத்தியிரண்டு.

**இலக்கு**

அன்று சண்முகநாதனுடன் மேலும் அறுபத்தியிரண்டு தமிழர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இராணுவ வாகனங்களிலே காட்டுக்குள் அமைந்திருந்த விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கி சுடும் பயிற்சிமுகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். மறுநாள் அதிகாலையில் அதிரடிப் படையினருக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சி வழங்கப்பட்ட போது அதுவரை இலக்குகளுக்காக உபயோகிக்கப்பட்டுவந்த வைக்கோல் பொம்மைகள் அகற்றப்பட்டு பொம்மைகளின் நிலைகளில் சண்முகநாதனும் மற்றைய கைதிகளும் நிறுத்தப்பட்டார்கள். அன்றைய காலைப் பயிற்சியில் நாற்பத்தியிரண்டு அதிரடிப் படைவீரர்கள் இலக்குகளைத் துல்லியமாகச் சுட்டுத் தள்ளினார்கள். இருபத்தொரு படை வீரர்கள் இலக்குத் தவறிச் சுட்டார்கள். சண்முகநாதனுக்குக் காலிலே வெடி விழுந்தது. இன்னும் இருபது கைதிகள் குற்றுயிரும் குலைஉயிருமாய்க் கிடந்தார்கள். காயமுற்றவர்களுக்கு கொழும்பு வைத்தியசாலையில் கட்டில்களோடு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டது.

வைத்தியசாலையிலிருந்து நேராக சண்முகநாதன் இராணுவத் தடுப்புமுகாமுக்கு அனுப்பப்பட்டார். அவர் அனுப்பப்பட்ட இராணுவ முகாம் அவிசாவளைப் பகுதியில் குரிவிட்ட என்னும் ஊரில் அமைக்கப்பட்டிருந்தது. அந்தத்



**குரிவிட்ட**

தடுப்பு முகாமில் சண்முகநாதன் இரண்டு வருடங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்தத் தருணங்களில் தன்னுடைய நிலைமையைத் தன் குடும்பத்தாருக்குச் சொல்லிவிட சண்முகநாதனுக்கு எந்த வழியும் திறக்கவில்லை. சண்முகநாதனைத் தேடிக் கண்டுபிடிக்க அவரின் குடும்பத்தாலும் முடியவில்லை. ஒரு வருடம் கழித்து, சண்முகநாதனின் குடும்பம் செத்தவீடு கொண்டாடிற்று. சிற்றாண்டியில் இழவு நடந்துகொண்டிருந்தபோது கொழும்பில் இலங்கை இந்திய ஒப்பந்தம் நடந்தது. ஒப்பந்தத்தின் பின்னால் பல அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்ட போதும் யாருக்கும் தெரியாமல் யாருடைய கவனத்தையும் பெறாமல் சண்முகநாதன் குரிவிட்ட தடுப்பு முகாமிலேயே இருந்தார். அடுத்த வருடம் அவர் போகம்பர பெருஞ்சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

**18 வருடங்கள்**

போகம்பர சிறையில் ஒன்றல்ல இரண்டல்ல, பதினாறு வருடங்கள் சண்முகநாதன் பிரேதமாய்க் கிடந்தார். அவருடைய எல்லாப் பற்களும் குறடுகளால் பிடுங்கப்பட்டன. அவரின் முதுகு கோடாரியால் பிளக்கப்பட்டது. அந்த நிணமும் தசையுமான உடல் கிடங்கில் கந்தகத்தைக் கொட்டி எரித்தார்கள். அவரின் மார்புக் காம்புகளில் மின்அதிர்வு செலுத்தப்பட்டு பதினெட்டு வருடங்களாக வெளியில் எவருடனும் எந்தவித தொடர்புகளும் இல்லாதிருந்தவரிடம் 'பிரபாகரன் எங்கே ஒளிந்திருக்கிறான்?' என்ற பைத்தியக்காரத்தனமான கேள்வி அதிகாரிகளால் கேட்கப்பட்டபோது வேலுப்பிள்ளை பிரபாகரன் வன்னியில் சர்வதேச பத்திரிக்கையாளர்கள் மாநாட்டை நடத்திக்கொண்டிருந்தார்.

சண்முகநாதன் சிறையதிகாரிகளால் மிருகத்தனமாக வேலை வாங்கப்பட்டார். பகல் முழுவதும் சுத்தம் செய்தல், உருளைக்கிழங்கு, கரட், போஞ்சி பயிரிடுதல், சமையல் போன்ற வேலைகளைச் செய்ய அவர் கட்டளையிடப்பட்டார். காலையில் ஒரு துண்டுப் பாணும் சீனியில்லாத கறுப்புத்தேனீரும் மதியம் நூறு கிராம் சோறும் ஒரு பூசணிக்காய்த் துண்டு அல்லது சிறிதளவு கோவா மட்டுமே அவருக்கு உணவாக வழங்கப்பட்டது. சண்முகநாதன் சிறைப்பிடிக்கப்பட்ட நாளிலிருந்து அவருக்கு முகச்சவரம் செய்ய வழி ஏதும் இருக்கவில்லை. அவரின் தாடி இருப்புவரை படர்ந்து கிடந்தது.

சிறைவளாகத்துள் இருந்த ஓர் சிறையதிகாரியின்

**நோனா**

வீட்டைச் சுத்தம் செய்ய சண்முகநாதன் போவதுண்டு. அந்தச் சிறையதிகாரியின் நோனா சண்முகநாதனுக்கு இரங்கினாள். அவளின் உதவியோடு சண்முகநாதன் இரண்டாயிரத்து நான்காம் வருடம் ஏப்ரலில் ஒரு மழைக்கால இரவில் போகம்பர சிறையிலிருந்து தப்பிச் சென்றார். காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்துக் கடைசியாக சண்முகநாதன் தனது ஊருக்கு வந்து சேர்ந்தபோது அவர் தனது வயதை மறந்துபோயிருந்தார். சண்முகநாதனின் மனைவி இறந்து போயிருந்தார். இரண்டு வயதில் அவர் பிரிந்து சென்ற அவரது மகளுக்கு இப்போது நான்கு வயதில் ஒரு குழந்தையிருந்தது.

**உளவாளி**

தப்பி வந்தவரின் கதையை இயக்கம் முதலில் நம்ப மறுத்தது. அவரை அரசாங்க உளவாளி அல்லது மாற்று இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று இயக்கம் சந்தேகமுற்றது. தன்னை விசாரணை செய்த இயக்கக்காரர்கள் நால்வரில் எவருமே பதினெட்டு வருடங்களுக்கு முன்பு தான் விசேட அதிரடிப் படையால் கைது செய்யப்பட்டபோது பிறந்தேயிருக்க மாட்டார்கள் என்று சண்முகநாதன் அடித்துச் சொல்கிறார். இவர் சிறையிலிருந்த முழுக் காலங்களிலும் எந்த மனிதஉரிமை இயக்கமோ செஞ்சிலுவைச் சங்கமோ அரசியல் கட்சியினரோ இவரைச் சந்திக்கவில்லை என்றும் கூறுகிறார். இவரைப் போலவே வந்தாறுமூலை, கிரான், முறக்கொட்டாஞ்சேனை, சந்திவெளி பகுதிகளைச் சேர்ந்த இருபது தமிழர்கள் வழக்குகள், விசாரணைகள் ஏதுமின்றி போகம்பர சிறையில் அநாதவராய்க் கிடக்கிறார்கள் என்றும் சண்முகநாதன் கூறுகிறார்.

சண்முகநாதனின் உடல் சிதைக்கப்பட்டு விட்டது. அவர் சற்று மனச்சமநிலை சரிந்தவராகவும் காணப்படுகிறார். தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நட்டஈடாக ஒரு வேலையும் வீடும் வழங்குமாறு இந்த அப்பாவி தொலைக்காட்சிப் பேட்டிகளில் அரசாங்கத்தைக் கோருகிறார். ஆனால் இந்த நட்டஈட்டைப் பெறுவதிலுள்ள ஒரு நுணுக்கமான சட்டச் சிக்கலையும் அவரே விபரிக்கிறார்.

அதாவது சண்முகநாதன் கைது செய்யப்பட்ட மறு வருடமே சண்முகநாதனின் மரணச்சான்றிதழ் கிராம நிர்வாக அதிகாரியால் சண்முகநாதனின் மனைவிக்கு வழங்கப் பட்டுள்ளது. இப்போது உயிரோடு மீண்டு வந்த சண்முகநாதன் கிராம நிர்வாகஅதிகாரியைச் சந்தித்து தனக்கு



**மரணச் சான்றிதழ்**

வழங்கப்பட்டுள்ள மரணச் சான்றிதழை அரசாங்கம் மீளப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டபோது மரணச் சான்றிதழை மீளப் பெற்றுக்கொள்ள தனக்கு அதிகாரமில்லை எனச் சொல்லி கிராம நிர்வாகஅதிகாரி மறுத்து விட்டார். ஆக அரசு ஆவணங்களின் படி சண்முகநாதன் இன்றும் இறந்துபோனவராகவே கருதப்படுவார். கனகரட்ணம் சண்முகநாதன் கூறுகிறார்: 'எனவே எனது இப்போதைய கவலையெல்லாம் நான் உயிருடன் இருப்பதை எப்படியாவது நான் அரசாங்கத்துக்கு நிரூபித்துக் காட்டவேண்டும் என்பதே

ம்

மறுபடியும் சிறையுடைப்புக்கு நாள் குறிக்கப்பட்டது. செப்டம்பர் மாதம் இருபத்து மூன்றாம் திகதி. இப்போது
**23** திட்டம் இன்னும் படு துல்லியமாக வகுக்கப்பட்டது.
**செப்டம்பர்** வெளியே தோழர்கள் ஆயுதங்களுடன் காத்திருப்பார்கள்.
**1983** சரியாக இரவு ஏழு மணிக்கு எங்கள் மண்டபத்தில் தேனீர் வழங்கப்படும். அப்போது நாங்கள் தாக்குதலை ஆரம்பிப்போம். அதே நேரத்தில் வெளியிலிருக்கும் தோழர்கள் சிறைச்சலையின் பிரதான வாசலைத் தகர்த்துக்கொண்டு உள்ளே வருவார்கள். உள்ளே தாக்குதலை ஆரம்பிக்கும் பொறுப்பு ஜிம்கெலிக்கும் மகாதேவாவுக்கும்.

இரவு ஏழு மணிக்குத் தேனீர் அண்டாவைத் தூக்கிக்கொண்டு இரண்டு சிறைக்காவலர்கள் மாடிப் படிகளில் ஏறிவந்தார்கள். அவர்கள் மண்டபத்தின் கம்பிக் கதவைத் திறந்து உள்ளே தேநீர் அண்டாவைத் தள்ளினார்
**7 மணி 00** கள். சொல்லி வைத்த ஒரே நேரத்தில் ஜிம்கெலியும் மகாதேவாவும் இரண்டு சிறைக்காவலர்களின் கைகளையும் பிடித்துச் சுழற்றி அவர்களை ஈரச் சாக்கால் ஆட்டை அமுக்குவது போல் அமுக்கி மண்டபத்துக்குள் உருட்டி விட்டார்கள். திகைத்துப்போன சிறைக்காவலர்கள் ஓலம் எழுப்ப வாயைத் திறக்கும்போது தான் தமது வாய்களில் பிளாஸ்டர்கள் ஒட்டப்பட்டிருப்பதை உணர்ந்திருப்பார்கள். அவர்கள் கைகால்களை உதற முற்பட்டபோதுதான் தங்களது கைகளும் கால்களும் கயிறுகளால் கட்டப்பட்டிருப்பதை அறிந்திருப்பார்கள். எல்லாமே மின்னல் வெட்டும் நேரத்தில் முடிந்திருந்தது.

சிறைக்காவலர்களிடமிருந்து சாவிக்கோர்வைகள் எங்களால் பறித்தெடுக்கப்பட்டன. வெளியே தாக்குதல் தொடங்கும் தருணத்தை எதிர்பார்த்து முதலாவது வெடிச் சத்தத்துக்காகக் காத்திருந்தோம். எந்த அசுமாத்தமும் இல்லை. அப்படியே நிசப்தத்திலும் இரகசியத்திலும் அய்ந்து நிமிடங்கள் பறந்தன. இனிப் பொறுப்பதில் பிரயோசனம்
**7 மணி 05** இல்லை. துப்பாக்கிகள் வைத்திருந்த தோழர்கள் படிகளில் ஓசைப்படாமல் இறங்கினார்கள். அவர்களின் பின்னே டம்மி



துப்பாக்கிகள் வரிசையாக இறங்கின. டம்மி துப்பாக்கிகளின் பின்னே நாங்கள் சுத்தியல்கள் அலவாங்குகளோடு இறங்கினோம். சிங்கராஜா பாதிரியாரும் சவரிமுத்து பாதிரியாரும் எங்களோடு வெளியேற மறுத்துவிட்டார்கள். அவர்கள் இருவரும் தங்களைக் குற்றமற்றவர்கள் என நீதிமன்றத்தில் நிரூபித்துவிட்டுச் சட்டப்படிதான் வெளியே வருவார்களாம். ஆமென்! சின்னராசா பாதிரியார் எங்களையொத்த பொடியன். அவர் எங்களுடன் கீழே இறங்கினார். அவரும் தனது கைகளில் பொல்லோ அலவாங்கோ வைத்திருந்ததாக ஞாபகம்.

படிகளின் கீழே கீழ்த்தளத்தில் நின்றிருந்த சிறைக்காவலன் துப்பாக்கிமுனையில் நகர்த்தப்பட்டான். அவன் தன்னிடமிருந்த சாவியால் கட்டடத்தின் பிரதான கதவைத் திறக்கலானான். அப்போது கீழ்த்தளத்தில் அடைக்கப்பட்டிருந்த
சாதாரணக் கைதிகள் தங்களையும் திறந்துவிடுமாறு கெஞ்சிக் **7 மணி 08**
கூக்குரலிட்டார்கள். அந்தக் கூக்குரல் சிறைவளாகம் முழுவதும் கேட்டது. முதலாவது சைரன் ஒலித்தது. நாங்கள் தப்பிச் சென்றபின் ஆயுதப் படையினர் வந்து இவர்களைத் தான் அடித்து முறிப்பார்கள். அதைச் சொல்லியே அவர்கள் கூக்குரல் எழுப்பினர். கட்டடத்தின் பிரதான கதவைத் திறந்துவிட்ட சிறைக்காவலன் பின் திரும்பிவந்து சாதாரணக் கைதிகளின் செல்களையும் திறந்துவிட்டான். கூச்சலிட்டுக் கொண்டே அலை அலையாகக் கைதிகள் வெளியே வந்தனர். இருட்டுக்குள் வெள்ளைப் புள்ளிகளாக அவர்கள் நான்கு திசைகளிலும் பரவினர்.

இப்போது நாங்கள் சிறை மதில்களைத் தாண்டியாக வேண்டும். வெளியே இருந்து நாங்கள் எதிர்பார்த்த 'சப்போர்ட்' அடி கிடைக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்திருந்த ஆயுதங்கள் அவர்களுக்கு வந்து சேரவில்லை என்பதைப் பின்பு அறிந்துகொண்டேன். சிறைக்காவலர்கள் கூட ஒரு சிறையுடைப்பு நிகழ்ந்தால் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஏற்கனவே திட்டமிட்டுவைத்திருப்பார்கள் போலிருக்கிறது. அவர்கள் திக்குத்திசை தெரியாமல்
ஓடிப் பறிந்து விட்டார்கள். எங்கள் சிறையுடைப்புத் திட்டத் **7 மணி 09**
தில் பெண்கள் பகுதியில் சிறையிலிருந்த நிர்மலா அக்காவையும் சிறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு தோழரையும் மீட்பது குறித்தும் ஆலோசித்திருந்தோம். சிறை மருத்துவமனையில் இருந்த தோழரைக் கூட்டிக்கொண்டு வரும் பொறுப்பு என்னிடமும் பக்கிரியிடமும் கொடுக்கப்

பட்டிருந்தது. நான் காற்றைக் கிழித்துக்கொண்டு மருத்துவ மனையை நோக்கி ஓடினேன். என் பின்னால் கையில் அலவாங்கோடு தொந்தி குலுங்க பக்கிரி இளைக்க இளைக்க ஓடிவந்தார். மருத்துவமனையின் 'டூப்ளிகட்'சாவி எங்களிடம் ஏற்கனவே கோணேஸ்வரனால் கொடுக்கப்பட்டிருந்தது.

அதுவொரு மிகச் சிறிய மருத்துவமனை. அதன் வாசற் கதவு இரும்பினால் செய்யப்பட்ட கம்பிக்கதவு. அந்தக் கதவில் ஒரு பெரிய பூட்டு தொங்கிக்கிடந்தது. வாயில் காவலாளி கதவைப் பூட்டிவிட்டு ஓடித் தப்பியிருக்க வேண்டும். எங்களிடம் கொடுக்கப்பட்டிருந்த சாவி அந்தப் பூட்டுக்குப் பொருந்துவதாக இல்லை. பதற்றத்துடன் ஆள் மாறி ஆள் நானும் பக்கிரியும் அந்தப் பூட்டிற்குள் சாவியை நுழைக்க முயன்றோம். உறண்டல் பூட்டு திறக்க மறுத்தது. பக்கிரியின் கையிலிருந்த அலவாங்கை வாங்கி அதனால் அடித்துப் பூட்டை உடைக்க முயன்றேன். அலவாங்கு பூட்டில் பட்டு 'பம்' பண்ணியது. மருத்துவமனையிலிருந்த தோழர் சுவரைப் பிடித்தவாறே நொண்டி நொண்டி நடந்து வந்து கம்பிகளுக்கு அப்பால் நின்றார். அவரின் கையில் பிளாஸ்டிக் பை ஒன்றிருந்தது. அதற்குள் மருந்துமாத்திரைகள் இருந்திருக்க லாம். பூட்டு அசைவதாய் இல்லை. எனக்கு உடல் முழுவதும்
**7 மணி 20** வியர்த்து வடிந்தது. ஒவ்வொரு அலவாங்கு அடியும் பூட்டில் பட்டு எகிறும்போது என் உள்ளங் கைகள் எரிந்தன. பத்து நிமிடங்களுக்கு மேலாகியும் எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. அப்போது வெளியே சிறையின் பிரதான வாசல் பக்கத்தில் வாகனங்களின் வெளிச்சத்தை நாங்கள் பார்த்தோம். வெளிச்சத்திலிருந்து சடசடவென வெடியோசை கிளம்பிற்று. இராணுவத்தினர் வந்து விட்டார்கள் அந்தத் தோழர் கம்பிகளுக்கு அப்பால் அப்படியே நிலத்தில் குந்தினார். பின் தலையைத் தூக்கி 'போதும் நீங்களாவது தப்பிச் செல்லுங்கள்... நீங்களாவது தப்பிச் செல்லுங்கள்' என்று இரு தடவைகள் சொன்னார்.

நானும் பக்கிரியும் சிறைவளாகத்தின் பின்பக்கமாக ஓடினோம். சிறையின் முன்பக்கத்தில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டேயிருந்தன. ஓடிவரும் வேகத்தில் பக்கிரி இரண்டு தடவைகள் தடக்குண்டு நிலத்தில் மரமாய் விழுந்தார். அவரின் வலதுகால் பெருவிரல் கிழிந்து இரத்தம் வடிய வடிய அவர் ஓடி வந்தார். நாங்கள் பின்புற மதிலை அலவாங்கால் உடைத்தோம். என் வேகத்தைக் கண்டு



எனக்கே ஆச்சரியமாய் இருந்தது. முதலில் மதிலில் ஓர் **7மணி30**
துவாரம் போடுவதுதான் கடினமான வேலையாய் இருந்தது. மதிலில் துவாரம் விழுந்தவுடன் துவாரத்துள் அலவாங்கைச் செலுத்தி நானும் பக்கிரியுமாகத் தெண்டினோம். நான்கைந்து கற்களைப் பெயர்த்தெடுத்தோம். அந்தப் பொட்டுக்குள்ளால் நான் போய் விடலாம். பக்கிரியும் வருவதென்றால் இன்னும் நான்கைந்து கற்களைப் பெயர்த்தெடுக்க வேண்டும்.

நானும் பக்கிரியும் மதில் கண்டாயத்தால் புகுந்து வெளியே வந்தோம். பதுங்கிப் பதுங்கி இருளில் நடந்த போது சற்றுத் தூரத்தில் ஒழுங்கைக்குள் ஆள் நடமாட் டத்தை உணர்ந்தோம். மிகக் கவனமாக அந்த ஒழுங்கைக்குள் புகுந்தோம். பக்கிரி அலவாங்கைத் தயாராக வைத்திருந்தார். ஒழுங்கைக்குள் குணசேகரனின் ஆட்கள்தான் நின்றார்கள். 'திட்டமிட்டபடி ஏழு மணி பதினைந்து நிமிடத்துக்கு மீட்பு வாகனங்கள் கிளம்பிப் போய்விட்டன' என்று அவர்கள் சொன்னார்கள். 'எங்களால் திட்டமிட்டபடி சொன்ன நேரத்துக்கு முன்வாசலுக்குப் போக முடியவில்லை' என்று **தோணி**
அவர்கள் சொன்னதையே பக்கிரி திரும்பவும் ஆங்கிலத்தில் என்னிடம் சொன்னார். குணசேகரனின் ஆட்கள் எங்களை அழைத்துச் சென்று தோணியில் ஏற்றிவிட்டார்கள். தோணியில் இரண்டு நடுத்தர வயது மனிதர்கள் நிறை தண்ணியில் இருந்தார்கள். அவர்கள் தோணியைச் செலுத்தினார்கள். நான் அவர்களிடம் 'எங்களுடன் சிறையி லிருந்து தப்பிய மற்றவர்கள் எங்கே?' என்று கேட்டபோது அவர்கள் 'இந்த இயக்கப் பொடியள் இந்தப் பக்கமாய்ப் போனார்கள் அந்த இயக்கப் பொடியள் அந்தப் பக்கமாய்ப் போனார்கள்' என்று எல்லாப் பக்கமும் கைகளைக் காட்டினார்கள்.

நட்ட நடு ஆற்றில் தோணி மிதந்தபோது ஆற்றின் மீது ஹெலிகொப்டரிலிருந்து வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. ஆறு மின்னி ஒளிர்ந்தது. ஆறு மறுபடியும் இருண்டபோது நான் விடுதலையை அதன் முழு அர்த்தத்தோடு அனுபவித்தேன். நெஞ்சுக் காற்றுக்குள் நிம்மதியை நிரப்பிக் காற்றை நெஞ்சுக்குள்ளேயே நிறுத்திவைத்தேன். நிலவின் வெளிச்சத் **விடுதலை**
தீற்றலில் பக்கிரி புன்னகையோடு தோணியின் அணியத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்க்க முடிந்தது. நான் பக்கிரியின் அருகே போய் பக்கிரியின் கைகளைப் பற்றினேன். தோணி உலாஞ்சிற்று. பக்கிரி புன்னகைத்துக்கொண்டேயிருந்தார். ஒரு

கணத்தில் அவர் என் கைகளை மெள்ள அமுக்கிப் பிடித்தார், பின் கேட்டார்: 'சுவாமி உன்னால் அதைக் கேட்க முடிகிறதா?'

'எதை?'

'மீன் பாடுகிறது'.

நானும் புன்னகைத்தேன். மரண வீட்டின் இறுதிக் குறிப்பை தோஸ்தோயெவ்ஸ்கி இப்படி எழுதுவார்: 'ஆமாம் கடவுள் எங்களோடு இருக்கிறார். சுதந்திரம், புதிய வாழ்வு, புத்துணர்ச்சி, ஓ! அந்தத் தருணம் எவ்வளவு நேர்த்தியாக இருந்தது!'

ம்



**கரடிக் குகை**

அதிகாலையில் நானும் பக்கிரியும் எங்களைக் கூட்டி வந்தவர்களால் ஒரு குகைக்குள் தங்க வைக்கப்பட்டோம். அவர்கள் அந்தக் குகையின் பெயர் 'கரடிக்குகை' என்று சொன்னார்கள். இது எந்த நிலப்பகுதி என்று தெரியவில்லை. மலையா? காடா? நாடா? எதுவும் தெரியவில்லை. எனக்கு மட்டக்களப்புப் பிரதேசம் பற்றி எதுவும் தெரியாது. பக்கிரிக்கும் அதைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. நாங்கள் இருவரும் மாலை வரை அந்தக் குகைக்குள் பதுங்கிக் கிடந்தோம். மாலையில் இரண்டு புதிய இளைஞர்கள் சோறும் வகை வகையான கறிகளும் ஒரு சிறிய தயிர் முட்டியும் கொண்டுவந்தார்கள். சாப்பிட்டு முடிந்ததும் இருளுக்குள் எங்கள் பயணம் தொடர்ந்தது.

**கெட்டு மலை**

மட்டக்களப்பு முழுவதும் தப்பியோடிய கைதிகளை ஆயுதப்படையினர் தீவிரமாகத் தேடிவருவதாக அந்தப் புதிய தோழர்கள் சொன்னார்கள். நாங்கள் இரவுகள் முழுவதும் நடந்து பகல் வேளைகளில் வயல்களிலும் கிராமத்துக் குடிசைகளிலும் ஒளிந்திருந்தோம். சில பகுதிகளில் சைக்கிள்களில் எங்கள் பயணம் தொடர்ந்தது. எங்களோடு வந்தவர்களுக்கு அந்தப் பிரதேசங்கள் முழுவதும் தண்ணீர் பட்டபாடாய்த் தெரிந்திருந்தது. ஒவ்வொரு சிற்றூர்களிலும் ஒவ்வொரு சின்னக் கிராமங்களிலும் அவர்களுக்கு ஆள்கள் இருந்தார்கள். எங்கள் நீண்ட பயணங்களில் நாங்கள் கெட்டு மலை என்ற இடத்தில் பதுங்கியிருந்த இரவில் எங்களுக்குச் சில மீற்றர்கள் அருகிலேயே இராணுவத்தினரின் படையணி ஒன்று நகர்ந்துகொண்டிருந்ததை நாங்கள் கண்டோம்.

எங்கள் பயணம் மூதூரை நோக்கியதாக இருந்தது. மூதூர் பாராளுமன்ற உறுப்பினராய் இருந்த தங்கத்துரையின் வீட்டில் மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பிச் சென்ற அழகிரியும் வேறு சில தோழர்களும் பத்திரமாகத் தங்கியிருப்பதாக எங்களுக்குச் செய்தி கிடைத்தது. நாங்கள் அங்கே போய்ச் சேர்ந்துவிட்டால் அங்கிருந்து எங்களை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் செய்தி கிடைத்திருந்தது.

**முருகையா**

சில இரவுகளின் பின்னால் நாங்கள் தமிழ் சிங்கள எல்லைப்புறத்தில் உள்ள ஒரு சேனையைச் சென்றடைந்தோம். அந்தச் சேனை நிலத்தில் நாங்கள் சில துடிப்பான மனிதர்களைச் சந்தித்தோம். அங்கேதான் நான் முருகையாவைச் சந்தித்தேன். முருகையாவின் தலைமையில் அந்தக் கிராமத்தில் ஒரு இளைஞர்கள் குழு இருந்தது. அவர்கள் 'சொட்கன்' கட்டுத்துவக்கு போன்ற ஆயுதங்களை வைத்திருந்தார்கள். அவர்கள் தங்களின் நிலங்களைக் காப்பாற்றுவதற்காகத் தன்னெழுச்சியாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். 'இவர்கள்தான் சனநாயகப் புரட்சியின் முன்னணிப் படை' என்று பக்கிரியிடம் சொன்னேன். பக்கிரி நிதானமாக என் கருத்தை மறுத்தார். 'ஸ்தாபனமயமாகும் வரை இது வெறும் எல்லைச்சண்டை குறூப் தான்' என்றார். எனக்கு எரிச்சலாய்க் கிடந்தது. பக்கிரி தலையை மேலும் கீழும் அசைத்தவாறு சொன்னார்: 'வரலாற்றுக்குக் குறுக்குவழிகள் கிடையாது'.

எங்களைக் கரடிக் குகையிலிருந்து இந்தச் சேனை வரை கூட்டிவந்த தோழர்கள் எங்களை முருகையாவின் பொறுப்பில் விட்டுவிட்டுத் திரும்பிச் சென்றார்கள். முருகையாவின் சின்னஞ் சிறிய குடிசையில் நாங்கள் தங்கினோம். பக்கிரி சிறிது நோய்வாய்ப்பட்டிருந்தார். அவரின் காயம்பட்ட காலிலிருந்து நிணமும் சீழும் வடிந்துகொண்டேயிருந்தது. இரவுகளில் என்னையும் பக்கிரியையும் குடிசைக்குள் படுக்க வைத்துவிட்டு முருகையாவும் அவரது மனைவியும் கைக்குழந்தையும் வெளியே முற்றத்தில் தூங்கினார்கள்.

**சந்திரகலா**

முருகையாவின் மனைவியின் பெயர் சந்திரகலா. சிறையிலிருந்து வந்தவர்களுக்குப் பொரித்துக் கரித்து சமைத்துப்போட வேண்டும் என்று அவர் விருப்பப்பட்டதாகத் தெரிந்தது. அவர் விதம் விதமாக எங்களுக்குச் சமைத்துப் போட்டார். பக்கிரி சாப்பிடும் அழகை பார்க்கப் பார்க்க அவருக்கு ஒரே சிரிப்பாக இருந்தது. எங்களுக்கு விதம் விதமாகச் சமைத்துப்போடுவதற்காக நிச்சயமாக அவர்கள் சந்திரகலாவின் மூக்குமின்னியையோ, ஒரு மாட்டையோ விற்றிருக்க வேண்டும். 'மூதூருக்குப் போவதானால் நாங்கள் படு ஆபத்தான பல பிரதேசங்களைக் கடக்க வேண்டியிருக்கும். ஆயுதப் படையினரின் தேடுதல்வேட்டை பலமாக இருக்கிறது. பதற்றம் சற்றுத் தணிந்தவுடன் உங்களை மூதூருக்கு அனுப்ப நான் ஏற்பாடு செய்கிறேன்' என்று முருகையா எங்களிடம் சொன்னார்.



**அறிக்கை**

இன்னும் சில நாட்கள் கழிந்தன. மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பிச் சென்ற கைதிகள் இந்தியாவிலிருந்து மட்டக்களப்புச் சிறையுடைப்பைக் குறித்து ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கை பி.பி.சி. வானொலியில் வாசிக்கப்பட்டதை நாங்கள் கேட்டோம். அந்த அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து ஆயுதப்படையினரின் தேடுதல்வேட்டைகள் குறைந்துபோயின. நாங்கள் மூதூருக்குக் கிளம்புவதற்குப் பொருத்தமான நேரம் இதுவே. இங்கிருந்து ஒரு குறிப்பிட்ட எல்லைவரை காரில் போவதென்றும் அங்கே எங்களை மூதூருக்கு அழைத்துச் செல்ல இன்னொரு குழு காத்திருக்கும் என்றும் ஏற்பாடானது.

**கார்**

முருகையாவின் திட்டம் துல்லியமாய் இருந்தது. முதலில் அவர் எனக்கோ பக்கிரிக்கோ கார் ஓட்டத் தெரியுமா? என்று கேட்டார். எனக்கு ஓரளவு காரோட்டத் தெரியும். கலைச்செல்வனோடு திரிந்த நாட்களில் நான் வாகனம் செலுத்தப் பழகியிருந்தேன். கலைச்செல்வன் வீட்டில் நின்ற மைனர் காரில் கலைச்செல்வன் எனக்கு வாத்தியாராய் இருந்தான். முருகையா என்னைச் சில கிலோமீற்றர்கள் தள்ளியிருந்த சிற்றூருக்குக் கூட்டிச் சென்றார். அங்கிருந்த ஒரு வீட்டில் பேசி ஒரு கறுப்புநிற மைனர் காரை ஒழுங்கு செய்தார். அந்த வீட்டுப் பெரியவர் மிகுந்த மரியாதையுடன் எங்களுடன் பேசி காரின் சாவியை என்னிடம் தந்தார். நான் சில வருடங்களுக்குப் பின் கார் ஓட்டுகிறேன். சில நிமிடங்களிலேயே ஸ்ரேறிங் என் கைக்குப் படிந்தது. அதுவும் மைனர் இதுவும் மைனர். சேனையை நோக்கி நான் காரை ஓட்டிக்கொண்டிருக்கும் போது என் சாரதியத்தில் நான் முழுத் திருப்தி அடைந்தேன்.

**திட்டம்**

இதுதான் திட்டம். நான் வாடகைகாரின் சாரதியாய் நடிப்பது. காரின் பின் இருக்கையில் சந்திரகலாவும் பக்கிரியும் அமர்ந்திருப்பார்கள். அவர்கள் கணவன் மனைவியாக நடிப்பார்கள். சந்திரகலாவின் கைகளில் அவரின் கைக்குழந்தை இருக்கும். நாங்கள் போகவிருக்கும் குறிப்பிட்ட எல்லை வரை வீதியில் ஒரே ஒரு சோதனைச்சாவடிதான் இருக்கிறது. அநேகமான வேளைகளில் அந்தச் சோதனைச் சாவடியில் வாகனங்களை மறிப்பதில்லை. ஏதாவது பதற்றமான காலத்தில்தான் அங்கே வாகனங்களை மறித்துச் சோதனையிடுவார்கள். அப்படி எதிர்பாராத விதமாக வாகனத்தை பொலிசுக்காரன் மறித்தால் சந்திரகலா தன்

கையிலுள்ள குழந்தையைக் கிள்ளிவிடுவார். குழந்தை வீறிட்டு அழும். நாங்கள் ஆஸ்பத்திரிக்கு அவசரமாகப் போய்க் கொண்டிருப்பதாகச் சொல்லுவோம். எனக்குச் சிங்களம் பேசத் தெரிந்திருப்பதால் பொலிசுக்காரனோடு பேசுவதில் பிரச்சனை இருக்காது. அவன் ட்ரைவர் லைசன்ஸ் கேட்டால் அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் போவதால் எடுத்துவரத் தவறி விட்டேன் என்று மாய்மாலம் போட்டு பொலிசுக்காரனுக்குப் பத்து, இருபது ரூபா சந்தோசம் கொடுப்பது. நாங்கள் போக வேண்டிய பாதையைச் சந்திரகலா காட்டுவார். நாங்கள் காரை மூதூர் குழு காத்திருக்கும் இடத்திலேயே விட்டுவிட்டு மூதூருக்குச் செல்வது. அங்கிருந்து காரை திருப்பிக் கொண்டுவர முருகையா வேறு ஏற்பாடுகள் செய்வார்.

ஒரு அதிகாலையில் எங்கள் பயணம் தொடங்கியது. முருகையா எனது கையில் முந்நூறு ரூபாய்களை மடித்துக் கொடுத்தார். 'காலை எட்டுமணி அளவில் நீங்கள் மூதூர் குழு காத்திருக்கும் இடத்துக்குச் சென்று விடலாம்' என்று முருகையா சொன்னார். சேனையிலிருந்து கார் புறப்பட்டது. பின்இருக்கையில் பக்கிரி சந்திரகலாவுடன் பகிடி விட்டுக் கொண்டேவந்தார். சந்திரகலாவுக்கோ பக்கிரி வாயைத் திறந்தாலே சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. சேனையிலிருந்து புறப்பட்ட அரை மணிநேரத்தில் நாங்கள் தார் வீதியில் மிதந்தோம். அங்கிருந்த நாங்கள் போய்ச் சேரவிருக்கும் எல்லை வரை நகரங்கள் எதுவும் கிடையாதாம். இங்கிருந்து இருபது கிலோ மீற்றர்கள் தொலைவில் அந்தச் சோதனைச் சாவடி வருகிறதாம். நான் மிக அவதானமாக காரைச் செலுத்தினேன். அந்த அதிகாலையில் சாலை வெறிச்சோடிக்கிடந்தது.

**சோதனை**

'எதிரே அந்தச் சோதனைச்சாவடி வருகிறது' என்று சந்திரகலா சொன்னார். நான் உசாரானேன். 'நான் காரை நிறுத்தியவுடன் நீங்கள் குழந்தையைக் கிள்ளிவிடவேண்டும்' என்று நான் சந்திரகலாவுக்குத் திட்டத்தை ஞாபகப்படுத்தினேன். அதெல்லாம் நான் சரியாகச் செய்து விடுவேன் என்று சொல்லி சந்திரகலா சிரித்தார். நான் சற்றுத் தூரத்தில் இரண்டு காய்ந்த பொலிசுக்காரர்களை எதிர்பார்த்தேன்.

முருகையா சொன்ன குறிப்பின்படியே அங்கே இரண்டு பொலிசுக்காரர்கள் நிற்பது தெரிந்தது. நான் காரின் வேகத்தைக் குறைக்கலானேன். அப்போது நான் பாதையிலிருந்து விலகி, செடிகளின் மறைவில் ஒரு ஜீப் நின்றிருப்பதைக் கவனித்தேன். என் கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன.



**ஜீப்**

நாங்கள் வருவதைக் குறித்து இவர்களுக்குத் தகவல்கள் ஏதும் கிடைத்திருக்குமோ என்று எனக்குள் சந்தேகம் கிளைக்கவும் சோதனைச்சாவடியில் நின்றிருந்த ஒரு பொலிசுக்காரன் கையை நீட்டிக் காரை மறிக்கவும் சரியாய் இருந்தது. சாதாரணமாக பொலிசுக்காரர்கள் மறிக்க மாட்டார்கள் என்று முருகையா சொன்னது என் ஞாபகத்துக்கு வந்து அந்த ஞாபகம் என் கால்களில் இறங்கியது. சோதனைச்சாவடியை நான் அதிவேகத்தில் கடந்தேன். பின்இருக்கையில் குழந்தை வீறிட்டு அழ ஆரம்பித்தது. சாலையில் நின்றிருந்த பொலிசுக்காரன் துள்ளி வயலில் விழுந்தது காரின் பக்கவாட்டுக் கண்ணாடியில் தெரிந்தது.

பக்கிரி என் தோள்களில் ஓங்கி அடித்து 'டேய் மடையா, என்ன காரியம் செய்கிறாய்?' என்று கத்தினார் 'நீர் சும்மாய் இரும்' என்று நான் உறுமிவிட்டு காரின் வேகத்தை இன்னும் அதிகரித்தேன். நான் இன்னொரு தடவை யாரின் கையிலும் சிறைப்படத் தயாரில்லை. இதுதான் காரின் அதிகபட்ச வேகம். இதற்கு மேல் அதிகரிக்கமுடியாது. கார் அலைபாய்வதை என் கைகள் அறிந்தன. சில நிமிடங்களிலேயே காரின் இடது பக்கக் கண்ணாடியில் ஒரு ஜீப் தோன்றியது. 'இந்த ஓட்டைக்கார் இதற்கு மேல் ஓடப்போவதில்லை' என்று நான் சபித்தபோதே ஜீப் காரின் வலது பக்கக் கண்ணாடியில் ஓடிவந்தது. துப்பாக்கிச்சன்னம் ஒன்று காரின் பின் கண்ணாடியைத் துளைத்தபோது நான் காரை நிறுத்தி விட்டு கதவைத் திறந்து வயல்களுக்குள் இறங்கி ஓடலானேன். என்னைப் பொலிசார் துரத்திவருவது தெரிந்தது. என் தலைகளுக்கு மேலால் துப்பாக்கி வெடித்தபோது நான் கைகளை உயர்த்திய படியே வயலுக்குள் வீழ்ந்தேன்.

**சந்திரகலா இறந்தது**

பொலிசார் என்னை வீதிக்கு இழுத்துவந்த போதும் பக்கிரி காருக்குள்ளேயே ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தார். அவரின் அருகில் காரின் பின்இருக்கையில் சந்திரகலா இறந்துகிடந்தார். அந்தக் குழந்தை பச்சை இரத்தத்தை கைகளால் அளைந்துகொண்டிருந்தது.

ம்

நான் சரியாக ஒரு மாதம் கழித்து மீண்டும் மறியல் வீட்டில் வலது கையில் ஒரு அலுமினியத் தட்டுடனும் இடது கையில் இன்னொரு அலுமினியத் தட்டோடும் சோற்றுக்கு வரிசையில் நின்றேன். எங்களை மீண்டும் கைது செய்யும்போது பொலிசுக்காரர்கள் பக்கிரிக்கு அடித்த அடியில் பக்கிரியின் இரண்டு கைகளின் எலும்புகளும் பிசகிவிட்டன. நான் இடது கையில் வாங்கப்போகும் சோறு பக்கிரிக்கு. அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

**மூன்று வருடங்கள்**

காலையில் அவருக்கு நான்தான் பல் துலக்கி விடுவேன். அவர் மலம் கழித்ததும் அடி கழுவிவிடுவேன். முகம் கழுவி விட்டு அவருக்குச் சாப்பாடு ஊட்டி விடுவேன். ஏறக்குறைய ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் பக்கிரியால் கைகளை அசைக்கவே முடிந்தது. சென்ற தடவை நான் வெலிகட சிறையில் இருபத்தெட்டு நாட்கள் இருந்தேன். இந்தத் தடவை எனது சிறைவாழ்க்கை மூன்று வருடங்களாக நீண்டது. மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை பனைத்தீவிலிருந்து எனது தாயாரும் தகப்பனாரும் எனது இரு தங்கைகளும் என்னை வந்து பார்த்துப் போயினர். மரியாளுக்குப் புத்தி பேதலித்திருந்தது.

இப்போது எங்களுக்குத் தனி செல்கள் கிடையாது. ஒரு நீண்ட மண்டபத்தில் நாங்கள் நூறுபேர் வரை அடைக் கப்பட்டிருந்தோம். அதிகாலை அய்ந்து மணிக்கு எங்களைக் காவலர்கள் நித்திரைப்பாயில் எழுப்பி வரிசையில் நிற்கவிட்டு தலைகளை எண்ணுவார்கள். அதன்பின் ஒரு துண்டு அச்சுப் பாணும் தேங்காய்ச் சம்பலும் தேனீரும் ஒரு கட்டி வெல்ல மும் எங்களுக்கு வழங்கப்படும். காலை ஏழு மணிக்குப் பிரார்த்தனைகள் செய்வதற்காகக் காவலர்கள் எங்களை வெளியே அழைத்துச் செல்வார்கள். சிறைச் சாலையின்

**சத்தியப் பிரமாணம்**


பதினேழு அடிகள் உயர மதிலுக்கு முன்னால் நாங்கள் வரிசையில் நிறுத்தப்பட்டவுடன் பிரார்த்தனைகள் சுவரைப் பார்த்தபடி ஆரம்பிக்கும். சில கிறிஸ்தவர்கள் கைகளை விரித்து உரத்த குரலில் ஜெபிப்பார்கள். சில சைவக்காரர்கள் தலையில் குட்டி, தோப்புக்கரணங்கள் போடுவார்கள். முசுலீம்கள் அதிகாலையில் சிறைக்குள்ளேயே தொழுதுவிடு



வார்கள். நாங்கள் எழுபது பேர்கள் வரையில் தனியாக நிமிர்ந்து நிற்போம். இறந்து போன போராளிகளுக்கு வீர வணக்கம் செய்வோம். எங்களது உடல், பொருள் ஆவியைத் தமிழீழ விடுதலை இலட்சியத்திற்காக அர்ப்பணிப்பதாக நாள் தவறாமல் சத்தியப்பிரமாணங்களைச் செய்துகொண்டோம்.

அதன் பின் மாலை வரை நாங்கள் சிறைச்சாலையின் மதில்களுக்குள் சுற்றித்திரியலாம். மதியம் பன்னிரெண்டு மணிக்குச் சோறும் சில துண்டு மாமிசங்களும் பருப்பு அல்லது கீரை வகைகளும் வழங்கப்படும். இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, அய்ரோப்பா சிறைகளில் இருந்தவன் என்ற முறையில் சொல்கிறேன்; அந்தக் காலத் தில் வெலிகடயில் வழங்கப்பட்ட மதிய உணவை அடிக்க இன்னொரு சிறைஉணவு கிடையாது. என்னதான் தரமாய் இருந்தாலும் அந்த மதியஉணவின் பரிவர்த்தனைப் பெறுமதி மிகவும் குறைவாகவே காணப்பட்டது. வெறும் இரண்டு அருணா பீடிகளுக்குக் கைதிகள் அந்த உணவைப் பண்டமாற்றம் செய்துகொள்வார்கள்.

எங்களை மாதத்திற்கு ஒரு தடவை குளிக்க அழைத்துச் செல்வார்கள். வெட்ட வெளியில் ஒரு அங்குல விட்டமுள்ள நீண்ட ரப்பர் குழாய் எங்கள் தலைகளுக்கு மேலே கட்டப் பட்டிருக்கும். அந்த ரப்பர் குழாயில் ஆறங்குல இடைவெளி களில் சிறிய துவாரங்கள் போடப்பட்டிருக்கும். நாங்கள் அந்த ரப்பர் குழாயின் கீழ் இப்படி வரிசை கட்டி நிற்போம்:



நாங்கள் வரிசை கட்டி நின்றவுடன் அந்த ரப்பர் குழாயில் ஒரு நிமிட நேரம் தண்ணீர் திறந்துவிடப்படும். செம்மஞ்சள் நிறத்தில் எங்கள் தலையில் துளித் துளியாய்த் தண்ணீர் ஒழுகும். ஒரு நிமிட நேரத்தில் நாங்கள் குழாயின் கீழிருந்து விலகி சவர்க்காரம் இருந்தால் போட்டுக்கொள்வோம். அந்த ஒரு நிமிடத்தில் இன்னொரு வரிசை குழாயின் கீழ் நிறுத்தப்படும். ஒரு நிமிடத்தில் அவர்கள் குழாயிலிருந்து விலகி சவர்க்காரம் தேய்க்கப் போனதும் நாங்கள் குழாயின் அடியில் நிறுத்தப்படுவோம். அந்த நிமிடம் எங்களின் குளியல் சடங்கு முற்றுப்பெறும்.

மாலை மூன்று மணிக்கு இரவு உணவும் தேனீரும் வழங்கப்படும். மறுபடியும் நாங்கள் வரிசையில் நிற்க வைக்கப்பட்டு உருப்படிகள் எண்ணப்படுவோம். பின் எங்களைச் சிறைமண்டபத்துக்குள் அனுப்பிக் கதவை மூடுவார்கள். இரவு பத்து மணிக்கு மீண்டும் ஒரு தடவை **மாலை** எல்லோரையும் வரிசையில் நிறுத்திவைப்பார்கள். வரிசையில் நிற்கும் முதலாவது கைதி 'வன்' என்பார். வரிசையில் இரண்டாவதாக நிற்பவர் 'ரூ' என்பார். அடுத்தவர் 'த்றி' என்பார் இப்படியே சொல்லிச் சொல்லி வரிசையின் கடைசியில் நிற்பவர் 'ஹன்றட் அன் ரூ' என்பார். உடனே விளக்குகள் தணிக்கப்பட்டு, நாங்கள் படுக்கைகளுக்கு அனுப்பப்படுவோம்.

பக்கிரி உடல் வேதனையால் தூங்க முடியாமல் தவித்தார். சிறையில் பக்கிரிக்குச் சரியான முறையில் சிகிச்சை வழங்கப்படவில்லை. பக்கிரியின் அளவுக்கு அதிகமான எடை அவருக்கு இன்னொரு பெரும் பிரச்சினையாய் இருந்தது. சிறை வைத்தியசாலையில் வழங்கப்பட்ட எண்ணையை நான் இரவுகளில் பக்கிரியின் கைகளிலும் கால்களிலும் தேய்த்து உருவிவிடுவேன். பக்கிரியின் மார்பு கிழவிகளின் மார்பு போல **தண்டனை** தொய்ந்து கிடக்கும். அவர் இரவுகளில் அந்த மார்புகளில் தன் கைகளால் அறைந்துகொண்டார். எனது பணிவிடைகளை ஒருவித கர்வத்துடன் அவர் ஏற்றுக் கொண்டார். 'உன்னால் தானே நான் பிடிபட்டேன்; என்னை நீ தானே காட்டிக் கொடுத்தாய்! எனவே எனக்குப் பணிவிடை செய்வது உன் கடமை அல்லது அது உனக்கான தண்டனை' என்பதாக அவரின் உடல்மொழியும் அவரின் முகத்தில் ஓடிய ரேகைகளும் என்னிடம் கூறின.

ம்



ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தாறாம் ஆண்டு ஏப்ரல் மாதம் பனைத்தீவில் PASSO நிகழ்த்தப்பட்டது. இந்தப் பஸோவைக் குறித்து நான் பிலிமத்தலாவ இறையியல் கல்லூரியில் படித்த நாள்களில் நான் அறிந்துகொண்ட **PASSO** செய்திகளை இந்த அத்தியாயத்தின் இறுதியில் சுருக்கமாக எழுதவிருக்கிறேன். பனைத்தீவில் நிகழ்ந்த பஸோ காரைதீவு கடற்படையினரால் குழப்பியடிக்கப்பட்டது. அன்றைய நாளில் அந்தச் சின்னஞ் சிறு தீவை அவர்கள் தமது கைகளுக்குள் கசக்கிப்போட்டார்கள்.

பஸோவை நிகழ்த்துவதற்குத் தோமையப்பர் கோயில் பாதிரி கடற்படையினரிடம் அனுமதி வாங்கி வைத்திருந்தான். பஸோ கலைஞர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்தார்கள். அவர்கள் காரைதீவு கடற்படைமுகாமில் கடுமையாகச் சோதனியிடப்பட்ட பின்பே பனைத்தீவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். தோமையப்பர் கோயிலின் முற்றத்திலே தீப்பந்தங்களுக்கு நடுவிலே பஸோ நிகழ்த்தப்படலாயிற்று. தீவே முற்றத்தில் திரண்டிருந்தது. கடவுளின் குமாரன் ஒவ்வொரு தடவை கல்வாரியில் முகம் குப்புற வீழ்ந்தபோதும் சனங்கள் ஓலமிட்டார்கள். பிலாத்து சனங்களால் சபிக்கப்பட்டான். பரபாஸ் விடுவிக்கப்பட்ட போது 'தீர்க்கதரிசிகளின் வாக்கியம் இவ்வாறாக நிறை **சிலுவை** வேறிற்று' என அவர்கள் பெருமூச்செறிந்தார்கள். கடல் ஓசையெழுப்பியபோது மேடையில் 'அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் தூக்கி: தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே உன்னை நீயே இரட்சித்துக் கொள்; நீ கடவுளின் குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரை தூஷித்தனர்' கடல் பயந்துகிடந்தது. கடலிலிருந்து கரிய உருவங்கள் தீவுக்குள் இருளாய் இறங்கின. கடற்படையினர் பஸோ அரங்கையும் தோமையப்பரின் ஆலயத்தையும் கொழுத்திப் போட்டார்கள். தீவு அனலாய்த் தகித்தது. தீக்குள்ளே சனங்கள் அழுது புலம்பியவாறே திக்குத் திசை தெரியாமல் சுற்றிச் சுற்றி வந்தார்கள். தீயின் புறத்தே ஓடியவர்களின் முதுகில் நெருப்பின் பெரு வெளிச்சத்தில் சன்னங்கள்

பாய்ந்தன. அந்தத் தீவை அன்று நெருப்பு காட்டிக் கொடுத்தது. அன்றைய பின்னிரவு முழுவதும் அவர்கள் தமது உள்ளங்கால்களில் அந்தத் தீவை எற்றி விளையாடினார்கள்.

மரியாள் ஓடிப்போய் கோயிலின் இடப்புறத்தில் இருக்கும் மணிக்கூண்டு கோபுரத்தினுள் புகுந்திருக்கிறாள். அங்கிருந்து அவளைத் தமது தோள்களில் தூக்கிச் சுமந்தவாறு கடற்படையினர் தமது படகுக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். மூன்று மணிநேரங்கள் கழித்து நிலம் வெளுத்த போது மரியாள் கடற்கரையிலிருந்து கடற்படையினரால்

**மரியாள்**

துரத்திவிடப்பட்டாள். மரியாள் தண்ணீரிலிருந்து வெளியேற மறுத்திருக்கிறாள். கடற்படையினர் அவளைக் கரையில் தூக்கி வீசியிருக்கிறார்கள். மூஞ்சியிலும் முலைகளிலும் கால்களிலும் எச்சிலும் இரத்தமும் வழிய வழிய மரியாள் நிர்வாணியாக எழுந்து ஓடினாள். வெளிச்சம் பரவலாயிற்று. அவள் பற்றைகளின் மறைவிலும் வேலிகளின் மறைவிலும் மறைந்து மறைந்து ஓடினாள். சனங்களின் அரவம் கேட்ட போதெல்லாம் அவள் பற்றைகளுக்குள் குந்தியிருந்து வாயைத் திறவாமல் இருதயத்தால் ஓலமிட்டாள். சனங்கள் கருகிய உடல்களை சைக்கிள்களில் கட்டியும் மாட்டுவண்டிகளில் குவித்தும் கொண்டுபோவதை அவள் பார்த்தாள். மரியாள் மறைவுகளில் நடந்தும் ஓடியும் யாருடைய கண்களிலும் படாமல் தன் வீட்டின் பின்புற வேலிப் பொட்டுக்குள்ளால் நுழைந்து நடுவீட்டுக்குள் ஓடியபோது மார்த்தாள் குழந்தை இயேசுவின் சொரூபத்தின் முன்னால் மண்டியிட்டு இரு கைகளையும் அகல விரித்துக் கண்ணீர் சொரிந்து செபித்துக் கொண்டிருந்தாள்.

PASSO என்பது போர்த்துக்கேய மொழிச் சொல்லாகும். பஸோ நிகழ்வை இயேசு சபைப் பாதிரிகளே இலங்கைக்கு அறிமுகப்படுத்தினார்கள். பஸோ என்ற இப் போர்த்துக்கேய மொழிச்சொல் பாஸ் என்று மருவி இப்போதும் கிறிஸ்தவர்

**வண்ணம்**

களிடையே வழங்கிவருகிறது. இயேசுக் கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் யூதாசுக்கு நேர்ந்த கதியையும் வண்ணமயமாகவும் பிரமாண்டமாகவும் அரங்குகளில் நிகழ்த்துவதே பஸோ. பொதுவாகக் கிறிஸ்தவ நாடகங்களை Mystery plays, Miracle plays, Morality plays என்ற மூன்று அரங்க வகைகளுக்குள் அடக்கிவிடலாம். பஸோ Mystery play.

பஸோவின் ஆரம்ப உருவாக்கத்தில் மூன்று பெரும் அரங்காற்றுக் குழுக்களின் பங்களிப்புக்கள் முக்கியமானவை.



Frankfurt passion, Vienna passion, Mastricht passion என்ற மூன்று குழுக்களும் பதினான்காம் நூற்றாண்டிலே ஜெர்மனிய மொழியிலே கிறிஸ்துவின் பாடுகளை நடித்துக் காட்ட ஆரம்பித்தன. இவர்களிலிருந்தே இந்த ஆற்றுகை கிறிஸ்தவ உலகம் முழுவதும் கிளைவிடலாயிற்று. பதினாறாம் நூற்றாண்டின் தொடங்கத்திலே அதுவரை மேட்டுக்குடி கிறிஸ்தவர்களால் மட்டுமே நடத்தப்பட்டுவந்த இந்த நாடகம் அடித்தள மக்கள் மத்தியிலும் பரவலாயிற்று. அடித்தளக் கலைஞர்கள் அதுவரை புனித நிகழ்வாக இருந்த பஸோவைக் **கோமாளி**
கேளிக்கை நிகழ்வாக மாற்றிப் போட்டனர். பஸோவிலே புதிதாகக் கோமாளிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். ஒரு மேடை நிகழ்வு மெல்ல மெல்ல சமூக நிகழ்வாக நிகழத்தொடங்கியது. மக்கள் கோமாளி நடிகர்களின் அங்கதப் பேச்சுக்களை வரவேற்றுக் கொண்டாடினார்கள். அக் கோமாளிகள் ஏரோதனையும் பிலாத்துவையும் கேலி செய்யும் சாக்கில் நாட்டை ஆள்வோரையும் அதிகாரிகளையும் கிண்டலடித்தனர். ஆளும் வர்க்கம் மக்களின் பஸோவைக் கண்காணிக்கத் தொடங்கியது.

1540ல் ஜெர்மனி நாட்டு ஆயர்கள் மன்றம் ஜெர்மனியில் பஸோ நிகழ்வைத் தடை செய்தது. பஸோ நிகழ்த்துவது தண்டனைக்குரிய குற்றமென்று சட்டம் இயற்றி ப்ரான்ஸ் ஆட்சியாளர்கள் 1548ல் பஸோவுக்குத் தடை விதித்தனர்.

இலங்கைக்குப் பதினேழாம் நூற்றாண்டில் பஸோ அறிமுகப்படுத்தப்பட்டது. முதலில் மரத்தாலான பொம்மைகளை வைத்தே பஸோ இலங்கையில் நிகழ்த்தப்பட்டது. இயேசுவின் பாத்திரத்தைத் தாங்கி நடிக்க மானிடப்பதர் **தடை**
களுக்கு யோக்கியதை கிடையாது என்று இலங்கை ஆயர்கள் மன்றம் கண்டிப்பாக அறிக்கையிட்டதால் பொம்மைகளை வைத்தே பாடுகளும் மரணங்களும் நிகழ்த்தப்பட்டன. இந்த பொம்மை பஸோ உடக்கு பாஸ் என்றழைக்கப்பட்டது. 1923ல் தான் பொறலச என்ற சிங்கள ஊரில் சிங்கள மொழியில் முதன்முதலாக ஒரு மனிதன் ஒரு இயேசுக் கிறிஸ்துவாக நடிக்க அனுமதிக்கப்பட்டான். இதற்கு **உடக்கு**
இருபத்தொன்பது வருடங்கள் கழித்துத்தான் யாழ்ப்பாணத்தில் மனிதன் இயேசுவாக நடிக்க அனுமதிக்கப்பட்டான். 1952ஆம் ஆண்டு லோங் பாதிரியாரின் நெறிப்படுத்தலில் இந்தப் பஸோ ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பட்டது. 1956ல் தான் தமிழில் மனிதன் முதற்தடவையாக இயேசுக் கிறிஸ்துவாக நடித்தான்.

ஜெர்மனியிலுள்ள Oberammergaw என்னும் ஊரில் இன்று வரை விடாப்பிடியாக வைதீக முறையிலான பஸோவைக் கட்டிக் காப்பாற்றியழுதுவருகிறார்கள். இங்கு பத்து வருடங்களுக்கு ஒரு முறை நிகழ்த்துப்படும் பஸோவில் ஆயிரத்து அய்நூறு வரையிலான நடிகர்கள் சேர்ந்து நடிப்பார்கள். இப்பஸோவில் பெண்களின் பாத்திரங்களையும் ஆண் நடிகர்களே ஏற்று நடிப்பார்கள். இங்கே இன்றுவரை பெண்களுக்கு பஸோவில் நடிக்க அனுமதி மறுக்கப்பட்டேவருகிறது.

**யூதாஸ்**

பஸோவின் இறுதிக் கணங்களில் பஸோ நாடகப்பிரதி யூதாசுக்குக் கொடூர தண்டனையை வழங்கும். அந்தத் தண்டனையும் பிரமாண்டமாயும் வண்ணமயமாகவுமே அமைக்கப் பட்டிருக்கும். சாத்தான் யூதாஸைத் தூக்கிலிடுவதாகச் காட்சி அமைக்கப்பட்டிருக்கும். நாடகப் பிரதி நிகழ்த்துப்படுவதற்கு முன்பாகவே யூதாஸ் பாத்திரம் ஏற்று நடிப்பவர் தனது வயிற்றில் இரத்தத்தில் தோய்ந்த மிருகக்குடலையும் ஒரு கரிய பறவையும் மறைத்துவைப்பார். இவற்றுடனேயே அவர் இயேசுவை முத்தமிடுவார். இறுதியில் முப்பது வெள்ளிக் காசுகளையும் வீசியெறிந்த யூதாஸைச் சாத்தான் தூக்கிலிடுவான். பின் அவன் தூக்கில் சுழலும் யூதாஸின் வயிற்றைக் கிழிப்பான். யூதாஸின் வயிற்றிலிருந்து இரத்தமும் குடலும் அரங்கத்ததில் சரிய யூதாசின் வயிற்றிலிருந்து கரிய பறவையொன்று வெளியே துடித்துப் பறந்து செல்லும்.

ம்



**செய்திகள்**

அந்தக் காலக்கட்டத்தில் மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பிய நானும் பக்கிரியும் மீண்டும் பொலிசாரால் கைது செய்யப்பட்டதும், எங்கள் மீது நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்த வழக்கு விசாரணைகளும் நாட்டில் பெரிய செய்தியாகியிருந்தது. மும்மொழிப் பத்திரிக்கைகளிலும் எங்கள் வர்ணப் புகைப்படங்கள் விலங்குகளுடன் வெளியாகின. செய்திகளில் நான் வாழ்ந்துகொண்டிருந்தேன். செய்திகளில் மக்கள் இறந்து கொண்டிருந்தார்கள். மக்கள் செய்திகளிலிருந்து பெரும் நம்பிக்கைகளைப் பெற்றார்கள். அவர்கள் ஆகாசவாணியையும் பி.பி.சியையும் வெரித்தாஸையும் கேட்பதிலேயே தங்கள் நேரத்தைக் கழித்தார்கள். செய்திப் பத்திரிக்கைகள் போராளிகளால் வீதிகளில் போட்டுக் கொழுத்தப்பட்டன. செய்திப் பத்திரிகை அலுவலகங்களை இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்தார்கள். இயக்கங்கள் வானொலிச் சேவைகளையும் செய்திப் பத்திரிகைகளையும் ஆரம்பித்திருந்தன. வாழ்வும் மரணமும் வெறும் செய்திகளாகக் குறுகிப் போயின.

**சுன்னாகம்**

**அரியாலை**

1984 மார்ச் எட்டாம் திகதி சுன்னாகச் சந்தைக்குள் புகுந்து விமானப்படையினர் மக்களைச் சுட்டதில் பத்துப்பேர் இறந்துபோனார்கள். 1984 ஆகஸ்ட் பதினோராம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துகொண்டிருந்த பேருந்து வண்டியை இராணுவத்தினர் காட்டுக்குள் மறித்து வெட்டியதில் பதினாறு பயணிகள் இறந்து போனார்கள். இவர்களில் மூவர் குழந்தைகள். 1984 டிசம்பர் இரண்டாம் திகதி செட்டிக்குளத்தில் இருபத்தேழு பேரும் நான்காம் திகதி மன்னாரில் தொண்ணூறு பேரும் இராணுவத்தினரால் கொல்லப்பட்டார்கள். 1985 ஏப்ரல் இருபத்தொன்பதில் அரியாலையில் அறுபத்து நான்கு பேர் விசேட அதிரடிப் படையினரால் கொல்லப்பட்டார்கள். 1985 மே ஒன்பதாம் திகதி வல்வெட்டித்துறை நூல் நிலையத்தின் உள்ளே அய்ம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்களை அடைத்து வைத்த இராணுவத்தினர் பின் இளைஞர்களோடு நூல் நிலையத்தைக் குண்டுகள் வைத்துத் தகர்த்தனர். 1985 மே

**வல்வெட்டி துறை**

பதினான்காம் திகதி அநுராதபுரம் நகருக்குள் புகுந்த தமிழீழ விடுதலைப்புலிகள் சீருடையிலிருந்த பள்ளிக்குழந்தைகள், பெண்கள், புத்தபிக்குகள் உட்பட நூற்றுநாற்பது பேரை வெட்டியும் சுட்டும் கொலை செய்தனர். இதற்கு அடுத்த நாள் மே பதினைந்தாம் திகதி ஒரே நேரத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்ட வெவ்வேறு கொலைச் செயல்களில் நெடுங்தீவிலிருந்து குறிகட்டுவானுக்கு வந்துகொண்டிருந்த குமுதினிப் படகு கடலில் கடற்படையினரால் மறிக்கப்பட்டு ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக அறுபத்தொரு பேர் கடற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டனர். உடும்பன் குளத்தில் இராணுவத்தினரால் எழுபத்தியிரண்டு மக்கள் ஒரு பாடசாலைக்குள் அடைக்கப்பட்டு உயிரோடு கொழுத்தப் பட்டனர். நாய்ப்பட்டிமுனையில் இருபத்து மூன்று பேர் விசேட அதிரடிப் படையினரால் கொல்லப்பட்டனர்.

**அநுராத புரம்**

அநுராதபுரத்தில் நடந்த கொலைகளைக் குறித்த செய்தி களை அறிந்ததும் நாங்கள் பதைபதைத்தோம். 'விடுதலைப் போராளிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல் போய் விட்டது. சிங்கள மக்கள் ஒருபோதும் எங்களுடைய எதிரிகள் அல்ல! இனவாத அர சுக்கு எதிரான எங்களது எல்லாவித உழைப்புகளும் தியாகங் களும் வெறும் சாகசக்காரர்களால தோற்கடிக்கப்படுகின்றன' என்று நான் சொன்னதைக் 'குட்டி முதலாளிய சாகசக்காரர் களால்' என்று பக்கிரி திருத்தினார். 'கண்ணுக்கு கண், பல்லுக் குப் பல்' என்ற சவால்களும் குரல்களும் எங்கள் மத்தியி லிருந்து எழாமலில்லை. சில பகல்களும் இரவுகளும் தும்பு

**கண்ணுக்குக் கண்**

பறக்க நாங்கள் விவாதித்ததன் பின்பாக வெலிகட சிறையின் H மண்டபத்திலிருந்த கைதிகளான நாங்கள் ஒரு பொது முடிவுக்கு வந்தோம். அநுராதபுரப் படுகொலைகளை எந்த இயக்கம் செய்தது என்பதை நாங்கள் அப்போது அறிந்திருக்க வில்லை. எல்லா விடுதலை இயக்கங்களும் தங்களுக்கும் அநு ராதபுரப் படுகொலைகளுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் கிடை யாது என உடனடியாகவே அறிக்கைகளை வெளியிட்டி ருந்தன. பி மண்டப கைதிகளான நாங்கள் அனுராதபுரப் படுகொலைகளைக் கண்டித்து ஒரு அறிக்கையை வெளியிடுவது எனத் தீர்மானித்தோம். கண்டன

**அறிக்கை**

அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பு பக்கிரிக்கு வழங்கப்பட்டது.

பக்கிரி அன்னந் தண்ணியில்லாமல் மூன்று நாட்களாக மண்டையை உடைத்து இருபது பக்கத்தில் ஒரு அறிக்கை



யைத் தயார் செய்தார். பக்கிரி தயாரித்த அறிக்கையை உண்மையாக எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**மாவோ**

அறிக்கை சோவியத் கொம்யூனிஸ்ட் கட்சியின் இருபது மற்றும் இருபத்திரண்டாவது காங்கிரஸிலிருந்து ஆரம்பிக்கிறது. வெலிகட சிறையின் மற்றைய பகுதிகளி லிருந்த அரசியல்கைதிகளும் அநுராதபுரப் படுகொலைகளைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர். அந்த அறிக்கைகளின் சில பகுதிகள் பத்திரிக்கைகளிலும் வெளியாகின. பக்கிரியின் அறிக்கைக்குச் செய்தியாகும் பெறுமதியை பத்திரிகைகள் வழங்கவில்லை. குறிப்பாக பக்கிரி தனது அறிக்கையை மாவோ சே துங்கின் புகழ் பெற்ற வாசகம் ஒன்றுடன் முடித்திருந்தார்: 'துப்பாக்கிக் குழல்களிலிருந்து தான் அதிகாரம் பிறக்கிறது'.

துப்பாக்கிகளைக் குறித்த மூன்று கதைகள் கீழ் வருமாறு:

1971 ஏப்ரல் அய்ந்தாம் நாள் ஜேவிபி. தொடங்கிய ஆயுதக் கிளர்ச்சியை இலங்கை இந்திய கூட்டுப்படைகள் நசுக்கியதன் பின்பாக பத்தாயிரத்துக்கும் அதிகமான சிங்கள இளைஞர்களும், மாணவர்களும் பெண்களும் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசால் கொல்லப்பட்டு, தெருவிலும் ஆறுகளிலும் பிணங்கள் வீசப்பட்டன. வகைதொகையின்றி ஜே.வி.பியினர் கடுமையான காவல் ஏற்பாடுகளோடு சிறை களில் அடைக்கப்பட்டனர். சிறைப்பிடிக்கப்பட்டிருந்த ஜே.வி.பி. கைதிகளிடையே ஒரு புத்தகம் இரகசியச் சுற்றில் இருந்தது. சிறைக்குள் இருந்து ஜே.வி.பி.யினர் இரகசியமாக 'மாவோ சே துங் சிந்தனைகள்' என்ற மாவோவின் புகழ் பெற்ற புத்தகத்தைத் தீவிரமாகப் படித்துக்கொண்டிருந்த போது ஜே.வி.பி.யினரைச் சிறையில் அடைத்துவைத்துக் காவலுக்கு நின்ற பொலிசார் மாவோ அரசு சிறிலங்கா அரசுக்கு வழங்கிய நவீனரக துப்பாக்கிகளைத் தங்களது கைகளில் வைத்திருந்தனர்.

சோவியத் யூனியன் உடைந்த நேரத்தில் ரஷ்யா மீள முடியாத பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கியிருந்தது. அப்போது மொஸ்கோவின் பெரிய வங்கி ஒன்றுக்குள் நுழைந்த ஒரு வாலிபன் இடுப்பிலிருந்து துப்பாக்கியை உருவி வங்கி மனேஜரின் நெற்றியில் வைத்து 2460 ரூபிள்கள் தரும்படி கேட்டான். வங்கி மனேஜரோ உயிரே போனாலும் காசு பணம் தரமாட்டேன் என்று துப்பாக்கி வாலிபனிடம்.

கூறிவிட்டு தான் பொலிசாரை அழைக்கப்போவதாகச் சொன்னார். வாலிபனோ நீங்கள் பொலிசாரை அழைப்ப தானால் அழையுங்கள் என்று கூறிவிட்டு, துப்பாக்கியை நீட்டியபடியே நின்றான். மனேஜர் பொலிசாரைத் தொலைபேசியில் அழைத்தார். பொலிசார் வந்து தீர விசாரணை செய்துவிட்டு, துப்பாக்கிவாலிபனின் வங்கிக் கணக்கிலிருந்த 2460 ரூபிள்களை வங்கி மனேஜரிடமிருந்து பெற்று வாலிபனிடம் ஒப்படைத்தார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் என்ற குழந்தைப் போராளிக்கு வயது பதினைந்து. தம்பாட்டி கடற்கரையில் இரவு நேரக் காவல் கடமையிலிருந்த ராஜேந்திரன் உடல்அலுப்பாலும் கடற்கரைக் காற்றாலும் ஒரு கணம் கண்ணயர்ந்தபோது அவனது குழந்தைப் போராளித் தோழர்கள் ராஜேந்திரனின்

III

துப்பாக்கியை விளையாட்டாக எடுத்து மறைத்து வைத்தார்கள். ராஜேந்திரன் கண் விழித்தபோது அவனருகில் இருந்த துப்பாக்கியைக் காணாமல் அவன் ஏங்கிப்போனான். அவனோடு அக்கடற்கரையில் இருந்த சிறுவர்களிடம் அவன் தனது துப்பாக்கி எங்கே என்று கேட்டபோது அவர்கள் இருளுள் குறும்பாகச் சிரித்தார்கள். தங்களுக்குத் தெரியாது என்றும் துப்பாக்கியைப் பறிகொடுத்ததுக்குப் பொறுப்பாளர் வந்தவுடன் பெரும் தண்டனை கிடைக்கும் என்றும் அவர்கள் விளையாட்டாக ராஜேந்திரனைப் பயமுறுத்தி னார்கள். ராஜேந்திரன் அவமானத்தாலும் பயத்தாலும் அலைக்கழிக்கப்பட்டிருக்கலாம். அவன் உடனடியாக அந்தக் கடற்கரையிலேயே குப்பி கடித்தான். அவனது தோழர்கள் தடுப்பதற்கு முன்னதாகவே அவன் இறந்துபோனான். இயக்கம் அவனது முகவரியைக் குறிப்புப்புத்தகத்தில் பார்த்தபோது தெளிவான முகவரி ஏதும் அதில் குறிக்கப்பட்டிருக்கவில்லை. முருகன் கோவிலுக்கு அருகில் ஹற்றன் என்றொரு முகவரியும் அதனருகே ஏர்னஸ்ட், பனைத்தீவு என்று இன்னொரு முகவரியும் காணப்பட்டன. 'ராஜேந்திரனின் உடலைப் பெற்றுச் செல்ல விருப்பமா?' என்ற செய்தியை இயக்கம் பனைத்தீவுக்கு அனுப்பியபோது தனக்கு ராஜேந்திரனுடன் எந்த உறவுமில்லை உரிமையுமில்லை என்ற பதில் செய்தியை ஏர்னஸ்ட் இயக்கத்துக்கு அனுப்பினான். ராஜேந்திரன் உடல் இயக்கத்தாலேயே புதைக்கப்பட்டது.

ம்



**திம்பு**

பூட்டான் தலைநகரான திம்புவில் இலங்கை அரசுக்கும் போராளி இயக்கங்களுக்கு இடையிலும் சமாதான பேச்சுவார்தைகள் ஆரம்பித்தபோதும் சிறைக்குள் எங்களிடையே பெரும் வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. பேச்சுவார்த்தைகளில் சிறையில் இருக்கும் போராளிகளின் கருத்துக்களையும் அரசும் இயக்கத் தலைமைகளும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்ற செய்தியை அரசாங் கத்தும் இயக்கங்களுக்கும் அனுப்பினோம். ஒரு நாயும் எங் களைக் கணக்கெடுக்கவில்லை. நாங்கள் H மண்டபத்தில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்பாகக் கீழ்வரும் மூன்று தீர்மானங்களைப் பிரேரேரித்தோம்.

**தீர்மானங்கள்**

1. அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்பாக சிறிலங்கா சிறைகளில் இருக்கும் அனைத்து அர சியல்கைதிகளையும் சிறிலங்கா அரசு நிபந்தனைகள் இன்றி உடனே விடுதலை செய்ய வேண்டும்.

1அ. அரசியல் ரீதியான அனைத்து வழக்குகளையும் அரசு மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2. வெலிகட சிறைச்சாலையில் நடந்த படுகொலை களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மீதும் அமைச்சர்கள் மீதும் பகிரங்க விசாரணைகளை நடத்த வேண்டும்.

3. தமிழீழத்துக்கு குறைந்த எந்தத் தீர்வையும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

நாங்கள் இந்தத் தீர்மானங்களையும் பத்திரிகைகளுக்கும் இயக்கத் தலைமைகளுக்கும் அனுப்பினோம். நான் பக்கிரியிடம் முதல் இரண்டு தீர்மானங்களுக்கும் மூன்றாவது தீர்மானத்துக்கும் 'லொஜிக்' இடிக்கிறதோ? என்று கேட் டேன். 'நீதிக்கு முன்பு தருக்கத்துக்குப் பொருள் கிடையாது' என்று பக்கிரி தாடியை வருடியவாறே சொன்னார்.

வெலிகடச் சிறையில் இன்னொரு முறை படுகொலைகள் நிகழாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. எனவே நாங்கள் எல்லோரும் எதற்கும் தயாராக இருந்தோம்.

இனியொரு தடவை எங்கள் மண்டபத்துக்குள் சிங்களக் கைதிகள் புகுந்தால் அவர்கள் வரவர நாங்கள் அவர்களைக் கொன்று விட வேண்டும். எங்களில் கடைசி ஒருவன் வீழும் வரை நாங்கள் எதிரிக்குச் சேதத்தை உண்டுபண்ணிக் கொண்டே இருக்கவேண்டும். நானும் பக்கிரியும் 1983 ஜூலை

**தற்காப்பு** 25, 27 அனுபவங்களை எங்களுடன் இருந்த சக கைதிகளுக்கு விளக்கிச் சொன்னோம். அதற்குத் தகுந்தவாறு தற்காப்புத் திட்டங்களை வகுத்துக்கொண்டோம். இந்தச் சிறைச் சாலையை உடைத்துக்கொண்டு நாங்கள் தப்பிச் செல்வதற்கான ஒரு திட்டத்தை நாங்கள் எத்தனை விதத்தில் எத்தனை கோணத்தில் தீட்டினாலும் அத்தனை திட்டங் களும் வெறும் கால விரயத்தில் தான் முடியும் என்பதில் நான் தெளிவாய் இருந்தேன். வெலிகடப் பெருஞ்சிறை நவீன ரக கண்காணிப்புக் கருவிகளிடையே பதுங்கிக்கிடந்தது. சிறைக்காவலர்கள் அதி நவீனக் கொலைக்கருவிகளுடன் மதில்களிலும் தெருக்களிலும் இருள்களிலும் அலைந்தனர். சிறை மேலும் நவீனமயமாகிக்கொண்டேயிருந்தது. உச்சக் கட்டமாக அரசியல்கைதிகளுக்கு மண்டபத்துக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும் சில விளையாட்டு உபகரணங்களும் சிறைநிர்வாகத்தால் வழங்கப்பட்டது. பக்கிரி எனக்கு ஒரு கதை சொன்னார்:

ஒரு காலத்தில் ஒருநாட்டிலே ஒரு சர்வாதிகாரி கொடுங்கோலாட்சி புரிந்துவந்தான். நாட்டிலே பெரும் வறட்சி. நாட்டு மக்கள் பசியிலும் பட்டினியிலும் தவித்துச் செத்தார்கள். வரிகளைக் கட்ட முடியாத குடியானவர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள். சிறைகள் கைதிகளால் நிரம்பி வழிந்தன. சிறைக்கைதிகள் தங்களுக்குத் தரமான

**கதை** உணவு வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். உடனடியாகச் சர்வாதிகாரி கைதிகளுடைய கோரிக்கையை நிறைவேற்றிவைத்தான். கைதிகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. சிறைக்கைதிகள் தங்களுக்கு இருபத்து நான்கு மணிநேர தண்ணீர் வசதியைக் கோரினார்கள். சர்வாதிகாரி அந்த வசதியையும் செய்துகொடுத்தான். பின்பு சிறைக்கைதிகள் சிறைக்கொட்டடிகளில் மின்விசிறிகளைப் பொருத்த வேண்டும் என்றொரு கோரிக்கையை வைத்தார்கள். சர்வாதிகாரி உடனே சிறைக்கொட்டடிகளில் மின்விசிறி பொருத்த ஏற்பாடு செய்யுமாறு அமைச்சருக்கு உத்தரவிட்டான். அமைச்சருக்கோ சிறைச்சாலைக்கு இப்படியான 'ஆடம்பர' வசதிகளைச் செய்துகொடுப்பதில்



கொஞ்சமும் விருப்பமில்லை. அவர் சர்வாதிகாரியை நயம்பட இடித்துரைக்க விரும்பி 'ஜெனரல் அவர்களே, நீங்கள் இந்த வசதிகளையெல்லாம் செய்துகொடுக்கும் இடம் ஒரு பள்ளிக்கூடமோ நூல்நிலையமோ அல்ல' என்றார். அதற்குச் சர்வாதிகாரி சொன்னான்: 'அமைச்சரே, நம்முடைய இந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டால் உம்மையும் என்னையும் ஒரு பள்ளிக்கூடத்துக்கோ அல்லது நூல்நிலையத்துக்கோ அனுப்பமாட்டார்கள்.'

சிறையிலிருந்த அரசியல்கைதிகள் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு அவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றபோது அங்கு நடந்த நீதிவிசாரணையும் வழங்கப்பட்ட **நீதி** நீதியும் பெரும் கூத்தாய் இருந்தது. இரண்டு இராணுவ முகாம்களைத் தாக்கி அழித்தவனுக்கும் இருபது வருடங்கள் சிறைத்தண்டனை தீர்க்கப்பட்டது. இரண்டு அரசியல் வகுப்புகளில் மட்டுமே கலந்துகொண்டவனுக்கும் இருபது வருடங்கள் சிறைத்தண்டனை தீர்க்கப்பட்டது. இதைவிட ஒரு வன்கொடுமையும் நடந்துகொண்டிருந்தது. நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் கைதிகள் நேரே நீதிபதி முன்னே நிறுத்தப்படுவதில்லை. அவர்கள் நீதிமன்றத்திலிருந்து சில மீற்றர்கள் தூரமுள்ள ஒரு மண்டபத்திலே கும்பலாக அடைத்துவைக்கப்பட்டிருப் பார்கள். குறிப்பிட்ட கைதியின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரிக்கப்படுவதே இங்கேயிருக்கும் கைதிக்குத் தெரியாது. அரசு தரப்பு வாதங்கள் முடிந்ததும் குறிப்பிட்ட கைதியின் பெயர் கூப்பிடப்படும். நமது கைதி பொலிஸ் காவலுடன் நீதிமன்றத்துக்கு ஓடிச் செல்வார். இவர் இடைவழியில் ஓடிக்கொண்டிருக்கும்போதே அங்கே இவருக்கு ஏழு வருடங்களோ பதின்நான்கு வருடங்களோ தீட்டியிருப்பார்கள். நீதிமன்ற வாசலிலேயே இவர் திருப்பப்பட்டு மீண்டும் முதலில் அடைக்கப்பட்டிருந்த மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுகையில் இவர் வழியில் ஓடிவரும் இன்னொரு கைதியைச் சந்திப்பார்.

நாங்கள் அடைக்கப்பட்டிருந்த H பகுதியில் நாகபடையைச் சேர்ந்த ஏழெட்டு இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் சொல்லி வைத்துத் தோள் வரை முடி வளர்த்திருந்தார்கள். அவர்களுக்குச் சிறையும் சிறைக் காவலர்களும் சிறைவிதிகளும் ஒரு பொருட்டேயல்ல. அவர்களில் எவரும் சிரித்துக் கூட நான்

**நாகபடை**

பார்த்ததில்லை. நான் அவர்களில் ஒருவனை ஒரு தடவை பார்த்துச் சிரித்தபோது 'கொக்கட்டிச்சோலையில் இருநூறு பேர் செத்ததன் பின்பாகவும் உன்னால் சிரிக்க முடிகிறதா?' என்று அவன் என்னை வெறித்துப் பார்த்தான். அவர்கள் தாங்கள் விறைப்பாக இருப்பதாக நாடகம் ஆடினார்கள் என்றும் சொல்லிவிடமுடியாது. இந்த விறைப்புக்காக அவர்கள் சிறைக்காவலர்களிடம் 'நெவிள்' அடி வாங்கினார்கள். பத்தடி வாங்கினால் ஒரு அடியாவது திருப்பி அடித்தார்கள். அவர்களைச் சிறைக்காவலர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்ல முயன்றபோது 'எங்களை விசாரணை செய்ய சிறிலங்கா நீதிமன்றத்துக்கு எந்த உரிமையுமில்லை. எங்களை விசாரணை செய்யும் உரிமை தமிழீழ நீதிமன்றத்துக்கு மட்டும்தான் உண்டு' என்று சொல்லி, சிறைக்காவலர்களை அடிக்கப்போனார்கள். பெரும் ஆயுதப்படை ஒன்றே சிறைக்குள் புகுந்து நாகபடையை வசக்கி கைகளிலும் கால்களிலும் சங்கிலிகள் பூட்டி நீதிமன்றத்துக்கு அழைத்துப் போனார்கள். நாகபடை நீதிமன்றத்திலும் அடங்கவில்லையாம். நீதிபதியைப் பார்த்து 'உங்களின் செயலுக்காக நீங்கள் ஒருநாள் தமிழீழ நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுவீர்கள்' என்று கடுமையாக எச்சரித்தார்களாம்.

**நீதிமன்றம்**

இயக்கம் பனைத்தீவில் ஒரு கிராம நீதிமன்றத்தை அமைத்து-அதை அவர்கள் இணக்கசபை என்றழைத்தார்கள் - அதைக் கொண்டுசெலுத்துவதற்கு ஏர்னஸ்டைத் தலைவராக நியமித்ததிலிருந்து ஏர்னஸ்ட் வாத்தி இயக்கத்தின் அதி தீவிர ஆதரவாளனாய்த் தான் மாறிப் போனான். ஊரில் யாரிடம் எவ்வளவு வரி வாங்கலாம், திறை வாங்கலாம், பவுண் வாங்கலாம் என்பதை அவன் பட்டியலிட்டு இயக்கத்துக்குச் சொன்னான். இயக்கத்தை போகவிட்டு பழிப்புக் காட்டுபவர்கள், நையாண்டி செய்பவர்கள், குடித்துவிட்டு இயக்கத்தைப் புளுத்தபாடாய்த் திட்டுபவர்கள் பற்றியெல்லாம் அவன் இயக்கத்துக்கு இரகசிய ரிப்போர்ட் கொடுத்தான். அவர்கள் எல்லோருக்கும் நல்ல பச்சை மட்டை அடி கிடைத்தது. பின்பு ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தைப் புலிகள் அழித்தபோது பள்ளதிக்கில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் பொடியளை ஏர்னஸ்ட் புலிகளிடம் காட்டிக்கொடுத்தான். ஏர்னஸ்ட் 'விடுதலைக்காளி' உச்சந் தலையில் இறங்கியவனைப் போல ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினான். கிராம நீதிமன்றத்தால் விசாரணைக்கு



அழைக்கப்பட்டவர்களின் பெண்சாதிமார்கள், மாம்பழங்கள், பயற்றங்காய் பிடிகள் ஆகியவற்றுடன் ஏர்னஸ்டின் பெண் சாதி சிறியபுஸ்பத்திடம் வந்து 'தோட்டத்தில் காய்த்தது' என்று இளித்தார்கள்.

தோமையப்பர் கோயிலில் கொடியேற்றத் திருவிழா முடிந்ததும் இரவில் கலைநிகழ்ச்சிகள் நடத்துவார்கள். பனைக்குற்றிகளால் மேடை போட்டு நடனம், நாட்டியம், நாடகம் எல்லாம் நடக்கும். கண்டிப்பாகப் பொதுஅறிவுப் போட்டி நிகழ்ச்சியொன்றும் நடக்கும். அந்தக் காலம் தொட்டு ஏர்னஸ்ட் தான் இந்தப் பொதுஅறிவு நிகழ்ச்சியை நடத்திவருகிறான். அநேகமாக 'ரேடியோப் பெட்டியைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயர் என்ன?' 'கானாவூர் கல்யாணத்தில் எத்தனை குடம் நீரை இயேசுநாதர் எத்தனை குடம் திராட்சை இரசமாக மாற்றினார்?' என்பதாகவே ஏர்னஸ்டின் பொதுஅறிவுக் கேள்விகள் அமைந்திருக்கும். ஏர்னஸ்ட் ஏற்கக் கூடிய விடைகளைப் போட்டியாளர்கள் சொன்னால் சொன்னவர்களுக்குச் சவர்க்காரப்பெட்டி, அப்பியாசக் கொப்பிகள், பென்ஸில்கள் போன்ற பரிசுகள் வழங்கப்படும். எப்போதுமே மரியாளும், மார்த்தாளும்தான் அதிகப்படியான பரிசுகளைத் தட்டிச்செல்வார்கள்.

**இலட்சுமி காந்தன்**

ஏர்னஸ்ட் இயக்கத்தின் ஆதரவாளனாய் மாறியதிலிருந்து 'பொதுஅறிவுப் போட்டியின்' போக்கும் கேள்விகளும் முக்கியமாகப் பதில்களும் தாறுமாறாக மாற்றப்பட்டன. அன்றைய நிகழ்ச்சியில் பார்வையாளர்களிடையே மணலில் சிறிகாந்தமலரின் அண்ணன் இலட்சுமிகாந்தன் சாடையான கீறலில் உட்கார்ந்திருந்தான். அவன் தன்னுடைய ஒரு துண்டுக் காணியைப் பார்த்துப் போகவும் பனைத்தீவின் கள்ளுத்தேன் குடிக்கவும் அவ்வப்போது பனைத்தீவுக்கு வந்துபோனான். அவனுக்கு இரும்பு உடம்பு. அவன் யாழ்ப்பாண மரக்கறிச் சந்தையில் சுண்ணாம்புக்கடை வைத்திருந்தான். பனைத்தீவு நெத்தலிப் பயில்வான்கள் இலட்சுமிகாந்தனை நாறல்மீனை பூனை பார்த்தது மாதிரி முறைத்துக்கொண்டிருந்தார்கள். இலட்சுமிகாந்தனோ மணலில் அட்டணக்கால் போட்டு பிறிஸ்டல் குடித்துக்கொண்டிருந்தான். அவன் கழுத்தில் லேஞ்சி சொருகிக்கிடந்தது.

மேடையில் ஏர்னஸ்ட் தோன்றினான். அவன் தூய வெள்ளை வேட்டியும் வெள்ளை முழுக்கைச் சட்டையும்

அணிந்திருந்தான். ஒலிவாங்கியை நுட்பமாகச் சுட்டுவிரலால் அவன் ‘டொக்... டொக்’ எனத் தட்டிச் சரிபார்க்கையில் இலட்சுமிகாந்தன் தனது நாவின் கீழ்ச் சுட்டுவிரலை மடித்து வைத்து ஒரு நீண்ட சீட்டியை ஒலித்தான். சரி. பொது

**தமிழ்**

அறிவிப்புப்போட்டி இதோ ஆரம்பமாகிறது. ஏர்னஸ்ட் சிறிது நேரம் அமைதியாக மேடையில் நின்றான். திடீரெனக் குழந்தைகள் திடுக்குற்று வீறிட்டு அழத் தக்கதாய் அவன் குரலும் குரலின் தொனியும் ஓட்டுவீட்டில் புளியம்பழமாய்க் கொட்டின. ‘கனியிடை ஏறிய சுளையும், முற்றல் கழையிடை ஏறிய சாறும் பனிமலர் ஏறிய தேனும், காய்ச்சுப் பாகிடை ஏறிய சுவையும் இனியன என்பேன் எனினும், தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்’ இலட்சுமி காந்தன் இன்னொரு சீட்டி அடித்தான். தமிழ் வணக்கம் முடிந்ததும் போட்டியில் கலந்துகொள்வதற்குப் பார்வையாளர்கள் யாரையாவது மேடைக்கு வருமாறு ஏர்னஸ்ட் அழைத்தான். கூட்டம் தயங்கியது. சிறிது நேரத்தில் தயங்கித் தயங்கிப் பதினாறு, பதினேழு வயது மதிக்கத்தக்க பெண்பிள்ளை ஒருத்தி மேடையின் ஓரத்தில் ஏறினாள். ஏர்னஸ்ட் ஆரம்பித்தான்.

‘வாருங்கள் உங்கள் பெயர் என்ன?’

‘சதாசகாயநாயகி’

**சதா சகாய நாயகி**

‘உங்கள் பொழுதுபோக்குகள் எவை எவையென்று கூறமுடியுமா?’

‘முத்திரை சேகரித்தல், கதைப்புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்’

‘நல்லது. நீங்கள் முதற் போட்டியாளர் என்பதால் உங்களுக்கு மிகவும் சுலபமானதொரு கேள்வியைத் தருகிறேன். மக்களிடம் கொள்ளையடித்த இயக்கம் எது?’

இதைவிட ஒரு கடினமான கேள்வி முழு ஈழத்திலும் இருக்கவே முடியாது. சதாசகாயநாயகி தலையைச் சொறிந்து முழியைப் புரட்டினாள். பின் அவள் ஏர்னஸ்டிடம் ‘க்ளு’ ஏதாவது தரமுடியுமா என்று மெதுவாகக் கேட்டாள். ஏர்னஸ்ட் வாய் நிறைந்த சிரிப்போடு நின்றிருந்தான். சதாசகாயநாயகியும் விடுவதாக இல்லை. ‘இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு விடையா அல்லது ஆறு ஏழு விடைகள் இருக்கின்றனவா?’ என்று அவள் ஏர்னஸ்டிடம் கேட்கவும் ஏர்னஸ்ட் ஒற்றை விரலைக் காட்டி ஒரே ஒரு விடைதான்



**‘க்ளு’**

என்று ‘க்ளு’ கொடுத்தான். கேள்வியை விட ‘க்ளு’ மிக கடினமானதாகத் தெரிந்தது. சதாசகாயநாயகி சோர்ந்து போனாள். ஏர்னஸ்ட் மேலதிகமாக ஒரு க்ளு கொடுத்தான். ‘விடை T என்ற ஆங்கில எழுத்தில் ஆரம்பிக்கும்’ பொட்டை கெட்டிக்காரி. விடையைப் பிடித்துவிட்டாள். அவளுக்குப் பரிசாக ஒரு டோர்ச் லைட் வழங்கப்பட்டது.

அடுத்த போட்டியாளரை ஏர்னஸ்ட் பார்வையாளர்களிடமிருந்து அழைத்தபோது இலட்சுமிகாந்தன் துள்ளிப் பாய்ந்து மேடையில் ஏறினான். கூட்டத்தின் சில பகுதிகளிலிருந்து ‘கமோன் இலட்சுமிகாந்தன்’ என்ற ஆரவாரம் எழுந்தது. இலட்சுமிகாந்தன் உடனே கூட்டத்தை நோக்கி கைகளை ஆட்டிவிட்டு பற்றிக் சாரத்தை உதறி நெஞ்சுவரை ஏற்றிக் கட்டிக்கொண்டான். ஏர்னஸ்ட் போட்டியாளரைச் சொண்டுகளைச் சுழித்துக்கொண்டு ஒரு மார்க்கமாகப் பார்த்தான். இலட்சுமிகாந்தன் மைக்கின் முன்னால் சென்று ஆடாமல் அசையாமல் நின்று நிமிர்ந்து கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டிக்கொண்டு போட்டிக்கு ‘ரெடி’யானான்.

‘வாருங்கள், உங்கள் பெயர் என்ன?’

‘என்னுடைய பெயர் இலங்கையன் இலட்சுமிகாந்தன்’

‘உங்கள் வயது என்ன?’

‘புரட்டாதியில் முப்பது தொடங்குகிறது’

‘உங்கள் பொழுதுபோக்குகள் எவை எவையென்று கூறமுடியுமா?

‘சிப்பி எரித்தல்

சிகரெட் புகைத்தல்

சீல் சாராயம் குடித்தல்

சினிமா பார்த்தல்’

‘என்ன எல்லாம் சீனா வரிசையில் வருகிறது?’

‘இனிக் கேட்டால் பூனா வரிசையில் வரும்!’

‘சரி உங்களுக்கான கேள்வி, மன்னார் மாவட்ட விடுதலைப்புலிகளின் தளபதி லெப்டினன்ட் கேணல் விக்ரர் எப்போது வீரமரணம் அடைந்தார்? திகதி, மாதம், ஆண்டு சொல்லவேண்டும்?’

**விக்ரர்**

இலட்சுமிகாந்தன் தலையைச் சாய்த்துக் கண்களை மூடி யோசித்தான். இன்னொரு தடவை சாரத்தை அவிழ்த்து உதறிக் கட்டிக்கொண்டான். பின்பு ஏர்னஸ்டை மூஞ்சிக்கு மூஞ்சியாய்ப் பார்த்து 'ஓம் விக்ரர் அண்ணா செத்துப்போய் விட்டார். அது பற்றி எனக்கும் சரியான மனவருத்தம்' என்றான்.

'சுற்றி வளைத்துப் பேசுதல் தவிர்க்கப்படவேண்டும். லெப்டினன்ட் கேணல் விக்ரர் எப்போது வீரமரணம் அடைந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா?'

'விக்ரர் அண்ணா ஒரு திறமான போராளி. அவர் எப்போது வீரமரணம் அடைந்தார் என்பது செக்கன், நிமிசம் உட்பட எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதை உமக்குச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை. என் வீட்டைக் கொழுத்தின நாய் நீ! நீயும் ஒரு மனுசனென்று வெட்கமில்லாமல் வேட்டியைக் கட்டிக்கொண்டு மேடையில் ஏறுகிறாயோ?'

**ஏர்னஸ்ட் கொலை**

பின்னொரு காலத்தில் ஏர்னஸ்ட் பனைத்தீவு படகுத்துறையில் வைத்து இருளில் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டான். அவனை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் வெட்டிக் கொன்றதாக ஒரு கதை உண்டு. ஏர்னஸ்டுக்குக் காரைதீவு கடற்படையினரோடு தொடர்பிருந்ததைக் கண்டுபிடித்து ஏர்னஸ்டைப் புலிகளே வெட்டிக் கொன்றதாக இன்னொரு கதை உண்டு. எனக்கென்னவோ இலட்சுமிகாந்தன்தான் ஏர்னஸ்டை வெட்டிக் கொன்றிருப்பான் என்று நினைக்கத் தோன்றுகிறது.

ம்



**1986**

ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தாறாம் ஆண்டின் கடைசித் துண்டில் என் நாட்டின் சிறைகளெல்லாம் நிரம்பி வழியலாயின. தமிழ் மக்களின் சனத்தொகையில் 12.6 விழுக்காடு மக்கள் ஊறாத்துறை கடற்கோட்டை முதல் காலியின் பூஸா வரை சிறைகளில் அடைக்கப்பட்டனர். இரத்தினங்களின் நாடு சிறைகளின் நாடாய் மாறிப் போயிற்று. எங்கள் பி மண்டபத்துக்குக் கூட்டம் கூட்டமாகப் புதிய கைதிகள் அழைத்துவரப்பட்டு அடைக்கப்பட்டனர். ஏற்கனவே உமலில் பனங்கிழங்குகளை அடுக்கிய சாங்கத்தில்தான் நாங்கள் படுத்துக்கிடந்தோம். இப்போது முறைவைத்துத் தான் எங்களால் தூங்க முடிந்தது. ஒரு 'செட்' தூங்க இன்னொரு 'செட்' விழித்திருக்கும். இனிப் புதிதாக ஒருவரைக் கைது செய்வதானால் கூட ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஒருவரை விடுவித்தே ஆகவேண்டும் என்ற நிலை.

நீண்ட காலங்களாகச் சிறையிலிருப்பவர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு நிறுத்தப்படுகையில் அவர்கள் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டால் அவர்கள் ஏற்கனவே சிறையில் கழித்த காலங்களைத் தண்டனைக்காலமாகக் கருதி நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டது. நடப்பிலிருக்கும் நிலைமைகளை உன்னிப்பாகக் கவனித்துவந்த நானும் பக்கிரியும் ஒரு வேலை செய்தோம். எங்களோடு நீதி, நியாயம் பேசி மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பிவர மறுத்த சவரிமுத்து பாதிரியார் இப்போது எங்களுடன் தான் வெலிகடச் சிறையின் பி மண்டபத்தில் இருக்கிறார். அவர் மீது பெரிய குற்றச்சாட்டுக்கள் ஏதுமில்லை. 'பயங்கரவாதிகள்' ஆயுதங்களை மறைத்துவைக்கத் தனது வீட்டில் இடம் கொடுத்தார் என்பதே அவர் மீதிருந்த வழக்கு. வயதான பாதிரியார் சிறைக்குள் பெரிதும் சிரமப்பட்டார். நீரிழிவு நோய் வேறு அவரைத் துன்புறுத்தியது. நானும் பக்கிரியும் பாதிரியாரின் மண்டையைக் கழுவத் தொடங்கினோம்.

'ஃபாதர் அடுத்தமுறை உங்கள் வழக்கு விசாரணைக்கு

**சுற்றவாளி**

வரும்போது நீதிமன்றத்தில் உங்களைக் குற்றவாளி என்று ஒப்புக் கொள்ளுங்கள். உங்கள் சமூகத் தகுதியையும் வயதையும் நீங்கள் சிறையில் கழித்த காலங்களையும் கணக்கில் எடுத்து நீதிமன்றம் உங்களை விடுதலை செய்வதற்கு ஒரு வாய்ப்பிருக்கிறது'

'அது ஒருபோதும் நடக்காது. கடவுளின் பெயரால் சொல்கிறேன், நான் சுற்றவாளி'

'சும்மா ஊத்தைவாளிக் கதை கதைக்காதீர்கள்... ஃபாதர், நீங்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டால் உடனே உங்களை விடுதலை செய்துவிடுவார்கள்'

**ரோம்**

'நான் குற்றமற்றவன். அவர்கள் என்னிடம் அந்தப் பொதியில் கொஞ்சம் திறிபோசா மாவு பக்கற்றுக்கள் இருக்கின்றன என்று சொல்லித்தான் அதை எனது வீட்டில் வைத்துவிட்டுப்போனார்கள்'

'இதுவும் ஒரு கதையா ஃபாதர்? இதை நாங்களே நம்ப மாட்டோமே! நீங்கள் இறப்பதற்கு முன்பு மறுபடியும் ஒரு முறை ரோமுக்குப் போய் ஒரு கோப்பை சிவப்பு வைன் குடித்து ஒரு துண்டு சீஸும் கடிக்க வேண்டாமா?

**32 வருடங்கள்**

சாத்தான் ஏவாளின் புத்தியைப் பிசக்கியது மாதிரி நாங்கள் மெள்ள மெள்ளப் பாதிரியாரை ஆசை காட்டித் தயார் செய்தோம். பாதிரியாருக்கு அரைகுறை மனதுதான். பாதிரியார் விசாரணைக்காக மறுபடியும் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது சவரிமுத்து பாதிரியார் நீதிபதியின் முன் தான் குற்றவாளி என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். நீதிபதிக்கு என்ன பிரச்சனையோ தெரியவில்லை. பைத்தியக்காரன். அவன் பாதிரியாருக்கு முப்பத்தியிரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்தான். மாலையில் பாதிரியாரோடு நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட மற்றக் கைதிகள் திரும்பிவந்து பாதிரியாருக்கு முப்பத்தியிரண்டு வருடங்கள் கொடுக்கப்பட்ட கதையை எங்களுக்குச் சொன்னார்கள். பாதிரியார் தண்டனை வழங்கப்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டிருந்த L பிரிவு சிறையில் அடைக்கப்பட்டிருப்பார். அப்போது மாலை மூன்று மணியாகிவிட்டதால் H பிரிவின் வாயில் கதவு சிறைக்காவலர்களால் மூடப்பட்டது.

அடுத்த நாள் காலையில் நானும் பக்கிரியும் முதல் வேலையாக L கட்டடத்துக்கு, சவரிமுத்து பாதிரியாரைப் பார்ப்பதற்காகப் போயிருந்தோம். பாதிரியார் L மண்டபத்தின்



**சீருடை**

சுவர் ஓரத்தில் தண்டனை வழங்கப்பட்ட கைதிகளின் சீருடையான வெள்ளை அரைக்காற்சட்டையும் 'கொலர்' இல்லாத வெள்ளை அரைக்கை சட்டையும் அணிந்து முகட்டைப் பார்த்து மல்லாக்கப் படுத்துக்கிடந்தார். நாங்கள் அவரின் அருகில் சென்று அமர்ந்ததை அவர் கண்டும் காணாதது போலக் கிடந்தார். நான் 'ஃபாதர்' என்று மெதுவாகக் கூப்பிட்டேன். சவரிமுத்து பாதிரியார் துள்ளி எழுந்தார். தனது வலது உள்ளங்கையை எனது முகத்துக்கு நேரே 'அவக்'கென்று விரித்துக் காட்டி 'முட்டாள் வேசை மக்களே! உங்களின் முட்டாள்தனமான கதையைக் கேட்டு நான் நரகத்தில் மாண்டு போனேனே!' என்றார். உடனே மறுபடியும் அவர் மல்லாக்கப் படுத்துவிட்டார்.

**வீரம்**

நானும் பக்கிரியும் இரவுபகலாகத் தீர ஆலோசனை செய்தோம். நாங்கள் வெறுமனே வெலிகட சிறைக்குள் உட்கார்ந்திருப்பதால் ஆகப்போவது எதுவுமில்லை. நாங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு எங்களுக்கு தண்டனை வழங்கப்பட்டால் அது குறைந்தபட்ச தண்டனையாக இருக்குமெனில் நாங்கள் தண்டனைக்காலம் முடிய வெளியே சென்று போராட்டத்தைத் தொடரலாம். 'சோத்து மாடுகளாகச் சிறையில் இனியும் கிடக்க முடியாது. தவிர நாங்கள் இருவருமே பல்வேறு நடவடிக்கைகளுக்காகக் கைது செய்யப்பட்டிருந்தாலும் அவற்றின் மீது வழக்குகள் எதுவும் தொடுக்கப்படாமல் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழேயே நாங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறோம். எங்கள் மீது போடப்பட்டுள்ள ஒரேயொரு வழக்கு மட்டக்களப்பு சிறையுடைப்பு வழக்குத்தான். எங்கள் இருவரில் யாராவது ஒருவர் விடுதலையானால் கூட விடுதலையானவர் மற்றவரை எப்பாடுபட்டாவது யாரின் தாலியை அறுத்தாவது சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும். வெலிகட சிறையிலிருக்கும் அரசியல் கைதிகளின் பாடுகளையும் பிரச்சனைகளையும் உலகுக்கு அறிவிக்க எல்லாவித முயற்சிகளும் செய்ய வேண்டும். நாங்கள் எங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும் தண்டனைகளையும் ஏற்றுக்கொள்ள முடிவு செய்தோம். 'தண்டனையை ஏற்றுக்கொள்வதற்கும் ஒரு வீரம் வேண்டும்' என்று பக்கிரி என்னிடம் சொன்னார்.

நாங்கள் கொழும்பு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட அந்த நாளை என்னால் மறக்கவே முடியாது. நீதிமன்றத்தின் ஒவ்வொரு அசைவும் அம்மியில் பொழிந்த புள்ளியாக என்

மனதில் கிடக்கிறது. புள்ளிகள் நிரவும்போதெல்லாம் நான் மறுபடியும் பொழியத் தயங்குவதும் கிடையாது. பாதிரியாருக்குத் தண்டனை வழங்கிய நீதிபதியான எம்.டபிள்யூ. கொடித்துவக்கே உயரத்தில் அமர்ந்திருந்தான். அவனின் பெரிய சற்சதுர கரிய மூஞ்சி ஒரு சிலையின் மூஞ்சி போல ஆடாமல் அசையாமல் நின்றிருந்தது. அவன் முன்னால் புழுதி கிளம்பிய மேசையில் மஞ்சளும் சிவப்புமாய்க் கோப்புகள் கிடந்தன. நீதிபதிக்குக் கீழே இடப்பக்கத்தில் சிவந்த பெண்ணொருத்தி கறுப்பு நிறச் சேலையில் தட்டச்சு செய்து கொண்டிருந்தாள். விசாரணை ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீண்டது. அரசு தரப்பு வழக்கறிஞன் நானும் பக்கிரியும் மரணதண்டனைக்குக் கூடத் தகுதியுள்ள தேசத்துரோகிகள் என்றான். அவனின் வாயில் எச்சில் தெறித்துப் பறக்க அவனின் கடைவாயில் வெள்ளை நுரை ததும்பியது. நானும் பக்கிரியும் சிறிலங்கா தண்டனைச் சட்டத்தின் கீழ் ஏழு பிரிவுகளில் எங்கள் மீது சுமத்தப்பட்டிருந்த ஒன்பது குற்றச்சாட்டுக்களையும் ஒன்று விடாமல் ஏற்றுக்கொண்டோம். நீதிபதி ஆடாமல் அசையாமல் இருந்தான். அவன் எங்களை ஒரு கேள்வி கூட கேட்கவில்லை. 'நீங்கள் குற்றவாளியா? சுற்றவாளியா?' போன்ற சடங்குத்தனமான கேள்விகளையெல்லாம் நீதிபதியின் கீழே வலது பக்கத்தில் நின்றிருந்த நீதிபதியின் 'சிண்' தான் கேட்டான். நீதிபதி பச்சை மை பேனாவால் பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டேயிருந்தான். கடைசியில் அவன் வாயைத் திறந்து சிங்களத்தில் தீர்ப்பை வாசிக்க ஆரம்பித்தான். நான் அவனது வாயையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தேன். என் நெஞ்சுக்குள் தண்ணீர் வற்றியிருந்தது. நீதிபதி சற்றே நிறுத்தி சர்வ அலட்சியமாக 'நிதாஸ்' என்று சொல்லி எங்களைப் பார்த்தான். 'அவன் என்ன சொல்கிறான்?' என்று பக்கிரி என்னைக் கண்களால் கேட்டார். நான் பக்கிரியின் கையை இரகசியமாகப் பற்றினேன். அந்த நிமிடத்தில் அதே நீதிமன்றத்தில் அதே பைத்தியக்கார நீதிபதி என்னையும் பக்கிரியையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டான். விடுதலை!

**கொடித் துவக்கு**

**நிதாஸ்**

ம்



நானும் பக்கிரியும் ஆளுக்கு அய்ம்பது ரூபாய்களை லஞ்சமாகக் கொடுத்தால் உடனடியாகவே எங்களின் விடுதலைப் பத்திரங்களை வழங்கிவிடுவதாகவும் அல்லது மாலையில் 'கோர்ட்' நடவடிக்கைகள் முடியும் வரை நாங்கள் காத்திருக்க நேரிடும் என்றும் நீதிமன்ற எழுதுவினைஞன் எங்களிடம் சொன்னான். என்னிடம் இருநூறு ரூபாய் இருந்தது. சென்ற முறை எனது தாயார் சிறைச்சாலைக்கு என்னைப் பார்க்க வரும்போது காதுத் தோடுகளை அடைவு வைத்து வாங்கிய காசு என்று என்னிடம் அதைக் கொடுத்துவிட்டுப் போயிருந்தார். பக்கிரியிடம் பத்து சதம் கூடக் கிடையாது. எங்கள் இருவருக்கும் ஊர் போய்ச்சேர காசுவேண்டும். எனவே நான் 'பஹறா' கொடுக்க மறுத்து விட்டேன். தவிரவும் நான் மாலை வரை நீதிமன்றத்தில் அமர்ந்திருக்க அப்போது விரும்பினேன். அதிலே எனக்கு ஒரு 'த்றில்' கிடைத்தது என்று நினைக்கிறேன். சுதந்திர மனிதனாக, விடுதலை பெற்ற மானிடனாக நீதிமன்றத்தின் வாங்குகளில் அமர்ந்திருந்து நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படும் கைதிகளின் மேல் நான் பெருத்த அனுதாபத்தைப் பொழிவதைக் கூட என் ஆழ்மனம் விரும்பியிருக்கக் கூடும். அல்லது இருட்டிலே கிடந்தவனுக்கு வெளிச்சம் பழக சிறிது அவகாசம் தேவைப்பட்டிருந்திருக்கலாம். நான் மாலை வரை நீதிமன்றத்தில் உட்கார்ந்து இருந்தேன்.

**விடுதலைப் பத்திரம்**

மாலை நான்கு மணிக்குப் பின்பாக எங்கள் விடுதலைப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு நானும் பக்கிரியும் நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்தோம். நகரம் முழுவதும் ஒலிபெருக்கிகளைக் கட்டிச் சிறுவர்கள் 'அத... அத... வாஸனாவ' என்று கூவியபடியே இருந்தார்கள். நான் அந்த அர்த்தப் பொருத்தத்தை எண்ணி இளித்தேன். நானும் பக்கிரியும் வீதிகளிலே நடக்க விரும்பினோம். கொழும்பு நகரத்தின் காற்றில் ஈரப்பதம் மிதந்துகொண்டிருந்தது. எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் நீல நிற ஜீன்ஸும் கறுப்பு அரைக்கைச் சட்டையும் அணிந்திருந்தேன். பக்கிரி வெள்ளை நிறத்தில் சாம்பல் நிறக் கோடுகள் போட்ட முழுக்கைச்

**வாஸனாவ**

சட்டை அணிந்து கறுப்பு நிற முழுக்காற்சட்டையைச் சட்டையின் மேலால் மார்பில் ஏற்றிக் கட்டியிருந்தார். அவர் மிக்க நிதானமாக இடமும் வலமும் அண்ணாந்து பார்த்து தலையை ஆட்டியவாறே அடிமேல் அடி வைத்து நடந்து வந்தார். நாங்கள் இருவரும் பழைய சோனகத் தெருவால் வந்து மணிக்கூட்டுச் சந்தியில் ஏறி கெலிங் பாறயால் அய்ந்து லாம்படி சந்திக்கு அன்னநடை நடந்துவந்து சேர்ந்த போது நேரம் இரவு ஏழு மணிக்கு மேலாகியிருந்தது. நாங்கள் இன்றைய இரவு உணவைச் செக்கட்டித்தெரு தீவாரின் 'சோற்றுக்கடையில்' சாப்பிடுவது என்று முடிவு செய்தோம்.

**செக்கட்டித் தெரு**

செக்கட்டித்தெரு 'கதிரேசன் ஈற்றிங் ஹவுசில்' எங்களுக்கு இலை போடப்பட்டது. புழுங்கல் அரிசிச் சோறு, விளை மீன் குழம்பு, கத்தரிக்காய் பால்கறி, பொன்னாங்காணி வறை, ரசம், சொதி. பக்கிரி வாழை இலையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். எனக்குப் பதற்றம் தொற்றியது. இப்போது நேரம் எட்டு மணியாகிறது. எப்படியும் பக்கிரி சாப்பிட்டு முடிய மூன்று மணி நேரங்கள் ஆகலாம். அதுவரை 'கதிரேசன் ஈற்றிங் ஹவுஸ்' மூடாமல் இருக்க வேண்டுமே! ஆனால் அலுமினியக் கோப்பையைப் போல வாழை இலையைத் தூக்கிக்கொண்டு நடந்து திரிய முடியாது என்பதில் ஒரு சிறு ஆறுதல். நான் சாப்பிட்டு முடிந்தவுடன் நேரே முதலாளியின் மேசைக்குச் சென்று நானும் தீவான் தான் என்று அறிமுகப்படுத்திக்கொண்டேன். 'நாங்கள் சிறையிலிருந்து விடுதலையாகிவரும் இயக்கக்காரர்கள் எங்களுக்கு இன்றிரவு படுப்பதற்கு ஓர் இடம் ஏற்பாடு செய்து தர முடியுமா?' என்று கேட்டேன். முதலாளி என்னை ஏற இறங்கப் பார்த்தான். நாங்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்த வர்கள்? என்று அவன் கேட்பான் என்று எதிர்பார்த்தேன்.

**தீவான்**

ஆனால் அவனோ 'பனைத்தீவில் நீங்கள் எங்கே?' என்று கேட்டான். 'தோமையப்பர் கோயில் பங்கு' என்றேன். பக்கிரி சாப்பிட்ட பின்பு தான் கடையைக் கழுவி மூடினார்கள். அன்றிரவு நாங்கள் 'கதிரேசன் ஈற்றிங் ஹவுஸ்' மேல் மாடியில் தங்கினோம். காலையில் கொழும்பிலிருந்து வடக்கே செல்லும் புகையிரதம் எத்தனை மணிக்கு என்று விசாரித்து விட்டு நீட்டி நிமிர்ந்து நிம்மதியாகத் தூங்கினேன். பக்கிரி வெகு நேரம் வரை கடைப்பொடியன்களோடு பேசிக் கொண்டிருந்தார். நான் இடையில் ஒரு தடவை அருண்ட போது பக்கிரி தொழிற்சங்கம் குறித்துக் கடைப்பொடியன் களிடம் பேசிக்கொண்டிருந்தார்.



**ரயில் நிலையம்**

அதிகாலையில் எழுந்து அள்ளிக் குளித்துவிட்டு நானும் பக்கிரியும் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்குச் சென்றோம். அப்போது வடக்கே ரயில் சேவை வவுனியா வரையில் தான் இருந்தது. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான புகையிரதத் தண்டவாளங்களைப் போராளிகள் பெயர்த்துப்போட்டிருந்தார்கள். இதனால் இராணுவத் துக்கான ரயில் விநியோகச் சேவைகளை அவர்கள் தடுத்து நிறுத்தியிருந்தார்கள். போராளிகள் சிலிப்பர் கட்டைகளையும் தண்டவாளங்களையும் பெயர்த்துச் சென்று அவற்றால் தமது காவலரண்களையும் பதுங்குகுழிகளையும் அமைத்துக் கொண்டார்கள். நான் வவுனியாவுக்கு இரண்டு பயணச் சீட்டுகளை வாங்கிக்கொண்டேன்.

'வவுனியாவில் இருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்குப் போய்விடலாம்' என்று பக்கிரியிடம் சொன்னேன். பக்கிரி தலையாட்டி எனது திட்டத்தை ஆமோதித்தார். பின் 'யாழ்ப்பாணத்துக்குப் போனதும் நான் நேரே எங்கள் இயக்கத்தின் முகாமுக்குச் சென்று தான் தங்குவேன். நீயும் வேண்டுமானால் அங்கே தங்கலாம்' என்றார். இதை அவர் கொழும்பு புகையிரதநிலையத்தின் முதலாவது இலக்க மேடையில் நின்று சொன்னார். இங்கிருந்து வவுனியா போய் பின் அங்கிருந்து யாழ்ப்பாணம் போய், பின் ஊறாத்துறைக்கு நான் போகும்போது இரவாகி விடலாம். அதன் பின் பனைத்தீவுக்கு லோஞ்சி சேவை இருக்காது. எனவே அன்றைய இரவைப் பக்கிரியுடன் இயக்கத்தின் முகாமிலேயே கழிப்பது என்று தீர்மானித்தேன்.

**பயணம்**

புகையிரதம் கோட்டை புகையிரத நிலையத்துள் நுழைந்தது. ஆமிக்காரரிடம் இவ்வளவு அடிவாங்கியும் யாழ்ப்பாணிகளின் வீரவிளையாட்டுகளுக்கு எதுவித பங்கமும் நேரவில்லை. அவர்கள் ரயில் ஓடிவரும்போதே படிகளில் தாவி ஏறினார்கள். ஜன்னலுக்குள்ளால் உடலை நுழைத்து 'கோர்னர்' சீற்றத்தில் துள்ளிவிழுந்தார்கள். எனக் கும் பக்கிரிக்கும் உட்கார இருக்கைகள் கிடைக்கவில்லை. நாங்கள் கதவைத் திறந்துவிட்டு ரயிலின் வாசற்படியில் குந்திக்கொண்டோம் அந்தப் பயணம் எங்களுக்கொரு அருமையான பயணமாய் அமையட்டும் என்று கடவுள் எங்களை வாழ்த்தியிருக்க வேண்டும். நான் உல்லாசமாகச் சீட்டி ஒலித்தேன். வியாங்கொட கழிந்ததும் மதவாச்சி வரை சிங்கள தேசத்தின் அழகு சொல்லி மாளாதது.

**வாழ்த்து**

ரயிலின் பக்கவாட்டில் கினிக் கோழிகள் சிறகடித்துப் பறந்து அழகாக வீழ்ந்தன. சிறிய மலைக் குன்றுகளின் மடியில் பவுண் போல நெல்வயல்கள் விரிந்துகிடந்தன. வயல்களின் வரப்பிலே 'லைன்' அடித்தது போல் நடந்து சென்ற வெள்ளுடை உடுத்த சிறுமிகள் எங்களுக்குக் கை அசைத்தார்கள். சிறுமிகளின் கால்களை வளைத்து சிற்றாறுகள் கிளை பிரிந்தன. வேலிகளில்லாத சிங்களக் குடியானவர்களின் சின்னஞ்சிறு அழகிய வீடுகளின் முன்னே குந்தியிருந்து தென்னோலைகளை முடைந்துகொண்டிருந்தவர்கள் தலைகளைத் தூக்கி என்னைப் பார்த்தனர். தூரத்தே தெரிந்த பவுத்த விகாரைகளின் கலசங்கள் மின்னிப் போயின. என் விடுதலை வாழ்த்தப்பட்டது.

**ஆனையிறவு**

மதியத்துக்குச் சற்று முன்பின்னாக நாங்கள் வவுனியாவுக்கு வந்துசேர்ந்தோம். வவுனியா நகரம் வெயிலில் தகித்துக் கிடந்தது. நாங்கள் அங்கே பஸ் பிடித்து யாழ்ப்பாணத்துக்குப் பயணத்தைத் தொடர்ந்தோம். நான் பஸ் வண்டியின் சுகமான ஓட்டத்திலே கண் அயர்ந்துபோனேன். பக்கிரி என்னைத் தட்டி எழுப்பினார். சோம்பலாய் விழித்தேன். 'ஆனையிறவு சோதனைச்சாவடி வந்து விட்டது' என்றார். நான் ஜன்னலுக்குள்ளால் வெளியே பார்த்தேன். உப்பளங்களுக்கு நடுவே இராணுவ முகாம்கள் கிடந்தன. கைகளை வெளியே நீட்டி உப்புக்காற்றை அளைந்தேன். பயணிகள் வரிசையாக இறங்கி சோதனைச்சாவடியை நோக்கி நடந்தனர். அவர்களோடு நானும் பக்கிரியும் நடந்து சென்று வெறும் கைகளோடு சோதனைச்சாவடியின் மேசை முன் நின்றோம். வெள்ளைக் கையுறைகள் அணிந்திருந்த மிலிட்டரி பொலிசுக்காரன் 'பொதிகள் எதுவும் கொண்டு வரவில்லையா?' என்று கேட்டான். 'இல்லை' என்றோம். உடனே அவன் 'எங்கே மறியல் வீட்டிலிருந்தா வருகிறீர்கள்?' என்று கேட்டான். 'ஆமாம்' என்று சொல்லி எங்கள் விடுதலைப்பத்திரங்களை அவனிடம் கொடுத்தோம். அவன் அவற்றை வாங்கிக் கொண்டு ஒரு பலகைத் தடுப்பிலான அறைக்குள் நுழைந்தான். இரண்டு நிமிடங்களில் திரும்பி வந்து எங்கள் விடுதலைப் பத்திரங்களை எங்களிடம் கொடுத்துவிட்டு 'வாழ்த்துக்கள்! போய்வாருங்கள்' என்று புன்னகைத்தான். நாங்கள் அவனின் வாழ்த்துக்கு நன்றி சொல்லிவிட்டு சோதனைச்சாவடியைக் கடந்து எங்களின் பஸ்ஸுக்காகக் காத்து நின்றோம். சோதனைச்சாவடியைக் கடந்து பஸ் வந்ததும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தோம். பஸ் வடக்கே ஓடியது.



**இயக்கச்சி**

தூரத்தே நான் தொய்யாமரக் காடுகளைப் பார்த்தேன். எங்களின் பஸ் இயக்கச்சி கிராமத்துள் நுழைகிறது. சிறிலங்காவின் ஆயுதப்படையினரின் சப்பாத்துக் கால்கள் நுழைய முடியாத தமிழீழப் பகுதிக்குள் பஸ் நுழைகிறது. சாவின் கரங்கள் தீண்ட முடியாத எல்லைக்குள் நான் நுழைகிறேன். என் விடுதலை இப்போது அதன் முழுமையான அர்த்தத்தில் சாத்தியமாகிறது. இந்தப் புள்ளியில் தமிழீழப் போராளிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் தொடங்கி வடக்கே விரிகிறது. பஸ் மீண்டும் நிறுத்தப்பட்டது. வீதியின் இருமருங்குகளிலும் வாகனங்கள் வரிசையாக நின்றன. நான் பஸ்ஸில் எங்கள் இருக்கைக்கு முன் இருக்கையில் அமர்ந்திருந்த சுருட்டை முடி இளைஞனிடம் 'எதற்காக பஸ்ஸை இங்கே நிறுத்துகிறார்கள் என்று கேட்டேன்? அந்த இளைஞன் என்னையும் பக்கிரியையும் வித்தியாசமாகப் பார்த்தான். பின் இரகசியத்தொனியில் 'உங்களுக்குத் தெரியாதா? இன்று காலையில் புலிகள் - இந்த இடைவெளியில் அந்த இளைஞன் பக்கிரி சார்ந்திருந்த இயக்கத்தின் பெயரை உச்சரித்தான் - இயக்கத்தைத் தடை செய்துவிட்டார்கள். அந்த இயக்கக்காரர்களைத் தேடித்தான் வாகனச் சோதனை நடக்கிறது என்று நினைக்கிறேன்'

**தடை**

நான் பேயடித்தவன் போல் பக்கிரியைப் பார்த்தேன். இந்த மனிதன் இயக்கம் தொடங்கிய நாளன்று சிறைக்குச் சென்றவன் இவன் தன் தாய்நிலத்துக்கு திரும்பி வரும்போது இவனது இயக்கமே தடை செய்யப்பட்டுவிட்டது. பக்கிரி ஒரு தடவை தன் தாடியைச் சொறிந்துகொண்டார். பின் நிதானமாகத் தனது சட்டைப்பையிலிருந்து கொழும்பு நீதி மன்றம் வழங்கிய விடுதலைப்பத்திரத்தைக் கையில் எடுத்தார். அவர் அந்த விடுதலைப்பத்திரத்தை நிதானமாக வாயில் போட்டு மென்று விழுங்கினார். பின் என்னைப் பார்த்து 'சுவாமி அவர்கள் என்னை விசாரிக்கும்போது நான் உன்னை எனக்குத் தெரியாது என்று சொல்லிவிடுவேன். நீயும் அதற்கு ஏற்ற மாதிரி தாளம் போடு' என்றார். நான் மண்டையை மண்டையை ஆட்டினேன். ஜன்னல் ஓரத்தில் இருந்த நான் எதேச்சையாக இடம் மாறுவதுபோல் பக்கிரியை ஜன்னல் ஓர இருக்கைக்கு மாற வைத்தேன். பக்கிரியை ஜன்னலுக்குள்ளால் வெளியே வேடிக்கை பார்ப்பதுபோல பாவனை பண்ணச் சொன்னேன். பக்கிரியின் தாடியும் கோலமுமே அவர்களைச் சந்தேகமுறச் செய்யப் போதுமானது என்று நம்பினேன். பஸ் அங்கு தரித்து நின்ற

**கடமை**

ஒவ்வொரு விநாடியுமே என்னை நரகத்து முள்ளாய்க் கிழித்துப்போட்டது. இரண்டு இளைஞர்கள் நவீன ரகத் துப்பாக்கிகள் பளபளக்க பஸ்ஸுக்குள் ஏறினார்கள். அவர்கள் சாரத்தை சண்டிக்கட்டாகக் கட்டி, தொள தொளத்த தடித்த சட்டைகள் போட்டிருந்தார்கள். அவர்களின் மார்பிலே ரவைக்கூடுகள் தொங்கின. கண்களைச் சாய்த்து பஸ்ஸின் உள்ளே இடமும் வலமுமாகப் பார்த்தவாறு எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். என்னருகே வந்தவுடன் ஒரு இளைஞன் நின்றான். அவன் விழிகளிலும் உதடுகளிலும் புன்னகை துள்ளியது. என் இருதயம் அப்போது நின்று போனது.

'அண்ணே, எங்கேயிருந்து வருகிறீர்கள்?'

'கொழும்பிலிருந்து வருகிறேன்...'

'எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள்?'

'பனைத்தீவுக்கு, அது என்னுடைய ஊர்'

'சரி. போய்வாருங்கள்; விசாரித்ததையிட்டுக் குறை விளங்காதீர்கள். அது எங்களுடைய கடமை'

நான் மௌனமாகத் தலையாட்டினேன். அவர்கள் பஸ்ஸில் வேறு யாரையும் விசாரிக்கவில்லை. இறங்கிப்போய் எங்கள் பஸ்ஸைப் போகுமாறு சைகை செய்தார்கள். பஸ் கிளம்பியது. பக்கிரி தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டிருந்தார். பஸ் மீண்டும் வடக்கே கிளம்பிற்று.

ம்



**அய்ந்து நிமிடங்கள்**

இயக்கச்சியிலிருந்து எங்கள் பஸ் புறப்பட்ட அய்ந்து நிமிடங்களிலேயே வீதியின் எதிர்த் திசையிலிருந்து அதிவேகத்தில் பறந்துவந்த ஒரு பச்சை நிற மினி பஸ் எங்களின் பஸ்ஸை வீதியின் குறுக்கே வழி மறித்தது. மினிபஸ்ஸில் இருந்து குதித்து இறங்கிய ஆயுதங்கள் தாங்கிய மனிதர்கள் தடதடவென எங்கள் பஸ்ஸுக்குள் புகுந்து என் தலைமுடியை அள்ளிப் பிடித்துக் கொறகொறவென இழுத்துப் போய் பச்சை நிற மினி பஸ்ஸுக்குள் என்னைத் தூக்கி வீசினார்கள். மினி பஸ்ஸுக்குள் துப்பாக்கிகளுடனும் ரொக்கற்றுகளுடனும் சிலர் இருந்தார்கள். நான் அவர்களின் காலில் வீழ்ந்தேன். பச்சை மினி பஸ் ரிவர்ஸில் போய் பிரதான வீதியிலிருந்து இறங்கி தென்னந்தோட்டங்களுக் குள்ளால் ஓடியது. இறுதியாக அது ஒரு தென்னந் தோப்புக்குள் போய் நின்றது. தென்னை மரங்களுக்கு இடையே இருந்த ஒரு சிறிய கல் வீட்டுக்குள் நான் அழைத்துச் செல்லப்பட்டேன். அது ஒரு ஆயுதக்கிடங்கென்று நான் நினைக்கிறேன். அந்த வீட்டின் நடு மண்டபத்தில் துணிகள் விரிக்கப்பட்டு, துணிகளின் மேல் புத்தம்புது ஆயுதங்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. அந்த ஆயுதங்களின் பெயர் கள் கூட எனக்குத் தெரியாது. நான் ஆமிக்காரர்களிடம் கூட இப்படியான ஆயுதங்களைப் பார்த்ததில்லை. அவர்கள் என் உடலைத் தடவித் தடவிச் சோதனை செய்து நான் ஜட்டிக்குள் பத்திரமாக சுருட்டிவைத்திருந்த விடுதலைப் பத்திரத்தை எடுத்துக்கொண்டார்கள்.

**கண் காணிப்பு**

நான் இவர்களைப் பற்றிக் கதை கதையாக அறிந்திருக் கிறேன். இவர்களின் நிர்வாகஅமைப்பே சமாளிக்க முடியாமல் திணறும் அளவுக்கு இவர்கள் தனி மனிதர்கள் குறித்த தகவல்களை அபரிதமாகத் திரட்டிவைத்திருக்கிறார்களாம். இவர்களின் உளவுத்துறைப் பின்னாலும் வேவு பார்க்கும் ஆற்றலும் கற்பனைக்கு எட்டாத திறன் கொண்டவை என்று பத்திரிக்கைகளில் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இவர்கள் இவர்களுடைய இயக்கத்தின் முழுச்சக்தியையுமே மற்றவர்களைக் கண்காணிப்பதிலேயே செலவிடுகிறார்கள் என்று தான் சொல்லத் தோன்றுகிறது. ஆனால்

இவர்களுடைய இத்தனை பேராற்றலும் என் தலையில் வந்தா இடியாக இறங்க வேண்டும்? மீசை கூட சரிவர அரும்பாத ஒரு பால்குடிப் பொடியன் இயக்கச்சியில் என்னோடு பேசி என்னில் கரவு வைக்கிறான். உடனடியாகத் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. அடுத்த அய்ந்தாவது நிமிடத்தில் நான் அவர்களால் கைது செய்யப்படுகிறேன்.

விசாரணை

நான் அந்தக் கல்வீட்டின் ஒரு சிறிய அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். என் கதையைக் கேட்க அவர்கள் ஆர்வமாய் இருப்பதாகச் சொன்னார்கள். உண்மை மட்டுமே என்னைக் காப்பாற்றும் வல்லமை படைத்தது என்று அவர்கள் எனக்கு அடிக்கடி அறிவுறுத்தினார்கள். என் கதை வளர்ந்துகொண்டே போனபோது என் நாவின் மீதான கட்டுப்பாட்டை என் மூளை இழந்து போயிற்று. துப்பாக்கி களின் நடுவே என் நாவு ஓயாமல் எச்சில் தெறித்துத் துடித்தது. நான் உண்மையை எழுதுகிறேன். அதை நீங்கள் நம்ப வேண்டும். என் கதையில் எந்த நிமிடத்தில் எந்த இடத்தால் பக்கிரி வந்து சேர்ந்தார் என்பதை நான் அறிந்திருக்கவில்லை.

என் நான்கு வருடக் கதையில் பக்கிரியும் என்னுடன் சேர்ந்தே வருகிறார். பக்கிரியில்லாத என் கதை பாதிக் கதைதான்.

கைது

இப்போது அவர்கள் பக்கிரியின் கதையைக் கேட்க ஆரம்பித்தார்கள். நான் பக்கிரியின் கதையைச் சொல்லச் சொல்ல அவர்கள் 'ம்' கொட்டிக் கேட்டார்கள். அடுத்த அய்ந்தாவது நிமிடத்தில் அவர்கள் பக்கிரியைச் சாவகச்சேரியில் வைத்துக் கைது செய்தார்கள்.

ம்



சிறை

அதுவொரு பெரிய வெள்ளை நிற இரட்டை மாடிக் கட்டடம். அந்தக்கட்டடத்தின் மாடியில் நின்று பார்த்தால் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியும் கல்லூரியின் விளையாட்டு மைதானமும் தெரியும். அந்தக் கட்டடத்தின் முதலாவது மாடியில் நாங்கள் அய்ம்பத்தாறு தமிழர்கள் புலிகளால் சிறை வைக்கப்பட்டிருந்தோம். அந்தச் சிறையில் இருந்தவர்களில் அரைவாசிப் பேர்கள் மாற்று விடுதலை இயக்கங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களைத் தவிர மிகுதிப்பேர் திருட்டு, கசிப்புக் காய்ச்சியது, குடித்துவிட்டு இயக்கத்தைத் திட்டியது, வேறு இயக்கப் பொடியளுக்கு 'அன்னந்தண்ணி' கொடுத்தது என்று பல பத்துக் குற்றம் சாட்டப்பட்டவர்கள்.

தகவல்கள்

நானும் பக்கிரியும் இங்கே அடைக்கப்பட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகின்றன. அவர்களுக்கு என்னைஅடிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த் ததற்கு அதிகமாகவே நான் அவர்களுக்குத் தகவல்களை வழங்கியிருக்கிறேன். பனாகொடயிலும் வெலிகடயிலும் என்னோடு இருந்த மற்றைய இயக்கப் போராளிகளைக் குறித்து அவர்கள் என்னிடம் தோண்டித் தோண்டி விசாரித்த போது நான் எல்லாவற்றையுமே சொன்னேன். என் தகவல்களால் அவர்கள் திருப்தி அடையாதபோது அவர்கள் எதிர்பார்க்கும் தகவலை நான் அவர்களுக்கு வழங்கியதற்கு என்னுடைய கற்பனைத்திறனும் சிறிதளவில் எனக்கு உதவியிருக்கிறது.

ஆனால் அவர்கள் பக்கிரியைப் போட்டு வதைத்தார்கள். இரவு பகலாக அவர்கள் பக்கிரியை விசாரணை செய்தார்கள். வெலிகட சிறையில் கூட வற்றாத பக்கிரியின் உடம்பு இங்கே அடி ஆய்க்கினைகளாலும் பட்டினியாலும் கொஞ்சம் இளைத்துப் போனது. பக்கிரி பிடிவாதமாக அவர்களுடன் ஒத்துழைக்க மறுத்தார். எந்தக் கேள்வியைக் கேட்டாலும் 'I don't know' என்று கைகளை விரித்துக் காட்டினார். அவர்கள் எப்படித்தான் வளைத்து வளைத்துக் கேள்விகள் கேட்டாலும் பக்கிரி பதறாமல் நிதானமாய்ப் பொய்களைச்

சொன்னார். பக்கிரி இரத்தம் சிந்தப்படும் வரை அவர்களால் அடிக்கப்பட்டார். பக்கிரியைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு பக்கிரியின் ஆணுடம்பில் மெழுகை உருக்கி ஊற்றியும் பார்த்தார்கள். பக்கிரி நிதானமாக 'அய்யோ... அய்யோ' என்று நிறுத்தி நிறுத்தி அலறினாரே ஒழிய 'எனக்குத் தெரியாது' என்பதைத் தவிர அவரின் வாயிலிருந்து இன்னொரு சொல் வரவேயில்லை. பக்கிரிக்கு ஒன்றுமே தெரியாது என்று அவர்களில் சிலரே நம்ப ஆரம்பித்து விட்டார்கள்.

'ஆனையிறவிலும் பனாகொடயிலும் பெரியவன் தான் அடிப்பான். இங்கே வருகிறவன் போகிறவன் எல்லாம் என்னில் நொட்டிவிட்டுப் போகிறான். இதைத்தான் சுவாமி அதிகாரத்தைப் பரவலாக்குவது என்று சொல்வது' இப்படி பக்கிரி என்னிடம் அந்த நரகத்தில் நின்றும் பகிடி விட்டார். அவர்கள் திடீரென இரவில் வந்து ஒரு கைதியை நடத்திக் கூட்டிச் செல்வார்கள். அப்படிக் கூட்டிச் சென்ற எந்தக் கைதியும் திரும்பி வரும்போது நடந்து வருவது கிடையாது. தவழ்ந்து வருவான். அல்லது அவனைக் கூட்டி அள்ளிக் கொண்டு வந்து கொட்டுவார்கள்.

எங்களிடையே ராதா ஆனந்தன் என்று இரண்டு கைதிகள் இருந்தார்கள். அவர்கள் இருவரின் கால்களும்
**ராதா** ஒரே சங்கிலியால் சேர்த்து விலங்கிடப்பட்டிருந்தன. அவர்கள் இருவரும் கொழும்புத் தமிழர்கள். அவர்கள் சி.அய்.டியினர் என்ற சந்தேகத்தில் இங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் தலைகள் மொட்டையடிக்கப்பட்டிருந்தன. நாளின் ஒவ்வொரு மணி நேரமும் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். அவர்களின் கையில் ஒரு சோடாப் போத்தல் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் அந்தப் போத்தல்
**ஆனந்தன்** நிறைய ஈக்களைப் பிடித்துச் சேர்க்க வேண்டும். போத்தல் நிறையும் அன்று அவர்கள் விடுவிக்கப்படுவார்களாம். அந்த இருவரும் கால்களில் விலங்குகளோடு ஈக்களை விரட்டித் திரிந்தார்கள். இதுவரை அவர்கள் ஆறேழு ஈக்களைச் சேகரித்திருந்தார்கள்.

என்னைப் பற்றி விசாரிக்க இயக்கம் எனது ஊருக்குப் போயிருந்தபோது தான் நான் புலிகளின் சிறையில் அடைபட்டிருக்கிறேன் என்ற செய்தி எனது குடும்பத்துக்குத் தெரிந்திருக்கிறது. அவர்கள் என்னைப் பார்க்க வேண்டுமென்று இயக்கப் பொடியனிடம் கேட்டிருக்கிறார்கள்.



அவர்கள் அதற்குப் பதில் எதுவும் சொல்லாமல் வந்து விட்டார்களாம். என் அப்பா நேரே பெரிய கோயிலுக்குப் **பிஷப்**
போய் பிஷப்பைச் சந்தித்திருக்கிறார். பிஷப் கொடுத்த சிபாரிசுக் கடிதத்துடன் தலைமைமுகாமுக்குப் போயிருக்கிறார். அங்கே அனுமதி பெற்று ஒரு சனிக்கிழமை அதிகாலையில் என் அப்பா என்னைச் சந்திக்க இந்த முகாமுக்கு வந்தார்.

நான் கீழே அலுவலக அறை போன்ற ஒரு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். பெரிய மேசையின் நடுவில் முகாம் பொறுப்பாளன் உட்கார்ந்திருந்தான். மேசைக்கு அந்தப் பக்கம் என் அப்பா உட்கார்ந்திருந்தார். மேசைக்கு **அப்பா**
இந்தப் பக்கம் நான் உட்கார வைக்கப்பட்டேன். அப்பா என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். என்னிடம் அவர் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இப்போது அவர் முகாம் பொறுப்பாளனைப் பார்த்தார். பின்தலையைக் கவிழ்த்துக் கொண்டார். ஒரு நிமிடத்தில் அவர் தன் தலையை நிமிர்த்திய போது அவரின் கண்கள் சிவந்து கலங்கியிருந்தன. அவர் முகாம் பொறுப்பாளனைப் பார்த்து 'நாங்கள் மாவீரர் குடும்பம்' என்றார். பின் எனது பக்கம் கையைக் காட்டி 'இவனது தம்பி வீரச்சாவு அடைந்தவன்' என்றார். முகாம் பொறுப்பாளன் அப்பாவைக் கவனித்தான். பின் 'எங்கே அவர் வீரச்சாவடைந்தார்? அவரின் பெயர் என்ன?' என்று கேட்டான். 'அந்தப் பிள்ளையை நான் சின்ன வயதில் இருந்தே எடுத்து என் பிள்ளை மாதிரியே **மாவீரர்**
வளர்த்தேன். ராஜேந்திரன் என்று பெயர். தம்பாட்டிக் **குடும்பம்**
கடற்கரையில் சயனைட் குடித்துச் செத்துப் போனான்' இதைச் சொல்லும் போது அப்பாவின் கண்ணிலிருந்து கண்ணீர் கண்ணீராய்க் கொட்டியது. அவரின் உடல் குலுங்கியது. பொறுப்பாளன் எழுந்து என் அப்பாவின் அருகில் வந்து 'அய்யா அமைதியாய் இருங்கள், நான் கவனிக்கிறேன் இவர் மீது பெரிய பிரச்சனைகள் ஒன்றும் இல்லை. சில விபரங்களை அறிவதற்காகத்தான் இவரைத் தடுத்துவைத்திருக்கிறோம். இவர் விரைவில் விடுதலையாகி விடுவார் கவலைப்படாதீர்கள்' என்று சொன்னான்.

ஒரு நாள் மதியம் பதினைந்து இளைஞர்கள் புதிதாகக் கொண்டுவரப்பட்டு எங்களுடன் அடைக்கப்பட்டார்கள். இவர்கள் ஏற்கனவே தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் உறுப்பினர்கள். வந்துசேர்ந்த புதிய இளைஞர்களால்

ஏற்கனவே இருந்த இடநெருக்கடி இன்னும் அதிகமானது. சிறைக்கைதிகளிடையே ஒரு வகைக் கடி பரவலாயிற்று. தொடை இடுக்குகளில் வட்டம் வட்டமாய் கொப்புளங்கள் தோன்றும். வெறும் கையால் சொறிந்தால் கடி தீராது. ஒரு சோடா மூடி அல்லது ஒரு சிப்பியை வைத்து நாங்கள் தொடைகளை வறுகுவோம். இந்தக் கடிக்கு 'ரெலோ' கடி என்று பெயர்.

**சித்திர வதைக் கூடம்**

இரண்டு நாட்கள் கழித்து நாங்கள் பதின்நான்கு பேர் இரண்டாம் மாடியில் உள்ள ஒரு சிறிய அறைக்கு மாற்றப்பட்டோம். பக்கிரியும் என்னோடு இரண்டாவது மாடிக்கு வந்துவிட்டார். இரண்டாவது மாடியில்தான் சித்திரவதைக் கூடமும் இருந்தது. இதனால் பக்கிரிக்கு ஒவ்வொரு நாளும் பருத்த உடம்பைத் தூக்கிக்கொண்டு மாடி ஏறி இறங்கும் ஒரு சிரமம் குறைந்தது.

**1987 மார்ச் 30**

இரவு ஏழு மணியிருக்கலாம். நானும் பக்கிரியும் பேசிக்கொண்டிருந்தோம். என்னை இவர்கள் விரைவில் விடுதலை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். உங்களையும் விட்டுவிடுவார்கள் என்று தான் நினைக்கிறேன்' என்று பக்கிரியிடம் சொன்னேன். பக்கிரி தாடியை வருடிக் கொண்டு 'பார்க்கலாம்' என்று தலையை ஆட்டினார். 'நீங்கள் கவனித்தீர்களா? இப்போது இவர்கள் அவ்வளவு கடுமையாக நடந்துகொள்வதில்லை. சித்திரவதைகளும் சற்றுக் குறைந்திருக்கின்றன' என்றேன். பக்கிரி தலையை மேலும் கீழுமாக ஆட்டிக் கொண்டே 'இவர்கள் சும்மா இருப்பது போலத் தான் தெரியும். கவனமாய் இருந்து கொள் சுவாமி! இவர்கள் திடீரென உதாரணத்துக்கு ஒருவனைச் சுடுவார்கள்' என்றார். அப்போது நகரத்தில் ஒரு வெடிச்சத்தம் எழுந்தது. 'நாங்கள் எல்லோரும் இங்கே உள்ளே இருக்கிறோம் அங்கே ஆமிக்காரன் வாணவேடிக்கை கட்டுகிறான்' என்று பக்கிரி சலித்துக் கொண்டார்.

வெடிச்சத்தம் எழுந்து அரை மணி நேரம் சென்றிருக்கலாம்; இந்த இரட்டை மாடிக் கட்டடத்தின் கீழே ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. மாடிப்படிகளில் ஓடி வரும் சத்தமும் கேட்டது. அப்போது எங்களுக்குக் கீழே அந்தக் கட்டடம் அதிரலாயிற்று. கீழே ஒற்றைத்

**auto**

துப்பாக்கியிலிருந்து தொடர்ச்சியாகச் சன்னங்கள் வெடித்தன. யாரோ auto வில் அடிக்கிறார்கள். என்ன



ஏதென்று ஒன்றும் விளங்கவில்லை. வெளியே பூட்டப்பட்டிருந்த எங்கள் அறைக்குள் நாங்கள் பதின்நான்கு பேரும் தரையில் விழுந்து படுத்துக் கொண்டோம். இப்போது இரண்டு அல்லது மூன்று துப்பாக்கிகள் கீழே வெடித்துக் கொண்டிருக்கின்றன. நான் கண்களை இறுக மூடிப் படுத்துக்கிடந்தேன். கீழேயிருந்து சாவோலங்கள் கேட்டன.

ஒரு மணிநேரம் கழிந்திருக்கும். கீழே துப்பாக்கிச்சத்தங்கள் ஓய்ந்திருந்தன. வாகனங்கள் கிளம்பிச் செல்லும் ஒலி கேட்டது. சற்று நேரத்தில் எங்கள் அறையின் கதவு திறக்கப் பட்டது. எங்கள் எல்லோரையும் கீழே இறங்கி வருமாறு முகாம் பொறுப்பாளன் உத்தரவிட்டான். நாங்கள் பதின்நான்கு பேரும் கீழே இறங்கிப் போனோம். முதலாம் மாடியில் நான் கால் வைத்ததுமே என் கால்கள் இரத்தத்தில் நடந்தன. முதலாம் மாடியில் அடைக்கப்பட்டிருந்த அத்தனை கைதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டு ஆளுக்கு மேல் ஆள் கைகளையும் கால்களையும் விசிறிக் கிடந்தார்கள். மூளைகளும் தலைகளும் தசைகளும் முதலாம் மாடி முழுவதும் சிதறிக்கிடந்தன. என் அருகே நின்றிருந்த பக்கிரி ஓங்காளித்தார். அவரின் வாயிலிருந்து வீணீர் ஒழுகியது. அவர் தன் நெஞ்சைக் கையால் பிடித்தவாறே திரும்பவும் மாடிப் படியேறி மேலே சென்றார். அவர் மேலே செல்வதை முகாம் பொறுப்பாளன் கவனித்தான். நாங்கள் இறந்துபோன கைதிகளின் உடல்களைத் தூக்கிப் போய் முற்றத்தில் வளர்த்தினோம். ராதாவின் உடலும் ஆனந்தனின் உடலும் கால்கள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுக்கிடந்தன. என்னிடம் ஒரு சாவி எறியப்பட்டது. அந்தப் பூட்டைத் திறந்து பிரேதங்களைப் பிரிக்குமாறு எனக்கு உத்தர விட்டார்கள். ராதாவினதும் ஆனந்தனினதும் கால்களில் பூட்டப்பட்டிருந்த பூட்டு துருப்பிடித்துக் கிடந்தது. எவ்வளவு முயன்றும் அந்தப் பூட்டைத் திறக்கமுடியவில்லை. பின் துப்பாக்கியால் சுட்டு அந்தப் பூட்டை உடைத்துப் பிரேதங் களைப் பிரித்தார்கள். முற்றத்தில் வரிசையாக அடுக்கப்பட்டி ருந்த பிரேதங்களை நான் கண்களால் எண்ணினேன் 57 உடல்கள்.

இரத்தத்தால் தோய்ந்திருந்த எங்கள் உடல்களைக் கழுவக் கூட அவர்கள் அனுமதிக்கவில்லை. நாங்கள் அவசர அவசரமாக இரண்டாம் மாடிக்கு அழைத்துச் செல்லப் பட்டோம். எங்களுடனேயே மாதா என்று அழைக்கப்பட்ட

57 அந்த முகாமின் பொறுப்பாளனும் இன்னும் சிலரும் மேலே வந்தார்கள். அங்கே பக்கிரி சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். அவரின் முகம் விகாரமாய்க் கிடக்கிறது. அவரின் வாயில் நீர் வடிந்துகொண்டிருந்தது. மாதா பக்கிரியை எழுந்திருக்கச் சொன்னான். பக்கிரி அசையவில்லை. அவரின் முகம் விகாரமாய் இருந்தது. வாயில் நீர் வடிந்தது.

'யாரைக் கேட்டு நீ மேலே வந்தாய்?' மாதா கத்தினான். பக்கிரி மாதாவை நிமிர்ந்து பார்த்தார்.அவரின் முகம் விகாரமாய்க் கிடந்தது வாயில் நீர் வடிந்தது. மாதா காலால் பக்கிரியின் முகத்தில் எற்றினான்.

மாதா எங்கள் எல்லோரையும் பார்த்துச் சொன்னான். 'கிட்டு மாமாவுக்கு உங்களின் ஆட்கள்தான் குண்டு வீசியிருக்கிறார்கள்' அவன் மறுபடியும் பக்கிரியை எழுந்திருக்கச் சொன்னான். பக்கிரியின் முகம் விகாரமாய்க் கிடந்தது. அவரின் வாயில் நீர் வடிந்தது.

மாதா தன் கையிலிருந்த துப்பாக்கியை நீட்டி அதன் குழலால் பக்கிரியின் முகத்தைத் தொடப்போனான். பக்கிரி 'Fucking Weapons' என்று கூறியவாறே அந்தத் துப்பாக்கிக் குழலைத் தன் கையால் பற்றி மெல்ல புறத்தே தள்ளிவிட்டார். எங்கள் பதினான்கு பேரினதும் கண்களின் எதிரே அன்று அவர்கள் பக்கிரியின் வாயைக் கைகளால் கிழித்து அடித்தே பக்கிரியைக் கொலை செய்தார்கள்.

ம்



**ஆறு வருடங்கள்**

நாளைக் காலையில் நான் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகையில் என்னால் நிச்சயமாக நிபந்தனையுடன் கூடிய பிணையில் சிறையிலிருந்து வெளியே செல்லமுடியும் என்றும் ஆனால் இன்றும் மூன்று கட்ட விசாரணைகளில் வழக்கு முடிவுக்கு வரக்கூடுமென்றும் வழக்கின் முடிவில் எனக்கு ஆகக் குறைந்த பட்சம் ஆறு வருட சிறைத்தண்டனை உறுதியென்றும் அந்த யூத வழக்கறிஞர் இன்று கூறிவிட்டார். நான் வழக்கறிஞர்கள் எவரையும் எனக்காக அமர்த்திக் கொள்ள விரும்பவில்லை. இந்த யூத வழக்கறிஞர் எனக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இலவச வழக்கறிஞர். 'நாயைக் கொல்வதனால் கூட இவர்கள் விசாரித்து விட்டுத் தான் கொல்வார்கள்' என்ற மரபிலிருந்து இந்த வழக்கறிஞரை அரசாங்கம் எனக்காக ஏற்பாடு செய்திருக்கிறது. ஆக இந்தப் புத்தகத்தை எழுதி முடிப்பதற்கு எனக்கு இந்த இரவு மட்டும் தான் அவகாசமுள்ளது.

என்னைத் தயவுசெய்து மன்னித்துவிடுங்கள். என்னால் நிறமியின் கதையின் ஒரு அட்சரத்தைக் கூட எழுதிவிட முடியவில்லை. அவளின் கதையை அவளால் மட்டும் தான் எழுதிவிட முடியுமென்று இப்போது எனக்குத் தோன்றுகிறது. என் பொன்னு மகள் நிறமியை என்னால் நாளைக் காலையில் பார்க்க முடியும் என்ற நினைப்பே விபரிக்க முடியாத மகிழ்வை என்னில் தோற்றுவிக்கிறது. இந்த ஒரு காரணத்துக்காக மட்டுமே நான் சிறையில் இருந்து வெளியே செல்ல விரும்புகிறேன். நான் நிறமியைக் கடைசியாகப் பார்த்த தருணம் அழியாதது.

**பொலிஸ் அதிகாரி**

நான் நிறமியைக் கடைசியாகக் கண்டபோது அவள் அறைக்குள் கட்டிலில் உட்கார்ந்து, தனது முழங்கால்களில் தனது மார்புகளை கவிழ்ந்திருந்தாள். அவளது கைகள் இரண்டும் கட்டில் விளிம்பை இறுகப் பற்றியிருந்தன. பிறேமினி அறையின் மூலையில் கைகளை முதுகுக்குப் பின்னால் சேர்த்துச் சாய்த்துநின்றிருந்தாள். அந்தப் பெண் பொலிஸ் அதிகாரி என் வீட்டின் வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தாள். அந்தப் பெண் பொலிஸ்அதிகாரி ஏதோ வைத்ததை எடுக்க வருவது போல என் வீட்டுக்கு நேரங்கெட்ட நேரங்களில்

சொல்லாமல் கொள்ளாமல் வந்து போய்க்கொண்டிருக்கிறாள். அவள் நிறமியை ஒரு குழந்தைகள் காப்பகத்தில் சேர்த்து விடுவதற்கு எங்கள் ஒப்புதலைக் கேட்டுக் கொண்டிருந்தாள். நிறமி பேச மறுக்க மறுக்க பொலிஸ்காரி நிறமியைச் சுற்றித் தன் வளையத்தை இறுக்கிக் கொண்டிருந்தாள்.

**தற்கொலை**

பிறேமினி 'நாங்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது' என்றாள். இங்கே இன்னொரு தமிழ் அகதிக் குடும்பத்தில் இப்படியான ஒரு சம்பவம் நிகழ்ந்தபோது அந்தச் சிறுமியை அவளது தாயார் இந்தியாவுக்கு அழைத்துச் சென்றாள். அந்தச் சிறுமியை இந்தியாவில் இரகசியமாகக் குழந்தையைப் பெற்றெடுக்க வைத்தாள்.இப்போது அந்தத் தாய் தனது மகளின் குழந்தையை தனது குழந்தையென ஊருக்குச் சொல்லி வளர்த்துவருகிறாளாம். 'நானும் அப்படியா செய்ய வேண்டும்?' என்ற கேட்டு பிறேமினி தலையைச் சுவரில் முட்டி அழுதாள்.

**நாஸி**

இங்கே தான் இன்னொரு கதையும் நடந்தது. பதினைந்து வயது தமிழ்ச் சிறுமி ஒருத்தியைக் கண்டிப்பதற்காக அவளது தந்தை ஆத்திரத்துடன் சிறுமியை அடித்தபோது படாத இடத்தில் பட்டு அந்தச் சிறுமி இறந்துபோனாள். தந்தையும் தாயுமாகச் சிறுமியின் பிரேதத்தை இரவோடு இரவாக வண்டியில் ஏற்றிக்கொண்டு போய் காட்டுப் பகுதியில் வைத்து இரகசியமாக எரித்துவிட்டு வந்துவிட்டார்கள். அவர்கள் தங்களது மகள் காணாமல் போய்விட்டாள் என்று பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பொலிசார் அடுத்த நாளே காட்டுப்பகுதியில் சிறுமி எரிக்கப்பட்ட இடத்தையும் சிறுமியின் மண்டையோட்டையும் கண்டுபிடித்துவிட்டார்கள். நாஸிகள் ஒரு தமிழ்ச் சிறுமியைக் கொன்று காட்டிலே எரித்துவிட்டார்கள் என்ற கதை தமிழர்களிடையே பரவியது. பத்திரிகைகளிலும் நாஸிகளைக் கண்டித்துச் செய்திகள் வெளியாயின. 'நீங்களும் அப்படியா செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்டு பிறேமினி என் தோள்களைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

நிறமி இறுகிக்கொண்டிருந்தாள். அவள் கட்டிலில் உட்கார்ந்திருந்த அதே நிலையிலேயே சமாதியாகிவிடுவாள் போலிருந்தது. பிறேமினி என்னை உலுக்கி 'நீங்கள் அவளைக் கேளுங்கள்!' என்று சொல்லி என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் நிறமியின் அருகில் நிறுத்தினாள்.



நான் நிறமியின் முகத்தை என் விரல்களால் நிமிர்த்தினேன். அவள் கண்கள் மூடியிருந்தன. நிறமியின் மௌனம் பிறேமினியைக் கொல்ல ஆரம்பித்தபோது அவள் நிறமியை நாவால் அடிக்க ஆரம்பித்தாள். பிறேமினியின் நாவில் விசம் சுரந்தது. அவளின் வசைகள் பாம்புகளாய் நிறமியின் மீது ஊர்ந்தன.

**சிறிலங்கா**

நிறமி ஊமையாய்க் கிடந்தாள். இப்போது அவள் கண்ணின் மணிகள் இடமும் வலமுமாக அசைந்தன. அவளின் உதடுகளின் பிளவுகள் நிரவிக்கொண்டே வந்தன. அவளின் உதடுகளை மூடித்தோல் வளர ஆரம்பித்திருக்கிறது. நிறமி கண்ணீர் விட்டு அழுவதையும் 'மம்மோ' என்று ஓடிவந்து பிறேமினியைக் கட்டிக்கொள்வதையும் தான் பிறேமினி நிச்சயமாக எதிர்பார்க்கிறாள். 'நான் இந்த வேசியையும் கூட்டிக்கொண்டு சிறிலங்காவுக்குத் திரும்பிப் போகிறேன். எனக்கு இந்த உத்தரிப்புச் சீவியம் இனியும் வேண்டாம்' என்று மூச்சிரைக்கச் சொன்ன பிறேமினி என் கண்களின் முன்னே என் நிறமியின் முகத்தில் கொத்தாகக் காறி உமிழ்ந்தாள்.

என் உடலின் ஒவ்வொரு அணுவும் உரசி வெடித்தன. என் தேகம் அதிர நெஞ்சுக்குழிக்குள் புகை அடங்கியது. நான் கைகளால் வாயை மூடி இருமியவாறே வரவேற்பறைக்குப் போனேன். அங்கே பொலிஸ் அதிகாரி உட்கார்ந்திருந்தாள். நான் அவளிடம் நிறமியின் கர்ப்பத்துக் காரணமானவனைக் காட்டிக்கொடுப்பது என்று அந்தக் கணத்தில் முடிவெடுத்தேன்.

**காட்டிக் கொடுத்தது**

நான் பொலிஸ் அதிகாரியின் அருகில் அமர்ந்து அவளுக்கு நிறமியின் கர்ப்பத்திற்குக் காரணமானவனை அடையாளம் காட்டினேன். அந்த வெள்ளைக்காரி தன் நெடிய தேகத்தை ஒரு தடவை குலுக்கிக்கொண்டாள். பின் 'இது நான் ஏற்கனவே ஊகித்திருந்தது தான்' என்று சொன்னாள். நான் வரவேற்பறையிலிருந்து எழுந்து உள் அறைக்குப் போனேன். என் பின்னே அந்தப் பொலிஸ்காரி நடந்துவந்தாள். நான் நிறமியின் அருகே சென்றேன். பொலிஸ்காரி வேகமாக வந்து எனக்கும் நிறமிக்கும் இடையில் தன் கைகளை நீட்டி மறித்துப் பிடித்துக்கொண்டாள். பொலிசுக்காரியின் கைகளுக்கு அப்பால் என் கண்கள் நிறமியின் கண்களைச் சந்தித்தபோது நான் நிறமியின் கண்களில் பரிசுத்தமான காதலைக் கண்டேன்.

ம்

ஏர்னஸ்ட் நேசகுமாரன் நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்ததும் வீதியில் இறங்கி நடந்தான். அவனின் வலது பக்கத் தோளில் கறுப்பு நிறத்திலான தோல்பை ஒன்று தொங்கியது. கோடை கிளம்பியிருக்க பட்டணம் முழுவதும் **கோடை** பூத்துக்கிடந்தது. தெருவோரத்து உணவுவிடுதிகளில் மனிதர்கள் வெற்றுடம்போடு முட்டி முட்டியாய் பியர் குடித்துக் கொண்டிருந்தார்கள். நேசகுமாரன் அவனது மகள் நிறமியை எக்காரணம் கொண்டும் சந்திக்க முயற்சிக்கக் கூடாது என்று நீதிமன்றம் அவனுக்கு ஒரு நிபந்தனையை விதித்திருந்தது. நிபந்தனைகளை வழி நெடுகச் சபித்தவாறே நேசகுமாரன் வீதிகளிலே நடந்தான். பின் அவன் இருபத்தியிரண்டாம் இலக்க பஸ்ஸில் ஏறித் தனது வீட்டுக்கு அருகே இருந்த பஸ் தரிப்பிடத்தில் இறங்கிக்கொண்டான்.

நேசகுமாரன் தனது கைகள் நடுங்க வீட்டின் வாசற் கதவைத் திறந்தான். வரவேற்பறையில் உடைந்துவிழுந்த மாதா சொரூபமும் குப்பையும் கஞ்சலுமாக வீடு கிடந்தது. அவன் படுக்கைஅறையினுள் சென்று பார்த்தான். அலுமாரி திறந்துகிடந்தது. இவனது உடைகள் கட்டிலைச் சூழவர தாறுமாறாக வீசப்பட்டிருந்தன. சமையலறைக்குள் சென்று **வீடு** ஒரு 'கிளாஸ்' தண்ணீர் குடித்தான். பானைகளிலும் சட்டிகளிலும் பழைய உணவுகள் பச்சையாய்ப் பூஞ்சணம் பூத்துக்கிடந்தன. பின் நேசகுமாரன் நிறமியின் அறைக்குள் நுழைந்தான். அந்த அறை வெறுமையாய்க் கிடந்தது. நிறமி பிறந்த நாளிலிருந்து சென்ற மாதம் வரையான அவளது ஒவ்வொரு பருவங்களையும் இவன் புகைப்படம் பிடித்து அவற்றைப் பெரிது பண்ணி அழகிய சட்டகங்களில் பொருத்தி நிறமியின் அறைச்சுவர்களில் மாட்டி வைத் திருந்தான். அவற்றில் ஒரு புகைப்படம் கூட இப்போது அங்கே இல்லை. சுவரில் ஆணிகள் மட்டுமே எஞ்சியிருந்தன. நிறமி ஆசை ஆசையாய்ச் சேகரித்துத் தனது அறைச்சுவர்களில் ஒட்டி வைத்திருந்த புகழ் பெற்ற உதைபந்தாட்ட வீரர்களின் வண்ணப் படங்கள் சுவரில் கோணல்மாணலாகக் கிழிந்து தொங்கின. வெறுமை!



பிறேமினி நிறமியைக் கூட்டிக்கொண்டு தலைநகரத் துக்குச் சென்று, அங்கே பிறேமினியின் அண்ணன் வீட்டில் தான் இப்போது தங்கியிருக்கிறாள் என்பதை இவன், இவனுக்கு நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் இருந்து தெரிந்துகொண்டான். நேசகுமாரன் நின்ற நிலையில் தொலைபேசியை எடுத்து பிறேமினியின் அண்ணன் வீட்டுத் தொலைபேசி இலக்கங்களை விரலால் குத்தினான். பதிவு செய்யப்பட்ட குரலொன்று 'நீங்கள் அழைக்கும் இலக்கம் தற்போது உபயோகத்தில் இல்லை. அந்த இணைப்புக்கான இலக்கம் மாற்றப்பட்டுள்ளது' என்று மறுமொழி சொன்னது. **தனிமை** நேசகுமாரன் சப்பாத்துக்கால்களால் தரையைப் பிராண்டினான். அந்த வீடு இன்னொரு தனிமைச் சிறையாக அவனை வதைக்கத் தொடங்கியது. அவன் தன் நெற்றியைக் கசக்கிக்கொண்டான். உண்மையில் அடுத்ததாக என்ன செய்வது என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவன் ஒரு விநாடி கூட அந்தத் தனிமையை விரும்பவில்ல. 'விறு'க்கென்று கறுப்புத் தோல்பையைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டான். இவன் வாசற்கதவைப் பூட்டிவிட்டு வெளியே வரும்போது எதிர் வீட்டிலிருந்து வெளியே வந்த மேடம். பஸ்கால் தனது உலர்ந்த உதடுகளால் அவனின் கன்னங்களில் முத்தமிட்டு 'சுகம் தானே?' என்று விசாரித்தார். அவன் ஆடாமல் அசையாமல் நின்றான். அவர் கண்களைத் தாழ்த்தி 'கடவுள் உன்னோடு இருக்கட்டும்' என்று கூறினார். நேசகுமாரன் தன் வாய்க்குள் 'கடவுள்' என்று முணுமுணுத் **கடவுள்** தான். அவன் ரயில்நிலையத்தை நோக்கி நடந்தான். தலைநகருக்கு இருபத்தோரு ஈரோக்களுக்கு ஒரு வழிப் பயணச்சீட்டு வாங்கிக்கொண்டான். கூட்டம் இல்லாத ஒரு ரயில்பெட்டியில் ஏறி உட்கார்ந்தான். பின்பு அவன் தன் கறுத்த நிறத் தோல்பையைத் திறந்தான். அதற்குள் அவனின் மாற்றுடைகள், பற்பசை, பிரஷ், மூஞ்சிக்குத் தடவும் கிரீம் ஆகியவற்றுக்கு அடியில் இந்த நாவலின் கைப்பிரதி கிடந்தது. அவன் அதை எடுத்து மீண்டும் ஒரு தடவை அதைப் படிக்க ஆரம்பித்தான்.

நான் தலைநகரத்தில் இறங்கியதுமே எனக்கு என் மகளோடு பேசுவதற்கு நிச்சயமாகவே சில விசயங்கள் இருப்பதாகத் தோன்றியது. நான் பஸ் பிடித்து பிறேமினியின் அண்ணன் வீட்டுக்குப் போனேன். அவனின் வீடு புறநகர் ஒன்றில் இருந்தது. அதுவொரு பன்னிரெண்டு மாடிக்கட்டடம். அது அரசாங்கத்தின் வீட்டுவசதிக்

குடியிருப்பாக இருக்க வேண்டும். அந்தக் கட்டடத்தின் முன்னே ஒரு கடைத்தொகுதி இருந்தது. அந்தத் தொகுதி முழுவதும் ஆபிரிக்கர்களின், அராபியர்களின், இந்தியர்களின், ஈழத்தவர்களின் கடைகளே இருக்கின்றன.

**தலைநகர்**

மாடிப்படிகளில் என் கால்கள் உறுதியாக ஏறிச் சென்றன. நான் பிறேமியின் அண்ணனின் வீட்டின் முன் நின்று அழைப்பு மணியை அழுத்தினேன். கதவு திறக்கப்படவில்லை. மீண்டும் மீண்டும் அழைப்புமணியை அழுத்தினேன். அந்த 'பிரவுன்' நிறக் கதவில் ஒரு சிறிய கண்ணாடிக் குமிழ் பொருத்தப்பட்டிருந்தது. உள்ளே இருப்பவர்கள் அந்தக் கண்ணாடிக்குமிழ் வழியே வெளியே அழைப்புமணியை அழுத்துபவர் யார் என்று பார்த்துக்கொள்ளலாம். அவர்கள் என்னைப் பார்த்திருக்க வேண்டும். உள்ளே பேச்சுச்சத்தம் கேட்டது. நான் மீண்டும் மீண்டும் அழைப்புமணியை அழுத்திக் கொண்டிருந்தேன்.

நான் எதிர்பாராத ஒரு கணத்தில் கதவு 'டபார்' என்று திறக்கப்பட்டது. பிறேமினி வேகமாக வெளியே வந்தாள். வெளியே வந்தவள் தன் புறங்காலால் கதவை அடித்து மூடினாள். நான் 'பிறேமினி' என்று முணுமுணுத்தேன்.

'பிறேமினியோ? சீ, நாயே தூமைச்சீலை வாயை மூடு! இன்னும் எந்தப் பெண்ணைச் சீரழிக்க இங்கே வந்திருக்கிறாய்?'

அவளால் இரகசியக் குரலில் தான் என்னைத் திட்ட முடிந்தது. இந்த நாட்டில் வேலைநாட்களில் இரவு ஆறு மணிக்குப் பிறகு சத்தம் போட்டுத் திட்டக்கூட முடியாது நான் அமைதியாக நின்றேன்.

'ஏனப்பா, நான் உனக்குத் தானே அவளைப் பெற்றேன். உனக்கு இப்படியொரு காரியம் செய்ய எப்படி மனம் வந்தது? உன்னைக் கடவுள் கேட்கட்டும்!'

நான் 'கடவுள்' என்று எனது வாயினுள் முணுமுணுத்தேன்.

'இந்தப் பதினாறு வருச சீவியத்தில் நான் உனக்கு என்ன குறை வைத்தேன்? என்ன பிழை செய்தேன்? நான் ஏதாவது பிழை செய்திருந்தால் சொல்லப்பா' பிறேமினி தன் இரு கைகளையும் சேர்த்து தன் தலையில் அடித்துக்கொண்டாள். அப்போது கதவு மறுபடியும் திறந்தது. பிறேமினியின் அண்ணன் வெளியே வந்தார். அவர் என்னைக்



கண்ணெடுத்துப் பார்க்கவுமில்லை. என்னோடு ஒரு சொல் பறையவுமில்லை. 'பிள்ள நீ உள்ளுக்குள் வா!' என்று அவர் பிறேமினியின் கையைப் பற்றி உள்ளே இழுத்தார். பிறேமினி உதடுகளை மடித்துக் கண்களை மூடி அழுதாள். பின் உள்ளே போனாள். கதவு அறைந்து சாத்தப்பட்டது.

நான் எனது கறுப்பு நிற தோல்ப்பையையும் தூக்கிக்கொண்டு படிகளில் இறங்கினேன். இனி என்ன செய்வது என்பது எனக்கு உண்மையிலேயே தெரியவில்லை. எனது வீட்டுக்குத் திரும்பிச் செல்வதையோ பிறேமினியும், நிறமியும் இல்லாத அந்த வீட்டில் நான் நடமாடுவதையோ என்னால் யோசித்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

**பிரசன்னா**

என் கால்கள் அங்கிருந்து பெயர மறுத்தன. நான் நிறமியின் அண்ணனின் வீட்டுக்கு எதிரேயுள்ள கடைத் தொகுதியை நோக்கி நடந்தேன். அப்போது எதிரே பிறேமினியின் அண்ணன் மகன் பிரசன்னா வந்துகொண்டிருந்தான். அவன் என்னைக் கண்டதும் அப்படியே நின்று என்னை முறைத்துப் பார்த்தான். எனக்கு அப்போது பைத்தியம்தான் பிடித்திருக்க வேண்டும்.

நான் ஓடிச்சென்று பிரசன்னாவின் கைகளைப் பிடித்துக் கொண்டேன். அவனின் இடது கையைப் பிடித்து எனது மார்பில் வைத்தேன். 'பிரசன்னா உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். என் பெண்சாதியையும், என் பிள்ளையையும் என்னோடு அனுப்பிவிடுங்கள். அவர்கள் இல்லாமல் நான் இங்கிருந்து திரும்பிப் போகப் போவதில்லை' பிரசன்னா

**முட்டாள்**

என் கைகளைத் தட்டி விட்டான். பின் 'முட்டாள்' என்று இந்த நாட்டு மொழியில் என்னைத் திட்டிவிட்டுப்போய் விட்டான்.

நான் அந்தக் கடைத்தொகுதியின் முன்னே நின்று பிறேமினியின் அண்ணன் வீட்டையும் அதில் பொருத்தியிருந்த இரண்டு ஜன்னல்களையுமே பார்த்தவாறு நின்றிருந்தேன். அந்த ஜன்னல்கள் திறக்கும் நேரத்துக்காக நான் காத்திருந்தேன். பிறேமினி என் மீது மனமிரங்கி கீழே வந்து என்னை அழைத்துப் போவாள் என்று நான் மனதார நம்பினேன். எனக்குப் பிறேமினியிடமும் நிறமியிடமும் சொல்வதற்கு வார்த்தைகள் இருக்கின்றன. நான் அந்த இரண்டு ஜன்னல்களையும் நிமிர்ந்து பார்த்தேன். எனக்குத் தெரியும் நான் நீதிமன்றத்தின் நிபந்தனையை மீறுகிறேன். நிபந்தனைகள் நாசமாய்ப் போகட்டும்.

ஜன்னல்கள் திறப்பதற்காக நான் காத்திருந்தபோது அந்தத் தொகுதியில் கடைகளை மூட ஆரம்பித்தார்கள். நேரம் இரவு பன்னிரெண்டு மணியாகிறது. ஒரு சிறிய வெள்ளை நிற வான் மெதுவாக வந்து என் அருகில் நின்றது. அது நின்ற வேகத்தில் அதன் பக்கவாட்டுக் கதவு திறந்தது. கதவு திறந்த வேகத்தில் அதன் உள்ளிருந்து முளைத்த கறுப்புக் கைகள் என்னைத் தூக்கின. வான் வேகமெடுத்துப் புறப்பட்டது. என் கறுப்பு நிறத் தோல்பை தெருவிலேயே விடப்பட்டது. வானுக்குள்ளே பதினேழிலிருந்து இருபத்தைந்து வயது வரை மதிக்கத்தக்க தமிழ் இளைஞர்கள் இருந்தார்கள். 'யார் நீங்கள்?' என்று கேட்டேன். 'சடார்' என்றொரு அறை என் மூஞ்சியில் விழுந்தது. என் மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகியது. மூஞ்சியைக் கைகளால் பொத்திப் பிடித்தேன். அந்த வாகனம் நெடுந்தூரம் ஓடி நின்றது. அந்த இருளில் கூட என்னால் அந்த இடத்தை மட்டுக்கட்ட முடிந்தது. இது விபச்சாரிகள் தொழில் புரிவதற்காக அரசாங்கத்தால ஒதுக்கப்பட்டிருக்கும் சிறிய காடு. இப்போது விபச்சாரிகள் கூட வீடு திரும்பியிருப்பார்கள். நேரம் நடுநிசி தாண்டியிருந்தது.

**கறுப்புக் கைகள்**

அந்த இளைஞர்களால்-அவர்கள் ஏழெட்டுப்பேர்கள் இருந்தார்கள்-நான் நடுக்காட்டினுள் இழுத்துச் செல்லப் பட்டேன். அங்கே நான் அவர்களால் நிர்வாணம் செய்யப் பட்டேன். அவர்கள் தங்கள் ஆவேசமும் ஆங்காரமும் தணியும் வரை என்னைப் பொல்லுகளாலும் பெல்ட்டுகளாலும் அடித்துப் 'பவுடர்' பண்ணினார்கள். அவர்கள் என்னைப் பேச வைக்க முயன்றார்கள். அப்போது உதடுகளை மூடித் தோல் வளர ஆரம்பித்தது.

'பூனை தான் தன் குட்டியைத் தின்னுமாம். நீயென்ன பூனையா?'

நான் அமைதியாக முழந்தாள்களில் நின்று என் முகத்தில் வழியும் இரத்தத்தைத் துடைத்தேன்.

**உதடு களைத் தோல் மூடியது**

'அண்ணே, தெரியாமல் தான் கேட்கிறோம்; நீ தூக்கி வளர்த்த பாலகியையே நீ நிர்வாணம் ஆக்கியபோது உன் இருதயம் செத்தா கிடந்தது?'

நான் அமைதியாக முறிந்துகிடந்த என் கை விரல்களை மெல்ல அசைக்க முயன்றேன்.

'பெற்ற பிள்ளையோடேயே உறவு வைப்பது என்ன



சைக்கோலஜி என்று எங்களுக்குத் தெரியவில்லை...'

எனக்கும் தான் தெரியவில்லை. நான் வெடித்துக்கிடந்த என் குதிக்கால்களை நிலத்தில் குத்தி எழுந்தேன்.

'இவனிடம் கேள்வி கேட்டுப் பிரயோசனம் இல்லை குழந்தைகளோடு 'செக்ஸ்' செய்வது ஒருவகை மனநோய்'

மனநோயாளிகளுக்குத் தண்டனை வழங்கக் கூடாது என்று சொல்ல நினைத்தேன். ஆனால் என் உதடுகள் மீது தடித்த தோல் படர்ந்திருந்தது. அவர்கள் என்னைச் சூழ நின்று எனக்கு என்ன வகையான தண்டனையை வழங்குவது என்பது பற்றி விவாதிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் என் மீது கீழ்வரும் தண்டனைகளைப் பிரேரித்தார்கள்:

**தண்டனை**

என் தலையை மொட்டையடித்து என்னைத் துரத்தி விடுவது

ஒரு கையை அல்லது ஒரு காலை வெட்டி விடுவது

என்னைக் கொலைசெய்து காட்டிலே போட்டு எரிப்பது

என்னைக் கொண்டு போய் தமிழர்களின் கடைத் தெருவின் மத்தியிலுள்ள மின்கம்பத்தில் உயிரோடு கட்டி வைத்து என் கழுத்தில் 'குழந்தைகளைக் கற்பழிப்பவன்' என்றொரு அட்டையை எழுதித் தொங்கவிடுவது. அடுத்து வரும் பந்தியோடு இந்த நாவல் முடியவிருக்கிறது.

ம்

இதே பனித்தேசங்களில் ஒரு கிழவன் வாழ்ந்தான். அவன் ஒருநாள் ஒரு துர்நாற்றம் வீசும் உருக்குலைந்த பிரேத மொன்றைக் கண்டுபிடித்தான். அந்தக் கிழவன் அந்தக் உருக்குலைந்த பிரேதத்தைத் தன் தலையில் காவித் திரிந்தான். அவன் அந்தப் பிரேதத்தை வைத்துக் குழந்தைகளுக்கு விளையாட்டுகள் காட்டினான். அந்தப் பிரேதத்தையும் அதனோடு திரியும் அந்தக் கிழவனையும் கண்ட பெண்கள் வியாகூலத்தோடு கண்ணீர் விட்டார்கள். கிழவனின் வளர்ப்பு மிருகங்கள் பசியால் கிழவனைப் பிறாண்டியபோது அவன் அந்தப் பிரேதத்தின் சில பகுதிகளைப் பிய்த்து மிருகங்களுக்குப் போட்டான். இப்போது கிழவன் சிறுகச் சிறுகத் தானும் அப் பிரேதத்தைப் புசிக்க ஆரம்பித்தான். பிரேதம் வர வரச் சிறுத்துக்கொண்டே போனது. இப்போது அந்தப் பிரேதம் ஒரு சிசுவின் பிரேதம் போல சிறுத்துப் போயிற்று.

**மரணம்**

தமிழ்ச் சங்கம் நூலகம்

ஒரு பனிக்காலையில் அந்தக் கிழவன் அவன் கண்டுபிடித்த பிரேதத்துடன் ஒரு மதுக்கடையில் உட்கார்ந்திருந்தான். மதுக்கடையின் முன்னே நெளிந்து போன மலைப்பாதையில் ஒரு குதிரைவண்டி ஏறிக்கொண்டிருந்தது. வண்டியில் பெரும் சுமை ஏற்றப்பட்டிருந்தது. வண்டியில் பூட்டப்பட்டிருந்த நோஞ்சான் குதிரை அந்த மலைப்பாதையில் ஏறத் திணறிக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அந்தக் குதிரை நகர மறுத்து நின்றது. அதன் வாயிலிருந்து நுரை பொங்கியது. வண்டியோட்டி வண்டியிலிருந்து குதித்திறங்கினான். குதிரையைத் தடவிக் கொடுத்து வாயால் விநோதமான ஒலி எழுப்பினான். மறுபடியும் ஏறிக் குதிரையை விரட்டினான் அந்த வாடல் குதிரை நகர மறுத்து நின்றது. வண்டியோட்டி குதிரையின் முதுகில் சாட்டையைச் சொடுக்கினான். குதிரை பிடரியைச் சிலிர்த்தது. அது முன்னேற முயன்றது. அதனால் முன்னே போக முடியவில்லை. அது தன் முன்னங்கால்களை முன்னும் பின்னுமாகத் தூக்கி நின்றது. வண்டியோட்டி வெறிபிடித்தவன் போல் சாட்டையால் குதிரையை அடித்தான். மதுக்கடையில் அமர்ந்திருந்த அந்தக் கிழவன் தன் கையிலிருந்த மதுக்கிண்ணத்தைக் கீழே போட்டான். அவன் கண்டுபிடித்த அந்தத் துர்நாற்றம் பிடித்த பிரேதத்தையும் கைவிட்டான். அவன் தள்ளாடித் தள்ளாடி குதிரை வண்டியை நோக்கி மலைப்பாதையில் ஓடினான். குதிரையை அடித்துக்கொண்டிருந்த வண்டிக்காரனிடம் போய் 'குதிரையை அடிக்கவேண்டாம்' என்று கெஞ்சினான். குதிரை வண்டிக்காரன் 'நீ தள்ளிப்போ! இந்தச் சவத்தை நான் இன்று கொல்வேன்' என்று கூச்சலிட்டபடியே சாட்டையை வீசினான். கிழவன் ஓடிப்போய் அந்த நோஞ்சான் குதிரையைக் கட்டிப்பிடித்துக்கொண்டான். 'முட்டாள் கிழவனே, தள்ளிப்போ!' என்று வண்டிக்காரன் ஆவேசத்தோடு கூச்சல் போட்டான். கிழவனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவன் குதிரையின் முகத்தில் முத்தமிட்டான். வண்டிக்காரன் சொடுக்கிய சாட்டை கிழவனின் மூஞ்சியில் விளாறியது. அந்த வினாடியில் அந்தக் கிழவனின் மனம் பிறழலாயிற்று.

ம்

எல்லாப் புனைவுகளும் இருப்பியற் பிரச்சினைகளை, அவற்றினூடாக மனிதச் சுயத்தைப் புரிந்துகொள்ளும் நிறைவேறாத முயற்சிகள்தான். இருப்பியற் பிரச்சினைகளை வரலாறுதான் தீர்மானிக்கிறது. வெலிக்கடை சிறைப்படுகொலை, மட்டக்களப்புச் சிறை உடைப்பு, இயக்கப் படுகொலைகள் என்கிற வரலாற்றுப் பின்னணியில் மனித இருப்பைப் புரிந்துகொள்ள முயலும் சிக்கலான பணியை வேகம் குன்றாமல் செய்கிறது ஷோபா சக்தியின் இப்புதினம்.

கருப்புப் பிரதிகள்